ஓ

श्री गुरुभ्यो नमः


स्मृतिमुक्ताफलम्


ஸ்ம்ருதிமுக்தாபலம்

आह्निककाण्डम् - उत्तरभागः - द्रविडानुवादयुतः

மூன்றாவது பாகம்

ஆஹ்நிக காண்டம் உத்தரபாகம்





श्री गुरुभ्यो नमः

स्मृतिमुक्ताफलम्

श्री वैद्यनाथदीक्षितविरचितम्

तृतीयो भागः

आह्निककाण्डम् - उत्तरभागः

द्रविडानुवादयुतः

ஸ்ம்ருதிமுக்தாபலம்

ஸ்ரீ வைத்யநாத தீக்ஷிதர் இயற்றியது

மூன்றாவது பாகம்

ஆஹ்நிக காண்டம் உத்தரபாகம்

(தமிழ் உரையுடன்)

தொகுத்தளிப்பவர்:
வைத்ய S.V. ராதாகிருஷ்ண சாஸ்திரீ

வெளியிடுபவர்:
வேத தர்ம சாஸ்திர பரிபாலன ஸபை
(கும்பகோணம்) சார்பில்
ஸ்ரீ காஞ்சீ காமகோடி பீடம்
ஸ்ரீமடம் ஸம்ஸ்தானம்
1, சாலைத் தெரு, காஞ்சீபுரம் - 631 502.

கர - 2011

SMRITI MUKTA PHALAM
AHNIKA KANDAM -PART-3
with Tamil Translation

Khara - 2011 - II Edition

Edited by :
Vaidya S.V. Radhakrishna Sastri.
Srirangam

Published on behalf of :
Veda Dharma Sastra Paripalana Sabha
Regd. Office : Kumbakonam

by
Sri Kanchi Kamakoti Peetam,
Srimatam, Samsthanam
1, Salai Street,
Kancheepuram - 631 502.

Lasertypeset & Printed at :
V.K.N. Enterprises
Mylapore, Chennai-4, Cell: 98402 17036

Phone : 044-2722115 e:mail:skmkanci@md3.vsnl.net.in
Fax : 044-27224305, 37290060

Sri Chandramouleeswaraya Namaha:
Sri Sankara Bhagavazdpadacharya
Paramaparagatha Moolamnaya Sarvagnapeeta:
His Holiness Sri Kanchi Kamakoti Peetadhipathi

JAGADGURU SRI SANKARACHARYA SWAMIGAL
Srimatam Samasthanam
No.1, Salai Street, KANCHEEPURAM - 631 502.

मङ्क्त्वा सत्स्मृतिसागरे सुगहने लब्ध्वा वरं मौक्तिकं
श्रुत्यम्बागलभूषणं समतनोत् श्रीवैद्यनाथो महान् ।
भूयस्तद्रविडानुवादकनकैस्तन्वन् स्रजं सुन्दरीं
राधाकृष्णसुधीस्सदा विजयतां श्रीचन्द्रमौलीक्षणात् ॥

अक्षैर्मा दीव्येति आम्नायामृताम्बुधिबिन्दुभिः निखिल-स्मृतिनिचयेन च प्रभुसम्मिततया, इतिहासपुराणबृन्द-माक्षिकधारया सुहृत्सम्मिततया, काव्यरसानुभूतीक्षुसारवर्षैः कान्तासम्मिततया च प्रतिपादितः धर्मकलापः सूक्ष्मगतिको विलसति । धर्म एव विशिनष्टि समाजं समजात् । मनीषिमनोगोचरस्य तस्य धर्मस्यावगतये परमकारुणिका ऋषयः स्मृतिग्रन्थान् विलिख्य महदुपकारमतानिषुः । धर्मकलापापकलनकलापटौ कलौ मानवानां बोधनाय वैद्यनाथदीक्षिताख्यो विद्वदग्रेगण्यः स्मृतिसागारं निर्मथ्य

पीयूषमाचिन्वन् स्मृतिमुक्ताफलाख्यं ग्रन्थमरीरचत् । सोऽयं ग्रन्थः वर्णाश्रमधर्मकाण्डः, आह्निककाण्डः, आशौचकाण्डः, श्राद्धकाण्डः, तिथिनिर्णयकाण्डः तथा प्रायश्चित्तकाण्डश्चेति काण्डषट्केन निखिलमपि धर्मं प्रतिपादयति । यं वै रक्षसि धर्मं त्वं धृत्या च नियमेन च । स वै राघवशार्दूल धर्मस्त्वामभि-रक्षत्विति श्रीमद्रामायणवचनेन धर्मो रक्षति रक्षित इति सुष्ठु अवगम्यते । लोकानां धारणाद्धर्म इति सार्थाभिधां बिभ्रतो धर्मस्य सेवनं लोकव्यवस्थायाः स्थिरीकरणमिति न संशीतिः । सोऽपि धर्मः अनेन ग्रन्थरत्नेन सुष्ठ्ववगम्यते । तस्यैतस्य ग्रन्थस्य वर्णाश्रमधर्मकाण्डादिः भागशः **वैद्यश्री शिवे. राधाकृष्णशास्त्रिभिः** द्रविडानुवादेन सह परिष्कृत्य वेदधर्मशास्त्रपरिपालनसभाद्वारा प्रकाश्यते इति ज्ञात्वा भृशं मोदामहे । सोऽयं यत्नः श्रीमहात्रिपुरसुन्दर्यम्बा-समेत श्रीचन्द्रमौलीश्वरकृपया सफलो भवत्विति ग्रन्थ-सम्पादकः एवमेव ग्रन्थरत्नानि प्रकाशयन्नैहिकामुष्मिकश्रेयो-विलासैः समेधतामिति प्रकाशने साहाय्यकर्तारश्च समस्त-मङ्गलानि अवाप्नुयुः पठितारश्च धर्मसेवनेन निखिलश्रेयांस्यधि-गच्छन्त्विति चाशास्महे ।

शङ्करसंवत्सरः २५२०

काञ्चीपुरम् **नारायणस्मृतिः ।**

உ

ஸ்ரீ குருப்யோ நமः

ஆந்ஹிக (ஆஹ்நிக) காண்டம்

அறிமுகம்

இரு பிறப்பாளரால் தினந்தோறும் வாழ்நாள் முழுவதும் தேசகால நிலைக் கேற்பவும் அவரவர் நிலைக்கேற்பவும் அவசியம் பின்பற்ற வேண்டிய ஒழுங்குமுறைகள் பலவற்றை ஆஹ்நிக காண்டம் வரிசைப்படுத்தித் தந்துள்ளது. அவரவர் தான் பிறந்த சூழ் நிலைக்கேற்பக் கட்டுபாட்டுடன் வாழ சௌசம் - ஆசௌசம் என்ற நிலைகளையும் தெளிவாக உணர்வது இன்றியமையாதது. மற்ற இரு பிரிவினரைவிட அந்தணரின் வாழ்க்கையை இந்தப் பண்பாட்டிற்கும் கட்டுப்பாட்டிற்கும் சிறிதும் குறையின்றி அமைத்துக் கொள்ளுதல் பெரிதும் எதிர் பார்க்கப்படுகிறது.

இரவு உறக்கத்தில் உடல் தன் நிலையுணர்வை இழக்கிறது. விழித்தெழுந்த அடுத்த கணம் முதல் இரவு மறுபடி உறங்கும்வரை தான் இன்னார் என்ற உணர்வைச் சிறிதும் இழக்காமல் கடமைகளை ஆற்ற நேர்கிறது. மூன்று வர்ணங்களுக்கும் பொதுவானதாயினும் அந்தணர் தான் அந்தணர் என்று வாழ்ந்து காட்டுவது அவச்யமாகிறது. அதனால் ஆஹ்நிக காண்டத்தின் பெரும் பகுதி அந்தணரை முன்னிட்டே அமைந்துள்ளது.

பேராராய்ச்சியுடன் இந்நூலைத் தொகுத்த ஸ்ரீ வைத்யநாத தீக்ஷிதர் பெருமானின் நூலமைப்பு தனிச் சிறப்புள்ளது. ஆராய்ச்சிக் கண்ணோட்டத்துடன் தன் வழி என்றோ ஸம்பிரதாயமென்றோ வாழ்க்கை முறைகளை அவர் தொகுக்கவில்லை. அறுபதுக்கும் மேற்பட்ட நூல்களில் ஒவ்வொரு தலைப்பிலும் காட்டப்பட்டுள்ள முறைகளை ஆராய்ச்சித் தொகுப்பின் ஆதாரமாகக் காட்டி, தன் ஆராய்ச்சியின் முடிவு இது என எதிலும் முனைப்புடன்

கருத்தை இவர் நூல் முழுவதிலும் எந்தச் சிறு விஷயத்திலும் வற்புறுத்தவில்லை. வேறுபட்ட கருத்துகளை முனை மழுங்காமல் அப்படியே கூறி நடைமுறையை நிர்ணயிக்கிற பொறுப்பைச் சிஷ்டர்களிடமும் முன்னோர்களின் வழிமுறைகளிடமும் ஒப்புடைத்துள்ளார். அதனால் ஒவ்வொரு சிறு விஷயத்திலும் பல பெரியோர்களின் கருத்தை அப்படியே எழுதியதால், நூல் மிக விரிவடைந்து விட்டது. 10 வரிகளில் அடங்குகிற விஷயத்திற்கு நூறுயிரம் வரிகள் விளக்கம் தருகிறார். பல்வேறு மஹான்களின் கருத்துகளை அறிந்துகொள்ள இது பெரிதும் உதவுகிறது. நூல் விரிவு பொருட்படுத்தத்தக்கல்ல என்று உணர முடிகிறது.

ஆத்ம சுத்தி பெரும்பாலும் வைதிகமான மந்த்ரங்களின் மூலமே பெற முடியும் என்று முடிவு. ஆதிபௌதிகம், ஆதி தைவிகம், ஆத்யாத்மிகம் என்ற மூன்றும் வாழ்வின் ஒவ்வொரு நிகழ்விலும் தொடர்வதை உணரமுடிகிறது. ஆதி தைவிகத்தின் உதவியால் ஆத்யாத்மிக ஆதிபௌதிகங்களின் மேன்மை உறுதிப்படுகிறது. ஆஹ்நிகப் பணியில் ப்ரஹ்ம முகூர்த்தம் என்ற தெய்விக நேரத்தில் விழித்ததும் வலது உள்ளங்கை பார்த்தல், சிரஞ்ஜீவிகளை - தெய்விகப் பிறவிகளை நினைத்து மனத்தால் வணங்குதல் என்று தொடங்கி இறைவனின் பல்வேறு நிலைகளை நினைத்து அவற்றின் உதவியால் தனது அன்றைய வாழ்வு நலமாக முடிந்தது என்று நினைவுடன் உறங்கச் சொல்கிறோம்.

ஒவ்வொரு கணமும் தெய்விக சக்திமிக்க மந்த்ரங்களும் தெய்வ உணர்வுமிக்க வாக்கு மனம் உடல் என மூன்றால் நலன் தரும் செயல்களும் வாழ்வின் உயர்விற்கு உதவுகின்றன. ஓம் சிவ சங்கர நாராயண தாயே என உள்ளத்தால் மட்டுமே உணரக் கூடிய தெய்வத்தை ஒவ்வொரு கணமும் உணர்கிறோம். இச்சொற்களை அவற்றிற்கேற்ற தெய்விக ஒழுங்கு முறையுடன் உச்சரிக்க அது மந்த்ரமாகிறது. அந்த மந்த்ரமும் தெய்விக உணர்வு

மிக்க ருஷிகள் என்ற பெரியோர்களால் ஜ்ஞானக் கண்களால் அவர்கள் கண்ட தெய்வத்தின் உருவமாகக் காணப்பட்டது.

மந்த்ரத்தைச் சொல்ல ஒருமுறை உண்டு. மந்த்ரத்தைப் பற்றிச் சிறிது சிந்திக்க வேண்டும். மந்திரம் நம்மளவில் எழுத்து - சொல் வடிவம். ஆனால் அதன் உண்மை நிலை ஒலி வடிவம். ஒலியை நமக்கு உருவகப்படுத்துவது அக்ஷரம். (எழுத்து). ஒவ்வொரு அக்ஷரமும் ஒலிவடிவிலும் ஒளி வடிவிலும் த்யானிக்கிற வழக்கில் ध्यायेत् தியானிக்க வேண்டும் என்று கூறுவர். அதனை ध्यायामि என்று சொல்வது உசிதம். அதனால் ध्यायामि த்யானிக்கிறேன் எனச் சொல்வதும் குறையுள்ளதே. தியானம் என்பது செயலல்ல. உள்ளத்தில் உருவகப்படுத்தியதன் அநுபவம். இதற்குச் சொல்லேது? शुक्लाम्बरधरं विष्णुं - प्रसन्नवदनं ध्यायेत् என்றே தலையில் குட்டிக்கொள்வர். தியானிக்க வேண்டும் என யாரைத் தூண்டுவது? தானே தனக்கு உணர்த்துவது பயனற்றது. வெண்ணிற ஆடையுடுத்திய எங்கும் நீக்கமற நிரம்பிய பெருமானை அனுபவிக்கும் உணர்வு தியாயேத் என்ற சொல்லில் இல்லை. वन्दे எனச் சிலர் மாற்றிக் கூறுவர். நமஸ்காரம் செய்ய வேண்டுமே தவிர, நமஸ்கரிக்கிறேன் என்று வாயால் சொல்வதும் பகட்டே தவிர உளமார்ந்ததல்ல. ஆஹ்நிகத்தில் சொல்லப்பட்ட மந்திரங்கள் அனைத்தையும் உணர்ந்து உள்ளமாற அதாகவே ஆகிய அநுபவ அளவிற்குக் கொண்டுவர வேண்டியதவசியம். அதுவே பண்படுத்தலாகும்.

மந்திரங்கள் நம் நிலைக்குக் கிட்டியது அதனை முதல் ஞான திருஷ்டியால் கண்டுபிடித்த ருஷிகளின் அருள். அந்த மந்திரத்தின் உச்சரிப்பு சந்தஸ் என்ற சொற்கட்டிற்கு உட்பட்டது. ஒவ்வோர் எழுத்தும் முழு மந்திரமும் அது உணர்த்துகிற தேவதையின் வடிவம். அதனால் ஒவ்வொரு மந்திரத்திற்கும் ருஷி, சந்தஸ், தேவதை அதற்கான பீஜம்,

சக்தி, ஹ்ருதயம் கீலகம் என்ற பல நிலைகள் இவற்றை உருவகப்படுத்தி நினைவில் வைத்துக் கொள்வது அவச்யமாகிறது. அதற்கான செயல்முறையை ந்யாஸம் என்பர். ருஷி நியாஸம், சந்தஸ் நியாஸம் தேவதா நியாஸம் என்றவாறு உடலின் பகுதிகளைத் தொடுவர். ருஷி - குருவானதால் சிரஸில், சந்தஸ் - மொழியானதால் வாயில், தேவதை த்யானிக்கப்படுவதால் உள்ளத்தின் இடமான இதயத்தில் தொட்டு அனுபவிப்பர். இதனையே விரிவு படுத்தும் போது மந்திரத்தை ஜபம் செய்வதை எண்ணப் பயன்படுகிற விரல்களில் கர நியாஸம், தியானிக்கிற வடிவாகவே தன் உடலும் ஆனதை உணர அங்க நியாஸம், அவ்வுணர்வு த்யான காலத்தில் தன்னைவிட்டு வெளியேறுதிருக்க திக்பந்தம், தியானத்திலிருந்து விடுபட்டு வெளி உலகின் உணர்வு துலங்க திக்விமோகம் என்று நியாஸங்கள் விரிவடையும்.

ஒவ்வொரு மந்திரத்திற்கும் இத்தனையும் என்ற நம் ஆர்வம் அக்கரை ஈடுபாடு இதுவே வாழ்வின் இலட்சியம் என்ற தேர்வு இவை வளர இவ்வனுபவம் பேரானந்தம் தரும். இதற்கான வழியையே ஆஹ்நிக காண்டம் பல வாறு விளக்குகிறது. எல்லா மந்திரங்களும் இந்த நியாஸ முறை கொண்டவையே. ஸந்த்யா வந்தனம், காயத்ரீ ஜபம் தேவதாவந்தனம் என்ற மூன்று பகுதிகளில் காயத்ரிக்கு மட்டும் விரிவின்றி மிக சுருக்கமாகச் சில ந்யாஸங்கள் மட்டும் இன்று நடைமுறையிலுள்ளன என்பது வருந்தத்தக்கதே. பொருளை உணராமல் மந்திரம் தியானத்திற்குப் பயன்படாது. உடற் செயலாலோ வாக்காலோ மட்டும் மந்திர விதானம் பலன் தருவதல்ல. மந்திரத்தின் மூலம் வெளிப்படுகிற ஆதி தைவிக சக்தியை ஆத்ம சக்தியாக உணர்கிற அநுபவமே இவற்றின் குறிக்கோள். அதனால் மந்திரத்தின் ஒவ்வொரு அக்ஷரத்திலுள்ள தேவதா சக்தியை உணரவே ஹோமம், பிரும்ம யஜ்ஞம், தேவ ரிஷி பித்ரு தர்பணம், வைச்வ தேவம், பஞ்ச மஹாயஜ்ஞங்கள், தேவதா பூஜை, அதிதி

ஸத்காரம், பிராம்ஹண போஜநம் என்று பல சடங்குகள் தேவைப்படுகின்றன.

இவற்றிற்கான தகுதி பெற வாழ்நாள் முழுவதும் ஒவ்வொரு கணமும் பயன்பாட்டிற்கு உகந்ததே. முன்னோர்கள் நன்கொடையாகவும் உரிமைப் பொருளாகவும் மனமுவந்து அக்கரையுடன் நம்மிடம் அளித்த தாயம் என்ற சொத்தே ஸம்-ப்ர-தாயம் ஆக நம்வரை வந்துள்ளது. அததனைச் சிதற விடாமல் நாமும் பயன்படுத்தி நம் ஸந்ததியினரிடம் அதே அக்கரையுடன் அளிக்க வேண்டியதே இந்த தார்மிக வாழ்க்கைமுறை எனும் சிஷ்ட ஸம்ப்ரதாயம். ஆஹ்நிக காண்டத்தின் கடைசியில் அனுபந்தமாக இணைக்கப்பட்டுள்ள பகுதி, நீதி சாஸ்திரம் எனத் தனித்துக் கற்றுப் பழகக் கூடியது. மிக அரிய எங்கும் காணக் கிடைக்காத நீதித் தொகுப்பு. (அறத்துப்பால்).

இதனை ஒவ்வொரு கோணத்திலும் ஆராய்ந்து விளக்கம் தந்த ஸ்ம்ருதி முக்தாபலத்தின் ஆசிரியர் பிரும்மஶ்ரீ வைத்யநாத தீக்ஷிதர் பலகோடி வணக்கத்திற்கும் நன்றியுரைக்கும் உரித்தானவர். அதனைத் தமிழாக்கித் தந்த உரையாசிரியர், அதனை வெளியிடுகிற வேத தர்ம சாஸ்திர பரிபாலன ஸபையோர், இவர்களும் நம் பெருமதிப்பிற்கும் வணக்கத்திற்கும் உரியவராவர். இவ்வரிய நூலை நமக்கும் நம் பிற்கால ஸந்ததியினருக்கும் வழி காட்டியாக அளிக்க முன்வந்த ஶ்ரீ காஞ்சீ காமகோடி பீடாதிபதி ஶ்ரீ சங்கராசார்ய பரம பூஜ்ய ஶ்ரீ ஜயேந்திர ஸரஸ்வதீ ஶ்ரீ சரணர்களுக்கும் பூஜ்யஶ்ரீ சங்கர விஜயேந்திர ஸரஸ்வதீ ஶ்ரீ சரணர்களுக்கும் நம் அனைவரின் அனந்த கோடி நமஸ்காரங்களை ஸமர்ப்பித்து இவனுக்கு இதற்கான அரிய வாய்ப்பையும் தகுதியையும் தம் அருளால் வழங்கியதற்கு அனந்தகோடி நமஸ்காரங்களை ஸமர்ப்பித்துக் கொள்கிறேன்.

ஶ்ரீரங்கம்

23.2.2011 வைத்ய S.V.ராதாகிருஷ்ண சாஸ்திரீ

ஔ

आह्निककाण्डः - उत्तरभागः

ஆஹ்நிக காண்டம் - உத்தர பாகம்

विषयानुक्रमणिका - பொருடளக்கம்.

गायत्रीजपविधिः - காயத்ரீ ஜபவிதி 1

जपयोग्या अक्षमाला - ஜபத்திற்கான அக்ஷமாலை 26

सूर्योपस्थानम् - ஸூர்ய உபஸ்தானம் 34

सन्ध्यादि देवतावन्दनम् - ஸந்தியா முதலிய தேவதை வந்தனம் 38

उपस्थानमन्त्रार्थः - உபஸ்தான மந்திரப் பொருள் 42

पापक्षयाद्यर्थे जप्या मन्त्राः - பாபம் நீங்க மந்திர ஜபம் 51

काम्यानि जप्यानि - காம்ய ஜப மந்திரங்கள் 63

जपयज्ञप्रसंशा - ஜபயஜ்ஞ ப்ரசம்ஸை 71

अभ्युक्षणाहरणम् - ப்ரோக்ஷிக்க நீர் கொணர்தல் 72

होमविधिः - ஹோமவிதி 77

होमकालः - ஹோம காலம் 91

होमयोग्याः समिधः - ஹோமத்திற்கேற்ற ஸமித்துக்கள் 92

हविर्लक्षणम् - ஹவிஸ் லக்ஷணம் 110

आहुतिपरिमाणम् - ஆஹுதியின் அளவு 114

अग्निजिह्वाः - அக்னியின் நாக்குகள் 120

अग्निधारणे नियमः - அக்னியைக் காக்க நியமம் 124

आत्मसमारोपणम् - ஆத்ம ஸமாரோபணம் 129

विधुराग्निसन्धानम् - விதுராக்னி ஸந்தானம் 130

होमप्रशंसा - ஹோமப் பெருமை 131
मङ्गलद्रव्यदर्शनम् - மங்களப் பொருள் காணல் 133
ब्रह्मयज्ञविधिः - பிரும்ம யஜ்ஞ முறை 136
अध्ययनानध्ययने - அத்யயனமும் அநத்யயனமும்..... 141
अह्नो द्वितीयभागकृत्यम् - பகலின் இரண்டாவது பகுதியின் நடைமுறை 166
तृतीयभागकृत्यम् - மூன்றுவது பகுதியின் நடைமுறை .. 170
चतुर्थभागकृत्यम् - நான்காவது பகுதியின் நடைமுறை .. 171
देवर्षिपितृतर्पणम् - தேவர்ஷி பித்ருதர்பணம். 174
वसुरुद्रादित्याः - வஸுருத்ர ஆதித்யர்கள் 183
तर्पणक्रमः - தர்பண முறை 185
तर्पण प्रशंसा - தர்பணத்தின் பெருமை 189
मन्वादियुगादि तर्पणम् - மன்வாதி - யுகாதி தர்பணம் 193
दर्शादि पितृतर्पणयोग्यः कालःनियमश्च - தர்சம் முதலிய பித்ரு தர்பணத்திற்குரிய காலநியமங்கள்..... 197
देवपूजनम् - தேவபூஜை 202
विष्णुपूजाप्रकारः - விஷ்ணு பூஜை முறை 208
पुरुषसूक्तादिना पूजनम् - புருஷஸூக்தம் முதலியவற்றால் பூஜை 208
उपचारफलम् - உபசாரங்களின் பயன் 217
पूजार्हाणि पुष्पाणि - பூஜைக்கேற்ற பூக்கள் 219
निवेदनार्हाणि - நிவேதனத்திற்கேற்றவை 225
प्रणामविशेषाः - நமஸ்கார வகைகள் 226
पूजासमाप्तिः - பூஜை முடிவு 229
धनुर्मासपूजा - தனுர்மாஸ பூஜை 236

शिवपूजा - சிவபூஜை 239
शिवपूजाप्रशंसा - சிவபூஜையின் பெருமை..... 249
हरिहरपूजा - ஹரிஹர பூஜை 248
पञ्चायतनादि पूजाक्रमः பஞ்சாயதனம் முதலிய பூஜை முறை 249
पञ्चमहायज्ञाः - ஐந்து மஹாயஜ்ஞங்கள்..... 252
वैश्वदेवहोमः - வைச்வதேவ ஹோமம் 258
बलिहरणम् - பலிஹரணம் 270
आतिथ्यम् - அதிதி பூஜை 308
भोजनम् - போஜனம் 347
प्राणाहुतिः - ப்ராணாஹுதி 368
भोजननियमाः - போஜந நியமங்கள்..... 381
भोज्याभोज्यविवेकः - சாப்பிடத் தக்கவை - தகாதவை ... 415
भोजनकालः - போஜன காலம் 452
भक्ष्यमांसानि - சாப்பிடத் தக்க மாமிச உணவு 458
उत्तरापोशनादि - உத்தராபோசனம் முதலியவை 464
भोजनानन्तरं करणीयानि-உண்ட பிறகு செய்யத் தக்கவை ... 472
ताम्बूलचर्वणम् - தாம்பூலம் சுவைத்தல் 477
सायं सन्ध्योपासनम् - ஸாயம் ஸந்த்யா உபாஸனம் 478
रात्रिचर्या - இரவு நடைமுறை 480
शयनविधिः - படுக்கை முறை 485
अवशिष्टधर्माः - பொது நன்னெறிகள் 492
द्रव्यशुद्धिप्रकरणम् - திரவிய சுத்தி 531
शुद्धिहेतुः - சுத்திக்குக் காரணம்..... 532
अशुद्धिहेतुः - அசுத்திக்குக் காரணம் 533
शुद्धिक्रमः - சுத்திமுறை 534

गुरुभ्यो नमः

स्मृतिमुक्ताफलम्

आह्निककाण्डः

ஸ்ம்ருதிமுக்தாபலம்

ஆஹ்னிக காண்டம்

उत्तरभागः

(உத்தர பாகம்)

गायत्रीजप विधिः

तत्र मनुः - आचम्य प्रयतो नित्यमुभे सन्ध्ये समाहितः । शुचौ देशे जपन् जप्यमुपासीत यथाविधीति ।। शङ्खः – कुशबृस्यामासीनः कुशोत्तरायां वा कुशपवित्रपाणिरुदङ्मुखः सूर्याभिमुखो वा मालामादाय देवतां ध्यायन् मन्त्रजपं कुर्यादिति ।।

காயத்ரீ ஜபவிதி

மனுः- ஆசமனம் செய்து, சுத்தனுய், கவனமுள்ளவனுய், இரண்டு ஸந்த்யா காலங்களிலும், சுத்தமான ஸ்தலத்தில் ஜபிக்க வேண்டிய மந்த்ரத்தை ஜபிப்பவனுய், விதிப்படி நித்யமும் உபாஸிக்க வேண்டும். **சங்கர்:-** குசாஸனத்திலாவது, குசத்தைப் பரப்பியுள்ள பூமியிலாவது உட்கார்ந்து, குச பவித்ரத்தைக் கையில் தரித்து, வடக்கு நோக்கி, அல்லது ஸூர்யனை நோக்கி, ஜபமாலையை எடுத்துக் கொண்டு, தேவதையை த்யானித்து மந்த்ரத்தை ஜபிக்க வேண்டும்.

मन्त्रजपशब्दयोर्निर्वचनमुक्तं स्मृतिरत्ने – मकारं मन इत्याहुस्त्रकारं त्राणमेव च। मनस्त्राणसमायुक्तो मन्त्र इत्यभिधीयते॥ जकारो जन्मविच्छेदः पकारः पापनाशनः। जन्मकर्महरो यस्मात् तस्माज्जप इति स्मृतः इति॥ आसीन इति वचनं सायं मध्यन्दिनजपविषयम्। तथा च मनुः – पूर्वां सन्ध्यां जपंस्तिष्ठेत् सावित्रीमार्कदर्शनात्। पश्चिमां तु समासीनः सम्यगार्क्षविभावनादिति। आर्क्षविभावनात् इति पदच्छेदः। आनक्षत्रदर्शनादित्यर्थः॥ स एव – पूर्वां सन्ध्यां जपंस्तिष्ठन् नैशमेनो व्यपोहति। पश्चिमां तु समासीनो मलं हन्ति दिवाकृतमिति च॥

மந்த்ரம், ஜபம் என்ற பதங்களின் பொருள் சொல்லப்பட்டுள்ளது ஸ்ம்ருதிரத்னத்தில்:- 'ம' என்பது மனதையும் 'த்ர' என்பது காப்பாற்றுதலையும் சொல்லும். மனதைக் காப்பாற்றுவதால் 'மந்த்ரம்' எனப்படுகிறது. 'ஜ' ஜன்மத்தைப் போக்குவது 'ப' பாபத்தை போக்குவது. ஜன்மம், கர்மம் இவைகளைப் போக்குவதால் ஜபம் என்ப்படுகிறது. சங்கவசனத்தில்:- ஆஸீந: என்பது, மாலையிலும், மத்யாஹ்னத்திலும் செய்யும் ஜபத்தைப் பற்றியது. அவ்விதமே மனு சொல்கிறார் - 'காலை ஸந்த்யையில் ஸூர்யோதயம் வரையில் காயத்ரியை ஜபித்துக் கொண்டு நிற்க வேண்டும். மாலை ஸந்த்யையில் காயத்ரியை ஜபித்துக் கொண்டு நன்றாய் நக்ஷத்ரங்கள் தெரியும் வரையில் உட்கார்ந்திருக்க வேண்டும்' என்று. மனுவே:- ப்ராதஸ் ஸந்த்யையில் நின்று கொண்டு ஜபிப்பவன் ராத்ரியில் செய்த பாபத்தைப் போக்குகிறான். ஸாயம் ஸந்த்யையில் உட்கார்ந்து ஜபிப்பவன் பகலில் செய்த பாபத்தைப் போக்குகிறான்.

स्थानासनयोरकरणे प्रत्यवायमाह स एव – न तिष्ठति तु यः पूर्वा मुपास्ते न तु पश्चिमाम्। स शूद्रवद्बहिष्कार्यः सर्वस्माद्द्विजकर्मण इति॥ माधवीये – तथा मध्यमसन्ध्यायामासीनः प्राङ्मुखो जपेत्। स्थितो

जपेत् सदाकालमादित्याभिमुखो द्विजः इति ।। आदित्याभिमुखश्चेत् सदा प्रातर्मध्याह्ने च स्थित एव जपेदित्यर्थः ।। याज्ञवल्क्यः – जपन्नासीत सावित्रीं प्रत्यगातारकोदयात् । सन्ध्यां प्राक् प्रातरेवं हि तिष्ठेदासूर्यदर्शनादिति ।।

காலையில் நிற்காமலும், மாலையில் உட்காராமலும் ஜபம் செய்வதில் தோஷம் சொல்கிறார் மனுவே:- ப்ராதஸ் ஸந்த்யையில் நின்று கொண்டும், ஸாயம் ஸந்த்யையில் உட்கார்ந்து கொண்டும் ஜபிக்காதவன் எவனோ, அவனை, ப்ராம்ஹண கர்மங்கள் எல்லாவற்றினின்றும் வெளிப்படுத்த வேண்டும். மாதவீயத்தில்:- மத்யாஹ்ன ஸந்த்யையில் கிழக்கு நோக்கி உட்கார்ந்தவனுய் ஜபிக்க வேண்டும். ஸூர்யனை நோக்கியவனுய் ஜபித்தால், காலையிலும் மத்யாஹ்னத்திலும், நின்று கொண்டே ஜபிக்க வேண்டும் என்று பொருள். யாக்ஞவல்க்யர்:- ஸாயங்காலத்தில் மேற்கு முகமாய், நக்ஷத்ரோதயம் வரையில் காயத்ரியை ஜபிப்பவனுய் உட்கார்ந்திருக்க வேண்டும். காலையில் கிழக்கு முகமாய் ஜபிப்பவனுய், ஸூர்யோதயம் வரையில் நிற்க வேண்டும்.

शौनकोऽपि–ऋष्यादीनि च संस्मृत्य सायमासीत वाग्यतः । प्रातस्तु प्राङ्मुखस्तिष्ठेत् मध्याह्ने सूर्यदिक्स्थितः इति ।। गौतमः – तिष्ठेत्पूर्वामासीतोत्तरां सज्योतिष्याज्योतिषो दर्शनाद्वाग्यत इति ।। यस्त्वापस्तम्बेनोक्तं – सन्ध्ययोश्च बहिर्ग्रामादासनं वाग्यतश्चेति, तत्र आसनं स्थितेरप्युपलक्षणम् । वाग्यमनं च लौकिक वाङ्नियमनम् । अन्यथा मन्वादिबहुस्मृतिव्याकोपप्रसङ्गात् । मन्वादिस्मृतिषु विहितस्य स्थानस्य प्रकरणात् ब्रह्मचारिविषयत्वकल्पने ब्रह्मचारिण-मनधिकृत्य द्विजमात्रमधिकृत्य प्रवृत्तानां स्थानासनविशिष्ट जपविधायकश्रुतिस्मृतीनामनन्वयप्रसङ्गः ।।

சௌனகரும்:- ருஷி முதலியதை அனுஸந்தித்து ஸாயங்காலத்தில் மௌனியாய் உட்கார்ந்திருக்க வேண்டும். காலையில் கிழக்கு முகமாய் நின்று கொண்டிருக்க வேண்டும். மத்யாஹ்னத்தில் ஸூர்யனிருக்கும் திக்கை நோக்கியவனுய் நின்றிருக்க வேண்டும். கௌதமர்:- ப்ராதஸ் ஸந்த்யையில் மௌனியாய் ஸூர்யோதயம் வரையில் நிற்க வேண்டும். ஸாயம் ஸந்த்யையில் மௌனியாய் நக்ஷத்ரம் காணப்படும் வரையில் உட்கார்ந்திருக்க வேண்டும். ஆபஸ்தம்பர்:- இரண்டு ஸந்த்யைகளிலும் க்ராமத்திற்கு வெளியில் உட்கார்ந்திருக்க வேண்டும். மௌனியாய் இருக்க வேண்டும் என்கிறார் எனில், இவர் வசனத்திலுள்ள 'ஆஸநம்' என்ற பதம் உட்காருவது என்பதைச் சொல்வதாயினும், நிற்பதையும் சொல்வதாகும். மௌனமென்பது லௌகிக வார்த்தைகளை நிவர்த்திப்பது என்பதாகும். இவ்விதம் சொல்லாவிடில் மனு முதலியவரின் அநேக ஸ்ம்ருதிகளுக்கு விரோதம் நேரிடும். மன்வாதி ஸ்ம்ருதிகளில் விதிக்கப்படும் ஸ்தானத்திற்கு (நிற்பது என்பது) ப்ரகாரண பலத்தால், ப்ரம்ஹசாரி விஷயத்வத்தைக் கற்பிப்பிக்கலாமெனில், ப்ரம்ஹ சாரிகளைப் பற்றி இல்லாமல், பொதுவாய் ப்ராம்ஹணர்களைக் குறித்து ப்ரவர்த்தி உள்ளதும், நின்றும், உட்கார்ந்தும் ஜபத்தை விதிப்பதுமான ச்ருதி ஸ்ம்ருதி வசனங்களுக்குப் பொருத்தமில்லாமை இருக்க நேரும்.

तथा छान्दोग्ये श्रूयते – कस्माद् ब्राह्मणः सायमासीनः सन्ध्यामुपास्ते कस्मात् प्रातस्तिष्ठन् यत्सायमासीनः सन्ध्यामुपास्ते तया वीरस्थानं जयति यत्प्रातस्तिष्ठन् तया स्वर्गं लोकं जयति इति। अखण्डादर्शे – वाग्यतः प्राङ्मुखस्तिष्ठेद्गायत्र्या जपमाचरन् इति ॥ योगयाज्ञवल्क्योऽपि – प्रातस्तिष्ठन् द्विजः सन्ध्याजपं कुर्यात् इति। मनुरपि – उत्थायावश्यकं कृत्वा कृत्वा शौचं समाहितः। पूर्वां सन्ध्यां जपेत् तिष्ठन् स्वकाले चापराह्निकमिति। अत्र सर्वत्र तिष्ठन् जपेदिति

व्यत्ययेनान्वयः। जपस्यैव प्रधानत्वात् तदङ्गत्वात् स्थानासनयोरिति चन्द्रिकायां व्याख्यातम्॥ अत एव - शङ्खः – पूर्वां सन्ध्यां जपेत्तिष्ठन् आसीनः पश्चिमां तथा इति।

அவ்விதமே சாந்தோக்ய ச்ருதியில்:- ப்ராம்ஹணன், ஏன் மாலையில் உட்கார்ந்தவனுயும், காலையில் நின்றவனுயும் ஸந்த்யோபாஸனம் செய்கிறுன்? (இதற்கு உத்தரம்) ஸாயங்காலத்தில் உட்கார்ந்து ஸந்த்யையை உபாஸிப்பதால் வீரஸ்தானத்தை ஜயிக்கிறுன். காலையில் நின்று கொண்டு உபாஸிப்பதால் ஸ்வர்க்கலோகத்தை ஜயிக்கிறுன். அகண்டாதர்சத்தில்:- காயத்ரியை ஜபிப்பவன் கிழக்கு முகமாய் மௌனியாய் நின்று கொண்டிருக்க வேண்டும். யோகயாக்ஞவல்க்யர்:- ப்ராம்ஹணன் காலையில் நின்றவனுய் ஸந்த்யாஜபம் செய்ய வேண்டும். மனு:- உஷ:காலத்திலெழுந்து, ஆவச்யகமான மல மூத்ர விஸர்ஜனம் செய்து, சௌசமும் செய்து, கவனமுள்ளவனுய், நின்று கொண்டு காலையில் காயத்ரீ ஜபம் செய்ய வேண்டும். மாலையிலும் உரியகாலத்தில் ஸந்த்யா ஜபம் செய்ய வேண்டும். இங்கு முன் சொல்லிய எல்லா வசனங்களிலும் 'ஜபிப்பவனுய் நிற்க வேண்டும்' என்றிருப்பதை 'நின்றவனுய் ஜபிக்க வேண்டும்' என்று மாற்றிச் சொல்ல வேண்டும். ஜபம் ப்ரதானமானதால், நிற்பதும் உட்காருவதும் ஜபத்திற்கு அங்கமானதால், என்று சந்த்ரிகை என்னும் க்ரந்தத்தில் வ்யாக்யானம் செய்யப்பட்டுள்ளது. ஆகையால்தான். சங்கர்:- ப்ராதஸ் ஸந்த்யையில் நின்றவனுய் ஜபிக்க வேண்டும். ஸாயம் ஸந்த்யையில் உட்கார்ந்தவனுய் ஜபிக்க வேண்டும் என்றார்.

गृह्यपरिशिष्टेऽपि – देवीमावाह्य तिष्ठन्नर्धनक्षत्रेष्वामण्डल-दर्शनान्मन्त्रार्थमनुसन्दधानः प्रणवव्याहृतिपूर्विकां सावित्रीं जपेदिति॥ स्मृत्यर्थसारेऽपि – आसूर्यदर्शनात्तिष्ठन् प्राङ्मुखो गायत्रीं

जपेत् । आनक्षदर्शनात् सायमासीनः प्रत्यङ्मुखो जपेदिति ॥ चन्द्रिकायाम् – प्रातः सन्ध्यां सनक्षत्रामुपक्रम्य यथाविधि । गायत्रीमभ्यसेत् तिष्ठन् यावदादित्यदर्शनमिति ॥

க்ருஹ்யபரிசிஷ்டத்திலும்:- *காயத்ரியை ஆவாஹனம் செய்து, நின்று கொண்டு, பாதி நக்ஷத்ரங்கள் தெரிவது முதல் ஸூர்ய மண்டலம் தெரியும் வரையில் மந்த்ரத்தின் அர்த்தத்தை த்யானிப்பவனுய், ப்ரணவம் வ்யாஹ்ருதி இவைகளை முன்னுடைய காயத்ரியை ஜபிக்க வேண்டும். ஸ்ம்ருத்யர்த்த ஸாரத்திலும்:-* ஸூர்யோதயம் *வரையில் கிழக்கு முகமாய் நின்று கொண்டு காயத்ரியை ஜபிக்க வேண்டும். மாலையில் மேற்கு முகமாய் உட்கார்ந்தவனுய் நக்ஷத்ர தர்சனம் வரையில் ஜபிக்க வேண்டும். சந்த்ரிகையில்:-* ப்ராதஸ் ஸந்த்யையில் *நக்ஷத்ரங்கள் இருக்கும்போதே ஆரம்பித்து நின்று கொண்டு விதிப்படி* ஸூர்யோதயம் *வரையில் காயத்ரியை ஜபிக்க வேண்டும்.*

व्यासोऽपि – तिष्ठन् प्रातर्जपेद्देवीमासीनः पश्चिमां तथेति ॥ एवञ्च गायत्रीजपस्य प्रधानत्वात् तदनुवर्तित्वादङ्गस्य उदयानन्तरं गौणकाले जपं कुर्वन्नपि तिष्ठन्नेव कुर्यात् । 'तिष्ठन्नासूर्यदर्शनादिति वचनं तु गायत्रीजपस्य मुख्यकालविधिपरम् । न तु उदयानन्तर-मासनविधिपरम् । अग्निकार्यं ततः कुर्यादित्युदयानन्तरं होमविधानात् उदयानन्तरं आसीतेति वचनाभावाच्च । न च तिष्ठेदासूर्यदर्शनादिति वचनात् उदयानन्तरमर्थसिद्धमासनमिति वाच्यम् । आसीनः पश्चिमां सन्ध्यामिति पश्चिमायामेव आसनविधानात् अन्यत्र स्थितेरर्थसिद्धेः । न च प्रातः सूर्यदर्शनपर्यन्तं स्थानस्य सायं नक्षत्रोदयपर्यन्तमासनस्य विधानात् तदन्तरालकाले स्थानमासनं वा वैकल्पिकमिति वाच्यम् । कालविशेषाभिधायिवचननिचयेन व्यवस्थासिद्धेः ॥

வ்யாஸரும்:- காலையில் நின்றுகொண்டும், மாலையில் உட்கார்ந்து கொண்டும் காயத்ரியை ஜபிக்க வேண்டும். இவ்விதமிருப்பதால், காயத்ரீ ஜபம் ப்ரதானமானதால், அங்கம் ப்ரதானத்தை அனுஸரிக்குமானதால், உதயத்திற்குப் பிறகு கௌணகாலத்தில் காயத்ரீ ஜபம் செய்தாலும் நின்று கொண்டு தான் செய்ய வேண்டும். तिष्ठन्नासूर्यदर्शनात् என்ற வசனமோவெனில், காயத்ரீ ஜபத்தின் முக்ய காலத்தை விதிப்பதில் தாத்பர்யம் உள்ளதேயன்றி உதயத்திற்குப் பிறகு உட்கார்ந்து ஜபிக்க வேண்டும் என்பதை விதிப்பதில் தாத்பர்யம் உள்ளதல்ல. 'பிறகு அக்னி கார்யம் செய்ய வேண்டும்' என்று, உதயத்திற்குப் பிறகு ஹோமத்தை விதித்திருப்பதாலும், 'உதயத்திற்குப் பிறகு உட்கார்ந்து ஜபிக்க வேண்டும்' என்ற வசனம் இல்லாமையாலும். तिष्ठेदासूर्यदर्शनात् என்ற வசனத்தால் ஸூர்யோதயத்திற்குப் பிறகு உட்காரவேண்டும் என்பது அர்த்தத்தால் ஸித்திக்கின்றது என்றும் சொல்லக் கூடாது. 'ஸாயம் ஸந்த்யையில் உட்கார்ந்து ஜபிக்க வேண்டும்' என்று ஸாயம் ஸந்த்யையில் மட்டும் உட்காருவதை விதித்திருப்பதால் ப்ராதஸ் ஸந்த்யையில் நிற்க வேண்டும் என்பது அர்த்தத்தால் ஸித்திப்பதால். 'காலையில் ஸூர்யோதயம் வரையில் நிற்பதையும், மாலையில் நக்ஷத்ரோதயம் வரையில் உட்காருவதையும் விதித்திருப்பதால், இவைகளுக்கு நடுவிலுள்ள காலத்தில் நிற்பதும் உட்காருவதும் விகல்பிக்கப்படுகிறது' என்று சொல்வதும் கூடாது. காலவிசேஷத்தைச் சொல்லும் வசனங்களால், ஸ்தாநஸனங்களின் வ்யவஸ்தை ஸித்திக்கின்து.

तथा च भरद्वाजसंवर्तव्यासाः – सहस्रपरमां देवीं शतमध्यां दशावराम्। गायत्रीं वै जपेत् प्रातः प्राङ्मुखः प्रयतः स्थितः इति ॥ योगयाज्ञवल्क्योऽपि – प्रातस्तिष्ठन् जपेदिति। मनुरपि – पूर्वां सन्ध्यां जपंस्तिष्ठन् नैशमेनो व्यपोहति इति। एतेषु वचनेषु उदयात् पूर्वापरभाव

विवेकविरहात् प्रातःकालस्थितिपरत्वात् असति विशेषोपस्थापके सामान्यसङ्कोचस्य अयुक्तत्वात्। सूर्योदयानन्तरमासनस्य कल्पने सायं नक्षत्रोदयानन्तरं गौणकालजपे स्थितेरपि कल्पनाप्रसङ्गात्। तस्मात् प्रातस्तिष्ठन् सायमासीन इत्याहुः॥

பாரத்வாஜ, ஸம்வர்த்த, வ்யாஸர்கள்:- *ப்ராத:காலத்தில் சுத்தஜலுய் கிழக்கு முகமாய் நின்று கொண்டு காயத்ரியை ஜபிக்க வேண்டும். ஆயிரம் ஆவ்ருத்தி உத்தமம். நூறு மத்யமம். பத்து அதமம்.* **யோகயாக்ஞவல்க்யர்:-** *காலையில் நின்று கொண்டு ஜபிக்க வேண்டும்.* **மனுவும்:-** *ப்ராதஸ் ஸந்த்யையில் நின்று கொண்டு ஜபிக்கின்றவன், இரவில் செய்த பாபத்தை போக்குகிறான். இந்த வசனங்களில் உதயத்திற்கு முன், பின் என்ற பிரிவு இல்லாததால், காலையில் நிற்க வேண்டும் என்பதை மட்டில் சொல்வதால், விசேஷ வசனம் இல்லாவிடில் ஸாமான்ய வசனத்தை ஸங்கோசப்படுத்துவது யுக்தம் இல்லாததால், ஸூர்யோதயத்திற்குப் பிறகு உட்கார்ந்து செய்யலாமென்று கல்பித்தால், ஸாயங்காலத்தில் நக்ஷத்ரோதயத்திற்குப் பிறகு கௌண காலத்தில் செய்யும் ஜபத்தில் நின்று கொண்டு செய்யலாமென்றும் கல்பிக்க நேரிடுமாகையால் 'காலையில் நின்று கொண்டும், மாலையில் உட்கார்ந்து கொண்டும் ஜபிக்க வேண்டும்' என்கின்றனர்.*

यमः – सहस्रपरमां देवीं शतमध्यां दशावराम्। गायत्रीं तु जपेन्नित्यं सर्वपापप्रणाशिनीमिति॥ बोधायनस्तु विशेषमाह – दर्भेष्वासीनो दर्भान् धारयमाणस्सोदकेन पाणिना प्रत्यङ्मुखः सावित्रीं सहस्रकृत्व आवर्तयेत्। प्राणायामशो वा शतकृत्वः। उभयतःप्रणवां सप्तव्याहृतिपूर्विकां मनसा वा दशकृत्वस्त्रिभिश्च प्राणायामैस्तान्त एवं प्रातः प्राङ्मुखस्तिष्ठन्निति। योगयाज्ञवल्क्योऽपि –

सहस्रकृत्वस्सावित्रीं जपेदव्यग्रमानसः । शतकृत्वोऽपि वा सम्यक् प्राणायामपरो यदि । सप्तव्याहृतिपूर्वां चेदाद्यन्तप्रणवान्विताम् । मनसा वा जपेच्चैव दशकृत्वोऽवरः स्मृतः इति ।।

யமன்:- *ஸகல பாபங்களையும் விலக்கும் காயத்ரியை ப்ரதி தினமும் ஜபிக்க வேண்டும். ஆயிரம் தடவை ஜபிப்பது உத்தமம். நூறு தடவை மத்யமம். பத்து தடவை குறைந்த பக்ஷம்.* **போதாயனர்:-** *தர்ப்பங்களில் உட்கார்ந்தவனுய், ஜலத்துடன் கூடிய கையினுல் தர்ப்பங்களை தரித்தவனுய், (மாலையில்) மேற்கு நோக்கியவனுய், காயத்ரியை ஆயிரம் தடவை ஜபிக்க வேண்டும். அல்லது ப்ராணு யாமத்துடன் நூறு தடவை ஜபிக்கலாம். (மூச்சை அடக்கிக் கொண்டு ஜபித்தால் ப்ராணுயாமத்துடன் ஜபிப்பதென்பதாம். மூச்சை அடக்கிய காலத்தில் எவ்வளவு கூடுமோ அவ்வளவு ஜபித்து, மறுபடி மூச்சை விட்டு, மறுபடி மூச்சை அடக்கி ஜபிக்க வேண்டும். மூச்சு விடும் காலத்தில் ஜபிக்கக் கூடாது. இந்த அர்த்தத்தை ஆபஸ்தம்ப தர்மஸூத்ர வ்யாக்யானத்தில் காணலாம்.) அல்லது, இருபுறமும் ப்ரணவமுடையதும், ஏழு வ்யாஹ்ருதிகளை முன்னுடையதுமான காயத்ரியை மனதால் பத்து தடவை ஜபிக்கலாம். மூன்று ப்ராணு யாமங்களால் சோர்ந்தவனுய் ஜபிக்க வேண்டும். காலையிலும் இவ்விதமே கிழக்கு நோக்கி நின்று கொண்டு ஜபிக்க வேண்டும்.* **யோக யாக்ஞவல்க்யரும்:-** *வேறிடத்தில் மனதில்லாதவனுய் காயத்ரியை ஆயிரம் தடவை ஜபிக்க வேண்டும். அல்லது ப்ராணு யாமத்துடன் ஜபித்தால் நூறு தடவை ஜபிக்கலாம். அல்லது, இருபுறமும் ப்ரணவத்துடன் கூடியதும், ஏழு வ்யாஹ்ருதிகளை முன்னுடையதுமான காயத்ரியை மனதால் பத்து தடவை ஜபிக்கலாம். இது கடைசி பக்ஷம்.*

व्यासः – सहस्रपरमां नित्यं शतमध्यां दशावराम् । सावित्रीं वै जपेद्विद्वान् प्राङ्मुखः प्रयतश्शुचिरिति । अत्र चन्द्रिकायां व्यवस्था कृता

– दशावरामित्यापद्विषयम्। आशौचविषयं च। आपन्नश्चाशुचिः काले तिष्ठन्नपि जपेद्दशेत्याश्वलायनेनोक्तत्वात्। सहस्रपरमामिति सहस्रकृत्व इति वचनं वानप्रस्थादिविषयम्। 'शतमष्टोत्तर' मित्यनुदितहोमिगृहस्थब्रह्मचारिविषयम्। ब्रह्मचारिणोऽपि सन्ध्ययोरग्निकर्म चेति प्रागुदयादग्निकार्यस्मरणात्। उदितहोमिनस्तु सावित्रीमार्कदर्शनादिति मन्वाद्युक्तं द्रष्टव्यमिति ॥ तथा च योगयाज्ञवल्क्यः – ब्रह्मचार्याहिताग्निश्च शतमष्टोत्तरं जपेत्। वानप्रस्थो यतिश्चैव सहस्रादधिकं जपेदिति ॥ तयोरनग्निकत्वेन, होमकालानतिपत्तेरिति भावः ॥ आहिताग्निग्रहणमेकाग्नेरप्युपलक्षणम्।

வ்யாஸர்:- அறிந்தவன், அடக்கம் சுத்தி இவைகளுடையவனுய், கிழக்கு நோக்கியவனுய் காயத்ரியை ஜபிக்க வேண்டும். ஆயிரம் தடவை ஜபிப்பது உத்தமம். நூறு மத்யமம். பத்து தாழ்ந்தது. இது விஷயத்தில் சந்த்ரிகையில் வ்யவஸ்தை செய்யப்பட்டுள்ளது 'தசாவராம்' என்றது ஆபத்காலத்தைக் குறித்ததும், ஆசௌசம் உள்ளவர்களைக் குறித்ததும். 'ஆபத்துடைய வனும், ஆசௌசம் உடையவனும், ஸந்த்யா காலத்தில் நின்றவனுய் பத்து தடவை ஜபிக்க வேண்டும்' என்று ஆச்வலாயனர் சொல்லி இருப்பதால். 'ஆயிரம் தடவை ஜபிப்பது உத்தமம்' 'ஆயிரம் தடவை ஜபிக்க வேண்டும்' என்று சொல்வது வானப்ரஸ்தர் முதலியவரைக் குறித்தது. 'நூற்றெட்டுத் தடவை ஜபிக்க வேண்டும்' என்பது உதயத்திற்கு முன்பு ஹோமம் செய்யும் க்ருஹஸ்தர், ப்ரம்ஹசாரிகள் இவர்களைக் குறித்தது. இரு ஸந்த்யைகளிலும் அக்னி கார்யம் செய்ய வேண்டும்' என்று, ப்ரம்ஹசாரிக்கும் உதயத்திற்கு முன் அக்னி கார்யம் விதிக்கப்பட்டிருப்பதால். 'ஸூர்ய தர்சனம் வரையில் காயத்ரியை ஜபிக்க வேண்டும்' என்று மனு முதலியவர் சொல்லியது உதயத்திற்குப் பிறகு ஹோமம் செய்பவனைப்

பற்றியது. அவ்விதமே யோகயாக்ஞவல்க்யர்:- ப்ரம்ஹசாரியும் ஆஹிதாக்னியும் 108-முறை ஜபிக்க வேண்டும். வானப்ரஸ்தனும் ஸன்யாஸியும் 1000 -க்கு அதிகமாய் ஜபிக்க வேண்டும். அவ்விருவரும் அக்னி இல்லாதவரானதால், ஹோமகாலம் அதிக்ரமிக்கும் என்பதில்லாததாலென்று பொருள். ஆஹிதாக்னி என்றது ஒரு அக்னியை உடைய க்ருஹஸ்தனையும் குறிக்கின்றது.

तथा च संवर्तः – गृहस्थो ब्रह्मचारी च शतमष्टोत्तरं जपेत्। वानप्रस्थो यतिश्चैव जपेदष्टसहस्रकम् इति ॥ स्मृत्यर्थसारे – ब्रह्मचारी गृहस्थश्च शतमष्टोत्तरं जपेत्। वानप्रस्थो यतिश्चैव सहस्रादधिकं जपेत्। दशापत्सु जपेद्वेत्रीमष्टाविंशतिमष्ट वा इति । ननु सावित्रीमार्कदर्शनादिति उदयपर्यन्तं जपविधानात्, 'न चान्तरा व्याहरेत्तु विरमेद्वा कथंचन' नान्तरा विरमेत् क्वचिदिति व्यासशौनकाभ्यां जपमध्ये विरमणस्य च प्रतिषिद्धत्वादुदितहोमिन आहिताग्नेर्विहरणलोपप्रसङ्गः। मैवम्। श्रुतिविरोधे सति मध्ये विरमणे अविरोधात् ॥ अत एवापस्तम्बः – विप्रतिषेधे श्रुतिलक्षणं बलीयः इति ॥

அவ்விதமே ஸம்வர்த்தர்:- க்ருஹஸ்தனும், ப்ரம்ஹசாரியும் 108-முறை ஜபிக்க வேண்டும். வானப்ரஸ்தனும் யதியும் 1008 முறை ஜபிக்க வேண்டும். ஸ்ம்ருத்யர்த்தஸாரத்தில்- ப்ரம்ஹசாரியும், க்ருஹஸ்தனும் 108 -முறை ஜபிக்க வேண்டும். வானப்ரஸ்தனும், யதியும் 1000 க்கு அதிகமாய் ஜபிக்க வேண்டும். ஆபத்காலங்களில் பத்து அல்லது 28 அல்லது 8 முறை ஜபிக்க வேண்டும். 'காயத்ரியை ஸூர்யோதய தர்சனம் வரையில் ஜபிக்க வேண்டும்' என்று உதயம் வரையில் ஜபம் விதிக்கப் பட்டிருப்பதால், 'நடுவில் எவ்விதத்திலும் பேசக்கூடாது, ஜபத்தை நிறுத்தவும் கூடாது' என்று வ்யாஸர், சௌனகர் இவர்கள் ஜபமத்யத்தில் நிறுத்துவதைத் தடுத்திருப்பதால்,

உதித ஹோமியான ஆஹிதாக்னிக்கு விஹரணம் செய்வது லோபிக்க வாகுமே' எனில், இவ்விதமல்ல. ச்ருதிக்கு விரோதம் வருமாகில், நடுவில் நிறுத்துவதால் விரோதமாகாது. ஆகையாலேயே ஆபஸ்தம்பர் - 'ச்ருதிக்கும் ஸ்ம்ருதிக்கும் விரோதம் வருமாகில் ச்ருதியிற் சொல்லியது அதிக பலமுள்ளது' என்றார்.

शङ्खः – स्वरवर्णपदैर्वाक्यं शुद्धमावर्तयन् जपेत् । न कम्पयेच्छिरो ग्रीवां दन्तान्नैव प्रघट्टयेदिति ।। तच्च वाक्यं मनुनोक्तम् - 'एतदक्षरमेतां च जपन् व्याहृतिपूर्विकाम् । सन्ध्ययोर्वेदविद्विप्रो वेदपुण्येन युज्यते इति ।। एतदक्षरं - प्रणवम् । एतां - गायत्रीम् ।। व्यासोऽपि – प्रणवव्याहृतियुतां गायत्रीं तु ततो जपेत् । समाहितमनास्तूष्णीं मनसाऽपि विचिन्तयेत् इति । पितामहः – प्रणवं व्याहृतीस्तिस्रो गायत्रीं च जपेत् क्रमात् । प्रणवव्याहृतियुता स्वाहान्ता होमकर्मणि । शुद्धा वाऽत्र प्रयोक्तव्या व्याहृतिप्रणवैर्विना इति ।।

சங்கர்:- ஸ்வரம், வர்ணம், பதம் இவைகளால் சுத்தமாயுள்ள 'வாக்யத்தை ஆவ்ருத்தி செய்து கொண்டு ஜபிக்க வேண்டும். தலையையும், கழுத்தையும், அசைக்கக் கூடாது. பற்களை கடிக்கக் கூடாது. அந்த வாக்யம் எதுவெனில், அது மனுவினால் சொல்லப்பட்டிருக்கிறது. 'இந்த அக்ஷரத்தையும் (ப்ரணவத்தையும்) வ்யாஹ்ருதிகளை முன்னுடைய இதையும் (காயத்ரியையும்) ஸந்த்யைகளில் ஜபிக்கின்ற வேதமறிந்த ப்ராம்ஹணன் மூன்று வேதங்களோதிய புண்யத்துடன் சேருகிறான். வ்யாஸரும்:- பிறகு ப்ரணவத்துடனும், வ்யாஹ்ருதிகளுடனும் கூடிய காயத்ரியை ஜபிக்க வேண்டும். மௌனமாய் கவனமுள்ளவனாய் மனதினாலும் சிந்திக்க வேண்டும். பிதாமஹர்:- ப்ரணவத்தையும், 3-வ்யாஹ்ருதிகளையும், காயத்ரியையும் முறையே ஜபிக்க வேண்டும். ஹோமகர்மத்தில், ப்ரணவ வ்யாஹ்ருதிகளை முன்னுடைய காயத்ரியை, 'ஸ்வாஹா' என்பதைக்

கடைசியிலுள்ளதாய் உச்சரிக்க வேண்டும். அல்லது, ப்ரணவ வ்யாஹ்ருதிகளைச் சேர்க்காமல் சுத்தமாகவும் ஹோமத்தில் உச்சரிக்கலாம்.

स्मृतिरत्ने – शुद्धयैव तु होतव्यं गायत्र्या होमकर्मणि। त्रिकेणैव जपः कार्यो जपयज्ञप्रसिद्धय इति। प्रणवः व्याहृतयः गायत्री चेति त्रिकम्। बोधायनः – प्रणवो व्याहृतयस्तिस्रः सावित्री चेत्येते पञ्चब्रह्मयज्ञाः अहरहर्ब्राह्मणं किल्बिषात् पावयन्त इति ॥ यत्तु योगयाज्ञवल्क्य आह – ओङ्कारं पूर्वमुच्चार्य भूर्भुवःस्वस्तथैव च। गायत्रीं प्रणवं चान्ते जप एवमुदाहृतः ॥ एषा सम्पुटगायत्री सर्वपापप्रणाशिनीति ॥ यदपि बोधायनः – उभयतःप्रणवां सव्याहृतिकां जपेदिति, यदपि वृद्धमनुः – षडोङ्कारां जपेद्विप्रो गायत्रीं मनसा शुचिः। अनेकजन्मजैः पापैः मुच्यते नात्र संशयः ॥ तिस्रो व्याहृतयः पूर्वं पृथगोङ्कारसंयुताः। पुनस्संहृत्य चोङ्कारं मन्त्रस्याद्यन्तयोस्तथेति, तत्सर्वं गृहस्थब्रह्मचारिव्यतिरिक्तविषयम्॥

ஸ்ம்ருதிரத்னத்தில்:- ஹோம கார்யத்தில் சுத்த காயத்ரியினுலேயே ஹோமம் செய்ய வேண்டும். ஜப யஜ்ஞம் ஸித்திப்பதற்கு ப்ரணவம், வ்யாஹ்ருதிகள், காயத்ரி இம்மூன்றையும் சேர்ந்தே ஜபிக்க வேண்டும். **போதாயனர்:-** ப்ரணவம், மூன்று வ்யாஹ்ருதிகள், காயத்ரீ என்ற இந்த ஐந்தும் ப்ரம்ஹயக்ஞங்கள் எனப்படும். இவை ஒவ்வொரு நாளும் ப்ராம்ஹணனை பாபத்தினின்றும் விலக்குகின்றன. **யோக யாக்ஞவல்க்யர்:-** ''ஓங்காரத்தை முதலில் உச்சரித்து, பிறகு வ்யாஹ்ருதிகளையும், பிறகு காயத்ரியையும், முடிவில் ப்ரணவத்தையும் உச்சரித்து ஜபிக்க வேண்டும். இந்த ஸம்புட காயத்ரீ ஸகல பாபங்களையும் போக்கக் கூடியது'' என்று சொல்லியதும், **போதாயனர்:-** ''ஆதியிலும், அந்தத்திலும் ப்ரணவமுடையதாயும், வ்யாஹ்ருதிகளுடன் கூடியதாயும் ஜபிக்க வேண்டும்'' என்று சொல்லியதும், **வ்ருத்தமனு:-**

''ப்ராம்ஹணன் சுத்தனுய், 6- ஓங்காரங்களுடையதான காயத்ரியை மனதால் ஜபிக்க வேண்டும். அனேக ஜன்மங்களில் உண்டாகிய பாபங்களால் விடுபடுகிறன். ஸம்சயமில்லை. முதலில் ஒரு ஓங்காரம், வ்யாஹ்ருதிகள் மூன்றுக்கும் ஆதியில் தனித்தனி ஓங்காரம், காயத்ரியின் ஆதியில் ஒன்று, முடிவில் ஒன்று ஆக ஆறு ஓங்காரங்கள்'' என்று சொல்லியதும், இதெல்லாம் க்ருஹஸ்தன் ப்ரம்ஹசாரி இவர்களைத் தவிர்த்த மற்றவரின் விஷயமாம்.

तथा च स्मृतिरत्नावल्याम् – सम्पुटैकषडोङ्कारा गायत्री त्रिविधा मता। तत्रैकप्रणवा ग्राह्या गृहस्थैर्जपकर्मणि॥ गृहस्थवत्तु जप्तव्या सदैव ब्रह्मचारिभिः। सम्पुटा च षडोङ्कारा भवेतामूर्ध्वरेतसाम् इति। स्मृतिसारसमुच्चयेऽपि – गृहस्थो ब्रह्मचारी च प्रणवाद्यामिमां जपेत्। अन्ते यः प्रणवं कुर्यान्नासौ वृद्धिमवाप्नुयात् इति। वृद्धमनुः – सोङ्कारा चतुरावृत्त्या विज्ञेया सा शताक्षरा। शताक्षरां समावर्त्य सर्ववेदफलं लभेत्। एतया ज्ञातया नित्यं वाङ्मयं विदितं भवेत्। उपासितं भवेत्तेन विश्वं भुवनसप्तकमिति॥ अस्यार्थः चन्द्रिकायामभिहितः – सोङ्कारेत्यनेन व्याहृतीनां सङ्ख्याननुप्रवेश उच्यते। एवं च ओङ्कारेण सह पञ्चविंशत्यक्षरा सम्पद्यते। मन्त्रे तु व्याहृतित्रयस्यानुप्रवेशोऽस्त्येवेति॥

அவ்விதமே, ஸ்ம்ருதி ரத்னவளியில்:- ஸம்புடை என்றும், ஒரு ப்ரணவம் உள்ளதென்றும், ஆறு ப்ரணவமுள்ளதென்றும், காயத்ரீ மூன்று விதமாய் சொல்லப்பட்டுள்ளது. அவையுள் ஒரு ப்ரணவமுள்ளதை க்ருஹஸ்தர்கள் ஜபத்தில் க்ரஹிக்க வேண்டும். எப்பொழுதுமே ப்ரம்ஹசாரிகள் க்ருஹஸ்தர்களைப் போலவே ஜபிக்க வேண்டும். ஸம்புட காயத்ரியும், ஷடோங்கார காயத்ரியும் ஊர்த்வரேதஸ்ஸுகளுக்கு (வானப்ரஸ்தருக்கும், யதிகளுக்கும்) விதிக்கப்பட்டதாம். ஸ்ம்ருதி ஸாரஸமுச்சயத்திலும்:- க்ருஹஸ்தனும்,

ப்ரம்ஹசாரியும் ப்ரணவத்தை ஆதியிலுடையதாய் காயத்ரியை ஜபிக்க வேண்டும். எவன் முடிவில் ப்ரணவத்தைச் சேர்த்து ஜபிக்கின்றானோ இவன் வ்ருத்தியை அடையமாட்டான். வ்ருத்தமென்னில்: ஓங்காரத்துடன் கூடிய காயத்ரியை நான்கு தடவை ஆவ்ருத்தி செய்தால், அது நூறு அக்ஷரங்களுடையதாய் ஆகிறது என்று அறியவும். சதாக்ஷர காயத்ரியை ஜபிப்பதால் ஸர்வ வேதங்களையும் ஜபித்த பலனை அடைவான். இதை அறிந்ததால் ஸகல சாஸ்த்ரங்களும் அறியப்பட்டதாகும். அவனால் ஏழு உலகங்களும் உபாஸிக்கப்பட்டதாகும். இதற்கு அர்த்தம் சந்த்ரிகையில் சொல்லப்பட்டுள்ளது. 'ஓங்காரத்துடன்' கூடிய என்றதால், வ்யாஹ்ருதிகள் ஸங்க்ஞையில் சேர்க்கப்படவில்லை என்பது சொல்லப்படுகிறது. இவ்விதம் இருப்பதால், ஓங்காரத்துடன் 25 அக்ஷரமுள்ளதாகிறது. ஆனாலும் மந்த்ரத்தில் மூன்று வ்யாஹ்ருதிகளுக்கும் சேர்க்கை உண்டு' என்று.

अत एव विश्वामित्रः – प्रणवोऽप्यत्र मन्त्रादौ व्याहृतित्रितयं ततः । जपे प्रशस्ता सावित्री प्रणवेन समन्विता ॥ अतिप्रशस्ता तेनापि व्याहृतित्रितयेन चेति ॥ संवर्तोऽपि – प्रणवाद्यां तु सन्ध्यायां जपेद्व्याहृतिभिस्सह इति ॥ व्यासः – त्रिसन्ध्यं तु जपेद्देवीं विच्छिद्यैव पदत्रयम् । अविच्छिन्नं जपेद्यस्तु रौरवं नरकं व्रजेदिति ॥ विष्णुः – अच्छिन्नपादा गायत्री ब्रह्महत्यां प्रयच्छति । छिन्नपादा तु गायत्री ब्रह्महत्यां व्यपोहति । तस्मात् पादत्रयं छित्वा जपयज्ञं समाचरेदिति ॥

ஆகையால்தான் விச்வாமித்ரர்:- 'இங்கு மந்த்ரத்தின் ஆதியில் ப்ரணவமும் பிறகு மூன்று வ்யாஹ்ருதிகளும் சேர்க்கப்பட வேண்டும். ப்ரணவத்துடன் கூடியதால் காயத்ரீ சுத்தமாயாகிறது. மூன்று வ்யாஹ்ருதிகளுடன் கூடியதால் மிகவும் ச்லாக்யமாய் ஆகிறது. ஆகையால் ஸந்த்யா காலத்தில் காயத்ரியை ப்ரணவத்தை

முன்னுடையதாய் வ்யாஹ்ருதிகளுடன் கூடியதாய் ஜபிக்க வேண்டும்' என்றார். ஸம்வர்த்தரும்:- ப்ரணவத்தை முன்னுடையதும், வ்யாஹ்ருதிகளுடன் கூடியதுமான காயத்ரியை ஸந்த்யாகாலத்தில் ஜபிக்க வேண்டும். வ்யாஸர்:- மூன்று ஸந்த்யைகளிலும், காயத்ரியின் மூன்று பாதங்களையும் பிரித்தே ஜபிக்க வேண்டும். பிரிக்காமல் ஜபிப்பவன் ரௌரவமெனும் நரகத்தை அடைவான். விஷ்ணு:- காயத்ரியின் பாதங்களைப் பிரிக்காமல் ஜபிப்பது ப்ரம்ஹஹத்யா தோஷத்தைக் கொடுக்கும். பிரித்து ஜபிப்பது ப்ரம்ஹஹத்யா தோஷத்தையும் போக்கும். ஆகையால் மூன்று பாதங்களையும் பிரித்தே ஜபயக்ஞம் செய்ய வேண்டும் ஸ்ம்ருதி ரத்னாவளியில்:- எந்த ப்ராம்ஹணர்கள் பாதங்களைப் பிரிக்காமல் காயத்ரியை ஜபிக்கின்றனரோ அவர்கள், நரகத்தில் அநேககோடி கல்பகாலம் வரை தலைகீழாக இருக்கின்றனர்.

जपयज्ञस्य भेदोऽभिहितो माधवीये – वाचिकाख्य उपांशुश्च मानसश्च त्रयः स्मृताः । त्रयाणां जपयज्ञानां श्रेयान् स्यादुत्तरोत्तर इति । एतेषां लक्षणं तत्रैवोक्तम् – यदुच्चनीचस्वरितैः स्पष्टैः स्पष्टपदाक्षरैः । मन्त्रमुच्चारयेद्वाचा जपयज्ञः स वाचिकः । शनैरुदीरयेन्मन्त्र मीषदोष्ठौ प्रचालयेत् । किञ्चिच्छब्दं स्वयं विद्या दुपांशुः स जपः स्मृतः ।। धिया यदक्षरश्रेण्या वर्णाद्वर्णं पदात्पदम् । मन्त्रार्थचिन्तनं भूयः कथ्यते मानसो जपः ।। उत्तमं मानसं जप्य मुपांशु मध्यमं स्मृतम् । अधमं वाचिकं प्राहुः सर्वमन्त्रेषु वै द्विजाः ।। वाचिकस्यैकमेकं स्यादुपांशु शतमुच्यते । सहस्रं मानसं प्रोक्तं मन्वत्रिभृगुनारदैः इति ।।

ஜபயக்ஞத்தின் பேதம் சொல்லப்பட்டுள்ளது. மாதவீயத்தில்:- வாசிகம், உபாம்சு, மானஸம் என மூன்று விதமாய் ஜபயக்ஞங்கள் சொல்லப்பட்டுள்ளன. இம்மூன்று ஜபயக்ஞங்களுள் முந்தியதை விடப் பிந்தியது

சிறந்ததாகும். இவைகளின் லக்ஷணம் அங்கேயே சொல்லப்பட்டுள்ளது:- உதாத்தம், அனுதாத்தம், ஸ்வரிதம் இவைகளையும், பதங்கள் அக்ஷரங்கள் இவைகளையும் ஸ்பஷ்டமாய் உச்சரித்து ஜபிப்பது வாசிகஜப யஜ்ஞமாம். மந்த்ரத்தை மெதுவாய் உச்சரிக்க வேண்டும். உதடுகளைக் கொஞ்சமாய் அசைக்க வேண்டும். உச்சரிக்கும் சப்தம் தன்னுல் மட்டும் கேட்கப்பட வேண்டும். இவ்விதம் ஜபிப்பது உபாம்சு ஜபமாம். ஒவ்வொரு அக்ஷரத்தையும் பதத்தையும் மனதினுல் த்யானித்து மந்த்ரார்த்தத்தையும் த்யானிப்பது மானஸ ஜபம் எனப்படுகிறது. மானஸ ஜபம் உத்தமம், உபாம்சு ஜபம் மத்யமம் எனப்படுகிறது. வாசிக ஜபம் அதமம் எனப்படுகிறது. எல்லா மந்த்ரங்களுக்கும் இது பொதுவான விதி. வாசிக ஜபத்திற்கு ஒரு பங்கு பலன். உபாம்சு ஜபத்திற்கு நூறு பங்கு பலன் சொல்லப்படுகிறது. மானஸ ஜபத்திற்கு ஆயிரம் மடங்கு பலனென்று மனு, அத்ரி, ப்ருகு, நாரதர் இவர்களால் சொல்லப்பட்டுள்ளது.

हारीतः – मन्त्रमुच्चारयेद्वाचा जपयज्ञः स वाचिकः । स उपांशुजपोऽशब्दश्चलज्जिह्वादशच्छदः ॥ मानसस्त्वचलज्जिह्वादशनच्छद ईरितः । उच्चैस्त्वेकगुणः प्रोक्तोऽध्वानो दशगुणः स्मृतः । उपांशुः स्याच्छतगुणः सहस्रो मानसः स्मृतः । मुक्तिदो मानसो ज्ञेय उपांशुस्सर्वसिद्धिदः । त्रिविधो जपयज्ञस्स्यात् वाचिकः क्षुद्रकर्मणीति । वैयाघ्रपादः – त्रिविधो जपयज्ञः स्यात् मानसोपांशुभाषिकः । परश्रवणयोग्यो यः स भाषिक उदीरितः ॥ उपांशुरोष्ठसंस्पर्शमात्रः स्वश्रुतिगोचरः । यो भवेदच लज्जिह्वादशनावरणो जपः ॥ मानसः सः समाख्यातो जपः श्रुतिविभूषणैः । उच्चैर्जपाद्विशिष्टस्स्यादुपांशुर्दशभिर्गुणैः ॥ जिह्वाजपः शतगुणः सहस्रो मानसः स्मृतः । मानसः सिद्धिकामानां पुष्टिकामैरुपांशुकः ॥ वाचिको मारणे चैव प्रशस्तो जप ईरितः इति ॥

यत्तु व्यासेनोक्तम् – मनसैव जपं कुर्यात् सावित्र्यास्तु विशेषत इति, तत् मानसजपप्रशंसाभिप्रायम्, न पुनरुपांशुत्वनिषेधार्थम्। तथात्वे उपांशुजपयुक्तस्य शंसाच्छतगुणो भवेत् इत्यादिवचनविरोधः स्यात्। शंसः - उच्चैर्जपः।।

ஹாரீதர்:- மந்த்ரத்தை வாக்கினால் உச்சரிக்க வேண்டும். அது வாசிக ஜபம் எனப்படும். சப்தமில்லாமல் நாக்கும் உதடுகளும் அசையும்படி உச்சரிப்பது உபாம்சு ஜபம் எனப்படும். நாக்கும் உதடுகளும் அசையாமல் ஜபிப்பது மானஸ ஜபம் எனப்படும். சப்தத்துடன் ஜபிக்கும் ஜபம் ஒரு மடங்கு பலனை அளிக்கும். சப்தமில்லாது ஜபிக்கும் ஜபம் 10- மடங்கு பலனை யளிக்கும். உபாம்சு ஜபம் 100- மடங்கு பலனை அளிக்கும். மானஸ ஜபம் 1000 - மடங்கு பலனை அளிக்கும். மானஸ ஜபம் முக்தியை அளிக்கும். உபாம்சு ஜபம் ஸகல ஸித்தியையுமளிக்கும். வாசிக ஜபத்தை க்ஷுத்ரமான (அபிசார) கர்மத்தில் உபயோகிக்க வேண்டும். இவ்விதம் ஜபயக்ஞம் மூன்று விதமாகும். **வையாக்ரபாதர்:-** ஜபயக்ஞம் மானஸம், உபாம்சு, பாஷிகம் என மூன்றுவிதம் உடையது. பிறர் கேட்கும்படி ஜபிப்பது பாஷிகம். உதடு ஒன்றுக்கொன்று ஸம்பந்தித்து, தன்காதிற்கு மட்டில் கேட்கும்படி உச்சரித்து ஜபிப்பது உபாம்சு. நாக்கும் உதடுகளும் அசையாமல் ஜபிப்பது மானஸம் என்று வேதமறிந்தவர்கள் சொல்லுகின்றனர். சப்தத்துடன் ஜபிப்பதைவிட உபாம்சு ஜபம் 10- மடங்கு சிறந்தது. நாக்கினால் ஜபிப்பது 100- மடங்கு சிறந்தது. மானஸ ஜபம் 1000 - மடங்கு சிறந்தது. ஸித்தியை விரும்பியவர்களுக்கு மானஸமும், புஷ்டியை விரும்பியவர்களுக்கு உபாம்சுவும், அபிசார கர்மத்தில் வாசிகமும் சிறந்ததெனச் சொல்லப்பட்டிருக்கிறது. இங்கு, ''காயத்ரீ ஜபத்தை மனதினாலேயே செய்ய வேண்டும். அது விசேஷமானது'' என்று வ்யாஸர் சொல்லி இருப்பது, மானஸ ஜபத்தைப் புகழ்வதில் அபிப்பிராயம் உடையதேயன்றி உபாம்சு ஜபத்தை நிஷேதிப்பதற்கல்ல.

நிஷேதிப்பதற்கென்றால், உபாம்சுவாய் ஜபிப்பவனுக்கு, உரக்க வாசிக ஜபத்தைவிட 100- மடங்கதிகமாகும்'' என்பது முதலான வசனங்களுக்கு விரோதம் நேரிடும்.

जपनियममाह – शौनकः । कृत्वोत्तानौ करौ प्रातः सायं चाधोमुखौ तथा । मध्ये स्तब्धकराभ्यां तु जप एव मुदाहृतः इति ।। व्यासोऽपि – प्रातरुत्तानपाणिभ्यां स्तब्धाभ्यां दिनमध्यमे । अधोमुखाभ्यां पाणिभ्यां सायं संलक्षितो जपेत् ।। प्रातर्नासासमौ कुर्यात् मध्याह्ने तूरसा समौ । सायङ्काले नाभिसमौ करौ कुर्यादतन्द्रितः । अपवित्रकरोऽशुद्धः प्रलपन्न जपेत् क्वचित् । अप्रावृतकरो वाऽपि शिरसि प्रावृतोऽपि वेति ।।

ஜபத்தில் நியமத்தைச் சொல்லுகிறார் சௌனகர் - காலையில் கைகளை நிமிர்த்திக் கொண்டும், மாலையில் கீழ்நோக்கியதாய்ச் செய்து கொண்டும், மத்யாஹ்னத்தில் நடுநிலைமையாய் வைத்துக் கொண்டும் ஜபிக்க வேண்டும். வ்யாஸரும்:- காலையில் உயர்த்தப்பட்ட கைகளோடும் மத்யாஹ்னத்தில் ஸ்தப்தமான (விறைத்த) கைகளோடும், மாலையில் கீழ்நோக்கிய கைகளோடும் ஜபிக்க வேண்டும். காலையில் மூக்குக்குச் சமமாகவும், மத்யாஹ்னத்தில் மார்புக்குச் சமமாகவும், மாலையில் நாபிக்குச் சமமாகவும் கைகளை வைத்துக் கொள்ள வேண்டும். கையில் பவித்ரமணியாமலும், அசுத்தனுயும் பேசிக் கொண்டும், கைகளை மூடிக் கொள்ளாமலும், தலையை மூடிக்கொண்டும் ஒருபோதும் ஜபிக்கக் கூடாது.

शौनकः – मनस्सन्तोषणं शौचं मौनं मन्त्रार्थचिन्तनम् । अव्यग्रत्वमनिर्वेदो जपसंपत्तिहेतव इति ।। व्यासः – न प्रकाशं न च हसन् न पार्श्वमवलोकयन् । नापाश्रितो न जल्पंश्च न प्रावृतशिरास्तथा । न पदा पदमाक्रम्य न चैव हि तथा करौ । न चासमाहितमना न च संश्रावयन् जपेत् ।। अपाश्रितः - स्तम्भादिश्रितः । जपकाले न भाषेत

व्रतहोमादिकेषु च ।। एतेष्वेवावसक्तस्तु यद्यागच्छेत् द्विजोत्तमः । अभिवाद्य ततो विप्रं योगक्षेमं च कीर्तयेदिति ।।

சௌனகர்:- மனதில் ஸந்தோஷம், சுத்தி, மௌனம், மந்த்ரார்த்தத்தைச் சிந்தித்தல், கவலை இல்லாதிருத்தல், உத்ஸாஹம் இவை ஜபத்தின் ஸித்திக்குக் காரணங்களாகும். வ்யாஸர்:- ப்ரகாசமாயும், சிரித்துக் கொண்டும், பக்கத்தைப் பார்த்துக் கொண்டும், தூண் முதலியதில் சாய்ந்து கொண்டும், பேசிக் கொண்டும், தலையை மூடிக்கொண்டும், காலின் மேல் காலை வைத்துக் கொண்டும், கையின் மேல் கையை வைத்துக் கொண்டும், கவனமில்லாத மனதுடையவனையும், பிறருக்குக் கேட்கும்படி உச்சரிப்பவனையும், ஜபிக்கக் கூடாது. ஜபகாலத்திலும், வ்ரதம், ஹோமம் முதலியவைகளிலும் பேசக்கூடாது. ஜபாதிகளை அனுஷ்டிக்கும் பொழுது சிறந்த ப்ராம்ஹணன் வந்தால், ஜபத்தை நிறுத்தி அவனை நமஸ்கரித்து யோக க்ஷேமங்களைப் பற்றிப் பேசவேண்டும்.

बोधायनः – विरमेत् ब्राह्मणे प्राप्ते कामं तेन च संवदेत् । शूद्रं दृष्ट्वा तु संप्राप्तं नाधीयीत कथञ्चन ।। शूद्रं दृष्ट्वा विरमेदेव, न संवदेदित्यर्थः । लोकवार्तादिकं श्रुत्वा स्पृष्ट्वा दृष्ट्वा प्रभाषिणम् । सङ्ख्यां विना च यज्जप्तं तत् सर्वं निष्फलं भवेत् ।। प्रभाषिणं - बहुभाषिणम् । प्रभाषणं च तन्द्रां च परुषं बहुभाषणम् । क्रोधं माद्यं क्षुतं निद्रां ष्ठीवनं च विजृम्भणम् ।। दर्शनं च श्वनीचानां वर्जयेज्जपकर्मणि । आचामेत् सम्भवे चैषां स्मरेत् विष्णुं सुरार्चितम् ।। ज्योतींषि च प्रपश्येद्वा कुर्याद्वा प्राणसंयमम् ।। ज्वलनं गाश्च विप्रांश्च यतीन्वाऽपि विशुद्धये इति ।।

போதாயனர்:- ஜபகாலத்தில் ப்ராம்ஹணன் வந்தால் ஜபத்தை நிறுத்த வேண்டும். அவனுடன் பேசவேண்டும். சூத்ரனைக் கண்டால், ஜபத்தை நிறுத்த வேண்டும்.

எவ்விதமும் அவனுடன் பேசக்கூடாது. உலகவார்த்தை முதலியதைக் கேட்டுக் கொண்டும், பிறனைத் தொட்டுக் கொண்டும், அதிக வார்த்தை பேசுகிறவனைப் பார்த்துக் கொண்டும், எண்ணிக்கை இல்லாமலும் செய்த ஜபம் முழுவதும் பலனற்றதாகும். வீண்பேச்ச, சோம்பல், கடுமை, அதிகப்பேச்சு, கோபம், மதம், தும்மல், தூக்கம், துப்புதல், கொட்டாவி, நாய், நீசர் இவர்களைப் பார்ப்பது இவைகளை ஜபகாலத்தில் வர்ஜிக்க வேண்டும். இவைகளிலேதாவது நேர்ந்தால் ஆசமனம் செய்ய வேண்டும். அல்லது தேவர்களால் பூஜிக்கப்படும் விஷ்ணுவை த்யானிக்க வேண்டும். அல்லது ஸூர்யன் முதலிய தேஜஸ்ஸுகளைப் பார்க்க வேண்டும். அல்லது ப்ராணயாமம் செய்ய வேண்டும். அல்லது அக்னி, பசுக்கள், ப்ராம்ஹணர், யதிகள் இவர்களையாவது சுத்திக்காகப் பார்க்க வேண்டும்.

रत्नावल्याम् – चण्डालाशुद्धपतितान् दृष्ट्वाऽऽचम्य पुनर्जपेत्। तैरेव भाषणं कृत्वा स्नात्वाऽऽचम्य जपेत् पुनः ॥ असत्यभाषणं जिह्मभाषणं वर्जयेत् सदा। सत्यैरपि न भाषेत जपहोमार्चनादिषु इति। नारदः – श्वशूद्रपतितांश्चैव रासभं च रजस्वलाम् । दृष्ट्वा तोयमुपस्पृश्याभाष्य स्नात्वा पुनर्जपेत्॥ मार्जारं कुक्कुटं क्रौञ्चं श्वानं गृध्रं खरं कपिम्। दृष्ट्वाऽऽचम्याचरेत् कर्म स्पृष्ट्वा स्नानं विधीयते इति॥

ரத்னவளியில்:- சண்டாளன், அசுத்தன், பதிதன் இவர்களைப் பார்த்தால் ஆசமனம் செய்து மறுபடி ஜபிக்க வேண்டும். அவர்களுடன் பேசினால் ஸ்நானம் செய்து ஆசமனம் செய்து மறுபடி ஜபிக்க வேண்டும். பொய் பேசுவதையும், வக்ரமாய் பேசுவதையும் எப்பொழுதும் வர்ஜிக்க வேண்டும். ஜபம், ஹோமம், தேவபூஜை முதலியவைகளில் ஸத்யமான வார்த்தைகள் கூடப் பேசக்கூடாது. நாரதர்:- நாய், சூத்ரன், பதிதன், கழுதை, ரஜஸ்வலை இவர்களைப் பார்த்தால், ஆசமனம் செய்து பிறகு

ஜபிக்க வேண்டும். இவர்களுடன் பேசினால் ஸ்நானம் செய்து மறுபடி ஜபிக்க வேண்டும். பூனை, கோழி, க்ரௌஞ்சம், நாய், கழுகு, கழுதை, குரங்கு இவைகளைப் பார்த்தால் ஆசமனம் செய்து பிறகு கர்மத்தைச் செய்ய வேண்டும். ஸ்பர்சித்தால் ஸ்நானம் விதிக்கப்படுகிறது.

बोधायनः – सन्ध्ययोरुभयोर्जप्ये भोजने दन्तधावने। पितृकार्ये च दैवे च तथा मूत्रपुरीषयोः ॥ गुरूणां सन्निधौ दाने यागे चैव विशेषतः ॥ एतेषु मौनमातिष्ठन् स्वर्गं प्राप्नोति मानवः इति। योगयाज्ञवल्क्यः – यदि वाग्यमलोपः स्यात् जपादिषु कदाचन। व्याहरेद्वैष्णवं मन्त्रं स्मरेद्वा विष्णुमव्ययम्। तद्विष्णोरिति मन्त्रोऽयं स्मर्तव्यस्सर्वकर्मसु। गायत्री वैष्णवी ह्येषा प्रोक्तेदं विष्णुरित्यपि इति। प्रजापतिः – प्रमादात् कुर्वतां कर्म प्रच्यवत्यध्वरेषु यत्। स्मरणादेव तद्विष्णोः सम्पूर्णं स्यादिति श्रुतिः इति। अध्वरेषु - जपादियज्ञेषु॥

போதாயனர்:- இரு ஸந்த்யைகளிலும், ஜபத்திலும், போஜனத்திலும், தந்ததாவனத்திலும், பித்ரு கார்யத்திலும், தேவகார்யத்திலும், மலமூத்ர விஸர்ஜனத்திலும், குருக்கள் ஸன்னிதியிலும், தானத்திலும், யாகத்திலும் மௌனத்தை அனுஷ்டிக்கும் மனிதன் ஸ்வர்க்கத்தை அடைவான். **யோக யாக்ஞவல்க்யர்:-** ஜபம் முதலியவைகளில் எப்பொழுதாவது மௌனத்திற்கு லோபம் நேர்ந்தால் விஷ்ணு தேவதாகமான மந்த்ரத்தை ஜபிக்க வேண்டும். அல்லது விஷ்ணுவை ஸ்மரிக்க வேண்டும். எல்லாக் கர்மங்களிலும், तद्विष्णोः என்ற இந்த மந்த்ரத்தை ஸ்மரிக்க வேண்டும். இது விஷ்ணு காயத்ரீ எனச் சொல்லப்பட்டிருக்கிறது. இதம் விஷ்ணுः என்ற மந்த்ரமும் அப்படியே. **ப்ரஜாபதி:-** அத்வரங்களில் கர்மங்களை அனுஷ்டிப்பவர்களுக்குக் கவனமின்மையால் ஏதாவது தவறுதல் நேர்ந்தால், அது விஷ்ணுவின் ஸ்மரணத்திலேயே ஸம்பூர்ணமாகிவிடும் என்கிறது வேதம். இங்கு 'அத்வரங்களில்' என்ற பதத்திற்கு ஜபம்

முதலிய யக்ஞங்களில் என்பது பொருளாம்.

बोधायनः – नाभेरधः संस्पर्शं कर्मयुक्तो वर्जयेदिति ।। यमोऽपि – नाभेरधः स्वकायं तु स्पृष्ट्वा प्रक्षालयेत् करौ। दक्षिणं वा स्पृशेत् कर्णं स्मरेद्वा विष्णुमव्ययमिति ।।

போதாயனர்:- கர்மங்களை அனுஷ்டிப்பவன் தொப்புளுக்குக் கீழுள்ள அங்கங்களை ஸ்பர்சிக்கக் கூடாது. **யமனும்:-** நாபிக்குக் கீழுள்ள தன் தேஹத்தை ஸ்பர்சித்தால் கைகளை அலம்ப வேண்டும். அல்லது வலது காதைத் தொட வேண்டும். அல்லது அழிவற்ற விஷ்ணுவை ஸ்மரிக்க வேண்டும்.

सुमन्तुः – नान्यथोक्तिर्नान्यमना न च व्यत्यस्तपत्करः । न जपेत् प्रलपन्वाऽपि कृतं निष्फलमुच्यते इति ।। व्यासः – होमः प्रतिग्रहो दानं भोजनाचमने जपः । न बहिर्जानु कार्याणि साङ्गुष्ठानि समाचरेत् ।। उष्णीषी कञ्चुकी नग्नो मुक्तकेशो गलावृतः । चिन्ताव्याकुलचित्तो वा भ्रान्तः क्रुद्धो बुभुक्षितः ।। अनासनः शयानो वा गच्छन्नुद्धत एव वा । रथ्यायामशिवस्थाने न जपेत्तिमिरावृते ।। उपानद्गूढपादो वा यानशय्यागतस्तथा । प्रसार्य न जपेत् पादावुत्कटासन एव वा ।। जपेन्न प्रौढपादश्च नावष्टब्धोऽलसोऽशुचिः। नासंव्यानो ह्यदर्भश्च नाशिखाकच्छबन्धनः इति ।।

ஸுமந்து:- வேறு பேச்சுக்கள் பேசிக் கொண்டும், வேறிடத்தில் மனதுடனும், கால் கைகளை மாற்றி வைத்துக் கொண்டும், வீண்வார்த்தை பேசிக் கொண்டும் ஜபிக்கக் கூடாது. அப்படி ஜபித்தல் வீணுகுமெனச் சொல்லப்படுகிறது. **வ்யாஸர்:-** ஹோமம், ப்ரதிக்ரஹம், தானம், போஜனம், ஆசமனம், ஜபம் இவைகளை, முழங்காலுக்கு வெளியில் கைகளை வைத்துக் கொண்டு செய்யக் கூடாது. பெருவிரலைச் சேர்த்துக் கொண்டு செய்ய வேண்டும். தலைப்பாகை தரித்தவனும், சட்டை

அணிந்தவனும், வஸ்த்ரம் இல்லாதவனும், அவிழ்ந்த மயிருடையவனும், கழுத்தை வஸ்த்ரத்தால் சுற்றிக் கொண்டு, சிந்தையால் கலக்க முடையவனும், ப்ராந்தனும், கோபம் உடையவனும், பசியுள்ளவனும், ஆஸனமில்லாதவனும், படுத்தவனும், நடப்பவனும், விறைப்புடையவனுமாய் ஜபிக்கக் கூடாது. வீதியிலும் அசுத்த ஸ்தலத்திலும் இருட்டுள்ள விடத்திலும் ஜபிக்கக் கூடாது. பாதரக்ஷை தரித்தவனும், வாஹனம், படுக்கை இவைகளில் இருப்பவனும், கால்களை நீட்டியவனும், உயர்ந்த ஆஸனம் உடையவனும், கால்களைத் தூக்கிக் காட்டுபவனும், தூண் முதலியதில் சாய்ந்து கொண்டும், சோம்பலுடையவனும், அசுத்தனும், உத்தரீயம் இல்லாதவனும், தர்ப்பம் தரியாதவனும், குடுமி கச்சம் இவைகளைக் கட்டாதவனுமாய் ஜபிக்கக் கூடாது.

भरद्वाजः – निष्ठीवजृम्भणे क्रोधनिद्रालस्यक्षुधो मदः । पतितश्वान्त्यजालोका दशैते जपवैरिणः इति ।। शाण्डिल्यः – प्रदक्षिणे प्रणामे च पूजायां हवने जपे । न कण्ठावृतवस्त्रस्स्यात् दर्शने गुरुदेवयोः ।। आचार्यं भगवद्भक्तं भगवन्मन्दिरं जलम् । अश्वत्थमग्निमर्कं च पृष्ठीकृत्य जपेन्न तु ।। आर्द्रवासास्तु यः कुर्यात् जपं होमं प्रतिग्रहम् । सर्वं तद्राक्षसं विद्यात् बहिर्जानु च यत्कृतम् इति ।। आर्द्रवासा इति स्थलविषयम् ।। यदाह व्यासः – यदि स्यात् क्लिन्नवासा वै वारिमध्यगतो जपेत् । अन्यथा तु शुचौ भूम्यां दर्भेषु सुसमाहितः ।। न क्लिन्नवासाः स्थलगो जपादीनाचरेत् बुधः । व्रतादिके नार्द्रवासा आचरेन्नैकवाससा ।। न जीर्णेन न नीलेन परिक्लिष्टेन वा जपेत् इति ।। यदि स्यात् क्लिन्नवासा इति चापद्विषयम्, गायत्रीजपव्यतिरिक्तविषयं वा । मतिमान् न कदाचित्तु गायत्रीमुदके जपेत् । गायत्र्यग्निमुखी प्रोक्ता तस्मादुत्तीर्य तां जपेत् इति गोभिलस्मरणात् ।।

பரத்வாஜர்:- துப்புதல், கொட்டாவி, கோபம், நித்ரை, சோம்பல், பசி, மதம், பதிதனைப் பார்ப்பது, நாயைப் பார்ப்பது, சண்டாளனைப் பார்ப்பது என்ற இந்தப் பத்தும் ஜபத்திற்கு விரோதிகளாம். சாண்டில்யர்:- ப்ரதக்ஷிணம், நமஸ்காரம், பூஜை, ஹோமம், ஜபம், குருதர்சனம், தேவதர்சனம் இவைகளில் கழுத்தில் வஸ்த்ரத்தைச் சுற்றிக் கொண்டிருக்கக் கூடாது. ஆசார்யன், பகவத் பக்தன், பகவதாலயம், ஜலம், அச்வத்த வ்ருக்ஷம், அக்னி, ஸூர்யன் இவர்களைப் பின்புறத்தில் இருக்கச் செய்து ஜபிக்கலாகாது. ஈரவஸ்த்ரத்துடன் ஜபம், ஹோமம், ப்ரதிக்ரஹம் இவைகளைச் செய்தால் அது முழுவதும் ராக்ஷஸர்களைச் சேர்ந்ததாகும். முழங்கால் களுக்கு வெளியில் கைகளை வைத்துக் கொண்டு செய்வதும் ராக்ஷஸமாகும். இங்கு ஈரவஸ்த்துரத்துடன் என்றது ஸ்தலத்தில் செய்யும் ஜபத்தை நிஷேதிப்பதாம். ஏனெனில், வ்யாஸர்:- ஈரவஸ்த்ரத்துடன் இருப்பவனுகில் ஜலத்தின் நடுவில் இருந்து ஜபிக்க வேண்டும். உலர்ந்த வஸ்த்ரம் உடையவனுகில் ஸ்தலத்தில், தர்ப்பத்தின் மேல், கவனமுடையவனுய் ஜபிக்க வேண்டும். அறிஞன் ஈரவஸ்த்ரம் உடையவனுய் ஸ்தலத்திலிருந்து ஜபம் முதலியவைகளைச் செய்யக் கூடாது. வ்ரதம் முதலியதிலும் ஈரவஸ்த்ரத்துடன் ஒன்றும் செய்யக் கூடாது. ஒரு வஸ்த்ரத்துடனும், ஜீர்ணமானதும், கறுப்பானதும், கசங்கியதுமான வஸ்த்ரத்துடனும் ஜபிக்கக் கூடாது. 'ஈரவஸ்த்ரத்துடன் உடனிருந்தால் ஜலத்திலிருந்து ஜபிக்க வேண்டும்' என்ற வ்யாஸ வசனம் ஆபத் விஷயம், அல்லது காயத்ரீ ஜபம் தவிர்த்த மற்ற மந்த்ர ஜப விஷயமாகவாவது ஆகலாம். ஏனெனில், ''அறிவுடையவன் ஒருகாலும் ஜலத்திலிருந்து காயத்ரியை ஜபிக்கக் கூடாது. காயத்ரியை 'அக்னிமுகி' என்று சொல்லுகிறார்கள். ஆகையால் ஜலத்திலிருந்து வெளியேறி ஸ்தலத்தில் காயத்ரியை ஜபிக்க வேண்டும்'' என்று கோபிலர் சொல்லிகிறார்.

सुमन्तुः – खण्डवस्त्रावृतस्यैव वस्त्रार्धालम्बिनस्तथा । उत्तरीयव्यतीतस्य समस्ता निष्फलाः क्रियाः ।। सङ्ख्या चैवोपवीतेन जपहोमादि निष्फलम् इति ।। गौतमः – गच्छतस्तिष्ठतो वाऽपि स्वेच्छया कर्म कुर्वतः । अशुचेर्वा विना सङ्ख्यां तत्सर्वं निष्फलं भवेत् इति ।। तिष्ठत इति वचनं गायत्रीव्यतिरिक्तमन्त्रविषयम् ।।

ஸுமந்துः- துண்டு வஸ்த்ரத்தைத் தரித்தவனும், பாதி வஸ்த்ரம் தரித்தவனும், உத்தரீயம் தரியாதவனும் செய்யும் கர்மங்களெல்லாம் பலனற்றவை ஆகும். பூணூலினுல் கணக்குச் செய்து கொண்டு செய்யும் ஜபம் ஹோமம் முதலியதும் நிஷ்பலமாகும். கௌதமர்:- தன்னிஷ்டப்படி நடந்து கொண்டும், நின்று கொண்டும், அசுத்தனுயும், கணக்கில்லாமலும் கர்மத்தை அனுஷ்டிப்பவனின் கர்மம் முழுவதும் நிஷ்பலமாகும். இங்கு நிற்பதை நிஷேதித்தது காயத்ரியை தவிர்த்த மந்த்ரங்களின் ஜபத்தைப் பற்றியதாம்.

जपाङ्गभूतामक्षमालामाह हारीतः ।। शङ्खरूप्यमयी माला काञ्चनी निम्बजैः फलैः । पद्माक्षजैश्च रुद्राक्षैः विद्रुमैर्मणिमौक्तिकैः ।। रजतेन्द्राक्षकैर्माला तथैवाङ्गुलिपर्वभिः । पुत्रजीवमयी माला शस्ता वै जपकर्मणि इति ।। योगयाज्ञवल्क्यः – स्फटिकेन्द्राक्षरुद्राक्षैः पुत्रजीवसमुद्भवैः । अक्षमाला तु कर्तव्या ह्युत्तमा ह्युत्तरोत्तरा इति ।। चन्द्रिकायाम् – अक्षसूत्रं तु कर्तव्यं मुक्तामणिमयं शुभम् । सौवर्णं राजतं ताम्रं स्फाटिकं वाऽथ कारयेत् इति ।।

ஜபத்திற்கு அங்கமான அக்ஷமாலையைப் பற்றி ஹாரீதர்:- சங்கு, வெள்ளி, பொன், வேம்பின் கொட்டை, தாமரைக் கொட்டை, ருத்ராக்ஷம், பவளம், ரத்னம், முத்து, வெள்ளி, இந்த்ராக்ஷம், புத்ர ஜீவம் இவைகளாலுள்ள மாலை ஜபத்திற்குச் சிறந்ததாம். விரல்களின் ரேகைகளாலும் ஜபிக்கலாம். யோக யாக்ஞவல்க்யர்:-

ஸ்படிகம், இந்த்ராக்ஷம், ருத்ராக்ஷம், புத்ர ஜீவம் இவைகளால் ஜபமாலை செய்து கொள்ளலாம். இவைகளில் முந்தியதைவிடப் பிந்தியது ச்லாக்யமாகும். சந்த்ரிகையில்:- முத்துக்களால் ஜபமாலை செய்ய வேண்டும். அல்லது பொன், வெள்ளி, தாம்ரம், ஸ்படிகம் இவைகளிலொன்றிஞல் செய்யலாம்.

स्मृत्यर्थसारेऽपि – हस्तेनावर्तयेद्देवीमक्षसूत्रैरथापि वा। सौवर्णै राजतैस्ताम्रैः स्फाटिकै रत्नजैस्तथा ।। अरिष्टैः पुत्रजीवोत्थैरिन्द्राक्षैः शङ्खसम्भवैः। रुद्राक्षैरपि पद्माक्षैः कुशग्रन्थिभिरेव वा ।। मणिभिस्त्वक्षसूत्रं स्यात् तदष्टशतसङ्ख्यया। चतुःपञ्चाशता वाऽपि सप्तविंशतिरेव वा इति ।। प्रजापतिरपि – अष्टोत्तरशतं कुर्याच्चतुःपञ्चाशतं तथा। सप्तविंशतिका कार्या ततो न्यूनान्न कारयेत् इति ।। स्मृत्यन्तरेऽपि – अष्टोत्तरशतैर्माला पञ्चाशच्चतुरुत्तरैः। सप्तविंशतिभिः कार्या सर्वसाधारणे जपे ।। अष्टोत्तरशतैर्माला ह्युत्तमा परिकीर्तिता। चतुःपञ्चाशता माला मध्यमा परिकीर्तिता ।। अधमा प्रोच्यते माला सप्तविंशतिसङ्ख्यया इति ।।

ஸ்ம்ருத்யர்த்த ஸாரத்திலும்:- கையிஞல் எண்ணி, காயத்ரியை ஜபிக்க வேண்டும். அல்லது ஜபமாலையிஞல் ஜபிக்கலாம். பொன், வெள்ளி, தாம்ரம், ஸ்படிகம், ரத்னம், வேம்பு, புத்ர ஜீவம், இந்த்ராக்ஷம், சங்கு, ருத்ராக்ஷம், பத்மாக்ஷம், குசமுடிப்பு, மணி இவைகளிலொன்றிஞல் ஜபமாலை செய்ய வேண்டும். 108- அல்லது 54- அல்லது 27- மணிகளால் செய்யலாம். **ப்ரஜாபதியும்:-** 108- மணிகளால் ஜபமாலை செய்யலாம். அல்லது 54, 27-க்குக் குறைத்துக் செய்யக் கூடாது. வேறு **ஸ்ம்ருதியில்:-** எல்லா மந்த்ரங்களுக்கும் பொதுவான ஜபத்தில் ஜபமாலையை 108, 54, 27 மணிகளால் செய்யலாம். 108- உத்தமம். 54- மத்யமம், 27- அதமமாம்.

गौतमः – अङ्गुल्या जपसङ्ख्यानमेकमेकमुदाहृदम् । रेखयाऽष्टगुणं पुत्रजीवैर्दशगुणाधिकम् ॥ शतं स्याच्छङ्खमणिभिः प्रवालैश्च सहस्रकम् । स्फटिकैर्दशसाहस्रं मौक्तिकैर्लक्षमुच्यते ॥ पद्माक्षैर्दशलक्षं तु सौवर्णैः कोटिरुच्यते । कुशग्रन्थ्या च रुद्राक्षैरनन्तफलमश्नुते ॥ तुलसीकाष्ठघटितैर्मणिभिर्जपमालिका । सर्वकर्मणि सर्वेषामीप्सितार्थफलप्रदा ॥ तत्राङ्गुलिजपं कुर्वन् साङ्गुष्ठाङ्गुलिभिर्जपेत् । अङ्गुष्ठेन विना कर्म कृतं तदफलं यतः ॥ अङ्गुलीर्न नियुञ्जीत किञ्चिदाकुञ्चिते तले । अङ्गुलीनां नियोगात्तु छिद्रेषु स्रवते जपः इति ॥

கௌதமர்:- விரலால் எண்ணிச் செய்யும் ஜபம் ஒரு பங்கு பலனைக் கொடுக்குமெனச் சொல்லப்பட்டிருக்கிறது. ரேகைகளால் எண்ணிச் செய்பவன் எட்டு மடங்கு, புத்ர ஜீவங்களால் பத்து மடங்கு, சங்கு மணிகளால் நூறு மடங்கு, பவழங்களால் ஆயிர மடங்கு, ஸ்படிகங்களால் பதினாயிரம் மடங்கு, முத்துக்களால் லக்ஷம் மடங்கு, பத்மாக்ஷங்களால் பத்து லக்ஷம் மடங்கு, ஸ்வர்ண மணிகளால் கோடி மடங்கு, குசக்ரந்தி, ருத்ராக்ஷம் இவைகளால் அளவற்ற பலனை அடைகின்றான். துளசிக் கட்டையால் செய்யப்பட்ட மணிகளால் செய்த ஜபமாலை, எல்லோருக்கும் ஸகல ஜபத்திலும் இஷ்ட பலத்தைக் கொடுப்பதாகும், அவைகளுள் விரல்களால் ஜபிப்பவன் பெருவிரலுடன் கூடிய விரல்களால் ஜபிக்க வேண்டும். ஏனெனில், பெருவிரல் உடனில்லாமல் செய்த கர்மம் நிஷ்பலமாகும். கொஞ்சம் குவிக்கப்பட்ட உள்ளங்கையில் மற்ற விரல்களைப் பிரிக்கக் கூடாது. பிரித்தால் விரல்களின் சந்துக்களின் வழியே ஜபம் ஒழுகிவிடும்.

हारीतोऽपि – शङ्खैश्शतगुणं जप्यं रौप्यैश्चैव सहस्रकम् । जप्यं शतगुणं प्रोक्तं निम्बारिष्टकमालया ॥ इन्द्राक्षैर्लक्षगुणितं विद्रुमैर्दशलक्षकम् । मौक्तिकैः स्फाटिकैश्चैव कोटि कोटिगुणोत्तरम् ॥

परिसङ्ख्या न विज्ञेया रुद्राक्षाङ्गुलिपर्वभिः । पद्मजैः पुत्रजीवैश्च परिसङ्ख्या न विद्यते ।।

ஹாரீதரும்:- சங்கு மணிகளால் செய்யும் ஜபம் நூறு மடங்கு ஆகும். வெள்ளி மணிகளால் ஆயிரம் மடங்காகும். வேப்பங் கொட்டை, அரிஷ்டம் இந்த மாலையால் பதினாயிரம் மடங்காகும். இந்த்ராக்ஷங்களால் லக்ஷம் மடங்காகும். பவழங்களால் பத்து லக்ஷம் மடங்கு ஆகும். முத்துக்கள், ஸ்படிகங்கள் இவைகளால் செய்யும் ஜபம் கோடி கோடி மடங்கு பலனைக் கொடுப்பதாகும். ருத்ராக்ஷங்கள் விரல்ரேகைகள் இவைகளாலும், பத்மாக்ஷம், புத்ரஜீவம் இவைகளாலும் செய்யும் ஜபத்தின் பலத்திற்குக் கணக்கேயில்லை.

मणिमेकैकमादाय श्वेतसूत्रे प्रयोजयेत्। मुखं मुखेन संयोज्य पृष्ठं पृष्ठेन योजयेत् ।। प्रोक्तसङ्ख्यान्यमेकाक्षं मेरुत्वेनाग्रतो न्यसेत् । एकैकमणिमध्ये तु ग्रन्थिबन्धं प्रकल्पयेत् ।। जपमालां विधायेत्थं ततस्संस्कारमारभेत्। क्षालयेत् पञ्चगव्यैस्तां सद्योजातेन वै जलैः ।। चन्दनागरुगन्धाद्यैर्वामदेवेन घर्षयेत्। धूपयेत्तामघोरेण लिंपेत्तत्पुरुषेण तु ।। मन्त्रेण शतवारं तु पञ्चमेनाभिमन्त्रयेत्। मेरुं च पञ्चमेनैव तथा मन्त्रेण मन्त्रयेत् ।। जप्यमन्त्रेण तां मालामभिमन्त्र्य सुगोपयेत् । मध्यमायां न्यस्तमालां ज्येष्ठयाऽऽवर्तयेत् क्रमात् ।। अपि वाऽङ्गुष्ठमध्यस्थां चालयेन्मध्यमाग्रतः । न स्पृशेद्वामहस्तेन करभ्रष्टां न कारयेत्। तर्जन्या न स्पृशेत् सूत्रं कम्पयेन्न विधूनयेत्। प्रमादात् पतिते हस्तात् शतमष्टोत्तरं जपेत् । जीर्णे सूत्रे पुनः सूत्रं ग्रन्थयित्वा शतं जपेत् । भुक्तिमुक्तिप्रदः सोऽयं मालिकागणनक्रमः इति ।।

ஜபமாலை செய்யும் ப்ரகாரம்:- ஒவ்வொரு மணியாய் எடுத்து வெண்மையான கயிற்றில் கோக்க வேண்டும். ஒவ்வொரு மணியின் முன்புறத்தோடு முன்புறத்தையும் பின் புறத்தோடு பின்புறத்தையும் சேர்க்க வேண்டும்.

இவ்விதம் கோர்த்த பிறகு, சொல்லிய கணக்குக்கு அதிகமாக ஒரு மணியை மேருவென்பதாய் முனையில் சேர்க்க வேண்டும். ஒவ்வொரு மணிக்கும் நடுவில் முடி போட வேண்டும். இவ்விதம் ஜபமாலையைச் செய்து, பிறகு ஸம்ஸ்காரம் செய்ய வேண்டும். அதாவது - ஸத்யோஜாத மந்த்ரத்தால் அந்த மாலையைப் பஞ்சகவ்யத்தாலும் ஜலத்தாலும் அலம்ப வேண்டும். வாமதேவ மந்த்ரத்தால், சந்தனம், அகருகந்தம் முதலியதைப் பூசவேண்டும். அகோர மந்த்ரத்தால் தூபத்துடன் சேர்க்க வேண்டும். தத்புருஷ மந்த்ரத்தால் பூசவேண்டும். ஈசான மந்த்ரத்தை நூறு தடவை ஜபித்து அபிமந்த்ரிக்க வேண்டும். மேருவான மணியையும் ஈசான மந்த்ரத்தால் அபிமந்த்ரிக்க வேண்டும். ஜபிக்க வேண்டிய மந்த்ரத்தாலும் அந்த மாலையை அபிமந்த்ரித்து மறைவாய் வைக்க வேண்டும். ஜபிக்கும் போது, மாலையை நடுவிரலில் வைத்துக் கொண்டு பெருவிரலால் க்ரமமாய்ச் சுற்ற வேண்டும். அல்லது, பெருவிரல் நடுவில் வைத்துக் கொண்டு நடுவிரலால் சுற்ற வேண்டும். இடது கையால் தொடக் கூடாது. கையிலிருந்து நழுவ விடக்கூடாது. ஆள்காட்டி விரலால் தொடக் கூடாது. ஆட்டக் கூடாது. உதறக் கூடாது. கவனமின்மையால் கையிலிருந்து விழுந்து விட்டால் 108- முறை மந்த்ரத்தை ஜபிக்க வேண்டும். நூல் ஜீர்ணமானால் மறுபடி வேறு நூலைச் சேர்த்து முடித்து 100 - முறை ஜபிக்க வேண்டும். இவ்வித நியமத்துடனுள்ள ஜபமாலிகையால் எண்ணிச் செய்யப்படும் ஜபக்ரமம் புக்தியையும் முக்தியையும் அளிக்கக் கூடியதாம்.

गौतमः — अङ्गुष्ठं मोक्षदं विद्यात्तर्जनी शत्रुनाशिनी। मध्यमा धनकामायानामिका पौष्टिकी तथा।। कनिष्ठा रक्षणी प्रोक्ता जपकर्मणि शोभना। अङ्गुष्ठेन विना जप्यं कृतं तदफलं भवेत्।। उल्लङ्घिते तथा मेरौ पतिते चाक्षसूत्रके। प्राणायामत्रयं कृत्वा घृतप्राशनमाचरेत् इति।।

கௌதமர்:- பெருவிரல் மோக்ஷத்தை அளிக்கும். தர்ஜனீ சத்ருக்களை நாசம் செய்யும். நடுவிரல் தனத்தை அளிக்கும். அனுமிகை புஷ்டியைக் கொடுக்கும். சுண்டுவிரல் ரக்ஷிக்கும், ஜபத்தில் சுபமானது. பெருவிரலை விட்டு ஜபம் செய்வது வீணாகும். மேருவைத் தாண்டினாலும், ஜபமாலை விழுந்தாலும் மூன்று ப்ராணாயாமங்கள் செய்து, நெய்யை அருந்த வேண்டும்.

रुद्राक्षं प्रकृत्य स्कान्दपुराणे– लक्षकोटिसहस्रस्य लक्षकोटिशतस्य च । जपे च लभते पुण्यं नात्र कार्या विचारणा ।। उच्छिष्टो वा विकर्मस्थः संयुक्तः सर्वपातकैः । लिप्यते न स पापेन रुद्राक्षस्य तु धारणात् ।। कण्ठे रुद्राक्षमाधाय यश्चापि म्रियते यदि । सोऽपि रुद्रत्वमाप्नोति किं पुनर्मानुषादयः इति ।। यः कुर्यात् तुलसीकाष्ठै रक्षमालां सुरूपिणीम् । कण्ठमालां च यत्नेन कृतं तस्याक्षयं भवेत् इत्यादिवचनं भाक्तमिति प्राहुः ।। अत एव स्मृतिरत्नावल्यां स्मृतिरत्नेन च धारणनिषेधः उक्तः – तुलसीकाष्ठसम्भूतां स्कन्धे मालां बिभर्ति यः । स शूद्रवत् बहिष्कार्यः सर्वस्मात् द्विजकर्मणः ।। स्कन्धे कण्ठे शिखायां वा यस्तु धारयते मणीन् । दैवे कर्मणि पित्र्ये च तं विप्रं दूरतस्त्यजेत् इति ।।

ருத்ராக்ஷத்தைத் துவக்கி ஸ்காந்த புராணத்தில்- ஆயிரலக்ஷ கோடியும், நூறுலக்ஷகோடியும் சேர்ந்த முறை ஜபிப்பதால் உண்டாகும் புண்யத்தை ருத்ராக்ஷமாலா ஜபத்தாலடைகிறான். அசுத்தனாயினும், நிஷித்த கர்மங்களை அனுஷ்டிப்பவனாயினும், எல்லாப் பாபகர்மங்களுடனும் கூடியவனாயினும், ருத்ராக்ஷம் தரித்தவனாகில் அவன் பாபத்துடன் ஸம்பந்திப்பதில்லை. எந்த ப்ராணியாகினும் கழுத்தில் ருத்ராக்ஷம் தரித்து அத்துடன் இறந்தால் அதுவும் ருத்ரத்தன்மையை அடைகிறது. மனிதன் முதலியவர்களைப் பற்றிச் சொல்வதேன்? ''எவனொருவன் துளசிக்கட்டையினால்

அழகிய ஜபமாலையைச் செய்து கொள்கிறானே. கண்டத்திலும் மாலையைத் தரிக்கின்றானே, அவன் செய்யும் ஜபாதி கார்யம் அழிவற்ற பலனையுடைதாய் ஆகிறது'' என்பது முதலான வசனங்கள் பக்தர் விஷயம் எனப் பெரியோர்கள் சொல்கின்றனர். ஆகையால்தான் ஸ்ம்ருதிரத்னவளியிலும் ஸ்ம்ருதிரத்னத்திலும் துளசீமணி தாரணத்திற்கு நிஷேதம் சொல்லப் பட்டிருக்கிறது. '' துளஸிக்கட்டையால் உண்டாகிய மாலையை எவன் தோளில் தரிக்கின்றானே அவன் சூத்ரனைப் போல் ஸகல ப்ராம்ஹண கர்மங்களினின்றும் வெளியேற்றத் தகுந்தவன். எவன் தோளிலாவது, கழுத்திலாவது, குடுமியிலாவது மணிகளைத் தரிக்கின்றானே, அவனை தேவகர்மத்திலும், பித்ரு கர்மத்திலும் தூரத்தில் பரிஹரிக்க வேண்டும் என்று''

विष्णुः – आवर्त्य गणयेन्मन्त्रं जपेच्चाङ्गुलिपर्वभिः । जपस्यावृत्तिगणने पुण्यसङ्ख्या न विद्यते इति ॥ रत्नावल्याम् – पर्वभिश्च जपः कार्यो नाङ्गुलीनां निपातनैः । तन्निपातैस्तु यज्जप्तं सर्वं विद्यात्तदासुरम् इति ॥ रेखागणनप्रकारमाह शङ्खः– अथाङ्गुलीनां रेखाभिर्जपमन्वहमाचरेत् । प्रारभ्यानामिकायास्तु मध्यमे पर्वणि क्रमात् ॥ तर्जनीमूल पर्यन्तं जपेद्दशसु पर्वसु । मध्माङ्गुलिमूले तु यत् पर्वद्वितयं भवेत् ॥ तं वै मेरुं विजानीयात् जपे तं नातिलङ्घयेत् ॥ अनामिकामूलपर्व प्रारभ्यापि क्रमेण तु । मध्यमामूलपर्यन्तं जपेद्दशसु पर्वसु ॥ मध्याङ्गुलेर्मध्यरेखां समारभ्य प्रदक्षिणम् । मध्यमा मूलपर्यन्त मङ्गुष्ठेन यथाक्रमम् ॥ स्पृष्ट्वा द्वादश सङ्ख्या स्यादेकवारेण तन्नव । वामहस्तेन सङ्ख्यातं शतमष्टोत्तरं स्मृतम् इति ॥ अत्र पक्षत्रये यथोपदेशं विकल्प इत्याहुः ॥

விஷ்ணுः- மந்த்ரத்தை ஆவ்ருத்தி செய்து எண்ண வேண்டும். விரல்களின் ரேகைகளால் ஜபிக்க வேண்டும். ஜபத்தின் ஆவ்ருத்தியை எண்ணிச் செய்தால்

அப்புண்யத்திற்கு அளவேயில்லை. ரத்னவளியில்:- விரல்களின் ரேகைகளால் கணக்கிட்டு ஜபிக்க வேண்டும். விரல்களை மடக்கிக் கணக்கிட்டு ஜபிக்கக் கூடாது. விரல்களை மடக்கி ஜபித்தால் அது முழுவதும் அஸுரர்களைச் சேர்ந்ததென அறியவேண்டும். ரேகைகளால் எண்ணுகிற ப்ரகாரத்தைச் சொல்லுகிறார். சங்கர்:- பிறகு விரல்களின் ரேகைகளால் ப்ரதினமும் ஜபம் செய்ய வேண்டும். பவித்ரவிரலின் நடுரேகையில் ஆரம்பித்து க்ரமமாய், தர்ஜனீ விரலின் அடிரேகை வரையில் 10 ரேகைகளிலும் கணக்கிட்டு ஜபிக்க வேண்டும். நடுவிரலின் அடியிலுள்ள இரண்டு ரேகைகளை மேருவென்று அறியவும். ஜபத்தில் அதைத் தாண்டக் கூடாது. அல்லது, பவித்ரவிரலின் அடிரேகையில் ஆரம்பித்து க்ரமமாய் நடுவிரலின் அடிரேகை வரையில் உள்ள 10 ரேகைகளில் கணக்கிட்டு ஜபிக்கலாம். அல்லது நடுவிரலின் நடுரேகையில் ஆரம்பித்து ப்ரதக்ஷிணமாய், க்ரமமாய் நடுவிரலின் அடிரேகை வரையிலுள்ள ரேகைகளில் பெரு விரலால் தொட்டு ஜபித்தால் ஒரு தடவைக்குப் பன்னிரண்டு ஆகும். இவ்விதம் ஒன்பது தடவை இடது கையால் எண்ணினால் 108 முறை ஜபக் கணக்காகும். இங்குள்ள மூன்று பக்ஷங்களிலும் ஸமவிகல்பமானதால் அவரவர் குருபதேசப்படி ஜபிக்கலாம் என்கின்றனர் பெரியோர்கள்.

रत्नावल्याम्— पर्वभिस्तु जपेद्देवीमन्यत्रानियमः स्मृतः । गायत्र्या वेदमूलत्वात् वेदः पर्वसु गीयते इति ॥ तदेतद्रुद्राक्षकुशग्रन्थ्योरप्युपलक्षणम् । यदाह प्रजापतिः— ब्राह्मैरानन्त्यमाप्नोति रौद्रैश्च मणिभिर्बुधः । ब्राह्मः कुशमयो रौद्रो रुद्राक्षः पापनाशनः ॥ सावित्र्यास्तु जपस्ताभ्या मेकोऽप्यानन्त्यमृच्छति। गायत्र्या वेदबीजत्वात् पर्वभिश्च जपः स्मृतः इति॥

ரத்னுவளியில்:- காயத்ரியை ரேகைகளாலேயே (கணக்கிட்டு) ஜபிக்க வேண்டும். காயத்ரீ வேத மூலமானது. வேதத்தை ரேகைகளில் (ஸ்வரத்தைக் காட்டி) அத்யயனம் செய்வர். மற்ற மந்த்ரங்களின் ஜபத்தில் இந்த நியமமில்லை. இவ்விதம் சொல்லியது, ருத்ராக்ஷம், குசக்ரந்தி இவைகளையும் சொல்வதாகும். ஏனெனில் - ப்ரஜாபதி - "ப்ராம்ஹங்களாலும், ரௌத்ரமணிகளாலும் ஜபித்தால் அளவற்ற பலனை அடைகிறான். ப்ராம்ஹம் என்பது குசக்ரந்தியாம். ரௌத்ரமணி என்பது பாபத்தைப் போக்கும் ருத்ராக்ஷமணியாம். அவ்விரண்டுகளாலும் செய்யப்பட்ட காயத்ரீ ஜபம் ஒன்றுகிலும் அளவற்றதாகிறது. காயத்ரீ வேத மூலமாகியதால் விரல்களின் ரேகைகளாலும் ஜபம் விதிக்கப்பட்டுள்ளது.

गौतमः—अनेन विधिना नित्यं जपं कुर्यात् प्रयत्नतः । प्रपन्नो विपुलान् लोकान् भुक्तिं मुक्तिं च विन्दति इति ।। पितामहः – एवं जप्त्वा यथाशक्ति ह्युदिते तु दिवाकरे ।। उत्तमेत्यनुवाकेन उद्वास्य तु यथागतम् । उत्तमेत्यनुवाकस्य वामदेव ऋषिः स्मृतः । अनुष्टुप् च तथा छन्दो गायत्री देवता स्मृता इति ।। व्यासः – अथोपतिष्ठेदादित्य-मुदयन्तं समाहितः । मन्त्रैस्तु विविधैस्सौरैः ऋग्यजुस्सामसम्भवैः इति । उपस्थानं तु स्वशाखाधीतैर्मन्त्रैः कार्यम् । उपस्थानं स्वकैर्मन्त्रैरादित्यस्य तु कारयेत् इति वसिष्ठस्मरणात् ।।

கௌதமர்:- இந்த விதிப்படி ப்ரதினமும் ப்ரயத்னத்துடன் ஜபம் செய்ய வேண்டும். செய்பவன் சிறந்த உலகங்களை அடைந்து, புக்தியையும், முக்தியையுமடைகிறான். பிதாமஹர்:- இவ்விதம் சக்திக்கியன்றவரை ஜபித்து, ஸூர்யன் உதித்த பிறகு 'உத்தமே' என்ற அனுவாகத்தால் உத்வாஸனம் செய்ய வேண்டும். அந்த அனுவாகத்திற்கு வாமதேவர் ருஷி, அனுஷ்டுப் சந்தஸ், காயத்ரீ தேவதையாம். வ்யாஸர்:-

பிறகு கவனம் உடையவனுய் உதிக்கும் ஸூர்யனை நோக்கி ருக் யஜுஸ் ஸாமவேதங்களில் உள்ளதும், ஸூர்யனைப் பற்றியதுமான பல மந்த்ரங்களால் உபஸ்தானம் செய்ய வேண்டும். உபஸ்தானத்தை அவரவர் சாகையில் படிக்கப்பட்ட மந்த்ரங்களால் செய்ய வேண்டும். ''ஸூர்யோபஸ்தானத்தை அவரவர் சாகையிலுள்ள மந்த்ரங்களால் செய்ய வேண்டும்'' என்று வஸிஷ்டர் சொல்லியிருக்கிறார்.

चन्द्रिकायाम् – यजुश्शाखिनां मित्रस्य, मित्रोजनान्, प्रसमित्रेति तिसृभि रुपस्थानम्। तासां प्रथमा गायत्री। उत्तमे त्रिष्टभौ। विश्वेदेवा ऋषयः। मित्रो देवता। सूर्योपस्थाने विनियोगः इति ॥ पितामहः – मित्रस्येति त्र्यृचस्येह विश्वामित्र ऋषिः स्मृतः। हिरुग्गायत्रमादिस्तु त्रिष्टुभावथ पञ्चिमौ। देवता चैव मित्रः स्यादित्युवाच बृहस्पतिः। एताभिः प्राञ्जलिस्सम्यग्विस्पष्टोदित-मण्डलम्॥ भगवन्तं सहस्रांशु मुपतिष्ठेत भास्करम् इति॥

சந்த்ரிகையில்:- யஜுச்சாகிகளுக்கு 'மித்ரஸ்ய' 'மித்ரோ ஜநான், 'ப்ரஸமித்ர' என்ற மூன்று ருக்குகளால் உபஸ்தானம். அவைகளுள் முதல் மந்த்ரத்திற்கு காயத்ரீ சந்தஸ். மற்றவைக்கு த்ரிஷ்டுப் சந்தஸ், விச்வேதேவர் ருஷிகள், மித்ரன் தேவதை, ஸூர்யனின் உபஸ்தானத்தில் விநியோகமாம். பிதாமஹர்:- 'மித்ரஸ்ய' என்பது முதலான மூன்று ருக்குகளுக்கும் விச்வாமித்ரர் ருஷி, முதல் மந்த்ரத்திற்கு ஹிருக்காயத்ரம் சந்தஸ், கடைசி இரண்டு மந்த்ரங்களுக்கும் த்ரிஷ்டுப் சந்தஸ், மூன்றுக்கும் மித்ரன் தேவதை, என்றூர் பிருஹஸ்பதி. இம்மூன்று ருக்குகளாலும், ஸ்பஷ்டமாய் உதித்த மண்டலமுடைய ஸூர்ய பகவானை நோக்கி அஞ்சலியுடன் உபஸ்தானம் செய்ய வேண்டும்.

सायंसन्ध्याया मुपस्थाने मन्त्रविशेषमाह नारायणः – वारुणीभिरादित्यमुपस्थाय प्रदक्षिणं कुर्वन् दिशो नमस्कुर्यात् इति॥

वारुण्यश्च इमं मे वरुण श्रुधीभवमित्याद्याः । यद्यपि वारुणीभिर्वरुणस्यैवोपस्थानं लिङ्गवशात् प्रोक्तम्, तथाऽपि श्रुतेः प्राबल्यात् तया लिङ्गं बाधित्वा आदित्योपस्थान एव मन्त्रो विनियुज्यते ।। पितामहः – इमं म इति गायत्रीं तत्त्वायामीति त्रिष्टुभम् । यच्चिद्धि इति गायत्रीं यत्किञ्च त्रैष्टुभं विदुः ।। कितवास इति त्रिष्टुब् देवता वरुणः स्मृतः । तिसृणां तु शुनःशेफश्चतुर्थ्या वसिष्ठ उच्यते । पञ्चम्या अत्रिरित्येव मृषयः परिकीर्तिताः इति ।।

ஸாயங்காலத்தில் உபஸ்தானத்திலுள்ள மந்த்ர விசேஷத்தைச் சொல்லுகிறார் நாராயணர்:- வாருணமந்த்ரங்களால் ஸூர்யோபஸ்தானம் செய்து ப்ரதக்ஷிணம் செய்து கொண்டு திக்குகளை நமஸ்கரிக்க வேண்டும். இங்கு வாருணமந்த்ரங்களால் வருணனுக்கே உபஸ்தானம் லிங்கபலத்தால் ப்ராப்தமாகிறது. அப்படியாகினும், ச்ருதி ப்ரபலமானதால், ச்ருதியினால் லிங்கத்தைப் பாதித்து, ஸூர்யோபஸ்தானத்திலேயே மந்த்ரம் உபயோகிக்கப்படுகிறது. பிதாமஹர்:- 'இமம்மே' என்ற மந்த்ரத்திற்கு காயத்ரியும், 'தத்வாயாமி' என்பதற்கு த்ரிஷ்டுப்பும், 'யச்சித்திதே' என்பதற்குக் காயத்ரியும், 'யத்கிம்சேதம்' என்பதற்கு த்ரிஷ்டுப்பும், 'கிதவாஸ:' என்பதற்கு த்ரிஷ்டுப்பும் சந்தஸ்ஸுகளாம். எல்லாவற்றிற்கும் வருணன் தேவதை. முதல் மூன்று மந்த்ரங்களுக்கும் சுனச்சேபர் ருஷி. நாலாவது மந்த்ரத்திற்கு வஸிஷ்டர் ருஷி. ஐந்தாவதற்கு அத்ரி ருஷி எனச் சொல்லப்பட்டிருக்கின்றன.

बोधायनः – वारुणीभ्यां रात्रिमुपतिष्ठत इमं मे वरुण तत्त्वायामीति द्वाभ्यामेवमेव प्रातः प्राङ्मुखस्तिष्ठन् मैत्रीभ्या महरुपतिष्ठते मित्रस्य चर्षणीधृतो मित्रोजनान् यातयतीति द्वाभ्याम्। यदुपस्थकृतं पापं पद्भ्यां वा यत् कृतं भवेत्। बाहुभ्यां मनसा वाऽपि वाचा वा यत् कृतं भवेत्। सायं सन्ध्यामुपस्थाय तेन तस्मात् प्रमुच्यते ।।

रात्र्या चापि सन्धीयते न चैनं वरुणो गृह्णात्येवं प्रातरुपस्थाय रात्रिकृतात् पापात् प्रमुच्यतेऽह्ना चापि सन्धीयते मित्रश्चैनं गोपायत्यादित्यश्चैनं स्वर्गं लोकं नयति स एवमेवाहरहर होरात्रयोस्सन्धिषूपतिष्ठमानो ब्राह्मणो ब्रह्मलोकमभिजयति इति ।।

போதாயனர்;- வருண தேவதாகமான 'இமம்மே' வருண', 'தத்வாயாமி' என்ற இரண்டு மந்த்ரங்களால் ராத்ரிக்கு உபஸ்தானம் செய்ய வேண்டும். இவ்விதமே காலையில் கிழக்கு முகமாய் நின்று கொண்டு, மித்ரதேவதாகமான 'மித்ரஸ்ய சர்ஷணீத்ருத:' 'மித்ரோ ஜநான் யாதயதி' என்ற இரண்டு மந்த்ரங்களால பகலுக்கு உபஸ்தானம் செய்ய வேண்டும். உபஸ்தத்தாலும், கால்களாலும், கைகளாலும், மனதினாலும், வாக்கினாலும் செய்த பாபத்தினின்றும், ஸாயங்கால ஸந்த்யோப ஸ்தானத்தால் விடுபடுகிறான். ராத்ரிதேவதையுடனும் சேருகிறான். வருணன் இவனைப் பீடிக்கமாட்டான். இவ்விதம் காலையில் உபஸ்தானம் செய்தால் ராத்ரியில் செய்த பாபத்தினின்றும் விடுபடுகிறான், பகல் தேவதையுடனும் சேருகிறான். மித்ரனும் இவனைக் காக்கிறான், ஆதித்யனுமிவனை ஸ்வர்க்கத்தை அடைவிக்கிறான். இவ்விதமே ப்ரதிதினமும் இரண்டு ஸந்திகளிலும் உபஸ்தானம் செய்யும் ப்ராம்ஹணன் ப்ரம்ஹலோகத்தை ஜயிக்கிறான்.

मध्यन्दिनोपस्थानमाह स एव – दर्भेष्वासीनो दर्भान् धारयमाणः प्राङ्मुखः सावित्रीं सहस्रकृत्व आवर्तयेत् शतकृत्वोऽपरिमितकृत्वो वा दशावरामथादित्यमुपतिष्ठत आसत्येनोद्वयं तमसस्पर्युदुत्यं चित्रं तच्चक्षुर्देवहितं य उदगादिति इति ।। नारायणोऽपि – आसत्येनोद्वयं तम उदुत्यं चित्रमित्यपि । तच्चक्षुर्देव इति हंसः शुचिषदित्यपि ।। एतज्जपेदूर्ध्व बाहुस्सूर्यं पश्यन् समाहितः इति ।।

மத்யாஹ்ன காலத்திலுபஸ்தானத்தைச் சொல்லுகிறார்- போதாயனரே:- தர்ப்பங்களில் உட்கார்ந்து தர்ப்பங்களைத் தரித்து கிழக்கு முகமாயிருந்து காயத்ரியை ஆயிரம் தடவை ஜபிக்க வேண்டும். அல்லது நூறு தடவை, அதிகக் கணக்கிலாவது ஜபிக்க வேண்டும். பத்துத் தடவை ஜபிப்பது கடைசி பக்ஷம். பிறகு, 'ஆஸத்யேந, உத்வயம் தமஸஸ்பரி, உதுத்யம், சித்ரம், தச்சக்ஷுர் தேவஹிதம், ய உதகாத் என்ற மந்த்ரங்களால் ஆதித்யோபஸ்தானம் செய்ய வேண்டும். நாராயணரும்:- ஆஸத்யேந, உத்வயம், உதுத்யம், சித்ரம், தச்சக்ஷுர்தேவ, ஹம்ஸச்சுசிஷத் என்ற இந்த மந்த்ரங்களைக் கவனமுள்ளவனுய், கைகளை உயரத் தூக்கியவனுய், ஸூர்யனைப் பார்ப்பவனுய் ஜபிக்க வேண்டும்.

शौनकस्तु विशेषमाह – उत्तमेत्यनुवाकेन चोद्वास्य परमां शुभाम्। सायं प्रातरुपस्थाय जातवेदस इत्यृचा॥ इमं मे वरुण तत्त्वेति सायङ्काले विशेषतः। मित्रस्यचर्षणी धृतद्वाभ्यां प्रातः समाहितः॥ पिशङ्गभृष्टि मित्यृचा मुखं स्पृष्ट्वा प्रदक्षिणम्। भद्रं कर्णेत्यृचैकया कर्णं स्पृष्ट्वा प्रदक्षिणम्॥ केश्याग्निमित्यृचा पश्चात् शिखां स्पृष्ट्वा प्रदक्षिणम्। सन्ध्याकाले च सावित्रीं सर्वान् देवान् प्रणम्य च॥ दिशश्च साधिपान्नत्वा गुरूनप्यभिवादयेत्। मध्याह्ने मण्डलं पश्यन्नुपतिष्ठेत भास्करम्॥ कृताञ्जलिः पठेत् सूक्त मुदुत्यं जातवेदसम्। एवमादीनि सौर्याणि जपन्नीक्षेत भास्करम् इति॥

சௌனகர்:- விசேஷம் சொல்லுகிறார் :- 'உத்தமே' என்னும் அனுவாகத்தால் காயத்ரியை உத்வாஸனம் செய்து, 'ஜாதவேதஸே' என்ற ருக்கினுல் காலை மாலைகளில் உபஸ்தானம் செய்ய வேண்டும். இமம் மே வருண, தத்வாயாமி என்ற இரண்டு மந்த்ரங்கள் மாலையிலும், மித்ரஸ்ய சர்ஷணீ த்ருத: என்ற இரண்டு மந்த்ரங்கள் காலையிலுமாம். 'பிசங்கப்ருஷ்டிம்' என்ற ருக்கினுல் முகத்தை ப்ரதக்ஷிணமாய்த் தொட்டு, 'பத்ரம்

கர்ணேபி:' என்ற ஒரு ருக்கிஞல் காதையும் ப்ரதக்ஷிணமாய்த் தொட்டு, 'கேச்யாக்னிம்' என்ற ருக்கிஞல் சிகையை ப்ரதக்ஷிணமாய்த் தொட்டு, ஸந்த்யா காலத்தில் ஸாவித்ரியையும், ஸகல தேவர்கஞையும் நமஸ்கரித்து, திக்குகஞையும் திக்தேவதைகஞையும் நமஸ்கரித்து குருக்கஞையும் நமஸ்கரிக்க வேண்டும். மத்யாஹ்னத்தில் மண்டலத்தைப் பார்த்துக் கொண்டு ஸூர்யோபஸ்தானம் செய்ய வேண்டும். அஞ்ஜலியுடன் 'உதுத்யம்' என்ற ஸூக்தத்தை ஜபிக்க வேண்டும். இது முதலான ஸூர்ய ஸூக்தங்கஞை ஜபித்துக் கொண்டு ஸூர்யஞைப் பார்க்க வேண்டும்.

स्मृत्यर्थसारे – जपान्ते प्रातः सौरैर्मन्त्रैः सूर्यमुपतिष्ठते सायं वारुणैर्यद्वोभयत्र जातवेदसेन वैष्णवै रौद्रैर्वोपतिष्ठेत दिग्भ्यो देवताभ्यो नमस्कृत्य सन्ध्यायै सावित्र्यै गायत्र्यै सरस्वत्यै सर्वाभ्यो देवताभ्यो नमो नम इत्यादि यथास्वाचारं कुर्यात् इति ।।

ஸ்ம்ருத்யர்த் ஸாரத்தில்:- ஜபத்தின் முடிவில், காலையில் ஸூர்யதேவதாகமான மந்த்ரங்களால் ஸூர்யோபஸ்தானம் செய்ய வேண்டும். ஸாயங்காலத்தில் வாருண மந்த்ரங்களால் உபஸ்தானம் செய்ய வேண்டும். அல்லது, இரண்டு காலத்திலும், 'ஜாதவேதஸ' மந்த்ரம், விஷ்ணுதேவதாகமான மந்த்ரங்கள், ரௌத்ர மந்த்ரங்கள் இவைகளாலாவது உபஸ்தானம் செய்ய வேண்டும். திக்தேவதைகஞையும் நமஸ்கரித்து, ஸந்த்யை, ஸாவித்ரீ, காயத்ரீ, ஸரஸ்வதீ, ஸகல தேவதைகள் இவர்கஞையும் அவரவர்களுக்குள்ள ஆசாரப்படி நமஸ்கரிக்க வேண்டும்.

भरद्वाजः – उपस्थाय नमस्कुर्यात् चतुस्सन्ध्यादिदेवताः । सन्ध्या पुरस्तात् सावित्री गायत्री च सरस्वती । एताः सन्ध्यादयः प्रोक्ताश्चतस्रो देवताः क्रमात् ।। स्वस्वनाम चतुर्थ्यन्तं प्रणवादि नमोन्तकम् । मन्त्रमासामिह प्रोक्तं प्रणमेत् स्वस्वमन्त्रतः ।। केचित्तु

मुनयः प्राहुः प्रतिमन्त्रं प्रदक्षिणम् ।। सर्वाभ्यो देवताभ्यश्च एतत् प्रणवसंपुटम् । उक्त्वा नमो नम इति प्रणमेत् सर्वदेवताः ।। कामोऽकार्षीन्मन्युरकार्षीन्नमोनम इत्यपि । उक्त्वा प्रदक्षिणेनैव देवीं विप्रोऽभिवादयेत् ।। कर्णयुग्मं स्वहस्ताभ्यां स्पृष्ट्वा जानुद्वयादिकम् ।। चरणाङ्गुष्ठपर्यन्तं संमृज्य तु शनैः शनैः । अभिवाद्य च गायत्रीं नमस्कुर्याद्दिशस्तथा ।। प्राची च दक्षिणा चैव प्रतीची चोत्तरोर्ध्वका । अधरा चान्तरिक्षं च भूमिश्चाष्टोदिता दिशः ।। एताः प्रदक्षिणेनैव प्रणमेत् स्वस्वमन्त्रतः ।। यमविष्णुविरूपाक्षसवितॄणामुपस्थितिम् । कुर्यात्तल्लिङ्गकैर्मन्त्रैः द्विजो याम्यादिदिङ्मुखः ।। एवं सन्ध्यामुपास्याथ पितरावग्रजान् गुरून् । त्रिवर्षपूर्वान् शिष्टांश्च पार्श्वस्थानभिवादयेत् इति ।

பரத்வாஜர்:- *உபஸ்தானம் செய்த பிறகு ஸந்த்யை முதலிய நாலு தேவதைகளையும் நமஸ்கரிக்க வேண்டும். ஸந்த்யை முதலில், பிறகு காயத்ரீ, ஸாவித்ரீ, ஸரஸ்வதீ, இவர்கள் முறையே நாலு தேவதைகள். அவரவரின் நாமத்தை நான்காவது வேற்றுமை முடிவிலுடையதாய் ப்ரணவத்தை முதலிலும் நமः என்பதை முடிவிலுடையதுமாய்ச் செய்து அந்த மந்த்ரங்களால் அவர்களை நமஸ்கரிக்க வேண்டும். (ஓம் காயத்ர்யை நமः என்றவாறு) சில முனிகள் எல்லா மந்த்ரங்களிலும் ப்ரதக்ஷிணம் சொல்கின்றனர். 'ஸர்வாப்யோ தேவதாப்யः' என்ற மந்த்ரத்தை இருபுறமும் ப்ரணவத்துடன் சேர்த்து 'நமோ நமः' என்று சொல்லி ஸகல தேவதைகளையும் நமஸ்கரிக்க வேண்டும், 'காமோ கார்ஷீன்மன்யுரகார்ஷீத்' என்று சொல்லியும் ப்ரதக்ஷிணமாய்த் தேவியை நமஸ்கரிக்க வேண்டும். தன் காதுகளையும் கைகளால் தொட்டுப் பிறகு முழங்கால் முதல் கால் பெருவிரல் வரையில் மெதுவாய்த் துடைத்து அபிவாதனம் செய்ய வேண்டும். பிறகு திக்குகளை நமஸ்கரிக்க வேண்டும்.*

கிழக்கு, தெற்கு, மேற்கு வடக்கு, மேல், கீழ், அந்தரிக்ஷம், பூமி என, திக்குகள் எட்டு என்று சொல்லப்பட்டுள்ளன. இவைகளையும் அவரவர் நாம மந்த்ரத்தால் ப்ரதக்ஷிணமாய் நமஸ்கரிக்க வேண்டும். யமன், விஷ்ணு, விரூபாக்ஷன், ஸவிதா இவர்களுக்கும் அவரவர் மந்த்ரத்தால் தெற்கு முதலான திக்குகளுக்கு எதிராய் இருந்து உபஸ்தானம் செய்ய வேண்டும். இவ்விதம் ஸந்த்யையை உபாஸித்துப் பிறகு மாதா பிதாக்கள், ஜ்யேஷ்ட ப்ராதாக்கள், குருக்கள், மூன்று வயது பெரியோராயும் சிஷ்டராயுமுள்ள பக்கத்திலிருப்பவரையும் நமஸ்கரிக்க வேண்டும்.

चन्द्रिकायाम्– आत्मपादौ तथा भूमिं सन्ध्याकालेऽभिवादयेत्। आयुर्विद्यां धनारोग्ये प्राप्नोति पुरुषस्सदा इति ।। स्मृत्यर्थसारे – सावित्र्यादिक्रियाः सर्वा आदित्याभिमुखश्चरेत्। देवालयसमीपे तु तमेवाभिमुखश्चरेत्।। जपस्थानान्न निर्गच्छेत् देवतासन्निधौ क्वचित्। प्रदक्षिणं नमस्कारं न कुर्याद्देवतालये इति।। हारीतः – आर्द्रवासा जले कुर्यात् तर्पणाचमनं जपम्। उपस्थातुं न निर्गच्छेत् वर्जयेच्च प्रदक्षिणम् इति।।

சந்த்ரிகையில்:- தன் பாதங்களையும், பூமியையும், ஸந்த்யா காலத்தில் அபிவாதனம் செய்ய வேண்டும். இவ்விதம் செய்பவன் ஆயுள், வித்யை, தனம், ஆரோக்யம் இவைகளை எப்பொழுதுமடைகிறான். ஸ்ம்ருத்யர்த்த ஸாரத்தில்:- காயத்ரீ ஜபம் முதலிய க்ரியைகளை ஸூர்யனுக்கு அபிமுகமாய்ச் செய்ய வேண்டும். தேவாலய ஸமீபத்தில் செய்தால் அதற்கு அபிமுகமாகவே செய்ய வேண்டும். தேவதாஸன்னிதியில் செய்தால் ஜபஸ்தானத்தினின்றும் ஒருகாலும் வெளியேறக் கூடாது. ப்ரதக்ஷிணம் நமஸ்காரம் இவைகளையும் தேவாலயத்திற்குள் செய்யக் கூடாது. ஹாரீதர்:- ஈரவஸ்த்ரத்துடனிருப்பவன் தர்ப்பணம், ஆசமனம், ஜபம் இவைகளை ஜலத்திலேயே செய்ய வேண்டும்.

உபஸ்தானம் செய்வதற்காக வெளியேற வேண்டியதில்லை. ப்ரதக்ஷிணமும் செய்யக் கூடாது.

मन्त्रार्थस्तु –उत्तमे शिखरे ।। देवी - देवनशीला । विभक्तिव्यत्ययः । देवनशीले हे देवि ! भूम्यामागत्य ब्राह्मणेभ्यः अस्मभ्यमनुज्ञानं कृत्वा उत्तमे उत्कृष्टतमे शिखरे - सर्वस्मात् उच्छ्रिते पर्वतस्य सुमेरोर्मूर्ध्नि ब्रह्मलोके स्वस्थाने यथासुखं गच्छ ।।

உபஸ்தான மந்த்ரார்த்தமோவெனில்:- 'உத்தமே சிகரே' 'தேவீ - ப்ரகாசிப்பவள். வேற்றுமை மாறுதல். ஓ தேவியே! பூமியில் வந்து, ப்ராம்ஹணர்களாகிய எங்களுக்கு அனுக்ஞை கொடுத்து, எல்லாவற்றிலும் உயர்ந்ததான ஸுமேரு பர்வதத்தின் உச்சியில் ப்ரம்ஹ லோகமாகிய உன் ஸ்தானத்தில் ஸுகமாய்ச் செல்.

मित्रस्येत्यादि। मित्रस्य - सूर्यस्य। चर्षणयः - मनुष्याः। तान् धारयति वृष्टिप्रदानद्वारेति चर्षणीधृत् तस्य । श्रव इति दीप्तिनाम । तदिहोपचारात् तद्वति मण्डले वर्तते । देवस्य - प्रकाशमानस्य । सानसिं मण्डलविशेषणमेतत् । षण सम्भक्तावित्यस्य असुन् प्रत्ययान्तस्य छान्दसमेतद्रूपम्। योगिभिः सम्भजनीयमित्यर्थः। सत्यं - परमार्थभूतम् । चित्रश्रवस्तमम् - चित्राणि श्रवांसि तेजांसि येषामग्न्यादीनां त इमे चित्रश्रवसः। तेषां मध्ये उत्कृष्टम्। एवं भूतं वयं वन्दामह इति वाक्यशेषः।

மித்ரஸ்ய முதலியது:- மித்ரஸ்ய - ஸூர்யனுடைய, சர்ஷணீத் ருத:- மழையைக் கொடுப்பதால் மனிதர்களைப் போஷிப்பவரான, 'ச்ரவ:' என்பது ப்ரகாசத்திற்குப் பெயர். அது இங்கு உபசாரத்தால் ப்ரகாசமுள்ள மண்டலத்தைச் சொல்லுகிறது. தேவஸ்ய - ப்ரகாசிப்பவனை. ஸாநஸிம் - இது மண்டலத்திற்கு விசேஷணம். 'ஷண' என்ற தாதுவின் பேரில் வந்த சாந்தஸரூபம். யோகிகளால் உபாஸிக்கக் கூடியதென்பது பொருள். ஸத்யம் -

பரமார்த்தமாயிருப்பது. சித்ரச்ரவஸ்தமம் - ஆச்சர்யமான தேஜஸ்ஸுகளையுடைய அக்னி முதலியவர்களுக்குள் சிறந்தது. இவ்விதமாகியதை 'நாங்கள் நமஸ்கரிக்கின்றேம்' என்று வாக்ய சேஷம், மனிதர்களைப் போஷிப்பவரும், ப்ரகாசிப்பவருமான மித்ரனுடையதும் எல்லோராலும் உபாஸிக்கக் கூடியதும், ஸத்யமானதும், ஸகல தேஜஸ்ஸுகளிலும் சிறந்ததுமான மண்டலத்தை நாம் நமஸ்கரிக்கின்றேம் என்பது பொருள்.

मित्रो जनान् - सर्वमिदं करतलामलकवत् प्रजानन् - पश्यन् मित्रः - सूर्यः जनान् यातयति - व्यापारवतः करोति। मित्रो दाधार - मित्र एव वृष्टिप्रदानेन धारयति। पृथिवीं - पृथिवीस्थं प्राणिजातम्। उत द्यां - दिवमपि। उपलक्षणञ्चैतत्सकलभुवनानाम्। किञ्च मित्रः कृष्टीः। कृष्टयो मनुष्याः। तान् पुण्यपापयोर्वर्तमानान्, अनिमिषा। सुपां सुलुगित्याकारः। अनिमिषेण दिव्येन चक्षुषा अभिचष्टे - आभिमुख्येन पश्यति यस्तस्मै सत्याय - नित्यरूपाय मित्राय हव्यं चरुपुरोडाशादि। घृतवत् - घृतसिक्तम्। विधेम - दद्म इत्यर्थः।

மித்ரோஜநான்:- காணப்படும் எல்லாவற்றையும். உள்ளங்கை நெல்லிக்கனியைப்போல், ப்ரஜாநன் - பார்க்கின்ற, மித்ர: - ஸூர்யன், ஜநான் = ஜனங்களை, யாதயதி - வ்யாபாரம் உள்ளவர்களாக்குகிறான். மித்ரோ தாதார - மித்ரனே மழையைக் கொடுப்பதால் போஷிக்கின்றான். ப்ருதிவீம் - பூமியிலுள்ள ப்ராணி ஸமூஹத்தை, உத த்யாம் - ஸ்வர்க்கத்தையும், ஸகல லோகங்களுக்கும் உபலக்ஷணமிது. இன்னும் - மித்ர:= மித்ரன், க்ருஷ்டீ: - க்ருஷ்டி சப்தம் மனிதர்களைச் சொல்லுகின்றது. புண்ய பாப கர்மங்களைச் செய்யும் மனிதர்களை, அனிமிஷா= இமையில்லாத திவ்ய நேத்ரத்தால் அபிசஷ்டே - நேராகப் பார்க்கிறான். எவன் இவ்வித மிருக்கின்றானே அந்த, ஸத்யாய = நித்ய ரூபனை, மித்ராய - ஸூர்யனின் பொருட்டு, ஹவ்யம் =

சருபுரோடாசம் முதலியதை, க்ருதவத் - நெய்யுடன் கூடியதாய், விதேம - கொடுக்கின்றோம் என்று பொருள்.

प्रसमित्र मर्तो अस्तु। हे मित्र। सः मर्तः - मर्त्यः प्रास्तु भवतु। कीदृशः? प्रयस्वान् - प्रय इत्यन्ननाम तद्वान्। भूम्नि मतुप् प्रत्ययः। बह्वन्नो भवतु। कोऽसौ? यो यजमानः ते तुभ्यम् आदित्य-अदितेः पुत्र! शिक्षति ददाति। व्रतमिति कर्मनाम। व्रतेन यागाख्यकर्मणा। प्रकृतत्वात् घृतवद्धविरिति सम्बध्यते। कर्मणि यो हविर्ददाति, सः प्रयस्वान् भवत्विति यावत्॥

ப்ரஸமித்ர மர்த்தோ அஸ்துः- ஹேமித்ர - ஓ ஸுர்யனே! ஸः மர்த்தः- அந்த மனிதன், ப்ராஸ்து - ச்ரேயஸ்ஸுடனிருக்க வேண்டும். எவ்விதமாகியவனுய்? ப்ரயஸ்வான - ப்ரயः என்பது அன்னத்திற்குப் பெயர். அன்னத்தை உடையவனுய். 'மதுப்' ப்ரத்யயத்தால், அதிக அன்னமுள்ளவனுய் இருக்க வேண்டும் என்பதாம். எந்த மனிதன்? யः- எந்த யஜமானன், தே= உனக்கு, ஆதித்ய - அதிதியின் புத்ரனே? சிக்ஷதி - கொடுக்கின்றனே. 'வ்ரதம்' என்னும் பதம் கர்மத்தைச் சொல்லும், வ்ரதேந - யாகமெனும் கர்மத்தினுல், ப்ரக்ருதமானதால் 'நெய்யுடன் கூடிய ஹவிஸ்ஸை' என்பது இங்கு சேர்க்கப்படுகிறது. யாகத்தில் எவன் ஹவிஸ்ஸைக் கொடுக்கின்றனே அவன் மிகுந்த அன்னம் உடையவனுயிருக்க வேண்டுமென்பது கருத்து.

न केवलमन्नवानेव भवत्विति। किन्तर्हि? न हन्यते मृत्युना। न जीयते। ज्या वयोहानौ। शतवत्सरलक्षणादायुषो न जीयते। त्वोतः - उत इति वेञो रक्षणार्थस्यैतद्रूपम्। त्वया रक्षित इत्यर्थः। नैनम् एनं त्वदाराधनपरम्। अंहः - पापं नाश्नोति - न संबध्नाति। अन्तितः - समीपे इह जन्मनि। दूरात् - पूर्वजन्मनि कृतमित्यर्थः।

இவ்வளவு மட்டுமல்ல. இன்னுமெது? ந ஹன்யதே - ம்ருத்யுவினுல் கொல்லப்பட மாட்டான். ந ஜீயதே -

நூறுவயதளவுள்ள ஆயுளினின்றும் குறையமாட்டான். த்வோத:- உன்னுல் ரக்ஷிக்கப்பட்டவன். ஏநம் - உன்னை ஆராதிக்குமிவனை, அம்ஹ: - பாபமானது நாச்நோதி - கட்டுப்படுத்துவதில்லை. அந்தித: - ஸமீபத்தில், இந்த ஜன்மத்திலும், தூராத் - முன் ஜன்மத்திலும், செய்யப்பட்டுள்ள பாபம் கட்டுப்படுத்துவதில்லை என்பதாம்.

शुनश्शेपो वरुणं प्रार्थयते - इमं मे वरुणेति। हे वरुण ! मे इमम् - अस्मदीयं हवं - स्तोत्रम्। श्रुधि - शृणु। श्रुत्वा च मामद्यैव मृडय - सुखय । यस्मादहं त्वां अवस्यु: रक्षणमात्मन इच्छुस्सन् आचके आभिमुख्ये न प्रार्थयामि। कै गै शब्दे।।

சுனச்சேபன் வருணனை ப்ரார்த்திக்கின்றான் இமம்மேவருண என்பதால். வருண - ஓ வருணனே! மே - என்னுடைய, இமம் - இந்த, ஹவம் - ஸ்தோத்ரத்தை, ச்ருதி - கேட்கக் கடவாய். கேட்ட பிறகு என்னை, அத்யாச - இப்பொழுதே, ம்ருடய - ஸுகிக்கச் செய். எதனுல், நான், த்வாம் - உன்னை, அவஸ்யு:- தனக்கு ரக்ஷணத்தை விரும்பியவனுய், ஆசகே - அபிமுகனுய் ப்ரார்த்திக்கின்றேனே அதனுல் என்னை ஸுகிக்கச் செய்..

तत्त्वा यामि। हे वरुण ब्रह्मणा मन्त्रेण वन्दमानः स्तुवन् अहम्। तत् - तदर्थम् । चतुर्थ्या लुक् । तदर्थमेव त्वां यामि - भजे । यजमानोऽपि सर्वस्तदेवाशास्ते। हविर्भिः - चरुपुरोडाशादिभिः। हे उरुशंस - बहुभिः यजमानैः स्तूयमान? इह - अस्मिन् काले । अस्मदीयां विज्ञापनां अहेडमानः - अक्रुध्यन्, बोधि - बुध्यस्व । छान्दसं रूपम्। किं पुनस्तत् प्रार्थनीयं इत्यत आह मा न इति। नः - अस्माकम्। आयुः - जीवितम्। मा प्रमोषीः - मा प्रहार्षीः ।।

தத்வாயாமி:- ஹே வருண - ஓ வருணனே! ப்ரம்ஹணு - மந்த்ரத்தினுல், வந்தமான:- ஸ்துதிக்கின்ற

நான், தத்- அதற்காகவே, த்வா - உன்னை, யாமி - ஸேவிக்கின்றேன், யஜமானः- யஜிப்பவன் எவனும், ததாஸ்தே - அதையேதான் வேண்டுகிறான். ஹவிர்ப்பிः - சரு புரோடாசம் முதலியவைகளால். ஹே உருசம்ஸ - அநேக யஜமானர்களால் ஸ்துதிக்கப்படுகின்றவனே! இஹ- இக்காலத்தில், என்னுடைய ப்ரார்த்தனையை, அஹேடமானः- கோபிக்காதவனாய், போதி - அறிந்து கொள்ளும். ப்ரார்த்திக்கத் தகுந்தது என்னவெனில், நः= எங்களுடைய, ஆயுः= ஆயுளை, மாப்ரமோஷீः= அபஹரிக்க வேண்டாம்.

यच्चिद्धि ते। चित् हि इति द्वावपि निपातावनर्थकौ। ते तव। व्रतमित्यनेन सम्बध्यते। हे देव वरुण! विशः मनुष्याः विवेकशून्याः यथा विहितं कर्म लुम्पन्ति, तथा वयमपि ते व्रतं - परिचर्याकर्म प्रमिनीमसि - हिंसितवन्तः स्म। द्यविद्यवि - दिनेदिने॥

யச்சித்திதேः- சித், ஹி, என்ற இரண்டுக்கும் அர்த்தமில்லை. 'தே' என்ற பதம் 'வ்ரதம்' என்பதுடன் சேருகிறது. ஹே தேவ - வருண - ஓ தேவனாகிய வருணனே! விசः- மனிதர்கள், யதா - எப்படி, விவேகம் இல்லாதவராய் விஹித கர்மங்களைத் தொலைக் கின்றார்களோ அப்படி நாங்களும் தே - உன்னுடைய, வ்ரதம் - பரிசர்யையை, மிநீமஸி - ஹிம்ஸித்தோம், விடுத்தோம். த்யவித்யவி - ப்ரதிதினமும்.

यत्किञ्चेदं। यत् किञ्च - यत् किञ्चित्। इदं - ईदृशं। हे वरुण? दैव्ये देवसमूहे जने अभिद्रोहं - अपचारं पापरूपम्। मनुष्या वयं चरामसि - कृतवन्तः। अचित्ती - प्रथमाबहुवचनस्य ईकारः। तव, अचित्ताः अज्ञानिनो वयं धर्मा - धर्मं परिचर्यारूपं युयोपिम - विनाशितवन्तः। मेति प्रतिषेधार्थः। नः - अस्मान् तस्मादेनसः - पापात् मा रीरिषः - मा हिंसीरित्यर्थः॥

யத்கிஞ்சேதம்:- *யத்கிஞ்ச - எது சிலது, இதம் - இவ்விதமான, ஓ வருண! தைவ்யே ஜநே - தேவ ஸமூஹ ஜனத்தினிடத்தில், அபித்ரோஹம் - பாபரூபமான அபசாரத்தை, மனுஷ்யா:- மனிதராகிய நாங்கள், சராமஸி - செய்தோமோ, அசித்தீ - அஜ்ஞானிகளாகிய நாங்கள், தவ - உன்னுடைய, தர்மா - பரிசர்யாரூபமான தர்மத்தை, யத்யுயோபிம - செய்யாமற் கெடுத்தோமென்பதும் யாதோ, தஸ்மாத் ஏநஸ:- அந்தப் பாபத்தினால், ந:- எங்களை, மாரீரிஷ:- நீர் ஹிம்ஸிக்க வேண்டாம்.*

कितवासः । यदस्मद्विषये कितवासः - कितवाः रिरिपुः - पापमारोपयन्ति । नदीवि - देवनस्थान इव । यद्वाघेति पादरूपेण एवकारार्थे वर्तते । सत्यमेव उत यन्न विद्म - यदपि वयं न जानीमः । यथा कितवाः देवनस्थाने परस्परं सत्यमसत्यं च वदन्ति, तद्वत् सर्वा ता - सर्वाणि तानि विष्य - अपनय । शिथिरेव - शिथिलानीव - अथ - अनन्तरम् । ते - तव प्रियासः स्यामेत्यर्थः ॥

கிதவாஸ:- *எங்கள் விஷயத்தில், கிதவாஸ:- சூதாடிகள். யத்ரிரிபு:- எந்தப் பாபத்தைச் சுமத்துகின்றனரோ, நதீவி - சூதாடும் இடத்திற்போல், 'யத்வாகா' என்பது பாதபூரணத்திற்காக. 'ஏவ' என்ற அர்த்தத்தில் இருக்கிறது. ஸத்யமேவ உதயந்நவித்ம - உண்மையாயினும் எதை நாங்களறியோமோ, சூதாடிகள் சூதாடுமிடத்தில் எப்படி மெய்யும் பொய்யும் சொல்லுகிறார்களோ அதுபோல். ஸர்வாதா - அவை எல்லாவற்றையும், விஷ்ய - நீர் போக்க வேண்டும். சிதிரேவ பலமற்றவைகளைப் போல், ஓ வருண, அத - பிறகு, தே - உமக்கு, ப்ரியாஸ:- ப்ரியர்களாக, ஸ்யாம - ஆகக்கடவோம்.*

आसत्येनेत्यादि । सत्येन - सत्सु सतां समूहादिषु तायमानेन रजसा - ज्योतिषा आवर्तमानः । अमृतं मर्त्यं च - अमरणधर्मणो देवान् मरणधर्मणो मनुष्यांश्च निवेशयन् - व्यापारयन् । आदित्यो हि

स्वेन तेजसा सर्वान् व्यापारयति । हिरण्ययेन स्वर्णमयेन रथेन सविता - कर्मप्रसविता अभ्यनुज्ञाता देवः आयाति । भुवना विपश्यन् - भुवनानि साक्षिरूपेण विविधं पश्यन् सन्नित्यर्थः ।

ஆஸத்யேந:- *ஸத்யேந - ஸத்துக்களில் ஸமூஹம் முதலியவைகளில் விரிந்துள்ள, தூண் குடம் முதலியவற்றில் ரஜஸா - ஒளியினால், ஆவர்த்தமான:- வந்து கொண்டிருப்பவனும், அம்ருதம் மர்த்யம்ச - அமரண தர்மிகளான தேவர்களையும், மரண தர்மிகளான மனிதர்களையும், நிவேசயன் - ஏவுகின்றவனையும், (ஆதித்யனல்லவோ தனது தேஜஸ்ஸினால் எல்லோரையும் ஏவுகின்றார்.) ஹிரண்யயேந - ஸ்வர்ணமயமான, ரதேந - தேரினால், ஸவிதா - கார்யங்களில் உத்தரவளிப்பவனான, தேவ:- ஸூர்யன் ஆயாதி - வருகிறார். புவநா விபச்யந் - ஸாக்ஷி ரூபத்துடன் உலகங்களைப் பலவிதமாய்ப் பார்ப்பவனைக் கொண்டு, என்பது பொருள்.*

उद्वयन्तमसस्परि । उत् उत्थितम् । तमसस्परि । परिर्वर्जने । तमो विनाश्योदितमिति यावत् । ज्योतिः - तेजोमयम् । उत्तरं - उत्कृष्टं देवं, देवत्रा - देवानामपि त्रातारं सूर्यं पश्यन्तो वयं उत्तमं ज्योतिरगन्म गमिष्याम इत्यर्थः ।

உத்வயம் தமஸஸ்பரி:- *தமஸஸ்பரி - இருளை நாசப்படுத்தி, உத் - எழுந்தவனும், ஜ்யோதி:- தேஜோமயனும், உத்தரம் - சிறந்தவனும், தேவத்ரா - தேவர்களையும் காப்பவனுமாகிய, தேவம் ஸூர்யம் - தேவனாகிய ஸூர்யனை, பச்யந்த:- பார்க்கின்ற நாம், உத்தமம் ஜ்யோதி:- சிறந்த ஜோதியை, அகன்ம - அடையப் போகின்றோம்.*

उदुत्यम् - उ इति निपातोऽवधारणार्थः । त्यं - तं, जातानि भूतानि वेत्तीति जातवेदाः तम् । देवं, केतवः - सहस्रसङ्ख्या दीधितयः उद्वहन्ति - उद्गमयन्ति । किमर्थं? दृशे - दर्शनाय । विश्वाय - विश्वस्य,

सूर्यं - सरणशीलम्।

உதுத்யம்:- த்யம் - அந்த, ஜாதவேதஸம் - உண்டாகிய ப்ராணிகளை அறிபவனுன, தேவம் - தேவனுகிய, ஸுர்யம் - ஸுர்யனை, கேதவ: - ஆயிரக்கணக்கான கிரணங்கள், உத்வஹந்தி - வெளியிடு கின்றன. எதற்கெனில், த்ருசே - தர்சனத்திற்காக, விச்வாய - உலகத்தின்.

चित्रन्देवानाम्। देवानां - अग्न्यादीनां मध्ये, चित्रं - अद्भुतं पूज्यं वा। अनीकशब्दस्सेनावचनः। उदगात्। देवद्विषां अपनोदक इत्यर्थः। मित्रस्य वरुणस्य अग्नेश्च चक्षुः। चक्षुर्देवानां किमुत मनुष्याणामिति श्रुतेः। आप्राः - प्रथमपुरुषस्य स्थाने मध्यमपुरुषः। द्यावापृथिवी अन्तरिक्षं सर्वान् लोकान् स्वेन महिम्ना पूरयति। परीत्य लोकान् परीत्य भूतानि परीत्य सर्वाः प्रदिशो दिशश्चेति श्रुतेः। सूर्य आत्मा, जगतः - जङ्गमस्य मनुष्यादेः, तस्थुषः - स्थावरस्य, सर्वस्यायमेव आत्मरूपेणावस्थितः।

சித்ரம் தேவாநாம்:- தேவாநாம் - அக்னி முதலியவர்களுள், சித்ரம் - ஆச்சரியமான, அனீகம் - சேனை, உதகாத் - வெளியாயிற்று. தேவர்களின் சத்ருக்களைப் போக்குகின்றவனிவன் என்று பொருள். மித்ரஸ்ய - மித்ரனுக்கும், வருணஸ்ய - வருணனுக்கும், அக்னே:- அக்னிக்கும், சக்ஷு:- கண்ணுகிய ஸுர்யன், த்யாவாப்ருதிவீ அந்தரிக்ஷம் - எல்லா உலகங்களையும், தன் மஹிமையினுல், ஆப்ரா:- நிரப்புகிறான், 'பரீத்யலோகான்' என்ற ச்ருதியால். ஸுர்ய:- இவ்விதமான ஸுர்யன், ஜகத:- ஜங்கமமான மனிதர் முதலியதும், தஸ்துஷ: - ஸ்தாவரமாகியதுமான, ஜகத: - உலகத்திற்கு, ஆத்மா - ஆத்ம ரூபியாய் இருக்கின்றார்.

तच्चक्षुः – तत् - आदित्याख्यं ज्योतिः, चक्षुः - सर्वस्य साक्षिभूतं, देवहितं - अग्निहोत्रादिहविःप्रदानार्थमहोरात्रादि-

कालविभाजकतया देवानां हि तकरम्। पुरस्तात् - पूर्वस्यां दिशि, शुक्रं - शुक्लं दीप्तिः, सा यस्यास्तीति मत्वर्थीयोऽच् प्रत्ययः। उच्चरत् - उद्गच्छत्, ज्योतिरादित्याख्यं पश्येम। कियन्तं कालं? शरदः शतम्। जीवेमेति सर्वसम्पद्भिः सह जीवनमाशास्यते, न प्राणधारणमात्रम्। नन्दाम - समृद्धाः स्याम। शृणवाम - प्रियं शृणुवाम। प्रब्रवाम - प्रवक्तारः स्याम। शत्रुभिरजीताः स्याम। ज्योक्च सूर्यं दृशे। दीर्घकालमुक्तलक्षणं सूर्यं दृशे - पश्येम॥

தச்சக்ஷுः- தத் - அந்த ஆதித்யனெனும் ஒளியாகியதும், சக்ஷுः- எல்லாவற்றிற்கும் ஸாக்ஷியாயிருப்பதும், தேவஹிதம் - அக்னிஹோத்ராதிகளில் ஹவிஸ்ஸை அளிப்பதற்கு இரவு பகல் முதலிய காலங்களைப் பிரிப்பதால் தேவர்களுக்கு நன்மையைச் செய்வதும், புரஸ்தாத் - கிழக்குத் திக்கில், சுக்ரம், - ப்ரகாசமுள்ளதாய், உச்சரத் - வெளிவருவதுமான, ஆதித்யனெனும் ஒளியைப் பார்க்கக் கடவோம். எவ்வளவு காலம்வரை? எனில், சரதச்சதம் = இடைவிடாது நூறு வருஷங்கள் வரை, ஜீவேம - நூறு வருஷம் பிழைத்திருக்கக் கடவோம். ஸகல ஸம்பத்துக்களுடன் கூடிய பிழைப்பே கோரப்படுகிறது, ப்ராணனைத் தரித்திருப்பது மட்டில் அல்ல. நந்தாம - நிறைந்தவராய் இருப்போம். மோதாம - ஸந்தோஷிப்பவராய் இருப்போம். பவாம - ஐச்வர்யத்திற்குப் பாத்ரமாய் இருப்போம். ச்ருணவாம - ப்ரியத்தையே கேட்போம். ப்ரப்ரவாம - நன்றுப்ப் பேசுகின்றவர்களாய் இருப்போம். அஜீதாः ஸ்யாம - சத்ருக்களால் ஜயிக்கப்படாதவர்களாய் இருப்போம், நூறு வருஷங்களும். ஜ்யோக் - நீண்டகாலம் ஸூர்யம் - முன் சொல்லிய லக்ஷணங்களுடைய ஸூர்யனை, த்ருசே - பார்க்கக் கடவோம்.

य उदगात्। महतः अर्णवात् - समुद्रात् विभ्राजमानः - विराजमानः। सरिरस्य - सलिलस्य मध्यात्। समा वृषभः - श्रेष्ठः

लोहिताक्षः - पङ्कजाक्षः, सूर्यः । विपश्चित् - विशुद्धदृष्टिः, मनसा मां पुनातु शोधयतु स्वपरिग्रहयोग्यं स्वयमेव करोत्वित्यर्थः ॥

य उदगात्:- यः- எவன், மஹத: அர்ணவாத் - பெரிதான ஸமுத்ரத்தினின்றும், ஸரிரஸ்ய மத்யாத் - ஜலத்தின் நடுவினின்றும், விப்ராஜமாந: - நன்றாய் ப்ரகாசிப்பவனாய் உதகாத் - உதித்தானோ வ்ருஷப: - ச்ரேஷ்டனும், லோஹிதாக்ஷ: - தாமரைக் கண்ணனும், விபச்சித் - விசுத்தக் ஞானமுடையவனுமான, ஸ: ஸூர்ய:- அந்த ஸூர்யன், மா - என்னை, மனஸா - மனதினால், புநாது = சுத்தனாக்க வேண்டும். தான் ஏற்றுக் கொள்ள யோக்யனாகத் தானே செய்ய வேண்டும் என்று பொருள்.

अन्यान्यपि पापक्षयार्थानि जप्यान्याह यमः – जपेद्वाऽप्यस्यवामीयं पावमानीरथापि वा । कुन्तापं वालखिल्यांश्च निवित्प्रैषं वृषाकपिम् ॥ होतॄन् रुद्रान् पितॄन् जित्वा मुच्यते सर्वपातकैः । अस्यवामीयं - अस्यवामस्य पलितस्य इति द्विपञ्चाशदृचः । पावमानीः - पवमानः सुवर्जन इत्याद्याः । होतॄन् - चित्तिः स्रुगित्यादीन् । पितॄन् - परेयिवांसं इत्यादीनि ॥ वसिष्ठः – सर्ववेदपवित्राणि वक्ष्याम्यहमतः परम् । येषां जपैस्तु पापौघान्मुच्यते नात्र संशयः ॥ अघमर्षणं देवकृतः शुद्धवत्यस्तरत्समाः । कूष्माण्ड्यः पावमान्यश्च दुर्गासावित्र्यथैव च । अभिषङ्गाः पदस्तोभाः सामानि व्याहृतीस्तथा । वारुणानि च सामानि गायत्रं रैवतं तथा ॥ अब्लिङ्गा बार्हस्पत्यं च वाक्सूक्तं मध्वृचस्तथा । शतरुद्रीयमथर्वशिरस्त्रिसुपर्णं महाव्रतम् । गोसूक्तमश्वसूक्तं च इन्द्रशुद्धी च सामनी । त्रीण्याज्यदोहाग्निरथन्तराश्च अस्त्रीव्रतं वामदेव्यं बृहच्च । एतानि जप्यानि पुनन्ति जन्तून् जातिस्मरत्वं लभते य इच्छेत् इति ॥

பாபத்தைப் போக்குவதற்கு ஜபிக்கக் கூடிய வேறு சிலவற்றையும் சொல்லுகிறார். யமன்:- 'அஸ்யவாமஸ்ய

பலிதஸ்ய' என்பது முதல் 52- ருக்குகளுள்ள 'அஸ்யவாமீயம்' என்கிற ஸூக்தத்தையாவது, 'பவமானஸ்ஸுவர்ஜநः' என்பது முதலிய ருக்குகளையாவது, குந்தாபம், வாலகில்யங்கள், நிவித் ப்ரைஷம், வ்ருஷாகபி, ஹோத்ரு மந்த்ரங்கள், ருத்ரமந்த்ரங்கள், பித்ருமேத மந்த்ரங்கள், இவைகளையாவது ஜபித்தால் ஸகல பாபங்களாலும் விடுபடுகிறான். வஸிஷ்டர்:- ஸகல வேதங்களிலும் பரிசுத்தமான மந்த்ரங்களை இனி நான் சொல்லப் போகிறேன். இவைகளை ஜபித்தால் மிகவான பாபங்களினின்றும் விடுபடுவான். இதில் ஸந்தேஹமில்லை.

अघमर्षणं - ऋतञ्चेत्याद्यास्तिस्रः । देवकृतः - देवकृतस्यैनसोऽवयजनमित्यादयः । शुद्धवत्यः - एतोन्विन्द्रंस्तवामेत्यादयस्तिस्रः । तरस्तमाः - तरस्तमन्दीधावतीत्याद्याश्चतस्रः । कूश्माण्ड्यः - यद्देवा देवहेलनमित्यनुवाकत्रयम् । पावमान्यः - स्वादिष्ठया मदिष्ठया, पवमानः सुवर्जन इत्येवमाद्याः ।। दुर्गा - जातवेदसे सुनवाम सोममित्येका ऋक् । सावित्री - तत्सवितुरिति । अभिषङ्गादयो रैवतान्ताः सामविशेषाः । अब्लिङ्गाः - आपोहिष्ठेत्याद्याः । बार्हस्पत्यं - यस्तस्तम्भसहसेत्येकादशार्चम् । वाक्सूक्तम् - अहं रुद्रेभिर्वसुभिरिति त्यृचम् । मध्वृचः - मधुवाता ऋतायत इत्याद्यास्तिस्रः । शतरुद्रीयं - नमस्ते रुद्र मन्यव इत्येकादशानुवाकाः । त्रिसुपर्णम् - ब्रह्ममेतु मामित्याद्यनुवाकत्रयम् । महाव्रतं - राजनं नाम साम । गोसूक्तं - आगावो अग्मन्नित्यष्टर्चम् । अश्वसूक्तं - मानो मित्रो वरुण इति द्वाविंशार्चम् । इन्द्रशुध्यादयो बृहदन्तास्साम विशेषाः ।।

அகமர்ஷணம், ('ருதம்ச' என்பது முதல் மூன்று ருக்குகள்.) தேவக்ருதம், (தேவக்ருதஸ்யைநஸோவயஜநம்

என்பது முதலியவை.) சுத்தவதிகள், ('ஏதோந்வித்ரம் ஸ்தவாம முதலிய 3- ருக்குகள்) தரத்ஸமைகள், ('தரத்ஸமந்தீதாவது' என்பது முதல் நான்கு ருக்குகள்.) கூச்மாண்டிகள், ('யத்தேவாதேவஹேளநம், என்பது முதல் 3 அனுவாகங்கள், பாவமானிகள், ஸ்வாதிஷ்டயா மதிஷ்டயா, பவமானஸ்ஸுவர்ஜன: இது முதலியவைகள், துர்க்கை, (ஜாதவேதஸேஸுநவாமஸோமம் என்று ஒரு ருக்.) ஸாவித்ரீ (தத்ஸவிது: என்ற ருக்,) அபிஷங்கங்கள், பதஸ்தோபங்கள், வ்யாஹ்ருதிகள், வாருணங்கள், காயத்ரம், ரைவதம், (அபிஷங்கம் முதல் ரைவதம் வரையிலுள்ளவை ஸாமபேதங்கள்) அப்லிங்க ருக்குகள் ('ஆபோஹிஷ்டா' முதலியவைகள்.) பார்ஹஸ்பத்யம் ('யஸ்தஸ்தம்பஸஹஸா' என்பது முதலான 11- ருக்குகளுள்ள ஸூக்தம்) வாக்ஸூக்தம் ('அஹம்ருத்ரேபிர்வஸுபி:' என்பது முதல் 3-ருக்குகளுள்ள ஸூக்தம்) மத்வ்ருச: ('மதுவாதா') என்பது முதல் 3-ருக்குகள்) சதருத்ரீயம் ('நமஸ்தே ருத்ரமன்யவே' என்பது முதல் 11- அனுவாகங்கள்.) அதர்வசிரஸ், த்ரிஸுபர்ணம் ('ப்ரம்ஹமேதுமாம்' என்பது முதல் 3- அனுவாகங்கள். மஹாவ்ரதம் = (ராஜனம் என்னும் ஸாம) கோஸூக்தம் ('ஆகாவோ அக்மன்' என்பது முதல் 8- ருக்குகளுள்ள ஸூக்தம்.) அச்வஸூக்தம் ('மாநோமித்ரோவருண:' என்பது முதல் 22 - ருக்குகளுள்ள ஸூக்தம்.) இந்த்ரசுத்திகள், மூன்று ஆஜ்யதோஹங்கள், அக்னி, ரதந்தரம், அஸ்தீரீ வ்ரதம், வாமதேவ்யம், ப்ரஹத் (இந்த்ரசுத்தி முதல் ப்ருஹத் வரை உள்ளவைகள் ஸாமவிசேஷங்கள்) இவைகள் ஜபிக்கக் கூடிய ஸூக்தங்கள். இவைகள் ஜபிக்கின்றவர்களை சுத்தர்களாக்குகின்றன. இவைகளை ஜபிக்கும் மனிதன் ஜன்மாந்தரக் ஞானத்தையடைகிறான், விரும்புவானுகில்.

चतुर्विंशतिमते – अग्नेर्मन्वेनुवाकं तु जपेदेनमनुत्तमम्। सिंहो मे मन्युरित्येतमनुवाकं जपेद्द्विजः। जप्त्वा पापैः प्रमुच्येत बोधायनवचो

यथा। त्रिमधु त्रिसुपर्णं च नाचिकेतत्रयं तथा।। नारायणं जपेत् सर्वं मुच्यते ब्रह्महत्यया। यत् किञ्चित् पातकं कुर्यात् यत्किञ्चेदमृचं जपेत्।। हंसः शुचिषदित्येतां जपेद्वाऽपि त्रियम्बकम्। ब्राह्मणानि च कल्पांश्च षडङ्गानि तथैव च।। आख्यातानि तथाऽन्यानि जप्त्वा पापैः प्रमुच्यते। इतिहासपुराणानि देवतास्तवनानि च।। देवव्रताज्यदोहानि आज्यानि च रथन्तरम्। घर्मसामानि रौद्राणि जप्त्वा पापैः प्रमुच्यते।। यज्ञायज्ञियमादित्यं ज्येष्ठसाम च राजनम्। गारु (भारुं)डानि च सामानि जप्त्वा मुच्येत किल्बिषात् इति।।

சதுர்விம்சதி மதத்தில்:- அக்னேர்மன்வே' என்னும் சிறந்த இந்த அனுவாகத்தை ஜபிக்க வேண்டும் 'ஸிம்ஹேமேமன்யுः' என்னுமிந்த அனுவாகத்தை ஜபித்தால் பாபங்களால் விடுபடுகிறான், இவ்விதம் போதாயனரின் வசனம், த்ரிமது, த்ரிஸுபர்ணம், நாசிகேதத்ரயம், நாராயணம் முழுவதும் ஜபிக்க வேண்டும். ஜபிப்பவன் ப்ரம்ஹ ஹத்யாதி தோஷத்திலுலும் விடுபடுகிறான். ஏதாவது பாதகம் செய்தால், 'யத் கிஞ்சேதம்' என்னும் ருக்கை ஜபிக்க வேண்டும். 'ஹம்ஸச்சுசிஷத்' என்ற ருக்கையாவது ஜபிக்கலாம். அல்லது 'த்ரயம்பகம்' என்னும் ருக்கையாவது, ப்ராம்ஹணங்கள், கல்பங்கள், ஆறு அங்கங்கள், வேறு ஆக்யானங்கள் இவைகளை ஜபித்தால் பாபங்களால் விடுபடுகிறான். இதிஹாஸங்கள், புராணங்கள், தேவதா ஸ்தோத்ரங்கள், தேவவ்ரதம், ஆஜ்யதோஹங்கள், ஆஜ்யஸாமங்கள், ரதந்தரஸாமம், கர்மஸாமங்கள், ரௌத்ரங்கள் இவைகளை ஜபித்தால் பாபங்களால் விடுபடுவான். யக்ஞாயக்ஞியம், ஆதித்யம், ஜ்யேஷ்டஸாம, ராஜனம், காருடஸாமங்கள் இவைகளை ஜபித்தால் பாபத்தினின்றும் விடுபடுவான்.

याज्ञवल्क्यः – जपयज्ञो हि कर्तव्यः सर्ववेदप्रणीतकैः। पवित्रैर्विविधैश्चान्यैर्गृह्योपनिषदां तथा।। अध्यात्मविद्या विविधा

जप्यास्तु जपसिद्धये । अन्यैश्च विविधैर्मन्त्रैः देवतास्तवनादिभिः ॥ शुक्रियारण्यकजपो गायत्र्याश्च विशेषतः । सर्वपापहरा ह्येते रुद्रैकादशिनी तथा इति ॥ बोधायनः – उपनिषदो वेदादयो वेदान्ताः सर्वछन्दस्सु संहिता मधून्यघमर्षणमथर्वशिरो रुद्राः पुरुष सूक्तं राजनरौहिणे सामनी बृहद्रथन्तरे पुरुषगतिर्महानाम्न्यो महावैराज महादिवाकीर्त्य ज्येष्ठसाम्नामन्यतमं बहिष्पवमानानि कूश्माण्ड्यः पावमान्यः सावित्री चेति पावनानि इति । स एव – अघमर्षणं देवकृतं शुद्धवत्यस्तरत्समाः । कूश्माण्ड्यः पावमान्यश्च विरजा मृत्युलाङ्गलम् । दुर्गाव्याहृतयो रुद्रा महापातकनाशनाः इति ॥

யாக்ஞவல்க்யர்:- ஸகல வேதங்களிலுமுள்ள மந்த்ரங்களாலும் க்ருஹ்யங்கள், உபநிஷத்துக்கள் இவைகளின் சுத்தமான பலவித மந்த்ரங்களாலும் ஜபயக்ஞம் செய்யலாம். ப்ரம்ஹவித்யைகள் பலவற்றை ஜபிக்கலாம். தேவதாஸ்துதிகளான பல மந்த்ரங்களையும் ஜபிக்கலாம். சுக்ரியம், ஆரண்யம், காயத்ரீ, ருத்ரைகாதசினீ இவைகள் ஸகல பாபஹரங்களாம். போதாயனர்:- உபநிஷத்துக்கள், வேதாதிகள், வேதாந்தங்கள், எல்லா வேதங்களிலும் ஸம்ஹிதைகள், மதுக்கள், அகமர்ஷணம், அதர்வசிரஸ், ருத்ரங்கள், புருஷ ஸூக்தம், ராஜன - ரௌகிணஸாமங்கள், ப்ருஹத்ரதந்தர ஸாமங்கள், புருஷகதி, மஹாநாம்னிகள், மஹாவைராஜ - மஹாதிவாகீர்த்ய - ஜ்யேஷ்டஸாமங்களிலொன்று, பஹிஷ்பவமானங்கள், கூச்மாண்டிகள், பாவமானிகள், ஸாவித்ரீ என்ற இவைகள் சுத்திகரங்களாம். போதாயனரே:- அகமர்ஷணம், தேவக்ருதம், சுத்தவதிகள், தரத்ஸமங்கள், கூச்மாண்டிகள், பாவமானிகள், விரஜங்கள், ம்ருத்யுலாங்கலம், துர்க்கா, வ்யாஹ்ருதிகள், ருத்ரங்கள் இவைகள் மஹாபாதக நாசகங்களாகும்.

गौतमः – पङ्क्तिपावनाष्टङ्गविज्ज्येष्ठसामिकस्त्रिनाचिकेत स्त्रिमधुस्त्रिसुपर्णः पञ्चाग्निः स्नातको मन्त्रब्राह्मणविद्धर्मज्ञो

ब्रह्मदेयानुसन्तानः इति ।। ब्रह्मदेयानुसन्तानः - ब्राह्मविवाहोढापुत्रः । आपस्तम्बः – अपाङ्क्तैर्हता पङ्क्तिः पाव्यते यैर्द्विजोत्तमैः । तान्निबोधत कात्स्न्र्येन द्विजाग्र्यान् पङ्क्तिपावनान् ।। त्रिनाचिकेतः पञ्चाग्निः त्रिसुपर्णः षडङ्गवित् । ब्रह्मदेयानुसन्तानः छन्दोगो ज्येष्ठसामगः ।। वेदार्थवित् प्रवक्ता च ब्रह्मचारी सहस्रदः । शतायुश्चैव यज्वा च विज्ञेयाः पङ्क्तिपावनाः इति ।।

கௌதமர்:- மேலே சொல்லப்படுகிறவர்கள் பங்க்திபாவனர்கள் எனப்படுகின்றனர். ஆறு அங்கங்களுடன் வேதமறிந்தவன், ஜ்யேஷ்டஸாமம் அறிந்தவன், த்ரிநாசிகேதன், த்ரிமது, த்ரிஸுபர்ணன், பஞ்சாக்னி, ஸ்நாதகன், மந்த்ர ப்ராம்ஹணங்களை அறிந்தவன், ப்ரம்ஹக்ஞன், ப்ராம்ஹ விவாஹ விதிப்படி விவாஹமானவளிடம் பிறந்தவன் என்பவர்கள். ஆபஸ்தம்பர்:- பங்க்திக்கு அர்ஹமல்லாதவரால் கெடுக்கப்பட்ட பங்க்தியும் எவர்களால் பரிசுத்தமாகின்றதோ, அந்த பங்க்தி பாவனர்களான ப்ராம்ஹணர்களை முழுவதும் தெரிந்து கொள்ளுங்கள், த்ரிநாசிகேதன், பஞ்சாக்னி, த்ரிஸுபர்ணன், ஷடங்கவேதம் அறிந்தவன், ப்ராம்ஹ விவாஹப்படி மணக்கப்பட்டவளிடம் பிறந்தவன், ஸாமவேத மறிந்தவன், ஜ்யேஷ்டஸாமம் அறிந்தவன், வேதார்த்தம் அறிந்தவன், ப்ரவசனம் செய்பவன், ப்ரம்ஹசாரீ, ஆயிரம் பொருளைக் கொடுத்தவன், நூறுவயதுடையவன், விதிப்படி யாகம் செய்தவன் இவர்கள் பங்க்தி பாவனர்களாம்.

आश्वलायनः – कुन्तापं वालखिल्यं च जस्वा पापैः प्रमुच्यते । ब्रह्महत्यादिपापेभ्यः पावमानात् प्रमुच्यते ।। उपपातकसङ्घाता लीयन्ते नात्र संशयः । तस्मात् सर्वप्रयत्नेन पावमानं जपेद्बुधः इति ।। शौनकः – अपनः शोशुचदिति जपन्मुच्येत चांहसः । विष्णोर्नुकं जपेत्सूक्तं

विष्णुभक्तिर्भविष्यति ।। ज्ञानोदये ततः पश्चात् विष्णुसायुज्य-माप्नुयात्। अस्यवामस्य सूक्तं वै जले वाऽन्यत्र वा जपेत् । ब्रह्महत्यादिकं दग्ध्वा विष्णुलोकं च गच्छति ।। कयेति वामदेव्येन कुर्यात् स्वस्त्ययनं निशि। जपेद्वा सन्धिवेलायां ब्रह्महत्तत्पापनाशनम्।। तमुष्टुहीति मन्त्रं च एकादश दिनेदिने। श्रीरुद्रस्य तु यत् पुण्यं तत् पुण्यं विन्दते जपात्। स्वस्त्यात्रेयं जपेन्नित्यं प्रातः प्रातर्दिने दिने। श्रीरुद्रस्य तु यत् पुण्यं सर्वकल्मषनाशनम्।। सोमारौद्रं जपेत् सूक्तं कृत्स्नमेनो व्यपोहति। तच्छय्योरा वृणीमह इत्येतत् स्वस्त्ययनं भवेत् इति।।

ஆச்வலாயனர்:- குந்தாபம், வாலகில்யம் இவைகளை ஜபித்தால் பாபங்களால் விடுபடுகிறான். பாவமான மந்த்ரங்களை ஜபித்தால் ப்ரம்ஹஹத்யாதி பாபங்களினின்றும் விலகுவான். உபபாதகங்களும் நசிக்கும். ஆகையால் முழு முயற்சியுடன் அந்தப் பாவமான மந்த்ரங்களை ஜபிக்க வேண்டும். **சௌனகர்:-** 'அபநச்சோசுசத்' என்ற மந்த்ரத்தை ஜபித்தவன் பாபத்தினின்றும் விடுபடுவான். 'விஷ்ணோர் நுகம்' என்ற ஸூக்தத்தை ஜபித்தால் விஷ்ணுபக்தி உண்டாகும். பிறகு ஞானமுண்டாகி, விஷ்ணுவின் ஸாயுஜ்யத்தை அடைவான். 'அஸ்யவாமஸ்ய' என்ற ஸூக்தத்தை ஜலத்தில், அல்லது ஸ்தலத்திலிருந்து ஜபிக்க வேண்டும். ப்ரம்ஹஹத்யை முதலிய பாபத்தை எரித்து விஷ்ணு லோகமடைவான். 'கயாநः' என்ற வாமதேவ்ய மந்த்ரத்தால் ராத்ரியில் ரக்ஷை செய்து கொள்ளலாம். அல்லது ஸந்த்யா காலத்தில் ஜபிக்கலாம். இது பாபத்தை யகற்றுவதாகும். 'தமுஷ்டுஹி' என்ற மந்த்ரத்தை ப்ரதினமும் பதினொரு தடவை ஜபித்தால் ஸ்ரீருத்ர ஜபத்தாலாகும் புண்யத்தை அடைவான். 'ஸவஸ்த்யாத்ரேயம்' என்னும் ஸூக்தத்தை ப்ரதினமும் காலையில் ஜபிக்க வேண்டும். இது க்ஷேமத்தையும் புண்யத்தையும் அளிக்கும். ஸகல பாபத்தையும் விலக்கும்.

'ஸோமாரௌத்ரம்' என்ற ஸூக்தத்தை ஜபித்தால் ஸகல பாபத்தையும் போக்குகிறான். 'தச்சம்யோராவ்ருணீமஹே' என்ற இந்த மந்த்ரம் மங்களத்தைக் கொடுப்பதாகும்.

बोधायनः – पवित्रैर्मार्जनं कुर्वन् रुद्रैकादशिनीं जपन्। मुच्यते सर्वपापेभ्यो महतः पातकादृते इति ॥ अत्र्यङ्गिरसौ – एकादशगुणान्वाऽपि रुद्रानावर्त्य धर्मवित्। महापापैरपि स्पृष्टो मुच्यते नात्र संशयः इति॥

போதாயனர்:- சுத்திகரமான மந்த்ரங்களால் மார்ஜனம் செய்து கொண்டு, 'ருத்ரைகாதசினியை' ஜபிப்பவன் மஹாபாதகம் தவிர மற்றப் பாபங்களினின்றும் விடுபடுவான். அத்ரியும் அங்கிரஸ்ஸூம்:- தர்மமறிந்தவன், ருத்ரமந்த்ரங்களைப் பதினெரு தடவை ஜபித்தால், மஹா பாபங்களுடன் கூடியவனுயினும், பாபங்களினின்றும் விடுபடுவான். இதில் ஸம்சயமில்லை.

व्यासः – पृथ्वीं ससागरां यो हि कृत्स्नां शैलवनान्विताम्। दद्यात् काञ्चनसंपूर्णां हैमीमोषधिसंयुताम्। तस्याधिकफलं नूनं रुद्रजापी सकृद्द्विजः ॥ लभत इति शेषः ॥ तपस्तप्यति वाऽत्यर्थं सहस्राब्दानि संयमी। न स तत्फलमाप्नोति यत् सकृद्रुद्रजापकः ॥ गवां कोटिप्रदानं यः करोति विधिवद्धुरौ। न स तत्फलमाप्नोति यत् सकृद्रुद्रजापकः ॥ यज्ञास्तपांसि दानानि तीर्थानि विविधानि च। एतानि रुद्रजापस्य कलां नार्हन्ति षोडशीम् इति॥

வ்யாஸர்:- ஸமுத்ரங்களுடன் கூடியதும், மலைகள் காடுகளுடன் கூடியதும், தங்கத்தால் நிறைந்ததும், ஓஷதிகளுடன் கூடியதுமான பூமி முழுவதையும் எவன் தானம் செய்கின்றானே அவனுடைய புண்யத்தை விட அதிகமான பலத்தை ஒரு தடவை ருத்ர ஜபம் செய்பவன் அடைகிறான், நிச்சயம். எவன் இந்த்ரியங்களை அடக்கியவனுய் ஆயிரம் வருஷம் தபஸ் செய்கின்றானே

அவனும், ஒருமுறை ருத்ரம் ஜபிப்பவன் அடையும் பலனை அடைவதில்லை. எவன் கோடி பசுக்களை விதிப்படி ஆசார்யனுக்குத் தானம் செய்கின்றானே அவனும் ஒருமுறை ருத்ரம் ஜபிப்பவன் அடையும் பலனை அடைவதில்லை. யாகங்கள், தபஸ்ஸுகள், தானங்கள், பலவிதமான தீர்த்தங்கள் இவைகள், ஒருமுறை ருத்ர ஜபத்தின் கலைக்கு (16- ல் ஒருபங்கு) ஸமமாவதில்லை.

याज्ञवल्क्यः – सुरापः स्वर्णहारी च रुद्रजापी जले स्थितः। सहस्रशीर्षाजापी च मुच्यते सर्वकिल्बिषैः ।। वेदमेक गुणं जप्त्वा यथाऽह्नैव विशुध्यति। रुद्रैकादशिनीं जप्त्वा तथाऽह्नैव विशुध्यति इति। शातातपः – सुरां पीत्वा ब्रह्महत्यां च कृत्वा स्तेयं कृत्वा गुरुदारांश्च गत्वा। भस्मच्छन्नो भस्मशय्याशायानो रुद्राध्यायी मुच्यते सर्वपापैः। ममभावं समुत्सृज्य यश्च रुद्रं जपेत् सदा। स तेनैव च देहेन रुद्रः सञ्जायते ध्रुवम्।। नमकं चमकं चैव पुरुषसूक्तं तथैव च। नित्यं त्रयं प्रयुञ्जानो ब्रह्मलोके महीयते।। नमकं चमकं चैव जपन्तं पुरुषं सदा। प्रविशेत् स महादेवो गृहं गृहपतिर्यथा इति।।

யாக்ஞவல்க்யர்:- மத்யபானம் செய்தவனும், ஸ்வர்ணத்தைத் திருடியவனும் ஜலத்தில் நின்று ருத்ரத்தை ஜபித்தாலும், 'ஸஹஸ்ர சீர்ஷா' என்ற அனுவாகத்தை ஜபித்தாலும் ஸகல பாபங்களாலும் விடப்படுகிறான். வேதத்தை ஒருநாளில் ஒருமுறை ஜபித்தால் சுத்தனாவதுபோல், ஒருநாளில் ருத்ரத்தைப் பதினொரு முறை ஜபித்தால் சுத்தனாகிறான். (பாபமற்றவனாகிறான்.) **சாதாதபர்:-** ஸுராபானம், ப்ரம்ஹ ஹத்யை, ஸ்வர்ணஸ்தேயம், குருதாரகமனம் செய்தாலும், விபூதிப்படுக்கையில் படுத்தவனாய் விபூதியினால் மூடப்பட்டவனாய் ருத்ரத்தை ஜபிப்பவன் ஸகல பாபங்களாலும் விடுபடுகிறான். எவன் மமகாரத்தை விட்டு, எப்பொழுதும் ருத்ரத்தை ஜபிக்கின்றானே அவன் அந்தச் சரீரத்துடனேயே ருத்ரனாகிறான். இது நிச்சயம்.

நமகம், சமகம், புருஷஸூக்தம் இம்மூன்றையும், ப்ரதிதினம் ஜபிப்பவன் ப்ரம்ஹலோகத்தில் சிறப்புறுகிறான். நமகம், சமகம், (புருஷஸூக்தம்) இவைகளை எப்பொழுதும் ஜபிப்பவனிடம், வீட்டிற்குடையவன் வீட்டிற்புகுவது போல் அந்த மஹாதேவன் ப்ரவேசிக்கின்றார்.

कैवल्यश्रुतौ – यः शतरुद्रीयमधीते सोऽग्निपूतो भवति सुरापानात् पूतो भवति ब्रह्महत्यायाः पूतो भवति कृत्याकृत्यात् पूतो भवति तस्मादविमुक्तमाश्रितो भवत्यत्याश्रमी स सर्वदा सकृद्वा जपेदनेन ज्ञानमाप्नोति संसारार्णवनाशनम् इति ॥ जाबालश्रुतौ च – अथ हैनं ब्रह्मचारिण ऊचुः, किं जप्येनामृतत्वं ब्रूहीति सहोवाच याज्ञवल्क्यः शतरुद्रीयेणेत्येतानि हवा अमृतनामधेयान्येतैर्हवा अमृतो भवति इति ॥

கைவல்யச்ருதியில்:- எவன் ருத்ரத்தை ஜபிக்கின்றானோ அவன் அக்னியால் சுத்தனாகிறான், ஸுராபானத்தினின்றும் சுத்தனாகிறான், ப்ரம்ஹஹத்தியினின்றும் சுத்தனாகிறான், விஹிதகர்மங்களைச் செய்யாத தோஷத்தினின்றும் சுத்தனாகிறான், அவிமுக்தத்தை ஆச்ரயித்தவனாகிறான், அவன் அத்யாச்ரமியாய் ஆகிறான். எப்பொழுதும் ஜபிக்க வேண்டும். ஒருமுறையாவது ஜபிக்க வேண்டும். இதனால் ஸம்ஸாரஸாகரத்தை வெல்லும் ஞானத்தை அடைகிறான். ஜாபாலச்ருதியிலும்:- பிறகு ப்ரம்ஹசாரிகள் யாக்ஞவல்க்யரை, எதை ஜபிப்பதால் அம்ருதத்தன்மை உண்டாகுமென்று கேட்டனர். அந்த யாக்ஞவல்க்யர் சதருத்ரீயத்தை ஜபிப்பதால் அம்ருதத்வம் உண்டாகுமென்றும், இதிலுள்ள நாமங்களே அம்ருதத்தின் நாமதேயங்கள். இவைகளாலேயே அம்ருதனாகிறான் என்றும் சொன்னார்.

शौनकः – श्रुतिषु प्रबला मन्त्रास्तेष्वप्यध्यात्मवादिनः । तत्रापि पौरुषं सूक्तं न तस्माद्विद्यते परम् ॥ प्रायश्चित्ते जपे चैव विष्णोराराधनेऽपि च । मोक्षे वश्येऽभ्युपस्थाने सुपुत्रप्रापणे तथा ॥ सर्वकर्मफलाप्राप्तावारोग्ये मृत्युनाशने । एतेष्वर्थेष्विदं सूक्तं मुनयो विनियुञ्जते इति ॥ वाधूलः – यत्र यत्र कर्मभ्रेषो यज्ञभ्रेषो वा, तत्र तत्र पुरुषं ध्यायन् पुरुषसूक्तमुच्चरेत् पूर्णत्वात् पुरुष इति विज्ञायते इति । रहस्यप्रायश्चित्ते व्यासः - योऽनूचानं द्विजं मर्त्यो हतवानर्थलोभतः । स जपेत्पौरुषं सूक्तं जलस्थश्चिन्तयन् हरिम् । तदैव ब्रह्महत्याया मुच्यते नात्र संशयः इति ॥

स्मृत्यर्थसारे — प्रातर्होमे सङ्गवान्तः कालस्तूदितहोमिनः। सायमस्तमिते होमकालस्तु नवनाडिकाः इति॥ स्मृतिसारसमुच्चये — मुहूर्ते चतुरर्धे तु प्रातर्होमो विधीयते। सायङ्काले तथैव स्यात् भानोरस्तमयात् परम् इति॥ प्रदीपिकायाम् — निशायां तु व्यतीतायां सायं होमोऽतिपद्यते। तथैव सङ्गवेऽतीते प्रातर्होमोऽप्यनापदि इति॥ सङ्ग्रहोऽपि — निशा व्यतीयाद्यदि सङ्गवो वा सङ्कल्पितो वा समयो न चापदि इति॥ यद्यनापदि नवनाडिकाभ्यन्तरे सायंहोमो न क्रियते, द्वादशनाडिकाभ्यन्तरे यदि प्रातर्होमो न क्रियते, सङ्कल्पिते वा सन्ध्यादिकाले यद्युभयत्र न क्रियते, तदा कालातिपत्तिप्रायश्चित्तं कर्तव्यम्। आपदि तु वक्ष्यमाणगौणकालेऽपि न प्रायश्चित्तमित्यर्थः॥ भास्करः — कालातिपत्तिर्नवनाडिकोर्ध्वं सङ्कल्पिते वा समये व्यतीते। कालात्ययः सङ्गवतः परस्तात् सङ्कल्पिते वा समये व्यतीते इति॥

ஸ்ம்ருத்யர்த்தஸாரத்தில்:- உதிதஹோமிக்குக் காலையில் ஹோமகாலம் ஸங்கவம் முடியும்வரை. மாலையில் ஸூர்யாஸ்தமயத்திற்குப் பிறகு ஒன்பது நாழிகை

முடியும்வரை. ஸ்ம்ருதிஸாரஸமுச்சயத்தில்:- காலையில் ஒன்பது நாழிகைக்குள் ஹோமம் செய்ய வேண்டும். மாலையில் அஸ்தமயத்திற்குப் பிறகு ஒன்பது நாழிகைக்குள் ஹோமம் செய்ய வேண்டும். ப்ரதீபிகையில்:- மாலையில் 9-நாழிகை அதிக்ரமித்தால் ஸாயங்கால ஹோமம் அதிபன்னமாகிறது. அவ்விதமே காலையில் ஸங்கவகாலம் அதிக்ரமித்தால் காலஹோமம் அதிபன்னமாகிறது. இது ஆபத்தில்லாத விஷயத்தில். ஆபத்திலாஞல் அதிபன்னமாவதில்லை. ஸங்க்ரஹத்திலும்:- நிசை அதிக்ரமித்தாலும், ஸங்கவமதிக்ரமித்தாலும், ஸங்கல்பம் செய்த ஸமயம் அதிக்ரமித்தாலும், அதிபத்தியாகும். இது ஆபத்விஷயத்திலில்லை. ''ஆபத்தில்லாத காலத்தில் ஒன்பது நாழிகைக்குள் மாலை ஹோமம் செய்யப்பட்டாவிடினும், பன்னிரண்டு நாழிகைக்குள் காலை ஹோமம் செய்யப்படாவிடினும், இரு காலங்களிலும் ஸங்கல்பம் செய்து கொண்ட ஸந்த்யாதி காலத்தில் செய்யப் படாவிடினும், காலாதிபத்தி ப்ராயச் சித்தம் செய்ய வேண்டும். ஆபத்காலத்திலோவெனில் சொல்லப் போகும் கௌணகாலத்திலும் ப்ராயச் சித்தமில்லை'' என்பது பொருள். பாஸ்கரர்:- மாலையில் ஒன்பது நாழிகைக்குமேல் காலாதிக்ரமம். ஸங்கல்பம் செய்த ஸமயம் அதிக்ராந்தமாஞலும் அதிக்ரமம். காலையில் ஸங்கவத்திற்குப் பிறகும், ஸங்கல்பம் செய்த ஸமயம் அதிக்ரமித்தாலும் அதிக்ரமம். (காலாதிக்ரம ப்ராயச்சித்தம் செய்ய வேண்டும்)

सर्व एवैते कालविशेषाः सन्ध्यादयो यथाशाखं मुख्यतया व्यवतिष्ठन्ते ।। यदा तु कथञ्चिन्मुख्यकालातिक्रमः, तदा गोभिलोक्तं द्रष्टव्यम् — अथ यदि गृह्येऽग्नौ सायं प्रातर्होमयोर्दर्शपूर्णमासयोर्वा हव्यं होतारं नाधिगच्छेत् कथं कुर्यादिति। आसायमाहुतेः प्रातरा हुतिर्नात्ये त्याप्रातराहुतेः सायमाहुतिराऽमावास्यायाः पौर्णमासी नात्येत्या-पौर्णमास्या अमावास्या इति ।।

இவ்விதம் சொல்லிய காலபேதங்களெல்லாம், அந்தந்தச் சாகைக்குத் தக்கப்படி முக்யமென வ்யவஸ்தையை அடைகின்றன (ஸமவிகல்பமல்ல என்பதாம்) எப்பொழுது முக்யகாலம் முழுவதும் அதிக்ரமித்ததோ அப்பொழுது கோபிலர் சொல்லியதை அறிந்து கொள்ளவும். கோபிலர்:- சொல்லுவதாவது:- ''ஔபாஸனுக்னியில் செய்ய வேண்டிய மாஸ, காஸ ஹோமங்களிலோ, தர்சபூர்ணமாஸங்களிலோ ஹோமத்ரவ்யம் யஜமானனுக்குக் கிடைக்காவிடில் என்ன செய்வதெனில், ஸாயங்காலாஹ்நி வரையில், ப்ராதःகாலாஹ்நி அதிக்ராந்தமாகாது. ப்ராதःகாலாஹ்நி வரையில் ஸாயங்காலாஹ்நி அதிக்ராந்தமாகாது. அமாவாஸ்யை வரையில் பௌர்ணமாஸீ அதிக்ராந்தமாகாது, பௌர்ணமாஸீ வரையில் அமாவாஸ்யை அதிக்ராந்தமாகாது'' என்பதாம்.

बोधायनोऽपि— उक्तयोः कालयोः कर्तुमशक्ता सायमाहुतिम्। रात्रौ कुर्वीत कृत्स्नायां कृत्स्नेऽह्नि प्रातराहुतिम्॥ आसायकर्मणः प्रातराप्रातः सायकर्मणः। आहुतिर्नातिपद्येत पार्वणं पार्वणान्तरात् इति॥ भारद्वाजोऽपि — आसायमाहुतिकालात् प्रातराहुतिर्नातीयादाप्रातराहुतिकालात् सायमाहुतिकालः इति॥ आपदि गौणकालस्याप्यनुग्राहकं ब्राह्मणं दर्शयत्यापस्तम्बः — यदुदिते जुहोत्यग्निष्टोमं तेनावरुन्धे यन्मध्यन्दिने जुहोत्युक्थ्यं तेनावरुन्धे यदपराह्णे जुहोति षोडशिनं तेनावरुन्धे यत् पूर्वरात्रे जुहोति प्रथमं तेन रात्रिपर्यायमाप्नोति यन्मध्यरात्रे जुहोति मध्यमं तेन रात्रिपर्यायमाप्नोति यदपररात्रे जुहोति जघन्यं तेन रात्रिपर्यायमाप्नोति इति॥ उदिते पूर्वाह्ण इत्यर्थः। रात्रिपर्यायैः क्रत्वधिकारादतिरात्रो लक्ष्यते। एतेषु कालेषु जुह्वदेतैर्यज्ञैरिष्टवान् भवति। एवं च सर्वमहः सर्वा रात्रिश्च होमकाल इत्युक्तं भवति॥

போதாயனரும்:- விதிக்கப்பட்ட காலங்களில் செய்வதற்கு முடியாவிடில் மாலையாஹுதியை ராத்ரி முழுவதிலும் செய்யலாம். ப்ராதராஹுதியை பகல் முழுவதிலும் செய்யலாம். ஸாயங்கால ஹோமம் வரையில் ப்ராதராஹுதியும், ப்ராதர் ஹோமம் வரையில் ஸாயமாஹுதியும் அதிக்ராந்தமாகாது. அடுத்த பர்வஹோமம் வரையில் பூர்வபர்வ ஹோமமும் அதிக்ராந்தமாவதில்லை. பரத்வாஜரும்:- ஸாயமாஹுதி காலம் வரையில் ப்ராதராஹுதி காலமும், ப்ராதராஹுதி காலம் வரையில் ஸாயமாஹுதி காலமும் அதிக்ராந்தமாவதில்லை. ஆபத்காலத்தில் கௌண காலத்தைச் சொல்லும் வேதவாக்யத்தை உதாஹரிக்கின்றார் ஆபஸ்தம்பர்:- ஸூர்யோதயத்திற்குப் பிறகு ஹோமம் செய்தால் அக்னிஷ்டோமபலனை அடைகிறான். மத்யாஹ்னத்தில் செய்வதால் உக்த்ய பலனையடைகிறான். பிற்பகலில் செய்வதால் ஷோடசிபலனை அடைகிறான். பூர்வராத்ரியில் செய்வதால் (அதிராத்ரத்தில் உள்ள) முதலாவது ராத்ரி பர்யாயத்தின் பலனை அடைகிறான். மத்யராத்ரத்தில் ஹோமம் செய்வதால் நடுவான ராத்ரி பர்யாயத்தின் பலனை அடைகிறான். அபாராத்ரியில் ஹோமம் செய்வதால் கடைசியான ராத்ரி பர்யாயத்தின் பலனை அடைகிறான்'' என்று. இக்காலங்களில் ஹோமம் செய்பவன் இந்த யாகங்களைச் செய்தவனாகிறான் என்று பொருள். இவ்விதம் இருப்பதால் முழுப்பகலும் முழுராத்ரியும் ஹோமகாலமென்று சொல்லியதாகிறது.

न चैवं पूर्वोक्तैः सन्ध्यादिकालैः सह एषां तुल्यविकल्पता भ्रमितव्या इत्याह स एव — स न मन्येत सर्वेष्वेतेषु कालेषु होतव्यमापदि हुतमित्येव प्रतीयादिति विज्ञायते इति ॥ सोऽयं प्रतिपत्ता नैवं मन्येत, सर्वेऽमी होमकाला इति। किन्तु आपदि अगत्या अमीषु कालेषु हुतमपि हुतं भवतीत्येतावदेव प्रतीयादित्यर्थः ॥

இவ்விதம் இருப்பதால், முன் சொல்லிய ஸந்த்யை முதலிய காலங்களுடன் இக்காலங்களுக்கும் ஸமவிகல்பத்தன்மை (ஏற்படுகிறது என்று) ப்ரமிக்கத் தகுந்ததில்லை என்கிறார் ஆபஸ்தம்பரேः- 'இந்தக் காலங்கள் எல்லாவற்றிலும் ஹோமம் செய்யலாமென்று எண்ணக் கூடாது. ஆபத்கால விஷயத்தில் இது என்று அறியவேண்டும் எனத்தெரிகிறது' என்பதால். இந்த ஸூத்ரங்களைப் பார்த்து நிச்சியிப்பவன், இவையெல்லாம் ஹோம காலங்கள் என்று நிச்சயிக்கக் கூடாது. ஆனால், ஆபத்காலத்தில் கதியில்லாததால் இந்தக் காலங்களில் ஹோமம் செய்தாலும், ஹோமம் செய்ததாகவே ஆகின்றது, என்று இவ்வளவையே நிச்சயிக்க வேண்டும் என்பது பொருள்.

स्मृत्यर्थसारे— दिवोदितानि कर्माणि प्रमादादकृतानि तु। शर्वर्याः प्रथमे यामे तानि कुर्यादतन्द्रितः ॥ रात्रावुक्तानि कर्माणि प्रमादादकृतानि वै। दिनस्य प्रथमे यामे तानि कुर्यादतन्द्रितः ॥ कालातीषु होमेषु ह्युत्तरेष्वागतेषु च। कालातीतानि हुत्वैव उत्तराणि समापयेत्॥ यस्त्वतीतान्यतिक्रम्य उत्तराणि समारभेत्। न देवान्नैव च पितॄन् हविस्तदुपतिष्ठते इति ॥ स्मृत्यन्तरे — रात्रौ प्रहरपर्यन्तं दिवाकृत्यानि कारयेत्। ब्रह्मयज्ञं च सौरं च वर्जयित्वा विशेषतः इति॥

ஸ்ம்ருத்யர்த்தஸாரத்தில்:- பகலில் விதிக்கப்பட்ட கர்மங்கள், கவனம் இன்மையால் பகலில் செய்யப்படாவிடில், அவைகளை இரவின் முதல் யாமத்தில் சோம்பல் இல்லாதவனுய்ச் செய்ய வேண்டும். ராத்ரியில் விதிக்கப்பட்ட கர்மங்கள் கவனமின்மையால் ராத்ரியில் செய்யப்படாவிடில், அவைகளைப் பகலின் முதல் யாமத்தில் சோம்பலில்லாதவனுய்ச் செய்ய வேண்டும். பூர்வஹோமங்கள் காலாதீதங்களாயிருக்கும்போது உத்தர கால ஹோமங்களும் சேர்ந்து விட்டால், காலாதீத ஹோமங்களைச் செய்து விட்டே உத்தர ஹோமங்களை

முடிக்க வேண்டும். எவன் அதீதங்களைச் செய்யாமல் உத்தரங்களைச் செய்கின்றானோ, அவனின் அந்த ஹவிஸ் தேவர்களையும் பித்ருக்களையும் சேருவதில்லை. மற்றொரு ஸ்ம்ருதியில்:- பகலில் விதிக்கப்பட்ட கார்யங்களை இரவின் முதல் யாமம் வரையில் செய்யலாம். ப்ரம்ஹயக்ஞம், ஸூர்யனை உத்தேசித்த நமஸ்காரம் முதலியவைகளைச் செய்யக் கூடாது.

स्मृतिरत्ने — एकेऽभ्युदितहोमाः स्युरन्येऽनुदितहोमिनः । अन्ये भोजनहोमाश्च पक्षहोमास्तथैव च इति ।। बृहस्पतिः — सायं प्रातस्तनौ होमावुभौ सायं समस्य तु । आपन्नो जुहुयात् तस्य समिदेकाऽथवा द्वयम्। सायं होमस्य मुख्यत्वात् तदीयं तन्त्रमिष्यते। चतस्र आहुतीः कुर्यात् तत्र द्वे सायमाहुती ।। द्वे प्रातराहुती चैव उपस्थानं सकृत्तथा इति ।। आपन्नस्याहिताग्नेः पक्षहोममाह मरीचिः — शरीरापद्भवेद्यत्र भयाद्वाऽऽर्तिः प्रजायते । तथाऽन्यास्वपि चापत्सु पक्षहोमो विधीयते इति।

ஸ்ம்ருதிரத்னத்தில்:- சிலர் உதிதஹோமிகளாவும், சிலர் அனுதிதஹோமிகளாகவும், சிலர் போஜனஹோமி களாகவும், சிலர் பக்ஷஹோமிகளாகவும் இருக்கின்றனர். **ப்ருஹஸ்பதி:-** ஆபத்தை அடைந்தவன், மாலையிலும், காலையிலும் செய்ய வேண்டிய ஹோமங்கள் இரண்டையும் சேர்த்து ஸாயங்காலத்தில் ஹோமம் செய்யலாம். அதற்கு ஸமித்து ஒன்று, அல்லது இரண்டு. ஸாயங்கால ஹோமம் முக்யமானதால் அதன் விதியே விதிக்கப்படுகிறது. நான்கு ஆஹுதிகளைச் செய்ய வேண்டும். அவைகளில் இரண்டு ஸாயங்காலத்திலு ஹுதிகள். இரண்டு ப்ராத:காலாஹுதிகள். உபஸ்தானம் ஒரு தடவை. ஆபத்தையடைந்த ஆஹிதாக்னிக்குப் பக்ஷஹோமத்தைச் சொல்லுகிறார் மரீசி :- எக்காலத்தில் சரீரத்திற்கு ஆபத்து நேரிடுகிறதோ, அல்லது பயத்தால் தொந்தரை உண்டாகிறதோ, வேறுவிதமான ஆபத்துக்கள்

நேருகின்றனவோ அப்பொழுது பக்ஷஹோமம் விதிக்கப்படுகிறது.

रत्नावल्याम् — प्रवासिनोऽग्निहोत्रस्य त्रिपञ्चाहादि सप्त च। दातव्यो होम एकाहे सायं प्रातः पृथक् पृथक् इति ।।

ரத்னவளியில் :- அயல்தேசம் செல்பவனின் அக்னி ஹோத்ரத்திற்கு, பதினைந்துநாள் ஹோமங்களையும் சேர்த்து ஒரேநாளில், மாலையில் ஸாயமாஹுதிகளையும், காலையில் ப்ராதராஹுதிகளையும் தனித்தனியாய்ச் செய்ய வேண்டும்.

आपस्तम्बः — यावावरा ह वै पुरा नामर्षय आसंस्तेऽध्वन्य श्राम्यंस्तेऽर्धमासायार्धमासायाग्निहोत्रं जुहुवुस्तस्माद्यावावरधर्मेणा मयाव्यार्तो वा जननमरणयोरध्वन्यापत्सु वाऽर्धमासायाग्निहोत्रं जुहुयात् प्रतिपदि सायं चतुर्दश चतुर्गृहीतान्युन्नयत्येका समित् सकृद्धोमः सकृत् पाणिनिर्मार्जनं सकृदुपस्थानमेवं प्रातरेतावान् विकारः शेषं प्रकृतिवत् पक्षत्रये पुनराधेयमग्नीन् समारोपयते धारयते वौपवसथा दौपवसथ्येऽहनि निर्मन्थ्यौपवसथादि कर्म प्रतिपद्यते इति । भारद्वाजोऽपि — जननमरणयोरापत्सु वाऽर्धमासायाग्निहोत्रं जुहुयादूर्ध्वं द्वादशाहान्निर्मन्थ्यः इति ।। पक्षहोमिनस्तत्पक्षमध्ये आपन्निवृत्तौ तदाप्रभृति पुनर्होमः कर्तव्यः ।। तदाह मरीचिः — पक्षहोमानथो हुत्वा मध्येऽकस्मान्निवर्तितः । होमं पुनः प्रकुर्यात्तु न चासौ दोषभाग्भवेत् इति ।। स्मृत्यर्थसारेऽपि — समस्येदग्निहोत्राणि यथासम्भवमापदि । प्रतिपद्युन्नयेत् सायमापद्यन्यत्र वा दिने ।। यावन्त्यौपवसथ्याहात् प्राग्दिनानि भवन्ति हि। तावन्ति परिगृह्णीयात् चतुरुन्नयनानि तु ।। प्रातर्होमान् समस्यैव जुहुयाच्च परेऽहनि । सर्वथौपवसथ्याहे सायं होमः पृथग्भवेत् ।। तथैव यजनीयाहे प्रातर्होमो भवेत् पृथक् । उपवासेन शून्यं चेत् औपवसथ्यमहर्यदा ।। तदा तत्सायं होमोऽपि पूर्वैः सह समस्यते । एवं प्रतिपदोऽन्यत्र यत्रापदुपजायते । तन्नाशेऽपि पुनर्होमः प्रागौपवसथादपि इति ।।

ஆபஸ்தம்பர்:- முற்காலத்தில் யாயாவரர்களென்ற சில ருஷிகளிருந்தனர். அவர்கள் வழியில் ச்ரமத்தை அடைந்தனர். அவர்கள் 15 - நாட்களுக்கு 15- நாட்களுக்கு ஒருமுறை அக்னி ஹோத்ரஹோமம் செய்தனர். ஆகையால் யாயாவர தர்மத்தின் படி, வ்யாதியுள்ளவனுயினும், தொந்தரையுடையவனுயினும், ஜனன மரணு சௌசங்களிலும், வழியிலும், ஆபத்துகளிலும் 15-நாட்களுக்கொரு முறை அக்னிஹோத்ர ஹோமம் செய்யலாம். ப்ரதமையில் ஸாயங்காலத்தில் பதினென்கு சதுர்க்ருஹீதங்களை க்ரஹிக்க வேண்டும். ஸமித்து ஒன்றே. ஹோமம் ஒரு தடவை. இவ்விதம் மறுநாள் காலையிலும். இவ்வளவுதான் விசேஷம். மற்றது ப்ருக்ருதி ஹோமம் போல். மூன்று பக்ஷங்கள் கடந்தால் புனராதானம் செய்ய வேண்டும். அக்னிகளை ஸமாரோபணம் செய்விக்கலாம். அல்லது தாரணம் செய்யலாம், பர்வதினம் வரையில். பர்வதினத்தில் மதனம் செய்து அன்வாதானம் முதலிய கார்யத்தைச் செய்ய வேண்டும். **பாரத்வாஜரும்:-** ஜனனுசௌசம், மரணுசௌசம், ஆபத்துக்கள் இவைகளில் பக்ஷஹோமம் செய்யலாம். பன்னிரண்டு நாளைக்கு மேல் மதனம் செய்து செய்ய வேண்டும். பக்ஷஹோமம் செய்தவன், அந்தப் பக்ஷத்தின் நடுவில் ஆபத்து நீங்கிவிட்டால் அதுமுதல் மறுபடி செய்ய வேண்டும். அதைச் சொல்லுகிறார் **மரீசி:-** பக்ஷஹோமம் செய்து வெளியிற் சென்றவன் பக்ஷமத்யத்தில் திடீரெனத் திரும்பி வந்தால் மறுபடி ஹோமம் செய்ய வேண்டும். இவன் தோஷத்தை அடையமாட்டான். **ஸ்ம்ருத்யர்த்த ஸாரத்தில் :-** ஆபத்காலத்தில் அக்னிஹோத்ர ஹோமங்களை நேர்ந்த படி சேர்க்க வேண்டும், ப்ரதமையின் ஸாயங்காலத்தில், ஆபத்காலமானுல் வேறு திதியின் ஸாயங்காலத்தில். பர்வதினத்திற்கு முன் எவ்வளவு நாட்கள் கணக்காகின்றனவோ அவ்வளவு சதுர்க்ருஹீதங்களை க்ரஹித்து ஒரே தடவையாய் ஹோமம் செய்ய வேண்டும். மறுநாள் காலையில் ப்ராதர்

ஹோமங்களைச் சேர்த்து ஹோமம் செய்ய வேண்டும். எவ்விதமானலும் பர்வதினத்தின் ஸாயம் ஹோமம் தனியாகவே செய்யப்பட வேண்டும். அவ்விதமே இஷ்டிதினத்தில் ப்ராதர் ஹோமம் தனியாகவே செய்யப்பட வேண்டும். பர்வதினத்தின் ஸாயங்கால ஹோமமும் தனியாகச் செய்யமுடியாது என்றிருந்தால் அதையும் முன் ஹோமங்களுடன் சேர்த்து விடலாம். இவ்விதம் ப்ரதமைக்குப் பிறகு ஆபத்து நேர்ந்த காலத்திலும் சேர்ந்து ஹோமம் செய்யலாம். நடுவில் ஆபத்து நிவ்ருத்தியாலல் பர்வத்திற்கு முந்தியும் மறுபடி ஹோமங்களைச் செய்யலாம்.

होमयोग्यसमिधः स्मृत्यर्थसारे दर्शिताः — पलाशखदिराश्वत्थशम्युदुम्बरजा समित् । अपामार्गार्कदूर्वाश्च कुशाश्चेत्यपरे विदुः ॥ सत्वचः समिधः कार्या ऋज्व्यः श्लक्ष्णाः समास्तथा । शस्ता दशाङ्गुलास्तास्तु द्वादशाङ्गुलिकास्तथा ॥ आर्द्रशुष्काः समच्छेदास्तर्जन्यङ्गुलवर्तुलाः । अपाटिताश्चाद्विशिखाः कृमिदोषविवर्जिताः ॥ समित् पवित्रं वेदश्च त्रयं प्रादेशसंमितम्। इध्मस्तु द्विगुणः कार्यः परिधिस्त्रिगुणः स्मृतः ॥ स्मार्ते प्रादेश इध्मो वा द्विगुणः परिधिः स्मृतः इति।

ஹோமத்திற்கு யோக்யமான ஸமித்துக்கள் தெரிவிக்கப்பட்டுள்ளன - ஸ்ம்ருத்யர்த்த ஸாரத்தில் :- புரசு, கருங்காலி, அரசு, வன்னி, அத்தி இவைகளிலுண்டான ஸமித்துக்களும், நாயுருவி, எருக்கு, அறுகு இவைகளும் ஹோமயோக்யங்களாம், ஸமித்துக்கள் தோலுடன் இருக்க வேண்டும். கோணல் இல்லாததுகளும், மழமழப்புள்ளதும், ஒரே மாதிரியாயும் இருக்க வேண்டும். அவை பத்து அல்லது பன்னிரண்டு அங்குலமளவுள்ளவை சிறந்ததாம். அவை ஈரமாயும், அல்லது உலர்ந்ததாயும், ஸரியாய் வெட்டப்பட்டதாயும், ஆள்காட்டிவிரலளவு வர்த்துளமாயும், பிளக்கப்

படாததாயும், இருகிளை இல்லாததாயும், புழுவெட்டு இல்லாததாயும் இருக்க வேண்டும். ஸமித்து, பவித்ரம், வேதம் இம்மூன்றும் ஒட்டையளவுள்ளதாய் இருக்க வேண்டும். இத்மம் இரண்டு மடங்கும், பரிதி மூன்று மடங்கும் நீளமுள்ளதாய் இருக்க வேண்டும். (இது ச்ரௌத கர்மங்களில்) ஸ்மார்த்தத்தில் இத்மம் ஒட்டையளவும், பரிதி இரண்டு ஒட்டையளவுள்ளதாய் இருக்கலாம் விகல்பம்.

कात्यायनः — पालाश्यः समिधः कार्याः खादिर्यस्तदलाभतः । शमीरौहितकाश्वत्थास्तदलाभेऽर्कवेतसौ ॥ प्रदेशिन्यधिका नात्र समित् स्थूलतया क्वचित् । न सपर्णा न निर्वीर्या न सकीटा न पाटिता ॥ कोविदारं करञ्जं च शिरीषं व्याधिघातजम् । श्लेष्मातकमकर्मण्यं वर्जयेदिन्धनं बुधः ॥ समित्पुष्पकुशादीनि श्रोत्रियः स्वयमाहरेत् । शूद्राहृतैः क्रयक्रीतैः कर्म कुर्वन् व्रजत्यधः इति । स्मृत्यर्थसारे — पालाशः खादिरो वेध्मो मुख्यस्स्यात्तदलाभतः । शमीवटोदुम्बरजा अश्वत्थास्तदलाभतः ॥ वनस्पतीनां सर्वेषामिध्मः कार्यो विशेषतः । तत्रैतान् वर्जयेद्वृक्षान् कोविदारविभीतकौ । कपित्थामलकौ राजवृक्षं शाकद्रुमं तथा । नीपं निम्बं करञ्जं च तिलकं शल्मलीमपि । श्लेष्मातकमपि त्यक्त्वा ग्राह्योऽन्यः सकलो द्रुमः । तुलसीकाष्ठयुक्तेऽग्नौ जुह्वतामक्षयं फलम् इति ।

காத்யாயனர்:- ஸமித்துக்கள் புரசினுடையவைகளாய் இருக்க வேண்டும். அவை கிடைக்காவிடில் கருங்காலி, வன்னி, அத்தி, அரசு இவைகளுடையதாய் இருக்க வேண்டும். அவைகளும் கிடைக்காவிடில் எருக்கு, நொச்சி இவைகளினுடையதாய் இருக்கலாம். ஆள்காட்டி விரலைவிட அதிகப் பருமனுள்ளதாய் இருக்கக் கூடாது. இலையுள்ளதும், வீர்யமற்றதும், புழுவுடையதும், பிளக்கப்பட்டதும் கூடாது. மலையகத்தி, புங்கு, வாகை, கொன்றை, நருவிளி இவைகளினுடையதும் கூடாது.

ஸமித்து, புஷ்பம், குசம் முதலியவைகளை ச்ரோத்ரியன் தானுகவே கொண்டு வரவேண்டும். சூத்ரர்கள் கொண்டு வந்ததும், க்ரயத்திற்கு வாங்கியதுமான ஸமித்து முதலியவைகளால் கர்மத்தைச் செய்பவன் பதிதனுவான். **ஸ்ம்ருத்யர்த்தஸாரத்தில்:-** புரசு அல்லது கருங்காலியின் ஸமித்து முக்யமாம். அது கிடைக்காவிடில், வன்னி, ஆல், அத்தி, அரசு இவைகளின் ஸமித்தையும் அவைகள் கிடைக்காவிடில், எல்லா வ்ருக்ஷங்களின் ஸமித்தையும் க்ரஹிக்கலாம். அவைகளுள் இனி சொல்லப்படும் வ்ருக்ஷங்களை வர்ஜிக்க வேண்டும். மலையகத்தி, தானி, விளா, நெல்லி, கொன்னை, பாலை, கடம்பு, வேம்பு, புங்கு திலகம், முள்ளிலவு, நறுவிளி இவைகளின் ஸமித்துக்கள் கூடாது. துளஸிக் கட்டையுடன் கூடிய அக்னியில் ஹோமம் செய்கின்றவர்களுக்கு அழிவற்ற பலனுண்டாகும்.

दक्षः — पूर्वं प्रादेशिकां दत्वा ततो होमो विधीयते। द्वितीया पृष्ठतो देया ततोऽग्निमुपतिष्ठते इति॥ पृष्ठतः - होमान्ते। प्रादेशिका - समित्॥ आपस्तम्बः – नाप्रोक्षितमिन्धनमग्नावादध्यात् इति॥ अयोग्यसमिधो होमे दोषमाह व्यासः — विशीर्णाऽऽयुःक्षयं कुर्या द्विदला व्याधिसम्भवम्। ह्रस्वया मृत्युमाप्नोति वक्रा विघ्नकरी तथा॥ स्थूला च हरते लक्ष्मीं कृशा वै बान्धवक्षयम्। द्विशाखा नेत्ररोगं च कीटजुष्टाऽर्थनाशनम्॥ द्वेष्यं प्रकुरुते दीर्घा प्राणघ्ना वित्वचः स्मृताः इति॥

தக்ஷர்:- முதலில் ஒரு ஸமித்தை வைத்துப் பிறகு ஹோமம் செய்ய வேண்டும். பிறகு இரண்டாவது ஸமித்தை வைக்க வேண்டும். பிறகு அக்னியினு பஸ்தானத்தைச் செய்ய வேண்டும். **ஆபஸ்தம்பர்:-** ப்ரோக்ஷிக்கப்படாத இந்தனத்தை அக்னியில் வைக்கக் கூடாது. (இந்தனம் - ஸமித், விறகு முதலியவை.) நிஷித்தமான ஸமித்தை ஹோமம் செய்வதில்

தோஷத்தைச் சொல்லுகிறார். வ்யாஸர்:- சிதறிய ஸமித்து ஆயுளைக் குறைக்கும். பிளந்தது வ்யாதியைக் கொடுக்கும். குட்டையாயுள்ளது ம்ருத்யுவைக் கொடுக்கும். வக்ரமாயுள்ளது விக்னத்தைச் செய்யும். பருமனுயுள்ளது ஸம்பத்தைப் போக்கும். மெல்லியது பந்து நாசத்தைச் செய்யும். இரண்டு கிளையுள்ளது கண்ரோகத்தைக் கொடுக்கும். புழுவுள்ளது தனநாசத்தைச் செய்யும். நீளமாயுள்ளது சத்ருவையுண்டாக்கும். தோலில்லாத வைகள் ப்ராணனைக் கொல்லும்.

हविर्लक्षणमुक्तं कात्यायनेन — हविस्तु त्रिविधं ज्ञेयं कृतं चैव कृताकृतम्। अकृतं च क्रमादेषां लक्षणं सम्यगुच्यते ॥ कृतमोदन-सक्त्वादि तण्डुलादि कृताकृतम्। व्रीह्यादि चाकृतं प्रोक्तमिति हव्यं त्रिधा बुधैः इति ॥ आपस्तम्बः – पयसा पशुकामस्य जुहुयाद्दध्नेन्द्रियकामस्य यवाग्वा ग्रामकामस्यौ दनेनान्नाद्यकामस्य तण्डुलैरोजस्कामस्य बलकामस्येत्येके मांसेन यशस्कामस्य सोमेन ब्रह्मवर्चसकामस्याज्येन तेजस्कामस्य इति ॥ पयसो नित्यस्यैव सति कामे फलवचनम् ॥ तथा चाश्वलायनः – पयसा नित्यहोमो यवागूरोदनो दधि । सर्पिर्ग्रामकामान्नाद्यकामेन्द्रियकामतेज-स्कामानाम् इति।

ஹவிஸ்ஸின் லக்ஷணம் சொல்லப்பட்டுள்ளது- காத்யாயனரால்:- க்ருதம், க்ருதாக்ருதம், அக்ருதம் என மூனறு விதமாயுள்ளது ஹவிஸ் என்று அறியவும். இவைகளுக்கு லக்ஷணம் முறையே சொல்லப்படுகிறது. அன்னம், மாவு முதலியவை க்ருதமெனப்படும். அரிசி முதலியது க்ருதாக்ருதம். நெல் முதலியது அக்ருதமெனச் சொல்லப்பட்டது. இவ்விதம் மூன்று விதமாய் வித்வான்களால் சொல்லப்பட்டுள்ளது. ஆபஸ்தம்பர் :- பசுக்களை விரும்புகிறவனுக்குப் பாலினாலும், இந்த்ரியகாமனுக்குத் தயிரினாலும், பந்து ஸம்ருத்தியை விரும்புகிறவனுக்குக் களஞ்சியினாலும், அன்னத்தை

விரும்புகிறவனுக்கு அன்னத்திஞலும், ஓஜஸ்ஸை விரும்புகிறவனுக்கு (பலத்தை விரும்புகிற வனுக்கும்) அரிசியிஞலும், புகழை விரும்புகிறவனுக்கு மாம்ஸத்திஞலும், ப்ரம்ஹ வர்ச்சஸத்தை விரும்புகிற வனுக்கு ஸோமத்திஞலும், தேஜஸ்ஸை விரும்புகிற வனுக்கு ஆஜ்யத்திஞலும் ஹோமம் செய்யப்பட வேண்டும். பால் நித்யமாஞலும் காமமிருந்தால் பலனும் சொல்லப்பட்டது. அவ்விதமே, ஆச்வலாயனர்:- நித்யஹோமம் பாலிஞல் செய்யப்பட்ட வேண்டும். கஞ்சி, அன்னம், தயிர், நெய் இவைகள், முறையே க்ராமகாமன், அன்ஞத்யகாமன், இந்த்ரியகாமன், தேஜஸ்காமன் இவர்களுக்கு ஹோமத்ரவ்யங்களாம்.

व्यासः — कपिलायास्तु पयसा येऽग्निहोत्राण्युपासते । आदित्यमण्डलं भित्वा यान्ति ब्रह्म सनातनम् इति ।। गृह्यपरिशिष्टे— येन सायं जुहुयात्तेन प्रातः इति ।। चन्द्रिकायाम्— तैलं दधि पयः सोमो यवागूरोदनं घृतम् । तण्डुला मांसमापश्च दश द्रव्याण्यकामतः इति ।। पयोहोमप्रशंसामाह श्रुतिः— तद्यदिदमाहुः संवत्सरं पयसा जुह्वदप पुनर्मृत्युं जयतीति न तथा विद्याद्यदहरेव जुहोति तदहः पुनर्मृत्युमप-जयत्येवं विद्वान् इति ।। पुनर्मृत्युं - पुनर्मरणम् ।। पुनर्मरणाय परिच्छिन्नं शरीरं न गृह्णातीत्यर्थः ।।

வ்யாஸர்:- காராம்பசுவின் பாலிஞல் எவர்கள் அக்னி ஹோத்ர ஹோமம் செய்கின்றனரோ அவர்கள் ஸூர்ய மண்டலத்தைப் பிளந்து கொண்டு சாச்வதமான ப்ரம்ஹத்தை அடைகின்றனர். க்ருஹ்யபரிசிஷ்டத்தில்:- எந்த த்ரவ்யங்களால் மாலையில் ஹோமம் செய்தாஞ அதஞலேயே மறுநாள் காலையிலும் ஹோமம் செய்ய வேண்டும். சந்த்ரிகையில்:- எண்ணெய், தயிர், பால், ஸோமம், கஞ்சி, சாதம், நெய், அரிசி, மாம்ஸம், ஜலம் இந்தப் பத்து த்ரவ்யங்களும் நித்யமான ஹோமத்ரவ்யங்களாம். பாலால் செய்யப்படும் ஹோமத்தின் ப்ரசம்ஸையைச் சொல்லுகிறது- வேதம்:-

ஒருவருஷம் பூராவும் க்ஷீரத்தாலக்னி ஹோத்ரம் செய்பவன் மறுபடி மரணத்தை ஜயிக்கிறான் என்றிவ்விதம் சொல்கிறார்களே அது அவ்விதம் என்றறிய இயலாது. அறிந்தவன் இவ்விதம் என்றைய தினத்தில் ஹோமம் செய்கிறானோ அன்றே மறுபடி மரணத்தை ஜயிக்கிறான். (அவன் மறுபடி இறப்பதற்காக அளவுள்ள சரீரத்தை அடைவதில்லை என்பது பொருள்.)

स्मृत्यर्थसारे—शालिश्यामाकनीवारा व्रीहिगोधूमयावकाः। एतेषां तण्डुला होम्या यावनालाः प्रियङ्गवः॥ नीवाराः शालयश्चैव गोधूमा व्रीहयो यवाः। स्वरूपेणैव होम्याः स्युः स्वरूपेणैव वै तिलाः॥ द्रवं स्रुवेण होतव्यं पाणिना कठिनं हविः। पयो दधि यवागूश्च सर्पिरोदनतण्डुलाः॥ सोमो मांसं तैलमापो दशैतान्यग्निहोत्रके। स्यादग्निहोत्रवद्धार्ह्ये मांसमौपासने न च। यद्यग्निहोत्रहोमार्थं पयो न स्यात् कदाचन॥ तदा व्रीहियवौ ग्राह्यावोषध्यन्तरमेव वा। यद्वा यज्ञियवृक्षस्य कन्दं मूलं फलं जलम्। सत्यं वा हविरेतेषु यथासंभवमाचरेत्। प्रतिनिध्यन्तरं सत्यं विज्ञेयं हविरत्यये। न ग्राह्यं सर्वथा माषवरकोदार-कोद्रवम् इति।

ஸ்ம்ருத்யர்த்தஸாரத்தில்:- செந்நெல், சாமை, நீவாரம், சம்பாநெல், கோதுமை, யாவகம் இவைகளின் அரிசிகள் ஹோமார்ஹங்கள், யாவநாளம், ப்ரியங்கு, நீவாரம், சாலி, கோதுமை, வ்ரீஹி, யவை இவைகளை உள்ளபடியே ஹோமம் செய்ய வேண்டும். எள்ளையுமப்படியே. த்ரவமாயுள்ளதை ஸ்ருவத்தினால் செய்ய வேண்டும். கடினமான ஹவிஸ்ஸைக் கையினால் ஹோமம் செய்ய வேண்டும். பால், தயிர், கஞ்சி, நெய், அன்னம், அரிசி, ஸோமம், மாம்ஸம், எண்ணெய், ஜலம் இந்தப் பத்தும் அக்னி ஹோத்ர ஹோமத்திற்கு விஹிதங்களாம். அக்னிஹோத்ர ஹோமத்திற்போல் ஔபாஸனத்திலும் மந்த்ரமில்லாமல் ஹோம த்ரவ்யங்களுக்கு ஸம்ஸ்காரம். அல்லது, அவைகளை

மூன்றுமுறை ப்ரோக்ஷிக்க வேண்டும். ஔபாஸனத்தில் மாம்ஸத்தை ஹோமம் செய்யக் கூடாது. அக்னி ஹோத்ர ஹோமத்திற்குப் பால் கிடைக்காவிடில் நெய் அல்லது யவையை க்ரஹிக்கலாம். வேறு ஓஷதியையாவது க்ரஹிக்கலாம். அல்லது, யக்ஞார்ஹமான வ்ருக்ஷத்தின் கிழங்கு, வேர், பழம், ஜலம், ஸத்யம் இவைகளிலொன்றைக் கிடைத்ததை க்ரஹிக்கலாம். ஹவிஸ் கிடைக்காவிட்டால் முக்ய த்ரவ்யத்திற்கு ஸமமான வேறு த்ரவ்யத்தை (ஸத்யத்தை) க்ரஹிக்கலாம். எவ்விதத்திலும் உளுந்து, காட்டுப் பயறு, நாய்த்தினை, கேழ்வரகு இவைகளைக் க்ரஹிக்கக் கூடாது.

कात्यायनः — हविष्येषु यवा मुख्यास्तदनु व्रीहयः स्मृताः। अभावे व्रीहियवयोर्दध्ना च पयसाऽपि वा। तदभावे यवाग्वा वा जुहुयादुदकेन वा॥ यथोक्तवस्त्वसंप्राप्तौ ग्राह्यं तदनुसारि च। यवानामिव गोधूमा व्रीहीणामिव शालयः॥ यवाभावे तु गोधूमास्ततो वेणुयवादयः। फलं वा यज्ञवृक्षस्य तत्पत्रमथवा भवेत्॥ आज्यं हव्यमनादेशे जुहोतिषु विधीयते। मन्त्रस्य देवतायास्तु प्रजापतिरिति स्थितिः इति॥

காத்யாயனர்:- ஹவிஸ்ஸுக்கு யோக்யமானவைகளுள் யவை முக்யம். பிறகு நெல். இவ்விரண்டு இல்லாவிடில், தயிர், பால், அவைகளுமில்லாவிடில் கஞ்சி, ஜலம் இவைகளாலாவது ஹோமம் செய்யலாம். முக்யமாய் விதிக்கப்பட்ட வஸ்து கிடைக்காவிடில், அதற்கு ஸமமானதை க்ரஹிக்க வேண்டும். யவைகளுக்குக் கோதுமைபோலும், சம்பா நெல்லுக்குச் செந்நெல் போலவும். யவம் கிடைக்காவிடில் கோதுமை, பிறகு மூங்கிலரிசி முதலியவை. அல்லது யக்ஞார்ஹமான வ்ருக்ஷத்தின் பழம், அல்லது இலை இவைகளை க்ரஹிக்கலாம். ஹோமத்தை விதித்து த்ரவ்யத்தை விதிக்காத ஸ்தலங்களில் ஆஜ்யம் விதிக்கப்பட்டதாகும். மந்த்ரத்தின் தேவதை சொல்லப்படாவிடில், ப்ரஜாபதி தேவதை என்பது முறையாகும்.

व्यासः — हव्यार्थे गोघृतं ग्राह्यं तदभावे तु माहिषम्। आजं वा तदभावे तु साक्षात्तैलं ग्रहिष्यते।। तैलाभावे ग्रहीतव्यं तैलं जर्तिलसम्भवम्। तदभावेऽतसीस्नेहः कौसुम्भः सर्षपोद्भवः ।। वृक्षस्नेहोऽथवा ग्राह्यः पूर्वाभावे परःपरः । तदभावे यवव्रीहिश्यामाकान्यतरोद्भवम् ।। पिष्टमालोड्य तोयेन घृतार्थे योजयेत् सुधीः । वृक्षतैलेषु पुन्नाग निम्बैरण्डोद्भवं त्यजेत्।। यद्वाऽलाभे गोघृतादेः क्रमात् क्षीरं विधीयते। तदलाभे दधि ग्राह्यमलाभे तैलमिष्यते ।। येषां केषांचिदन्येषां हविषामप्यसम्भवे । सर्वत्राज्यमुपादेयं भरद्वाजमुनेर्मतात् इति ।। स्मृतिभास्करे — शिष्टस्याभावतस्तुल्यं द्रव्यं प्रतिनिधीयते। कन्दैः पुष्पैः फलैर्मूलै रूपैः सदृशमिष्यते इति। शिष्टस्य - विहितस्य।।

व்யாஸர்:- ஹோமத்திற்குப் பசுவின் நெய்யை க்ரஹிக்க வேண்டும். அதில்லாவிடில் எருமை நெய், அல்லது ஆட்டு நெய், அல்லது எள்ளெண்ணெய், அல்லது காட்டெள்ளின் எண்ணெய், காசாம் விதையின் எண்ணெய், சணலெண்ணெய், கடுகெண்ணெய், மரத்தினெண்ணெய் இவைகளிலொன்றை க்ரஹிக்கவும். முந்தியது இல்லாவிடில் பிந்தியதை க்ரஹிக்க வேண்டும். இவைகளில் ஒன்றுமே கிடைக்காவிடில், யவை, சம்பாநெல், ச்யாமாகம் இவைகளில் ஒன்றின் மாவை ஜலத்துடன் கலந்து நெய்யின் ஸ்தானத்தில் உபயோகிக்கலாம். மர எண்ணெய்களிலும் புங்கை, வேம்பு, ஆமணக்கு இவைகளின் எண்ணெய்யை க்ரஹிக்கக் கூடாது. அல்லது, பசுநெய் முதலியவை கிடைக்காவிடில் முறையே பால், தயிர், எள்ளெண்ணெய் இவைகளை க்ரஹிக்கலாம். விஹிதமான ஹவிஸ்ஸுகள் ஏதாயினும் கிடைக்கா விட்டால் அவைகளின் ஸ்தானத்தில் ஆஜ்யத்தை க்ரஹிக்கலாம். பரத்வாஜ முனிதுள்ளார். அவ்விதம் விதித்திருப்பதால். **ஸ்ம்ருதி பாஸ்கரத்தில்:-** விதிக்கப்பட்ட வஸ்து கிடைக்காவிடில், கிழங்கு, பூ, பழம், வேர், உருவம் இவைகளால் விஹித த்ரவ்யத்திற்கு ஸமமான வேறு த்ரவ்யத்தை க்ரஹிக்கலாம்.

स्मृतिरत्ने — कायै रूपैस्तथा वर्णैः क्षीरैः पुष्पैः फलैरपि। गन्धै रसैस्सदृक् ग्राह्यः पूर्वाभावे परः परः ।। नापि प्रतिनिधातव्यं निषिद्धं वस्तु कुत्रचित्।। श्रोत्रियाणामभोज्यं यत् द्रव्यं हि तदशेषतः । ग्राह्यं प्रतिनिधित्वेन होमकार्येषु न क्वचित्।। काम्ये प्रतिनिधिर्नास्ति नित्ये नैमित्तिके हि सः । काम्ये तूपक्रमादूर्ध्वं मन्ये प्रतिनिधिं विदुः ।। न च प्रतिनिधिर्मन्त्रस्वामिदेवाग्निकर्मसु। स देशकालयोर्नास्ति ह्यरण्यामग्निरेव सा ।। समारूढां च समिध मरणिं ब्रुवते बुधाः ।। नाभावस्य प्रतिनिधिरभावान्तरमिष्यते । नापि प्रतिनिधातव्यं निषिद्धं वस्तु कुत्रचित् । द्रव्यं वैकल्पिकं किञ्चिद्यत्र सङ्कल्पितं भवेत्। तदभावे सति ग्राह्यं न तु वैकल्पिकान्तरम् इति ।।

ஸ்ம்ருதிரத்னத்தில்:- வடிவமைப்பு, ரூபம், வர்ணம், பால், புஷ்பம், பழம், கந்தம், ரஸம் இவைகளால் ஸமானமான வஸ்துவை க்ரஹிக்க வேண்டும். முந்தியது கிடைக்காவிடில் பிந்தியதை க்ரஹிக்க வேண்டும். நிஷித்தமான வஸ்துவை எவ்விதத்திலும் பதிலாக க்ரஹிக்கக் கூடாது. ச்ரோத்ரியர்களுக்குப் புஜிக்கத்தகாததென்று நிஷித்தமான வஸ்துக்கள் எவையோ அவை முழுவதையும் ஹோமகார்யங்களில் ப்ரதிநிதியாய் ஒருகாலும் க்ரஹிக்கக் கூடாது. காம்ய கர்மத்தில் ப்ரதிநிதியை க்ரஹிக்கக் கூடாது. நித்ய கர்மத்திலும், நைமித்திக கர்மத்திலுமே ப்ரதிநிதி க்ரஹிக்கலாமெனச் சிலர் சொல்லுகின்றனர். மந்த்ரம், யஜமானன், தேவதை, அக்னி, கர்ம, தேசம், காலம், அரணி இவைகளிலும் ப்ரதிநிதி கிடையாது. அரணி என்பது அக்னியேயாகும். அக்னியால் ஆரூடமான ஸமித்தையும் அரணி என்று அறிந்தவர் சொல்லுகின்றனர். முக்ய த்ரவ்யத்திற்கு ப்ரதிநிதியாய் க்ரஹித்த த்ரவ்யத்திற்கு வேறு ப்ரதிநிதி விதிக்கப்படுவதில்லை. நிஷித்தமான வஸ்துவை எதிலும் ப்ரதிநிதியாய் செய்யக் கூடாது. விகல்ப ப்ராப்தமான த்ரவ்யத்தைக் கொண்டு ஆரம்பித்த கர்மத்தில்

அந்த த்ரவ்யம் நஷ்டமானுல் வேறு விகல்ப த்ரவ்யத்தை க்ரஹிக்கக் கூடாது.

स्मृत्यर्थसारे — संस्काराणामयोग्योऽपि मुख्य एव हि गृह्यते। न हि संस्कारयोग्योऽन्यो गृह्यते प्रतिरूपकः ।। कार्यनिर्वृत्तिपर्याप्त-मुख्यद्रव्यस्य सम्भवे । पुरोडाशमहत्त्वार्थं न नीवारपरिग्रहः । कृष्णव्रीह्यादिके द्रव्ये शिष्टे प्रचरिते सति । ग्राह्योऽकृष्णोऽपि स व्रीहिर्नाव्रीहिः कृष्ण इत्यपि ।। अथ व्रीहियवाभावे तुषतण्डुलयोगिनीः। ओषधीः प्रतिगृह्णीयात् कोद्रवादिविवर्जिताः ।। उपात्ते तु प्रतिनिधौ मुख्यार्थो लभ्यते यदि । तदा मुख्यमनादृत्य गौणेनैव समापयेत् । मुख्यालाभे तु सदृशद्रव्यलाभो विधीयते। यावद्यावत् सुसदृशं तत्तदेव हि गृह्यते ।। उपात्ते यस्मिन् कस्मिन्वा मुख्ये प्रचरिते सति। अन्यत् द्रव्यं सजातीयं विजातीयमथापि वा ।। उपादाय प्रयुञ्जानो यदि पूर्वमवाप्नुयात् । उपात्तत्वाद्विशेषेण पूर्वं त्यक्त्वा परं श्रयेत् ।। मुख्यालाभे यदा गौणमुपात्तं सद्विनश्यति। तत्र मुख्योपमं गौणं ग्राह्यं गौणोपमं न तु।। प्रभुः प्रथमकल्पस्य योऽनुकल्पेन वर्तते। स नाप्नोति फलं तस्य परत्रेति श्रुतिस्मृती इति ।।

ஸ்ம்ருத்யர்த்த ஸாரத்தில்:- ப்ரதிபத்தி ஸம்ஸ்காரம் முதலியவைக்குப் போதாமல் இருந்தாலும் முக்ய த்ரவ்யத்தையே க்ரஹிக்க வேண்டும். ஸம்ஸ்காரங்களுக்குப் போதுமானதாய் உள்ளதென்று முக்ய த்ரவ்யத்திற்கு ப்ரதிநிதியான த்ரவ்யத்தைப் பரிக்ரஹிக்கக் கூடாது. முக்ய கார்யம் முடிவதற்குப் போதுமான முக்யத்ரவ்யம் இருக்கும் பொழுது, புரோடாசம் பெரிதாக விருக்க வேண்டுமென்பதற்காகக் கௌணமான நீவாரதான்யத்தைப் பரிக்ரஹிக்கக் கூடாது. கறுப்பு நெல்லினுல் செய்யும் கார்யத்தில் அதற்கு அபாவமானுல், அந்த ஜாதியிலுள்ள நெல் கறுப்பாய் இல்லாததாயினும் அதையே க்ரஹிக்க வேண்டும்.

கறுப்பாயிருப்பதைக் கொண்டு நெல்லல்லாத வேறு தான்யத்தை க்ரஹிக்கக் கூடாது. பிறகு, நெல் யவை இவைகள் கிடைக்காவிடில் உமி, அரிசி இவைகளுடன் கூடிய தான்யங்களை க்ரஹிக்கலாம். வரகு முதலியது கூடாது, முக்ய த்ரவ்யம் கிடைக்காததால் கௌண த்ரவ்யத்தைப் பரிக்ரஹித்த பிறகு, முக்ய த்ரவ்யம் கிடைத்தால் அப்பொழுது முக்யத்தை உபேக்ஷித்து கௌணத்தாலேயே கார்யத்தை முடிக்க வேண்டும். முக்ய த்ரவ்யம் கிடைக்கா விடில் அதற்கு ஸமானமான த்ரவ்யம் விதிக்கப்படுகிறது. அதிகமான ஸாத்ருச்யம் எதிலுள்ளதோ அதுவே க்ரஹிக்கப்பட வேண்டும். முக்ய த்ரவ்யமொன்றை க்ரஹித்து நடத்தும் பொழுது அதன் அபாவத்தால், அதற்கு ஸமானஜாதீயமோ அல்லது விஜாதீயமோ வேறு த்ரவ்யத்தைப் பரிக்ரஹித்துச் செய்யும் பொழுது, முக்யத்ரவ்யமே கிடைத்து விட்டாலும் அதை உபேக்ஷித்து, மறுபடி க்ரஹிக்கப்பட்டதாலேயே செய்ய வேண்டும். முக்யத்ரவ்யம் கிடைக்காமல் கௌணத்ரவ்யத்தை க்ரஹித்துச் செய்யும் பொழுது அது நஷ்டமாஞல், அங்கு முக்ய த்ரவ்யத்திற்கு ஸமமான கௌணத்ரவ்யத்தையே க்ரஹிக்க வேண்டும். கௌணத்ரவ்யத்திற்கு ஸமமான வேறு த்ரவ்யத்தை க்ரஹிக்கக் கூடாது. முக்ய கல்பத்தை அனுஷ்டிக்கச் சக்தியுள்ளவன் அனுகல்பத்தை அனுஷ்டித்தால் அவன் அதன் பலத்தைப் பரலோகத்தில் அடையமாட்டான் என்று ச்ருதிகளும் ஸ்ம்ருதிகளும் சொல்லுகின்றன.

आहुतिपरिमाणमाह बृहस्पतिः — प्रस्थधान्यं चतुःषष्टेराहुतेः परिकीर्तितम्। तिलानां तु तदर्धं स्यात्तदर्धं स्याद्धृतस्य तु इति। बोधायनः — व्रीहीणां वा यवानां वा शतमाहुतिरिष्यते। ओदनो द्विगुणो ग्राह्यो मयूराण्डाकृतिस्तथा ॥ कुक्कुटाण्डप्रमाणस्तु पिण्ड इत्यभिधीयते। अङ्गुष्ठपर्वमात्रं स्यादवदानं ततोऽपि च ॥ ज्यायः स्विष्टकृदाद्यं तु चतुरङ्गुलसंमितम् इति॥

ஆஹுதிகளின் அளவைச் சொல்லுகிறார்:- ப்ருஹஸ்பதி:- ஒரு படி தான்யம் அறுபத்து நான்கு ஆஹுதிகளுக்குப் போதுமானதாகும். எள் அரைப்படியும், நெய் கால்படியும் 64- ஆஹுதிகளுக்குப் போதுமானதாகும். போதாயனர்:- நெல், அல்லது யவை, 100- கொண்டது ஒரு ஆஹுதியாகும். அன்னமாஞல் இரண்டு மடங்கு, மயில்முட்டை அளவு. கோழியின் முட்டையளவுள்ளது பிண்டமெனப்படும். அவதான மென்பது பெருவிரலின் கணுவளவுள்ளது. ஸ்விஷ்டக்ருத் முதலியது அவதானத்தை விடப் பெரிதாய் நாலு அங்குலமளவுள்ளதாய் இருக்க வேண்டும்.

चन्द्रिकायाम् — तीर्थायतनसंपूर्णं प्रातरुत्तानपाणिना । द्व्यङ्गुलं समिधोऽतीत्य वाग्यतो जुहुयाद्धविः ॥ पाण्याहुति द्वादशपर्वपूरिता स्रुवाहुतिश्चेत् स्रुवमात्रपूरिता । स्वङ्गारिणि स्वर्चिषि चैव पावके दैवेन तीर्थेन च हूयते हविः इति ॥ वृद्धहारीतः — देवानां तर्पणं होमं बलिकर्म च भोजनम् । अर्चनं मार्जनं कुर्यात् देवतीर्थेन सर्वदा इति । स्मृतिरत्ने तु — अङ्गुल्यग्रैर्न होतव्यं न कृत्वाऽङ्गुलिभेदनम् । अङ्गुल्युत्तरपार्श्वे तु होतव्यमिति हि स्मृतिः इति ॥

சந்த்ரிகையில்:- காலையில், நிமிர்ந்த கையிஞல், தேவதீர்த்த ஸ்தானம் நிறைந்துள்ள ஹவிஸ்ஸை, ஸமித்தின் இரண்டங் குலத்தைத் தாண்டி மௌனியாய் ஹோமம் செய்ய வேண்டும். கையிஞல் செய்யுமாஹுதி நான்கு விரல்களின் 12-கணுக்கள் நிறைந்துள்ளதாய் இருக்க வேண்டும். ஸ்ருவத்திஞல் செய்யுமாஹுதியாஞல் ஸ்ருவம் நிறைந்ததாய் இருக்க வேண்டும். நல்ல தணல்களுள்ளதும், நல்ல ஜ்வாலையுள்ளதுமான அக்னியில் தேவதீர்த்தத்தால் ஹவிஸ்ஸை ஹோமம் செய்ய வேண்டும். வ்ருத்தஹாரீதர்:- தேவதர்ப்பணம், ஹோமம், பலிதானம், போஜனம், பூஜை, துடைப்பது இவைகளை எப்பொழுதும் தேவதீர்த்தத்தால் செய்ய வேண்டும்.

ஸ்ம்ருதிரத்னத்திலாஞல்:- விரல்களின் நுனிக்களால் ஹோமம் செய்யக் கூடாது. விரல்களைப் பிரித்தும் ஹோமம் செய்யக் கூடாது. விரல்களின் வடபுறத்தால் ஹோமம் செய்ய வேண்டும் என்றது ஸ்ம்ருதி. (என்றிருக்கிறது.)

गृह्यपरिशिष्टे — उत्तानेन तु हस्तेनाथाङ्गुष्ठाग्रनिपीडितम्। संहताङ्गुलिपाणिस्तु वाग्यतो जुहुयाद्धविः इति॥ कात्यायनः — जुहूभ्श्च हुते चैव पाणिशूर्पास्यदारुभिः। न कुर्यादग्निधमनं न कुर्याद्व्यजनादिना इति॥ देवलः – वस्त्रेण वाऽथ पर्णेन पाणिशूर्पास्यदारुभिः। व्यजनेनाग्निधमनं न कुर्यादिति हि स्मृतिः॥ पर्णेन वै भवेद्व्याधिः शूर्पेण धननाशनम्। पाणिना मृत्युमाप्नोति चायुःक्षीणं मुखाद्भमे इति॥ यत्तु मनुराह – नाग्निं मुखेनोपधमेत् नग्नां नेक्षेत च स्त्रियम्। नामेध्यं प्रक्षिपेदग्नौ न च पादौ प्रतापयेत्॥ अधस्तान्नोपदध्याच्च न चैनमतिलङ्घयेत्। न चैनं पादतः कुर्यात् न प्राणाबाधमाचरेत् इति, तद्धमन्यादिरहित धमनविषयम्।

க்ருஹ்யபரிசிஷ்டத்தில்:- நிமிர்ந்த கையினுல், பெருவிரலின் நுனியால் பிடிக்கப்பட்டுள்ள ஹவிஸ்ஸை, எல்லா விரல்களும் சேர்ந்துள்ள கையையுடையவனுய் மௌனியாய் ஹோமம் செய்ய வேண்டும். காத்யாயனர்:- ஹோமம் செய்வதற்கு முந்தியும், பிந்தியும், கை, முறம், வாய், கட்டை, விசிறி முதலியவை இவைகளால் அக்னியை வ்ருத்தி செய்யக் கூடாது. தேவலர்:- வஸ்த்ரம், இலை, கை, முறம், வாய், கட்டை, விசிறி, இவைகளால் அக்னியை வ்ருத்தி செய்யக் கூடாதென்பது சாஸ்த்ரமுறை. இலையினுல் வ்ருத்தி செய்தால் வ்யாதி உண்டாகும், முறத்தினுல் தனம் நசிக்கும். கையால் விசிறினுல் ம்ருத்யுவை அடைவான். வாயால் ஊதினுல் ஆயுள் க்ஷயிக்கும். ஆனுல், மனு:- ''அக்னியை வாயினுலூதக் கூடாது. வஸ்த்ரமில்லாத ஸ்த்ரீயைப் பார்க்கக் கூடாது. அக்னியில் அசுத்த வஸ்துவைப் போடக்கூடாது. அக்னியில்

கால்களைக் காய்ச்சக் கூடாது. அக்னியைக் கட்டில் முதலியவையின் கீழே வைக்கக் கூடாது. அக்னியைத் தாண்டக் கூடாது. அக்னியைக் கால்களுக்கெதிரில் வைக்கக் கூடாது. ப்ராணனே வருத்தக் கூடிய கார்யத்தைச் செய்யக் கூடாது'' என்று சொல்லியிருப்பது, தமனி (ஊதுகுழல்) முதலியதில்லாமல் ஊதுவதைப் பற்றியது.

तथा च देवलः—धमनीमन्तरे कृत्वा तृणं वा काष्ठमेव वा। मुखादग्निं समिन्धीत मुखादग्निरजायत इति॥ विष्णुः – अप्रबुद्धेऽविधूमे वा जुहुयाद्यो हुताशने। यजमानो भवेदन्धः सोऽमुत्रेति हि नः श्रुतम्॥ योऽनर्चिषि जुहोत्यग्नौ व्यङ्गारिणि च मानवः। मन्दाग्निरामयावी च दरिद्रश्चोपजायते॥ बहुशुष्केन्धने चाग्नौ सुसमिद्धे हुताशने। विधूमे लेलिहोने च होतव्यं कर्मसिद्धये॥ अग्निकर्णे हुतं रोगं नासिकायां धनक्षयम्। चक्षुषोर्निन्दनं कुर्यात् केशे दारिद्र्यकृद्भवेत्॥ हुतं शिरसि पापं स्यात् तस्माज्जिह्वासु होमयेत्। यत्र काष्ठं तु तच्छ्रोत्रं यत्र धूमस्तु नासिका॥ यत्राल्पज्वलनं नेत्रं यत्र भस्मानि तच्छिरः। यत्रैव ज्वलितो वह्निर्जिह्वा तत्रैव कीर्तिता॥ इति।

அவ்விதமே தேவலர்:- ஊதுகுழல், புல், கட்டை இவைகளிலொன்றை நடுவில் வைத்துக் கொண்டு, வாயினால் ஊதி அக்னியை ஜ்வலிக்கச் செய்ய வேண்டும். விராட் புருஷனின் வாயிலிருந்து அக்னி உண்டானார். விஷ்ணு:- ஜ்வாலை இல்லாததும், புகையுடன் கூடியதுமான அக்னியில் எவன் ஹோமம் செய்கின்றானே அந்த யஜமானன் மறுபிறப்பில் கண்ணில்லாதவன் ஆகிறான், என்று நமக்குக் கேள்வி. எந்த மனிதன் ஜ்வாலையில்லாததும், தணல் இல்லாததுமான அக்னியில் ஹோமம் செய்கின்றானே அவன், மந்தமான ஜடராக்னியுள்ளவனும், வ்யாதியுள்ளவனும், தரித்ரனுமாய் ஆகிறான். உலர்ந்த அநேகம் கட்டைகளையுடையதும், நன்றாய் ஜ்வலிக்கின்றதும்,

புகையில்லாததும், சலிக்கும் ஜ்வாலையுடையதுமான அக்னியில் கர்மம் ஸித்திப்பதற்கு ஹோமம் செய்ய வேண்டும். அக்னியின் காதில் ஹோமம் செய்வது ரோகத்தைக் கொடுக்கும். மூக்கில் செய்வது தனநாசத்தையும், கண்களில் செய்வது நிந்தையையும், கேசத்தில் செய்வது தரித்ரத் தன்மையையும் கொடுக்கும். தலையில் செய்வது பாபத்தைக் கொடுக்கும். ஆகையால் அக்னியின் நாக்குகளில் ஹோமம் செய்ய வேண்டும். கட்டையுள்ள இடம் அக்னிக்குக் காதாகும். புகையுள்ளது மூக்காகும். அல்பமாய் ஜ்வலிக்குமிடம் கண்ணாகும். சாம்பல்களுள்ளவிடம் தலையாகும். எந்த இடத்தில் அக்னி ஜ்வலிக்கின்றதோ அங்கேயே அக்னியின் நாக்கு என்று சொல்லப்பட்டுள்ளது.

आपस्तम्बः—शरोऽङ्गारा अध्यूहन्ते ततो नीलोपकाशोऽर्चि-रुदेति ब्रह्मणि हुतं भवति इति ॥ शरः - भस्म । अङ्गाराः भस्मना सूक्ष्मेण संयोगमापद्यन्ते । ततः तेभ्यः नीलप्रकाशोऽर्चिश्च उदेति । तस्यामवस्थायां हुतं ब्रह्मणि हुतं भवतीत्यर्थः ॥ स एव — यदङ्गारेषु व्यवशान्तेषु लेलाय(द्वी)तीव भाति तद्देवानामास्यं तस्मात् तथा होतव्यं यथाऽऽस्येऽपि दधात्येवं तदिति विज्ञायते इति ॥

ஆபஸ்தம்பர்:- அக்னியிலுள்ள தணல்கள் மெல்லியதான சாம்பலுடன் சேருகின்றன. அவைகளிலிருந்து நீலப்ரகாசமும் ஜ்வாலையும் உண்டாகிறது. அக்காலத்தில் ஹோமம் செய்வது ப்ரம்ஹத்தினிடத்தில் ஹோமம் செய்ததாயாகிறது. **ஆபஸ்தம்பரே:-** தணல்கள் தணிந்த பொழுது கொஞ்சமாய் சலிப்பதுபோல் காணப்படுவது தேவர்களின் வாயாகும். ஆகையால் அப்பொழுது ஹோமம் செய்ய வேண்டும். வாயில் கொடுப்பது எப்படியோ அதுபோலது எனத் தெரிகிறது.

श्रुतिरपि—सर्व एव सर्वश इद्ध्म आदीप्तो भवति । विश्वेदेवास्त-र्ह्यग्निः । तस्मिन् यस्य तथाविधे जुह्वति । विश्वेष्वेवास्य देवेष्वग्निहोत्रꣳ हुतं

भवति। नितरामर्चिरुपावैति लोहिनीकेव भवति। इन्द्रस्तर्ह्यग्निः। तस्मिन् यस्य तथाविधे जुह्वति। इन्द्र एवास्याग्नि-होत्र ꣳ हुतं भवति। अङ्गारा भवन्ति। तेभ्योऽङ्गारेभ्योऽर्चिरुदेति। प्रजापतिस्तर्ह्यग्निः। तस्मिन् यस्य तथाविधे जुह्वति। प्रजापतावेवास्याग्निहोत्र ꣳ हुतं भवति। शरोऽङ्गारा अध्यूहन्ते। ब्रह्म तर्ह्यग्निः। तस्मिन् यस्य तथाविधे जुह्वति। ब्रह्मन्नेवास्याग्निहोत्र ꣳ हुतं भवति। वसुषु रुद्रेष्वादित्येषु विश्वेषु देवेषु। इन्द्रे प्रजापतौ ब्रह्मन्। अपरिवर्गमेवास्यैतासु देवतासु हुतं भवति इति॥ सर्व इध्मः सर्वशः - सर्वप्रदेशे आदीप्तो भवति यदा, तर्हि - तस्मिन् काले विश्वेदेवा अग्निः - विश्वैर्देवैरेकीभूतस्तिष्ठति। तस्मिंस्तथाविधे - तादृक् प्रकारे अग्नौ यस्य जुह्वति विश्वेषु देवेष्वेवास्य हुतं भवति। विश्वेदेवास्तर्पिता अनेन भवन्ति। नितरां - नीचैस्तरां अर्चिरुपावैति - स्वल्पा भवति। लोहिनीकेव - रक्तेव भवति। वर्णादनुदात्तदिति ङीप्। संज्ञायां कन्। अङ्गारभूतेषु काष्ठेषु यदर्चिरुदेति तदस्यास्यस्य जिह्वास्थानीयम्। शृणातेरसुनि शरः - भस्म। तदङ्गारा अध्यूहन्ते उपरि वहन्ति। अपरिवर्गं - काश्चिदपि देवता अवर्जयित्वा एतासु देवतासु हुतं भवतीत्यर्थः॥

ச்ருதியும்:- *அக்னியில் வைக்கப்பட்ட எரிபொருள் முழுவதும் எல்லா இடத்திலும் ஜ்வாலையுள்ளதாகும் பொழுது, அக்னி விச்வே தேவர்களுடன் சேர்ந்ததாயிருக்கிறது. அவ்விதமான அக்னியில் ஹோமம் செய்தால் விச்வேதேவர்களிடத்திலேயே அக்னி ஹோத்ரம் ஹோமம் செய்யப்பட்டதாகின்றது. விச்வே தேவர்கள் இதனால் த்ருப்தி செய்விக்கப்பட்டவர்களாகின்றனர். ஜ்வாலை மிகவும் குறைந்து விடுகிறது; அது சிவப்பு நிறமுள்ளது போலவுமிருக்கிறது; அப்பொழுது அக்னி இந்த்ரனுடன் சேர்ந்துள்ளது. அதில் ஹோமம் செய்வது இந்த்ரனிடத்திலேயே ஹோமம் செய்யப்பட்டதாகிறது. தணல்களாகின்றன; அவைகளிடமிருந்து ஜ்வாலை*

உண்டாகிறது; அப்பொழுது அக்னி ப்ரஜாபதியுடன் சேர்ந்துள்ளது. அதில் ஹோமம் செய்வது ப்ரஜாபதி இடத்திலேயே ஹோமம் செய்ததாகிறது. தணலாயிருக்கும் எரிபொருளில் உண்டாகும் ஜ்வாலையானது அக்னியின் முகத்திலுள்ளள நாக்காகவாகிறது. தணல்கள் மெல்லிய சாம்பலைத் தன்னிடத்தில் வஹிக்கின்றன. அப்பொழுது அக்னி ப்ரம்ஹத்துடன் சேர்ந்துள்ளது. அதில் ஹோமம் செய்வது ப்ரம்ஹத்தினிடத்திலேயே ஹோமம் செய்ததாகிறது. வஸுக்கள், ருத்ரர்கள், ஆதித்யர்கள், விச்வேதேவர்கள், இந்த்ரன், ப்ரஜாபதி, ப்ரம்ஹம் என்ற இந்தத் தேவதைகளில் ஒருவரையும் விடாமல் எல்லாத் தேவதைகளிடம் ஹோமம் செய்யப்பட்டதாகிறது.

स्मृतिरत्ने—सुवर्णा कनका रक्ता कृष्णा चैव तु सुप्रभा। अतिरक्ता बहुरूपा च सप्त जिह्वाः प्रकीर्तिताः। सुवर्णा वारुणी जिह्वा मध्यमा कनका स्मृता। रक्ता चैवोत्तरा जिह्वा मध्यमा कनका स्मृता। रक्ता चैवोत्तरा जिह्वा कृष्णा याम्यदिशि स्मृता ॥ सुप्रभा पूर्वदिग्जिह्वा अतिरक्ताऽग्निगोचरा। ऐशान्ये बहुरूपा च जिह्वास्थानान्यनुक्रमात्॥ विवाहे वारुणी जिह्वा मध्यमा यज्ञकर्मसु। उत्तरा चेपनयने दक्षिणा पितृकर्मसु ॥ पूर्वदिक्सर्वकाम्येषु आग्नेयी शान्तिकर्मसु। ऐशानी चोग्रकाम्येषु ह्येतद्धोमस्य लक्षणम्॥ अज्ञात्वा सप्त जिह्वास्तु होमं यः कुरुते द्विजः। होमो निष्फलतां याति होमी च नरकं व्रजेत् इति॥

ஸ்ம்ருதிரத்னத்தில்:- ஸுவர்ணை, கனகா, ரக்தா, க்ருஷ்ணை, ஸுப்ரபா, அதிரக்தா, பஹுரூபா என்று ஏழு நாக்குகள் (அக்னிக்கு) சொல்லப்பட்டுள்ளன. மேற்கிலுள்ள (ஜ்வாலை) ஸுவர்ணையென்றும், நடுவிலுள்ளது கனகா என்றும், வடக்கிலுள்ளது ரக்தா என்றும், தெற்கிலுள்ளது க்ருஷ்ணை என்றும், கிழக்கிலுள்ளது ஸுப்ரபா என்றும், அக்னிதிக்கிலுள்ளது அதிரக்தா என்றும், ஈசானத்திக்கிலுள்ளது பஹுரூபா என்றும் சொல்லப்பட்டுள்ளன. விவாஹத்தில் மேற்கிலும்,

யாககர்மங்களில் நடுவிலும், உபநயனத்தில் வடக்கிலும், பித்ரு கார்யங்களில் தெற்கிலும், காம்ய கர்மங்கள் எல்லாவற்றிலும் கிழக்கிலும், சாந்தி கர்மங்களில் ஆக்னேயதிக்கிலும், உக்ரகாம்ய கர்மங்களில் ஈசானதிக்கிலும் ஹோமம் செய்ய வேண்டும். இது ஹோமத்தின் லக்ஷணமாம். ஏழு நாக்குகளையும் அறியாமல் எவன் ஹோமம் செய்கின்றானே அவனது ஹோமம் நிஷ்பலமாகின்றது. ஹோமம் செய்தவனும் நரகத்தை அடைவான்.

होमप्रकारः स्वगृह्योक्तविधिना द्रष्टव्यः। तदुक्तं गृह्यपरिशिष्टे – स्वगृह्योक्तेन विधिना होमं कुर्यात् यथाविधि इति॥ स्मृतिरत्नेऽपि – उपावरोहणं कृत्वा प्राणायाममनन्तरम्। स्वगृह्योक्तप्रकारेण वह्नेरर्चनमाचरेत्॥ अदितेऽन्वादिमन्त्रैस्तु चतुर्भिः परिषेचयेत्। अदितेऽनुमन्यस्वेति वामेदव ऋषिः स्मृतः॥ देवी तु जगती छन्दो ह्यदितिर्देवता स्मृता। अनुमतेऽनुमन्यस्व वामदेव ऋषिः स्मृतः॥ प्राजापत्या तु ग२यत्री देवताऽनुमतिस्तथा। सरस्वतेऽनुमन्यस्व वामदेव ऋषिः स्मृतः॥ प्राजापत्या तु गायत्री मन्त्रोक्ता देवता स्मृता। देवसवितः प्रसुव वामदेवऋषिः स्मृतः॥ प्राजापत्या तु गायत्री सविता देवता स्मृता। विनियोगश्चतुर्णां तु सेचने परिकीर्तितः इति॥

ஹோமத்தின் ப்ரகாரத்தை அவரவர் க்ருஹ்யத்திற் சொல்லிய படி அறிந்து கொள்ள வேண்டும். அதுவும் சொல்லப்பட்டுள்ளது க்ருஹ்யபரிசிஷ்டத்தில்:- தனது க்ருஹ்யத்தில் சொல்லிய விதியுடன் முறைப்படி ஹோமம் செய்ய வேண்டும். ஸ்ம்ருதிரத்னத்திலும்:- முதலில் உபாவரோஹணம் செய்து, பிறகு ப்ராணு யாமம் செய்து தனது க்ருஹ்யத்திற் சொல்லிய ப்ரகாரமாய் அக்னிக்கு அர்ச்சனம் செய்ய வேண்டும். 'அதிதே' என்பது முதலான நான்கு மந்த்ரங்களால் பரிஷேசனம் செய்ய வேண்டும். 'அதிதேநுமன்யஸ்வ' என்ற மந்த்ரத்திற்கு வாமதேவர்

ருஷி, ஜகதீ சந்தஸ், அதிதி தேவதையாம். 'அனுமதேனுமன்யஸ்வ' என்பதற்கு வாமதேவர் ருஷி, ப்ராஜாபத்யா காயத்ரீ சந்தஸ், அனுமதி தேவதையாம். 'ஸரஸ்வதேனுமன்யஸ்வ' என்பதற்கு வாமதேவர் ருஷி, ப்ராஜாபத்யா காயத்ரீ சந்தஸ், ஸரஸ்வதீ தேவதையாம். 'தேவஸவித: ப்ரஸுவ' என்பதற்கு வாமதேவர் ருஷி, ப்ராஜாபத்யா காயத்ரீ சந்தஸ், ஸவிதா தேவதையாம், நான்கு மந்த்ரங்களுக்கும் பரிஷேசனத்தில் வினியோகம் சொல்லப்பட்டுள்ளது.

संवर्तः—होमे पर्युक्षणे श्राद्धे सन्ध्याकर्मसु मार्जने। आचामे भोजने पात्रं तोयं वामेन संस्पृशेत् इति॥ होमादिषु पात्रं, सन्ध्यामार्जने तोयं वामहस्तेन स्पृशेदित्यर्थः॥ सङ्ग्रहे — गृह्योक्तविधिना हुत्वा पूर्ववत् परिषेचयेत्। अन्वमंस्थाः प्रासावीरिति मन्त्रं सन्नमयेद्बुधः॥ अथाग्निमुपतिष्ठेत मन्त्रेणाग्नेनयादिना इति॥

ஸம்வர்த்தர்:- ஹோமம், பரிஷேசனம், ச்ராத்தம், ஸந்த்யா வந்தனங்களில் செய்யும் மார்ஜனம், ஆசமனம், போஜனம் இவைகளில் பாத்ரத்தையும் ஜலத்தையும் இடது கையினால் தொட்டுக் கொண்டிருக்க வேண்டும். அதாவது ஹோமம் முதலியவைகளில் பாத்ரத்தையும், ஸந்த்யா வந்தன காலத்தில் மார்ஜனத்தில் ஜலத்தையும் இடது கையினால் தொட்டுக் கொண்டிருக்க வேண்டும் என்பது பொருள். **ஸங்க்ரஹத்தில்:-** க்ருஹ்யத்திற் சொல்லியபடி ஹோமம் செய்து முன்போல் பரிஷேசனம் செய்ய வேண்டும். 'அன்வமம்ஸ்தா:, ப்ராஸாவீ:, என்று மந்த்ரங்களில் மாறுதலுண்டு. பிறகு 'அக்னே நய' முதலான மந்த்ரத்தினால் அக்ன்யுபஸ்தானம் செய்ய வேண்டும்.

एतच्च ज्ञात्वैवानुष्ठेयम्॥ अन्यथा दोषश्रवणात्॥ तदाह अङ्गिराः — स्वाभिप्रायकृतं कर्म यत् किञ्चित् ज्ञानवर्जितम्। क्रीडाकर्मेव बालानां तत्सर्वं निष्प्रयोजनम्॥ हतं ज्ञानं क्रियाहीनं हतास्त्वज्ञानिनः क्रियाः। अपश्यन्नन्धको दग्धः पश्यन्नपि च पङ्गुकः इति॥

இக்கார்யத்தை நன்கறிந்தே செய்ய வேண்டும். இல்லாவிடில் தோஷம் கேட்கப்படுகிறது. அதைச் சொல்லுகிறார் அங்கிரஸ்:- சாஸ்த்ரத்தை அறியாமல், தன்னபிப்ராயப்படி செய்யப்படும் கார்யமெதுவோ, அது முழுவதும், சிறுவர்களின் விளையாட்டுக் கார்யம் போல் வீணாகும். அனுஷ்டானம் இல்லாத சாஸ்த்ரஜ் ஞானம் வீணாகும். ஜ்ஞானமில்லாதவனின் அனுஷ்டானங்களும் வீணாகும். நடக்கச் சக்தியிருந்தும், கண்ணில்லாததால் குருடனும், பார்வையுள்ளவனையினும் நடக்க முடியாததால் நொண்டியும் நெருப்பினால் பொசுக்கப்பட்டனர்.

मन्त्रार्थस्तु – अदितेऽनुमन्यस्व । अदितिः - देवमाता । हे अदिते । अनुमन्यस्व मया क्रियमाणं कर्म अनुजानीहि । अनुमतिः - अनुमन्त्री पौर्णमासी । सरस्वती - वाग्देवता । छान्दसो गुणः । हे देव सवितः ! सर्वस्याप्यनुज्ञातः ! अस्मानपि प्रसुव - अनुजानीहि । अन्वमंस्थाः - अनुज्ञातवती । प्रासावीः - अनुज्ञातवान् । अग्ने नयेति । हे अग्ने ! सुपथा - शोभनेन शास्त्राविरुद्धेन मार्गेण अस्मान् राये नय - श्रियं प्रापय विश्वानि वयुनानि - पापानि, विद्वान् - जानानः त्वं, एनः - पापं, अस्मत् - अस्मत्तः, युयोधि - अपनय । यौतिः पृथग्भावे । लोटि, बहुलं छन्दसीति शपःश्लुः । वाछन्दसीत्यपित्त्वाभावे गुणः । कीदृशमेनः ? जुहुराणं - कुटिलस्वभावम् । तदर्थं वयमपि ते - तुभ्यं, भूयिष्ठां - बहुमतां, नम उक्तिं विधेम - क्रियास्म । विदधातिः विधाने । आशिषि लिङ् ।।

மந்த்ரங்களினர்த்தம்:- *(அதிதேநுமன்யஸ்வ) அதிதி என்பவள் தேவர்களின் தாய். ஓ அதிதி தேவியே! என்னால் செய்யப்படும் கர்மத்தை அனுமதிக்கக் கடவாய். அனுமதி - பௌர்ணமாஸீ. ஓ அனுமதியே! அனுமதிப்பாயாக. ஸரஸ்வதீ - வாக்தேவதை. ஓ ஸரஸ்வதீயே அனுமதிப்பாயாக. ஸவிதா - எல்லோரையும்*

அனுமதிப்பவன். ஓ ஸவிதாவே! எங்களையும் அனுமதிப்பாயாக. அன்வமம்ஸ்தாः- அனுமதித்தாய். ப்ராஸாவீः- அனுமதித்தாய். 'அக்னேநய' என்பதின் அர்த்தம். ஓ அக்னியே! ஸுபதா - சுபமான (சாஸ்த்ர விரோதமில்லாத) மார்க்கத்திலுல், அஸ்மான் - எங்களை, ராயே நய - ஸம்பத்தை அடைவிப்பாயாக. விச்வானி வயுநாநி - எல்லாப் பாங்களையும், வித்வான் - அறிந்த நீ, ஏனः- பாபத்தை, அஸ்மத் - எங்களிடமிருந்து, யுயோதி - போக்கவேண்டும். எவ்விதமான பாபத்தை? எனில், ஜுஹுராணம் - குடிலஸ்வ பாவமான பாபத்தை. அதற்காக நாங்களும், தே - உனக்கு, பூயிஷ்டாம் - அனேகமான, நமஉக்திம் - நமஸ்கார வாக்யத்தை, விதேம - செய்வோம்.

व्यासः — स्नास्यतो वरुणः शोभां जुह्वतोऽग्निः श्रियं हरेत्। भोजने मृत्युमाप्नोति तस्मान्मौनं त्रिषु स्मृतम् इति॥

வ்யாஸர்:- ஸ்நான காலத்தில் பேசுகின்றவனின் சோபையை வருணனும். ஹோமகாலத்தில் பேசுகின்றவனின் ஸம்பத்தை அக்னியும் அபஹரிக்கின்றனர். போஜனகாலத்தில் பேசுகின்றவன் ம்ருத்யுவை அடைகிறான். ஆகையால் இம்மூன்றிலும் மௌனம் விதிக்கப்பட்டுள்ளது.

अनुगतेऽग्नौ सन्धानमाहापस्तम्बः— नित्ये धार्योऽनुगतो मन्थ्यः श्रोत्रियागाराद्धाऽऽहार्यः इति॥ नित्य इति सिद्धेधार्य इत्यारम्भात् उखादौ धारणमेवास्य मुख्यम्। न त्वरण्योरात्मनि वा समारोपणम्। स च म्रियमाणोऽग्निरनुगतश्चेत् तदैव सन्धातव्य इति व्याख्यातारः॥

அக்னி அனுகதமாஞல் (அணைந்து போஞல்) அதன் ஸந்தானத்தைச் சொல்லுகிறார். ஆபஸ்தம்பர்:- 'இந்த அக்னி எப்பொழுதும் இருக்க வேண்டும். தரிக்கப்பட வேண்டும். அனுகதமாஞல் மதனம் (கடைதல்) செய்யப்பட வேண்டும். அல்லது ச்ரோத்ரியன்

க்ருஹத்தினின்றும் கொண்டு வரவேண்டும்' என்று. ''ஸூத்ரத்தில் 'நித்ய:' என்ற பதத்தாலேயே ஸித்தித்திருக்கையில், 'தார்ய:' என்றதால் பாஜன முதலியதில் தரிப்பதே இதற்கு முக்யம். அரணிகளிலோ, தன்னிடத்திலோ ஸமாரோபணம் செய்வது முக்யமல்ல. அப்படி தரிக்கப்பட்டுள்ள அந்த அக்னி அனுகதமாஞல் அப்பொழுதே ஸந்தானம் செய்ய வேண்டும்'' என்று வ்யாக்யானகாரர்கள் சொல்லியுள்ளனர்.

धियमाणे त्वग्नौ विशेषमाह स एव — चतूरात्रमहुतोऽग्निर्लौकिकः सम्पद्यते इति। शौनकः — अग्नावनुगते यत्र होमकालद्वयं व्रजेत्। उभयोर्विप्रवासे च लौकिकोऽग्निर्विधीयते इति ॥ भारद्वाजः — एकाऽग्निर्द्वादशाहं विच्छिन्नः पुनराधेयः इति ॥ बोधायनः — अर्वाक्त्रिरात्रादयसेऽग्नये स्यात् ततः परं तन्तुमती च कार्या। आसप्तरात्रान्मनसे च हुत्वा आद्वादशाहात् पुनरादधीत इति ॥ द्वादशदिनपर्यन्तमग्न्यनुगति प्रायश्चित्तमेवोक्तम्। नाग्निसन्धानम्। अत्र यथास्वगृह्यं व्यवस्था ॥

அக்னி தரிக்கப்பட்டுள்ள காலத்தில் விசேஷத்தைச் சொல்லுகிறார்- **ஆபஸ்தம்பரே:-** 'நாலுநாள் முழுவதும் ஹோமம் செய்யப்படாத அக்னி லௌகிகமாகின்றது' என்று. **சௌனகர்:-** அக்னி அனுகதமான பிறகு இரண்டு ஹோமகாலம் சென்றாலும், தம்பதிகள் இருவரும் வெளியூர் சென்றாலும், அக்னி லௌகிகமென்று விதிக்கப்படுகிறது. **பாரத்வாஜர்:-** ஔபாஸனாக்னி பன்னிரண்டுநாள் விச்சின்னமாஞல் புனராதானம் செய்ய வேண்டும். **போதாயநீயத்தில்:-** மூன்று நாளைக்குள்ளாஞல் 'அயஸே அக்னயே' ஹோமம் செய்ய வேண்டும். மூன்று நாளைக்கு மேல் தந்துமதீ என்ற ருக்காலும் ஹோமம் செய்ய வேண்டும். 7-ஆவது நாள் முதல் 'மனோஜ்யோதி:' என்ற ருக்காலும் ஹோமம் செய்ய வேண்டும். 12- ஆவது நாள் முதல் புனராதானம் செய்ய வேண்டும். 12- நாள் வரையில்

அக்னியின் அனுகதி ப்ராயச்சித்தம் மட்டுமே சொல்லப்பட்டுள்ளது. அக்னி ஸந்தானம் சொல்லப்படவில்லை. இவ்விஷயத்தில் அவரவர் க்ருஹ்யத்திற் சொல்லியபடி வ்யவஸ்தையை அறியவும்.

शौनकः—विच्छिन्नवह्निमाधाय कर्माङ्गं विधिवत् द्विजः। सायमारभ्य जुहुयादाहुतीनां चतुष्टयम्॥ यदा सन्धीयते वह्निः प्रायश्चित्त पुरस्सरम्। तदा सायं विजानीयात् प्रातर्होमं ततः परम्॥ प्रतिपत्पर्वसन्धानं कर्म कर्तृविनाशनम्। सन्धाय त्रिदिनं हुत्वा स्थालीपाकं समाचरेत् इति॥ प्रतिपत्पर्वसन्धानमिति चतुर्दश्या अप्युपलक्षणम्। नोचेत् सन्धाय त्रिदिनं हुत्वेति विरोधः॥ कथञ्चिद्धारणाशक्तौ बोधायनः – एकाग्नेस्त्रिविधं समारोपण मात्मन्यरण्योर्वा समित्सु (वा) इति॥

சௌனகர்:- ப்ராம்ஹணன் விச்சின்னமான அக்னியை விதிப்படி ஆதானம் செய்து கொண்டு அதற்கு அங்கமாக முதல் நாள் ஸாயங்காலம் முதற்கொண்டு நான்கு ஆஹுதிகளை ஹோமம் செய்ய வேண்டும். எக்காலத்தில் ப்ராயச் சித்தத்தை முன்னிட்டு அக்னி ஸந்தானம் செய்யப்படுகிறதோ அக்காலத்தை ஸாயங்காலமாயறிய வேண்டும். அதற்குப் பிறகு ப்ராதர் ஹோமம். ப்ரதமையிலும், பர்வத்திலும் ஸந்தானம் செய்வது கர்த்தாவுக்கு நாசகரமாகும். ஸந்தானம் செய்து கொண்டு மூன்றுநாள் ஹோமம் செய்து பிறகு ஸ்தாலீபாகம் செய்ய வேண்டும். ப்ரதமையையும், பர்வங்களையும் நிஷேதித்தது சதுர்தசிக்குமுப லக்ஷணமாம். இல்லாவிடில் 3- நாள் ஹோமம் செய்து என்பதற்கு விரோதமாகும். எவ்விதத்தாலும் அக்னியைத் தரிக்க முடியாவிடில், போதாயனர்:- ஔபாஸனாக்னிக்கு ஸமாரோபணம் மூன்று விதம், தேஹத்தில், அல்லது அரணியில், அல்லது ஸமித்துக்களில் என்று.

समिधश्च स्मृत्यर्थसारे दर्शिताः—पलाशाश्वत्थखदिरबिल्वोदुम्बरजा समित् इति॥ आत्मसमारोपणं यजमानकर्तृकमेव।

समिदादिसमारोपणं तु अध्वर्युकर्तृकमपि भवति ।। तथा चापस्तम्बः – उपर्यग्नावरणी धारयन् जपत्ययं ते योनिर् ऋत्विय इत्यपि वा यजमान एवात्मन् समारोपयते याते अग्नि + एहीति हस्तं प्रताप्य मुखायाहरते इति ।। यजमानासन्निधानेऽपि पत्नीसन्निधौ अध्वर्युणा अरण्यादौ समारोप्यावरोप्य च होतुं शक्यते । यजमानकर्तृकमप्युपावरोहमन्त्रजपं यजमानासन्निधौ अन्यः कुर्यात् । पत्नी न कुर्यात् । श्रौतमन्त्रोर्ध्वक्रियामन्त्र व्यतिरिक्तमन्त्रेषु स्त्रिया अनधिकारादिति न्यायविदः ।।

ஸமித்துக்கள் ஸ்ம்ருத்யர்த்தஸாரத்தில் சொல்லப்பட்டுள்ளன :- புரசு, அரசு, கருங்காலி, பில்வம், அத்தி இவைகளில் உண்டாகிய ஸமித்து விஹிதம் என்று. ஆத்ம ஸமாரோபணத்தை யஜமானன் தான் செய்யலாம். ஸமிதரணி ஸமாரோபணத்தை அத்வர்யுவும் செய்யலாம். அவ்விதமே, ஆபஸ்தம்பர்:- அக்னியின்மேல் அரணிகளைப் பிடித்துக் கொண்டு 'அயம் தேயோநி:' என்ற மந்த்ரத்தை ஜபிக்க வேண்டும். அல்லது யஜமானனே தன்னிடத்தில் ஸமாரோபணம் செய்து கொள்ளலாம். 'யாதே அக்னே' என்ற மந்த்ரத்தால் கையைக் காய்ச்சி முகத்திற்குக் கொண்டு வரவேண்டும். யஜமானன் எதிரில் இல்லாவிடினும், பத்னீ ஸமீபத்தில் இருந்தால், அத்வர்யு, அரணி முதலியதில் ஸமாரோபணம், அவரோபணம் இவைகளைச் செய்து ஹோமம் செய்யலாம். யஜமானன் செய்ய வேண்டியதாயினும், உபாவரோஹ மந்த்ர ஜபத்தை யஜமானன் ஸன்னிதியில் இல்லாவிடில் அன்யன் செய்யலாம். பத்னீ செய்யக் கூடாது. ச்ரௌத மந்த்ரங்கள், அபரக்கிரியையிலுள்ள மந்த்ரங்கள் இவைகளைத் தவிர்த்து மற்ற மந்த்ரங்களில் ஸ்த்ரீக்கு அதிகாரம் இல்லாததால் என்கின்றனர், ந்யாயம் அறிந்தவர்கள்.

तथा च शातातपः — श्रौतं यत्तत् स्वयं कुर्यादन्योऽपि स्मार्तमाचरेत् इति ।। बोधायनः — आत्मारूढो निमज्जेद्वा वदेद्वा पतितादिभिः । अनृतौ च स्त्रियं गच्छेदथवा काममोहितः ।। वदन्त्येषु

निमित्तेषु केचिदग्निविनाशनम्। आपस्तम्बस्य तन्नेष्टमात्मारूढः सदा शुचिः इति ॥ पुनस्सन्धाननिमित्तमाह स एव — अथाग्नेर्विपत्तिं व्याख्यास्यामोऽमेध्याशुचि चण्डाल शूद्र वायस पतितरजस्वलाश्वभिश्च संस्पर्शेऽरण्योर्विनाश इति पुनरग्निमुपसमिन्ध्यात् इति।

சாதாதபர்:- ச்ரௌதமெதுவோ அதைத்தானே செய்ய வேண்டும். ஸ்மார்த்தத்தை அன்யனும் செய்யலாம். போதாயனர்:- ஆத்மஸமாரோபணம் செய்து கொண்டவன் ஸ்நானம் செய்தாலும், பதிதன் முதலியவருடன் பேசினாலும், ருது காலமல்லாத காலத்தில் காமமோஹமுற்றவனுய் ஸ்த்ரீஸங்கம் செய்தாலும், இந்த நிமித்தங்களில் சிலர் அக்னி நாசத்தைச் சொல்லுகின்றனர். அது ஆபஸ்தம்பருக்கு இஷ்டமில்லை. அக்னியை ஆத்ம ஸமாரோபணம் செய்து கொண்டவன் எப்பொழுதும் சுத்தனுகிறன். புனஃஸந்தான நிமித்தத்தைச் சொல்லுகிறர்- போதாயனரே:- இனி அக்னியின் நாசத்தைச் சொல்லுகின்றோம். அசுத்தவஸ்து, அசுத்தன், சண்டாளன், சூத்ரன், காக்கை, பதிதன், ரஜஸ்வலை, நாய் இவைகளால் ஸ்பர்ச மேற்படினும், அரணிகள் காணப்படாவிடினும் மறுபடி அக்னிஸந்தானம் செய்து கொள்ள வேண்டும்.

सङ्गहे — स्पर्शे तु धार्यमाणं वा समिदारूढमेव वा। त्यक्त्वा तु पुनराधानमात्मारूढं त्यजेद्बुधः ॥ शवानुगमनाशौचाद्युपघातेऽग्नि-मात्मगम्। विसृज्य हावयेच्चित्तं हावयेच्च न तु त्यजेत् इति ॥ अहुतेष्वग्निषु यजमानोऽश्नीयात् यत्ते वयं यथाह तदित्याहुती जुहुयात्। समिधौ वाऽऽदध्यात् जपेदित्येके। अनाज्ञातमिति तिस्रोऽनाज्ञाते जुहुयात् जपेदित्येके। त्वन्नो अग्ने सत्वन्नो अग्न इति सर्वत्रान्तराये विपर्यासे चैते आहुती जुहोति। तदिदं सर्वप्रायश्चित्तं सर्वत्र क्रियते इत्यादि प्रायश्चित्तमापस्तंबोक्तं स्मार्तेऽपि कर्तव्यमविरोधात्॥

ஸங்க்ரஹத்தில்:- தரிக்கப்படும் அக்னிக்கோ, ஸமித்தில் ஆரூடமான அக்னிக்கோ அசுத்த

ஸ்பர்சமேற்பட்டால் அதைத் தள்ளி, புனராதானம் செய்ய வேண்டும். ஆத்மாரூடமான அக்னியையும் விடவேண்டும். சவானுகமனம், ஆசௌசம் இவைகளால் அசுத்தி ஏற்பட்டால் ஆத்மாரூடமான அக்னியை விட்டு ஸர்வ ப்ராயச்சித்த ஹோமம் செய்ய வேண்டும். ஹோமம் செய்ய வேண்டுமேயல்லாது த்யாகம் கூடாது. ''அக்னிகளில் ஹோமம் செய்வதற்குமுன் யஜமானன் போஜனம் செய்தால் 'யத்தேவயம்' 'யதாஹுதத்' என்ற ருக்குகளால் இரண்டு ஆஹுதிகள் செய்ய வேண்டும். அல்லது இரண்டு ஸமித்துக்களை ஹோமம் செய்யலாம். அல்லது ஷி ருக்குகளை ஜபிக்கலாமென்று சிலர். அறியாமற் செய்யப்பட்டதில் 'அஞ்ஜ்ஞாதம்' என்ற மூன்று ருக்குகளால் ஹோமம் செய்ய வேண்டும். ஷி ருக்குகளை ஜபிக்கலாமென்று சிலர். எல்லாக் கர்மங்களிலும், குறுக்கில் செல்லுதல், மாறிச் செய்தல் இவைகளில் 'த்வம்நோ அக்னே' 'ஸத்வம்நோ அக்னே' என்ற இரண்டு ருக்குகளால் ஹோமம் செய்ய வேண்டும். இந்த ஸர்வப்ராயச் சித்தத்தை எல்லாக் கர்மங்களிலும் செய்ய வேண்டும்'' என்பது முதலியதாய் ஆபஸ்தம்பர் சொல்லியிருக்கும் ப்ராயச் சித்தம் ஸ்மார்த்த கர்மத்திலும் செய்யப்படலாம், விரோதமில்லாததால்.

स्मृत्यन्तरे—औपासनाग्निद्वयसङ्गतिश्चेदग्निं समारोपणतो विभज्य। पूर्वस्य होतुर्विविचिं च हुत्वा पश्चाच्च होतुः पथिकृच्च सोऽपि इति ।। द्वयोरौपासनाग्न्योः संसर्गे संसृष्टाग्निं समारोपणार्थं विभज्य ममायमंशो ममायमंश इति प्रत्येकमभिमानीकृत्य स्वांशे पूर्वहोता अग्नये विविचये स्वाहेति हुत्वा सर्वप्रायश्चित्तं च जुहुयात्। पश्चाद्धोता तु अग्नये पथिकृते स्वाहा । अग्नये विविचये स्वाहेति हुत्वा सर्वप्रायश्चित्तं च जुहुयात् । ततस्तावुभौ सहैव समारोपयेतामित्यर्थः ।। लौकिकाग्नि-संपर्केऽपि विविचिं पाहि पञ्चकं च जुहुयादिति बोधायनोक्तं द्रष्टव्यम्।।

மற்றொரு ஸ்ம்ருதியில்:- இரண்டு ஔபாஸனாக்னிகள் கலந்து விட்டால், ஸமாரோபணத்திற்காக அந்த அக்னியை இரண்டாகப் பிரித்து, இது என்னுடைய பாகம், இது என்னுடைய பாகம் என்று தனித்தனியாய் இருவரும் அபிமானித்து, முதலில் ஹோமம் செய்பவன் தனது அக்னிபாகத்தில் 'அக்னயேவிவிசயே ஸ்வாஹா' என்று ஹோமம் செய்து ஸர்வப்ராயச் சித்த ஹோமமும் செய்ய வேண்டும். பிறகு ஹோமம் செய்பவன் 'அக்னயே பதிக்ருதே ஸ்வாஹா', 'அக்னயேவிவிசயே ஸ்வாஹா' என்று ஹோமம் செய்து ஸர்வ ப்ராயச் சித்தஹோமமும் செய்ய வேண்டும். பிறகு அவ்விருவரும் சேர்ந்தே ஸமாரோபணம் செய்ய வேண்டும். ஔபாஸனாக்னி லௌகிகாக்னியுடன் கலந்து விட்டாலும், விவிசியும், பாஹிபஞ்சகமும் ஹோமம் செய்ய வேண்டும்' என்று போதாயனர் சொல்லியதைத் தெரிந்து கொள்ள வேண்டும்.

विधुराग्न्युत्पत्तिः सङ्ग्रहे दर्शिता—उद्धृत्य वह्निं प्रणवेन पूर्वमन्वग्निमन्त्रेण हरेत् पुरस्तात्। निधाय पृष्ठोदि विमन्त्रकेण ततस्तु होमः शकलैश्चतुर्भिः ॥ लेखादयो नैव च तत्सतां स विश्वानिदेऽद्या न इमे च मन्त्राः। आरोपणं नाप्यवरोपणं स्यादुत्पत्तिरेवं विधुरानलस्य ॥ नित्यानि नैमित्तिककाम्यकर्माण्यत्रैव कुर्याद्विधुरस्सदैव इति ॥ तत्सवितुः, ता२सवितुः, विश्वानि देवसवितः, अद्यानो देवसवितः इतीमे शकलहोममन्त्रा इत्यर्थः ॥

விதுராக்னியின் உத்பத்திப்ரகாரம் ஸங்க்ரஹத்தில்:- சொல்லப்பட்டுள்ளது. முதலில் 'ஓம்' என்ற மந்த்ரத்தால் எடுத்து, 'அன்வக்னிः' என்ற மந்த்ரத்தால் கிழக்கில் கொண்டுவந்து, 'ப்ருஷ்டோதிவி' என்ற மந்த்ரத்தால் கீழேவைத்து, பிறகு நான்கு சகலங்களால் ஹோமம் செய்ய வேண்டும். ரேகை முதலியதைச் செய்ய வேண்டியதில்லை. 'தத்ஸவிதுः, தாம்ஸவிதுः, விச்வானிதேவ, அத்யாநः, என்ற நான்கும் சகலஹோம மந்த்ரங்கள். ஸமாரோபணமில்லை.

அவரோபணமுமில்லை. விதுராக்னியினுத்பத்தி இவ்விதமாம். விதுரன், நித்ய நைமித்திக காம்ய கர்மங்களை இந்த அக்னியிலேயே செய்ய வேண்டும்.

चन्द्रिकायाम् — ब्रह्मण्याधाय कर्माणि निस्सङ्गः कामवर्जितः । प्रसन्नेनैव मनसा कुर्वाणो याति तत्पदम् ।। नाहं कर्ता सर्वमेतद् ब्रह्मैव कुरुते तथा । एतद् ब्रह्मार्पणं प्रोक्त मृषिभिस्तत्त्वदर्शिभिः ।। यद्वा फलानां सन्यासं प्रकुर्यात्परमेश्वरे । कर्मणामेतदप्याहुर्ब्रह्मार्पणमनुत्तमम् इति ।। मनुरपि — सन्यस्य सर्वकर्माणि कर्मदोषानपानुदन् । नियतो वेदमभ्यस्य पुत्रैश्वर्ये सुखं वसेत् ।। मङ्गलाचारयुक्तानां नित्यं च प्रयतात्मनाम् । जपतां जुह्वतां चैव विनिपातो न विद्यते इति ।।

சந்த்ரிகையில்:- கர்மங்களை ப்ரம்ஹத்தினிடத்தில் சேர்த்து பற்றில்லாதவனும், ஆசையற்றவனுமாய், தெளிவுள்ள மனதுடன் செய்பவன் ப்ரம்ஹபதத்தை அடைவான். நான் கர்த்தாவல்ல. இதையெல்லாம் ப்ரம்ஹமே செய்கிறது. என்ற இதை 'ப்ரம்ஹார்ப்பணம்' என்கின்றனர் உண்மையறிந்த முனிவர்கள். அல்லது, கர்மங்களின் பலன்களைப் பரமேச்வரனிடம் ஒப்புவிக்கலாம். இதுவும் சிறந்த ப்ரம்ஹார்ப்பணம் என்கின்றனர். **மனுவும்:-** ஸகல கர்மங்களையும் த்யாகம் செய்து, கர்மங்களில் உண்டாகும் தோஷங்களைப் போக்கி, நியமத்துடன் வேதாப்யாஸம் செய்தால் புத்ரனுடைய ஐச்வர்யத்தில் ஸுகமாய் வாழ்வான். சுபமான ஆசாரமுடையவரும், எப்பொழுதும் நியமமுடையவரும். ஜபசீலரும், ஹோமம் செய்பவருமாய் இருப்பவருக்குக் கேடு உண்டாவதில்லை.

श्रीभगवान् — ब्रह्मार्पणं ब्रह्म हविर्ब्रह्माग्नौ ब्रह्मणा हुतम् । ब्रह्मैव तेन गन्तव्यं ब्रह्मकर्मसमाधिना इति ।। स्मृत्यर्थसारे — स्वकर्महानौ पतनमब्देनैव त्वनापदि । स्वकर्महानौ नास्तिक्यान्मासेन पतनं स्मृतम् । द्वादशाब्दव्रतनैव तस्य शुद्धिस्तु नान्यथा । तं निरीक्ष्यार्कमीक्षेत स्पर्शे

स्नायात् सचेलकम्।। तेन संभाषणं हास्यं कुर्वन्नब्देन तत्समः ।। तदन्नभुक्तौ सद्यस्तु सहशय्यासनेषु च इति ।।

ஸ்ரீ பகவான்:- ஹோமஸாதனம் ப்ரம்ஹம், ஹவிஸ்ஸும் ப்ரம்ஹம், அக்னியும் ப்ரம்ஹம், ஹோமம் செய்பவனும் ப்ரம்ஹம், ஹோமமெனும் கர்மமும் ப்ரம்ஹம், ப்ரம்ஹகர்மத்தில் ஈடுபட்டுள்ள யஜமானனுல் அடையப்பட வேண்டியதும் ப்ரம்ஹமேயாம். ஸ்ம்ருத்யர்த்தஸாரத்தில்:- ஆபத்தில்லாத காலத்தில் ஒரு வருஷம் ஸ்வகர்மத்தை விட்டால் பதிதனுவான். நாஸ்திக்யத்தால் ஒருமாதம் விட்டாலும் பதிதனுவான். அவனுக்கு த்வாதசாப்த வ்ரதத்தால்தான் சுத்தி. வேறுவிதத்தாலில்லை. அவனைப் பார்த்தால் ஸூர்யனைப் பார்க்க வேண்டும். அவனை ஸ்பர்சித்தால் ஸசேல ஸ்நானம் செய்ய வேண்டும். அவனுடன் வார்த்தை, சிரிப்பு இவைகளை ஒருவருஷம் செய்தால் அவனுக்குச் சமமாவான், அவன் அன்னத்தைப் புசித்தாலும், அவனுடன் சேர்ந்து படுக்கை, உட்காருதல் இவைகளைச் செய்தாலும், அப்பொழுதே அவனுக்குச் சமனுகிறான்.

होमं प्रशंसति वसिष्ठः — त्रिर्वित्तपूर्णां पृथिवीं यो ददाति ससागराम्। तत् सायमग्निहोत्रस्य कलां नार्हति षोडशीम्।। आद्या व्याहृतयस्तिस्रः स्वधा स्वाहा नमो वषट्। यस्यैते वेश्मनि सदा ब्रह्मलोकस्थ एव सः इति।। अङ्गिराः — यो दद्यात् काञ्चनं मेरुं पृथिवीं च ससागराम्। तत् सायं प्रातर्होमस्य तुल्यं भवति वा नवा इति। मनुरपि — अग्नौ प्रास्ताऽऽहुतिः सम्यगादित्यमुपतिष्ठते। आदित्याज्जायते वृष्टिर्वृष्टेरन्नं ततः प्रजाः।। दैवे कर्मणि युक्तो हि बिभर्तीदं चराचरम् इति।

ஹோமத்தைப் புகழ்கிறார் வஸிஷ்டர்:- பணத்தால் நிறைந்தும், ஸமுத்ரங்களுடன் கூடியதுமாகிய இப்பூமியை மூன்று தடவை தானம் செய்தவனின் புண்யம், ஒருவேளை மாலையக்னிஹோத்ரத்தின் புண்யத்தின் 16- பாகங்களில்

ஒரு பாகத்திற்குச் சமமாவதில்லை. பூ:. புவ:. ஸுவ:, என்ற மூன்று வ்யாஹ்ருதிகள், ஸ்வதா, ஸ்வாஹா, நம:. வஷட் என்ற இந்தச் சப்தங்கள் எவன் வீட்டில் எப்பொழுதும் உச்சரிக்கப்படுகின்றனவோ அவன் ப்ரம்ஹலோகத்தில் இருப்பவனே. அங்கிரஸ்:- எவன் ஸ்வர்ணமயமான மேருமலையையும், ஸமுத்ரங்களுடன் கூடிய பூமியையும் தானம் செய்கின்றானே, அவனது புண்யம், ஒருநாள் காலை மாலை அக்னிஹோத்ர ஹோமத்திற்குச் சமமாகுமோ, ஆகாதோ என்று ஸம்சயம். மனுவும்:- அக்னியில் விதிப்படி விடப்பட்ட ஆஹுதி ஸூர்யனை அடைகிறது. ஸூர்யனிடமிருந்து மழையும், மழையிடமிருந்து அன்னமும், அன்னத்தினின்றும் ப்ரஜைகளும் உண்டாகின்றன. அக்னிஹோத்ரத்தில் ஈடுபட்டுள்ளவன் ஸ்தாவர ஜங்கமாத்மகமான இவ்வுலகத்தையே போஷிக்கிறான்.

मङ्गलद्रव्यावलोकनम्।

होमादनन्तरकृत्यमाह वासिष्ठः - देवकार्यं ततः कृत्वा कुर्यान्मङ्गल-वीक्षणम् इति ।। माधवीये– होमं च कृत्वाऽऽलभनं शुभानां ततो बहिर्निर्गमनं प्रशस्तम्। दूर्वां च सर्पिर्दधि चोदकुम्भं धेनुं सवत्सां वृषभं सुवर्णम्।। मृद्गोमयं स्वस्तिकमक्षतांश्च तैलं मधु ब्राह्मणकन्यकाश्च। श्वेतानि पुष्पाणि तथा शमीं च हुताशनं चन्दनमर्कबिम्बम् ।। अश्वत्थवृक्षं च समालभेत ततश्च कुर्यान्निजजातिधर्मम् इति।। चन्द्रिकायाम्—रोचनां चन्दनं हेम मृदङ्गं दर्पणं मणिम्। गुरुमग्निं च सूर्यं च प्रातः पश्येत् सदा बुधः इति।। नारदः — लोकेऽस्मिन् मङ्गलान्यष्टौ ब्राह्मणो गौर्हुताशनः। हिरण्यं सर्पिरादित्य आपो राजा तथाऽष्टमः ।। एतानि सततं पश्येन्नमस्येदर्चयेच्च यः। प्रदक्षिणं च कुर्वीत तथाऽस्यायुर्न हीयते ।। स्वात्मानं च घृते पश्येद्यदीच्छेच्चिरजीवितम् इति।।

மங்களத்ரவ்யதர்சனம்

ஹோமத்திற்கடுத்த கார்யத்தைச் சொல்லுகிறார். தேவலர்:- தேவகார்யம் செய்து, பிறகு மங்களத்ரவ்ய தர்சனம் செய்ய வேண்டும். மாதவீயத்தில்:- ஹோமம் செய்த பிறகு மங்கள த்ரவ்யங்களை ஸ்பர்சிக்க வேண்டும். பிறகு வெளியிற் செல்வது சிறந்ததாகும். அறுகு, நெய், தயிர், ஜலகும்பம், கன்றுடன் கூடிய பசு, எருது, பொன், மண், கோமயம், ஸ்வஸ்திகம், அக்ஷதம், எண்ணெய், தேன், ப்ராம்ஹணன், கன்யை, வெண்ணிறமான புஷ்பங்கள், வன்னி, அக்னி, சந்தனம், ஸூர்யமண்டலம், அரசுமரம் இவைகளைத் தொடவேண்டும். பிறகு தன் ஜாதிக்குரிய தர்மத்தைச் செய்ய வேண்டும். சந்த்ரிகையில்:- கோரோசனை, சந்தனம், பொன், மருதங்கம், கண்ணுடி, ரத்னம், குரு, அக்னி, ஸூர்யன் இவைகளைக் காலையில் பார்க்க வேண்டும். நாரதர்:- இவ்வுலகில் மங்களமான த்ரவ்யங்கள் எட்டு, அவை - ப்ராம்ஹணன், பசு, அக்னி, பொன், நெய், ஸூர்யன், ஜலம், ராஜா என்பவைகளாம். இவைகளை எவன் ப்ரதினமும் பார்க்கின்றானோ, வணங்குகின்றானோ, பூஜிக்கின்றானோ, ப்ரதக்ஷிணம் செய்கின்றானோ அவனுக்கு ஆயுஸ் குறைவதில்லை. வெகுநாள் ஜீவித்திருக்க விரும்பினால் தன்னை நெய்யில் பார்க்க வேண்டும்.

मनुः — सुवर्णं चन्दनं रत्नं पञ्चगव्यानि रोचनाम्। प्रियङ्गुं सर्षपं क्षौद्रं मङ्गलानि प्रचक्षते॥ अग्निचित् कपिला सत्री राजा भिक्षुर्महोदधिः। दृष्टमात्राः पुनन्त्यके तस्मात् पश्येत्तु नित्यशः इति॥ स्मृत्यर्थसारे — विप्राग्न्यर्काम्बुगोहेमनृपाज्यं मङ्गलं स्मृतम्। अग्निचित् कपिला सत्री यज्वा मृष्टान्नदोऽम्बुधिः॥ ज्ञानसिद्धस्तपःशान्तो दीर्घायुर्धार्मिकः शुचिः। एते पापहराश्चैनान् सदा पश्येन्नमेदपि इति॥ भरद्वाजः — विष्णुक्रान्तां शमीं दूर्वां चन्दनं शङ्खपुष्पिकाम्। सिद्धार्थकान् प्रियङ्गुं च प्रातः शिरसि धारयेत्॥ पापिष्ठं दुर्भगं चान्धं नग्नमुत्कृत्तनासिकम्। प्रातर्न पश्येदेतांस्तु दृष्ट्वा पश्येत् दिवाकरम् इति॥

மனு:- பொன், சந்தனம், ரத்னம், பஞ்சகவ்யங்கள், கோரோசனை, தேமா, கடுகு, தேன் இவைகளை மங்கள வஸ்துக்கள் என்கின்றனர். சயனம் செய்தவன், காராம்பசு, யாகம் செய்தவன், அரசன், ஸன்யாஸீ, ஸமுத்ரம் இவர்கள் தர்சனத்திலேயே சுத்தி செய்பவர்கள், ஆகையால் இவர்களை ப்ரதிதினமும் பார்க்க வேண்டும். **ஸ்ம்ருத்யர்த்தஸாரத்தில்:-** ப்ராம்ஹணன், அக்னி, ஸூர்யன், ஜலம், பசு, பொன், அரசன், நெய் இவைகள் மங்கள த்ரவ்யங்களாம். சயனம் செய்தவன், காராம்பசு, தீக்ஷிதன், யாகம் செய்தவன், அன்னதாதா, ஸமுத்ரம், ப்ரம்ஹஜ்ஞானீ, தபஸ்வீ, தீர்க்காயுஸ்ஸு, தர்மசீலன், சுத்தனாய் இருப்பவன் இவர்கள் பாபத்தைப் போக்குகிறவர்களாவர். இவர்களைப் ப்ரதிதினமும் பார்க்க வேண்டும். நமஸ்கரிக்கவும் வேண்டும். **பரத்வாஜர்:-** விஷ்ணுக்ராந்தை, வன்னி, அறுகு, சந்தனம், சங்கபுஷ்பீ, வெண்கடுகு, தேமா இவைகளைக் காலையில் தலையில் தரிக்க வேண்டும். அதிகபாபி, குரூபி, குருடன், வஸ்த்ரம் இல்லாதவன், மூக்கரையன் இவர்களைக் காலையில் பார்க்கக் கூடாது. பார்த்தால் ஸூர்யனைப் பார்க்க வேண்டும்.

स्मृतिरत्ने — गोमूत्रं गोमयं सर्पिः क्षीरं दधि च रोचना। षडङ्गमेतत् परमं मङ्गल्यं सर्वतो नृणाम्॥ हरिद्रा लवणं धाना राजमाषास्तथा गुडम्। जीरकं फलपुष्पं च मङ्गलाष्टकमुच्यते॥ इक्षवः सूपराजश्च निष्पावा यवधान्यकम्। विकारवच्च गोक्षीरं कौसुम्भं कुसुमं तथा। लवणं चाष्टमं तद्वत् सौभाग्याष्टकमुच्यते इति॥ रत्नावल्याम्— धार्याणि शिरसा नित्यं पुष्पाणि श्रियमिच्छता। द्रोणेक्षुपुष्पं श्रीवृक्षपत्रं मूर्ध्नि निक्षिपेत् इति॥ बोधायनः — अरणिं कृष्णमार्जारं चन्दनं सुमणिं घृतम्। तिलान् कृष्णाजिनं छागं गृहेष्वेतानि धारयेत्॥ गृहे पारावता धार्याश्शारिका वै शुकास्तथा। घ्नन्ति वै धारिता ह्येते भूतबाधां गृहे ध्रुवम् इति॥

ஸ்ம்ருதிரத்னத்தில்:- பசுவின் மூத்ரம், பசுவின் சாணி, நெய், பால், தயிர், கோரோசனை இவ்வாறும் மனிதர்களுக்குப் பரம மங்களத்தைக் கொடுப்பதாகும். மஞ்சள், உப்பு, பொரி, மொச்சை, வெல்லம், ஜீரகம், பழம், புஷ்பம், இவ்வெட்டும் மங்களமெனப்படும். கரும்பு, மொச்சை, அவரை, யவை, பசுவின் பால், தயிர், நெய் முதலியது, செம்பருத்தி, பூ, உப்பு இவை ஸௌபாக்யாஷ்டகம் எனப்படுகின்றன. ரத்னாவளியில்:- ஸம்பத்தை விரும்புகிறவன் புஷ்பங்களைத் தலையில் தரிக்க வேண்டும். தும்பைப்பூ, கரும்புப்பூ, பில்வஇலை இவைகளைத் தலையில் தரிக்க வேண்டும். போதாயனர்:- அரணி, கரும்பூனை, சந்தனம், நல்ல ரத்னம், நெய், எள், மான்தோல், ஆடு இவைகளை வீட்டில் வைத்துக் கொள்ள வேண்டும். புறுக்களையும், பெண்கிளிகளையும், கிளிகளையும் வீட்டிலிருக்கச் செய்ய வேண்டும். இவை வீட்டில் தரிக்கப்பட்டால் பூதங்களின் தொந்தரையைப் போக்கும். நிச்சயம்.

स्मृतिप्रदीपिकायाम्—चित्रभानुमनड्वाहं देवं गोष्ठं चतुष्पथम्। ब्राह्मणं धार्मिकांश्चैव नित्यं कुर्यात् प्रदक्षिणम् इति॥ भरद्वाजः—कण्डूय पृष्ठतो गां तु कृत्वा चाश्वत्थवन्दनम्। उपगम्य गुरून् सर्वान् विप्रांश्चैवाभिवादयेत् इति॥ अभिवादनविधिस्तु पूर्वमेव निरूपितः॥

ஸ்ம்ருதிப்ரதீபிகையில்:- அக்னி, எருது, தேவதை, மாட்டுக் கொட்டில், நாற்சந்தி, ப்ராம்ஹணன், தார்மிகர் இவைகளை ப்ரதிதினமும் ப்ரதக்ஷிணம் செய்ய வேண்டும். பரத்வாஜர்:- பசுவை முதுகில் சொரிந்து, அரசுக்கு நமஸ்காரம் செய்து, குருக்களையும், எல்லா ப்ராம்ஹணர்களையும் அடைந்து நமஸ்கரிக்க வேண்டும். அபிவாதனவிதி முந்தியே சொல்லப்பட்டுள்ளது.

ब्रह्मयज्ञविधिः

अथ ब्रह्मयज्ञविधिः॥ तत्र दिग्देशकालानाह श्रुतिः—ब्रह्मयज्ञेन

यक्ष्यमाणः प्राच्यां दिशि ग्रामादछदिर्दर्श उदीच्यां प्रागुदीच्यां वोदित आदित्ये इति ।। अछदिर्दर्शशब्देन देशविशेषो लक्षितः । छदिः = गृहाच्छादनं तृणकटादि। तद्यत्र न दृश्यते, तत्रेत्यर्थः । उदित आदित्य इत्यनेन उदयात् प्राग्भावी कर्मकालो निषिध्यते । उदयानन्तरं होमकालत्वात् तदनन्तरकालो विधीयते। एतच्च अह्नि विहितकालोपलक्षणम् ।। तथा च बृहस्पतिः — स चार्वाक्तर्पणात् कार्यः पश्चाद्वा प्रातराहुतेः ।। वैश्वदेवावसाने वा नान्यदर्ते निमित्ततः इति ।। अत्र वैश्वदेवशब्देन मनुष्ययज्ञान्तकर्म विवक्षितम् ।।

ப்ரம்ஹயக்ஞ விதி

இனி ப்ரம்ஹயக்ஞ விதி. அதில் திக்கு, தேசம், காலம் இவைகளைச் சொல்லுகின்றது, ச்ருதி:- (வேதம்) 'ப்ரம்ஹயஜ்ஞேந + ஆதித்யே' என்று 'அசதிர்தர்சே' என்ற சப்தத்திலுல் தேசவிசேஷம் சொல்லப்பட்டது. 'சதி:' என்பதற்கு வீட்டின்மேல் ஆவரணமான புல், பாய் முதலியதென்று பொருள். அது எவ்விடத்தில் காணப்படுவதில்லையோ அவ்விடத்தில் என்று பொருள். 'உதித ஆதித்யே' என்பதால் உதயத்திற்கு முன்புள்ள கர்மகாலம் நிஷேதிக்கப்படுகிறது. உதயத்திற்குப் பிறகு ஹோமகாலமானதால், அதற்குப் பிறகுள்ள காலம் விதிக்கப்படுகிறது. இது பகலில் விதிக்கப்பட்ட காலத்தையும் தெரிவிக்கின்றது. அவ்விதமே. ப்ருஹஸ்பதி:- அந்த ப்ரம்ஹயக்ஞத்தைத் தர்ப்பணத்திற்கு முன், அல்லது காலை ஹோமத்திற்குப் பிறகாவது, வைச்வ தேவத்திற்குப் பிறகாவது செய்ய வேண்டும். காரணமில்லாமல் மற்றக் காலத்தில் செய்யக் கூடாது. இங்கு வைச்வதேவ சப்தத்தால் மனுஷ்யயக்ஞம் முடிவுவரையுள்ள கர்மம் சொல்லத் தகுந்தது.

यदाह व्यासः — यदिस्यात्तर्पणादर्वाक् ब्रह्मयज्ञः कृतो न हि। कृत्वा मनुष्ययज्ञं तु ततः स्वाध्यायमारभेत् इति ।। तर्पणं च

माध्याह्निकसावित्री जपानन्तरं विहितं स्मृतिचन्द्रिकामाधवीय-स्मृत्यर्थसारादौ ।। तथा च बोधायनः – अथादित्यमुपतिष्ठत उद्वयं तमसस्पर्युदुत्यं चित्रं तच्चक्षुर्देवहितं य उदगादित्यथोत्तरं देवतास्तर्पयत्यथ निवीती भूत्वा ऋषींस्तर्पयत्यथ प्राचीनावीती पितॄन् इति ।। व्यासोऽपि — मध्याह्नसमये स्नात्वा सावित्रीं वै जपेद्बुधः । आचम्य च यथाशास्त्रं शक्त्या स्वाध्यायमाचरेत् । ततः सन्तर्पयेद्देवानृषीन्पितृगणांस्तथा इति ।।

ஏனெனில், வ்யாஸர்:- தர்ப்பணத்திற்கு முன் ப்ரம்ஹயக்ஞம் செய்யப்படாவிடில் மனுஷ்யயக்ஞத்தைச் செய்து, பிறகு ப்ரம்ஹயக்ஞத்தை ஆரம்பிக்கவேண்டும். என்பதால். ஸ்ம்ருதிசந்த்ரிகா, மாதவீயம், ஸ்ம்ருத்யர்த்தஸாரம் முதலியவைகளில். தர்ப்பணமும் மாத்யாஹ்னிக காயத்ரீ ஜபத்திற்குப் பிறகு விதிக்கப்பட்டுள்ளது, அவ்விதமே, போதாயனர்:- பிறகு ஸூர்யோபஸ்தானம் செய்ய வேண்டும். 'உத்வயம், உதுத்யம், சித்ரம், தச்சக்ஷுஃ, யஉதகாத் என்ற மந்த்ரங்களால். பிறகு தேவதைகளைத் தர்ப்பிக்க வேண்டும். பிறகு நிவீதியாய் ருஷிகளையும், ப்ராசீனவீதியாய் பித்ருக்களையும் தர்ப்பிக்க வேண்டும். வ்யாஸரும்:- மத்யாஹ்னகாலத்தில் ஸ்நானம் செய்து காயத்ரியை ஜபிக்க வேண்டும். முறைப்படி ஆசமனம் செய்து சக்திக்குகந்தபடி ப்ரம்ஹயக்ஞம் செய்ய வேண்டும். பிறகு தேவர், ருஷிகள், பித்ருகணங்கள் இவர்களைத் தர்ப்பிக்க வேண்டும்.

जमदग्निः — मध्यन्दिने कृतोपस्थानः प्रागासीनः कुशासने इति ।। गौतमोऽपि — नित्यस्वाध्यायः पितृभ्यश्चोदकदानम् इति ।। एतदेवाभिप्रेत्य ब्रह्मयज्ञान्ते आश्वलायन आह देवतास्तर्पयति इत्यादि । कालादर्शे — प्रातर्मध्यन्दिने वाऽपि ब्रह्मयज्ञो विधीयते । प्रातर्यदि तदा प्रातराहुत्याः परतो भवेत् ।। मध्याह्ने चेत् तर्पणात् प्राग्वैश्वदेवात् परत्र वा इति ।। एवं च प्रातराहुत्यनन्तरं वा,

माध्याह्निकसावित्री जपानन्तरं तर्पणात् पूर्वं वा, मनुष्ययज्ञानन्तरं वा ब्रह्मयज्ञः कर्तव्यः ।।

ஜமதக்னி:- மத்யாஹ்னத்தில் உபஸ்தானம் செய்தவனுய், குசாஸனத்தில் கிழக்கு நோக்கி உட்கார்ந்தவனுய் என. கௌதமரும்:- வேதத்தை நித்யமும் அத்யயனம் செய்ய வேண்டும். பித்ருக்களுக்கும் உதகதானம் நித்யமும் செய்ய வேண்டும். (சகாரத்தால் தேவர்களுக்கும் ருஷிகளுக்கும்.) இந்த அபிப்ராயத்தி னுலேயே ஆச்வலாயனர் ப்ரம்ஹயக்ஞத்திற்குப் பிறகு 'தேவதைகளைத் தர்ப்பிக்க வேண்டும் என்பது முதலியதைச் சொன்னுர். காலாதர்சத்தில்:- காலையில், அல்லது மத்யாஹ்னத்தில் ப்ரம்ஹயக்ஞம் விதிக்கப்படுகிறது. காலையிலானுல் காலை ஹோமத்திற்குப் பிறகு செய்யப்பட வேண்டும். மத்யாஹ்னத்திலானுல் தர்ப்பணத்திற்குமுன், அல்லது வைச்வதேவத்திற்குப் பிறகு செய்யப்பட வேண்டும். இவ்விதமிருப்பதால், காலையில் ஹோமத்திற்குப் பிறகாவது, மத்யாஹ்னத்தில் காயத்ரீ ஜபத்திற்குப் பிறகு தர்ப்பணத்திற்கு முன்னுவது, மனுஷ்யயக்ஞத்திற்குப் பின்னுவவது ப்ரம்ஹயக்ஞத்தைச் செய்ய வேண்டும்.

देशादीतिकर्तव्यमाह मनुः - अपां समीपे नियतो नैत्यकं विधिमास्थितः । सावित्रीमप्यधीयीत गत्वाऽरण्यं समाहितः इति ।। आपस्तम्बोऽपि - अकृतप्रातराश उदकान्तं गत्वा प्रयतश्शुचौ देशेऽधीयीत इति ।।

தேசம் முதலியதையும் விதியையும் சொல்லுகிறுர், மனு:- ப்ரம்ஹயக்ஞம் செய்ய வேண்டியவன் அரண்யம் முதலிய ஜனமில்லாத ப்ரதேசம் சென்று, நதீ முதலிய ஜலத்தின் ஸமீபத்தில் கவனமுடையவனுய் நியம முடையவனுய், காயத்ரியையாவது அத்யயனம் செய்ய வேண்டும். ஆபஸ்தம்பரும்:- பகல் போஜனத்திற்கு முன்

ஜல ஸமீபத்திற்குச் சென்று சுத்தஞய், சுத்தமான ஸ்தலத்தில் அத்யயனம் (ப்ரம்ஹயக்ஞம்) செய்ய வேண்டும்.

उपवीतादीतिकर्तव्यं श्रुतिराह—दक्षिणत उपवीयोपविश्य हस्ताववनिज्य त्रिराचामेद्विः परिमृज्य सकृदुपस्पृश्य शिरश्चक्षुषी नासिके श्रोत्रे हृदयमालभ्य इति ॥ यज्ञोपवीत्युपविश्य ब्रह्मयज्ञेन यक्ष्य इति सङ्कल्प्य विद्युदसीत्युदकमुपस्पृशेत् । यक्ष्यमाणो वेष्ट्वा वा इति श्रुतेः । ततः हस्ताववनिज्य - आमणिबन्धनात् प्रक्षाल्य । पादयोरप्युपलक्षणमेतत् । कर्माङ्गं क्षालनान्तरं हस्तपादस्य । ततस्त्रिरपः पिबेत् । द्विरोष्ठौ परिमृज्य, सकृदुपस्पृश्य, सव्यं पाणिं पादौ च प्रोक्ष्य, शिरश्चक्षुषी नासिके श्रोत्रे हृदयं चालभ्य । प्रत्येकं सजलं स्पृष्ट्वेत्यर्थ इति हरदत्तेन व्याकृतम् ॥ त्रिराचामेदित्यादि यदुक्तं तस्य फलमाह श्रुतिः — यत्त्रिराचामति तेन ऋचः प्रीणाति यद्द्विः परिमृजति तेन यजूꣳषि यत् सकृदुपस्पृशति तेन सामानि यच्छिरश्चक्षुषी नासिके श्रोत्रे हृदयमालभते तेनाथर्वाङ्गिरसो ब्राह्मणानीतिहासान् पुराणानि कल्पान् गाथा नाराशꣳसीः प्रीणाति इति । आन्ध्रादयस्तु केचित् — यत्सकृदुपस्पृशति तेन सामानि इत्यस्यानन्तरं यत् सव्यं पाणिं पादौ प्रोक्षति यच्छिरश्चक्षुषी इति फलवाक्यमधीयते ॥

உபவீதம் முதலிய கார்யத்தைச் சொல்லுகின்றது ச்ருதி:- 'தக்ஷிணத: + ஹ்ருதயமாலப்ய' என்று. யக்ஞோபவீதியாய் உட்கார்ந்து, 'ப்ரம்ஹயக்ஞேந யக்ஷ்யே' என்று ஸங்கல்பித்து, 'வித்யுதஸி' என்ற மந்த்ரத்தால் ஜலத்தைத் தொட வேண்டும். 'யாகத்திற்கு முன்னும், பின்னும் ஜலத்தைத் தொடவேண்டு' மென்று ச்ருதியிருப்பதால். பிறகு கைகளை அலம்பி, மணிக்கட்டு வரையில் அலம்பி, இது கால்களுக்குமுபலக்ஷணம். கால் கைகளை அலம்புதல் இக்கர்மத்திற்கு அங்கமாகிய வேறுகர்மம். பிறகு மூன்று தடவை ஜலத்தைப் பருக வேண்டும். இருமுறை உதடுகளைத் துடைத்து, ஒருதடவை

ஜலத்தைத் தொட்டு, இடதுகையையும், பாதங்களையும் ப்ரோக்ஷித்து, தலை, கண்கள், மூக்குகள், காதுகள், மார்பு இவைகளை ஸ்பர்சிக்கவும். இங்கு 'தனித்தனியாய் ஜலத்துடன் தொட்டு' என்று ஹரதத்தரால் வ்யாக்யானம் செய்யப்பட்டுள்ளது. 'மூன்றுமுறை ஜலத்தைப் பருகவேண்டும்' என்பது முதலாய் முன் சொல்லியதற்குப் பலனைச் சொல்லுகிறது ச்ருதி - 'யத்த்ரிராசாமதி + ப்ரீணாதி' என்று. மூன்று தடவை ஆசமனத்தால் ருக்வேதத்தையும், இருமுறை துடைப்பதால் யஜுர் வேதத்தையும், ஒரு தடவை தொடுவதால் ஸாமவேதத்தையும், இடது கை கால்கள் இவைகளை ப்ரோக்ஷிப்பதாலும், தலை, கண்கள், மூக்குகள், காதுகள், மார்பு இவைகளைத் தொடுவதாலும், அதர்வாங்கிரஸ்ஸுகள், ப்ராம்ஹணங்கள், இதிஹாஸங்கள், புராணங்கள், கல்பங்கள், காதைகள், நாராசம்ஸிகள் என்றவைகளை த்ருப்தி செய்விக்கின்றன். ஆந்திரர் முதலான சிலர் தேநஸாமானி என்பதைத் தொடர்ந்து இடது காலையும் இருகால்களையும் புரோக்ஷிப்பது சிரஸையும் கண்களையும் புரோக்ஷிப்பது என்ற பலனைக் குறித்த வாக்யத்தையும் சொல்லுகின்றனர்.

कर्तव्यान्तरमाह श्रुतिः — दर्भाणां महदुपस्तीर्योपस्थं कृत्वा प्राङासीनः स्वाध्यायमधीयीत इति।। महत् - प्रभूतं यथा तथा आसनत्वेन दर्भानुपस्तीर्य। द्वितीयार्थे षष्ठी। उपस्थमिति दक्षिणोत्तरिणमासनविशेषं कृत्वा प्राङ्मुख आसीनः तत्रापि द्यावापृथिव्योः सन्धिमीक्षमाणः समाहितः स्वाध्यायमधीयीत - आत्मीयं वेदं पठेदित्यर्थः ।।

வேறு கார்யத்தையும் சொல்லுகின்றது ச்ருதி - 'தர்ப்பாணாம் + மதீயீத' என்று. நிறைய இருக்கும்படி தர்ப்பங்களை ஆஸனமாய்ப் பரத்தி, வலதுகால் இடதுகாலின் மேலிருக்கும் ஆஸனத்திலமர்ந்து, கிழக்கு முகமாய் உட்கார்ந்தவனாய், ஆகாசம், பூமி இவைகளில் நடுவைப் பார்ப்பவனாய், கவனமுடையவனாய், தனது வேதத்தைப் படிக்க வேண்டும்.

दर्भासनस्य अवश्यकर्तव्यतार्थं दर्भाः स्तूयन्ते श्रुत्यैव अपां वा एष ओषधीना ꣳ रसो यद्दर्भाः सरसमेव ब्रह्म कुरुते इति ।। अपामोषधीनां च रसो दर्भा नाम । तस्मात् तत्र आसित्वा अधीयानः सरसं - वीर्यवत् ब्रह्म - वेदं कुरुत इत्यर्थः ।। प्राङासीन इत्यत्र विशेषमाह श्रुतिः – दक्षिणोत्तरौ पाणी कृत्वा सपवित्रौ इति ।। दक्षिणः हस्तः उत्तरः - उपरिभूतः ययोस्तौ दक्षिणोत्तरौ । एवंभूतौ सपवित्रौ पाणी उत्सङ्गवर्तिनौ कृत्वा । समावप्रच्छिन्नाग्रौ दर्भौ प्रादेशमात्रौ पवित्रे ।।

தர்ப்பாஸனம் ஆவச்யகமென்பதற்காகத் தர்ப்பங்களைப் புகழ்கிறது வேதமே - 'அபாம்வா + குருதே' என்று. ஜலங்களுடையவும், ஓஷதிகளுடையவும் ஸாரமாம் தர்ப்பைகளென்பது, ஆகையால் அவைகளில் உட்கார்ந்து அத்யயனம் செய்பவன் வேதத்தை வீர்யமுள்ளதாகச் செய்கிறான் என்று பொருள். கிழக்கு நோக்கி உட்கார்ந்து என்றவிடத்தில் விசேஷத்தைச் சொல்லுகின்றது ச்ருதி - 'தக்ஷிணோத்தரேள + ஸபவித்ரௌ' என்று. இடதுகையின் மேல் வலதுகையிருக்க வேண்டும். பவித்ரமும் தரிக்க வேண்டும். இவ்விதமான கைகளை மடியின் மேல் வைத்துக் கொண்டு. ஸமங்களாயும், நுனி நறுக்கப்படாதவைகளும், ஒட்டையளவுள்ளவைகளுமான இரண்டு தர்ப்பங்கள் பவித்ரம் எனப்படும்.

अथ यदुक्तं स्वाध्यायमधीयीत इति, तत्र विशेषमाह— ओमिति प्रतिपद्यत इति । प्रतिपद्यते - आरभते । अथ ओङ्कारः स्तूयते 'एत' दित्यादिना ।। ओमिति प्रतिपत्त्यनन्तरकर्तव्यमाह श्रुतिः — त्रीनेव प्रायुङ्क्त भूर्भुवस्स्वरित्याहैतद्वै वाचः सत्यं यदेव वाचः सत्यं तत् प्रायुङ्क्ताथ सावित्रीं गायत्रीं त्रिरन्वाह पच्छोऽर्धर्चशोऽनवान ꣳ सविता श्रियः प्रसविता श्रियमेवाप्नोत्यथो प्रज्ञातयैव प्रतिपदा छन्दा ꣳ सि प्रतिपद्यते इति ।। भूर्भुवः स्वरित्याह - व्याहृतित्रयं पठति । किं कृतं भवति ? त्रीनेव वेदान् प्रयुक्तवान् भवति । एतद्वै व्याहृतित्रयं

वाचः सत्यं - वेदात्मिकाया वाचः सम्बन्धि सत्यं सारभूतम् । त्रिभ्यस्सारत्वेन प्रभूतत्वात् दध्नो नवनीतमिव । तस्मात्तदेव पठन् त्रयीसारमेव पृथगवस्थितं प्रयुक्तवान् भवति ।। अथ व्याहृत्यनन्तरं सावित्रीं सवितृदेवत्यां, गायत्रीं - तत्सवितुरित्यृचं, त्रिरन्वाह - अनुक्रमेण पठति । पच्छः - पादं पादम् । अथ अर्धर्चशः - अर्धर्चमर्धर्चम् । सङ्ख्यैकवचनादिति शस् । अथ अनवानं - अनुच्छ्वासं, अर्धर्चेऽप्यनुपरमन् । अत्र केचित् व्याहृतीर्विहृताः त्रिष्वनुवचनेषु कुर्वन्ति । अन्ये तु व्याहृतीर्विहृताः पादादिष्वन्तेषु वा तथाऽर्धर्चयोरुत्तमां कृत्स्नायाम् इति ब्रह्मोपदेशक्रमेण कुर्वन्ति । सविता खलु सर्वस्याः श्रियः प्रसविता - उत्पादयिता । अतस्तद्देवत्यां गायत्रीमधीयानः श्रियं प्राप्नोति । अथ सावित्र्यन्ते स्वाध्याय-मधीयीतेति विधिः । एवमेकस्मिन्नहनि विधानमुक्तम् । अथो - अनन्तरादिषु दिवसेषु प्रज्ञातयैव प्रतिपदा - उपक्रमेण, छन्दांसि छन्दोवयवान्, प्रतिपद्यते - आरभते । अव्यवधानेनावस्थितत्वं प्रज्ञातत्वम् । पूर्वेद्युर्यावदधीतं, तत एवारभ्य उत्तरेद्युरधीयीत । न तु यं कञ्चिद्भेदभागमिति ।।

அத்யயனத்தில் விசேஷத்தைச் சொல்லுகின்றது, ச்ருதி:- 'ஒம்' என்று ஆரம்பிக்க வேண்டும். பிறகு செய்ய வேண்டியதைச் சொல்லுகின்றது, ச்ருதி:- 'த்ரீநேவ + பத்யதே' என்று. பூ:. புவ:, ஸுவ: என்ற மூன்று வ்யாஹ்ருதிகளையும் படிக்க வேண்டும். என்ன செய்ததாகும்? மூன்று வேதங்களையும் படித்தவனாகிறான். இந்த மூன்று வ்யாஹ்ருதிகளும் வேதரூபமான வாக்கின் ஸாரமாகியதாம். தயிரினின்றும் வெண்ணை உண்டாவது போல் மூன்று வேதங்களினின்றும் ஸாரமாய் உண்டாகியவை. ஆகையால் அம்மூன்று வ்யாஹ்ருதிகளையும் படிப்பவன் மூன்று வேதங்களின் ஸாரத்தையே படித்தவனாகிறான். வ்யாஹ்ருதிகளைப் படித்த

பிறகு ஸவிதாவைத் தேவதையாயுடைய காயத்ரியை - தத்ஸவிதுः என்னும் ருக்கை மூன்று தடவை படிக்க வேண்டும். பாதம் பாதமாய். பாதி பாதியாய். மூச்சுவிடாமல் ருக்கின் நடுவிலும் நிறுத்தாமல். இங்கு சிலர் வ்யாஹ்ருதிகளைப் பிரித்து ஒவ்வொரு அனுவசனத்திற்கு ஒன்றுகச் சொல்லுகின்றனர். சிலர் ப்ரம்ஹோபதேசத்திற்கு சொல்லிய க்ரமப்படி படிக்கின்றனர். ஸவிதா என்ற தேவன் ஸகல ஸம்பத்தையும் உண்டாக்குகிறவன். ஆகையால் ஸவித்ரு தேவதாகமான காயத்ரியை படிப்பவன் ஸம்பத்தை அடைகிறான். காயத்ரியைப் படித்த பிறகு தனது வேதத்தை அத்யயனம் செய்ய வேண்டும் என்பது விதி. இவ்விதம் ஒரு நாளில் செய்ய வேண்டிய விதி சொல்லப்பட்டது. மறுநாள் முதலிய தினங்களில், முதல்நாளில் முடிந்த பாகத்திற்கு மேலுள்ள பாகத்தையே கவனத்துடன் ஆரம்பித்து அத்யயனம் செய்ய வேண்டும். இதன்றி ஏதாவது ஒரு பாகத்தைப் படிக்கக் கூடாது.

स्वशाखाध्ययनं ब्रह्मयज्ञः । तथा च ब्राह्मणम् — यत्स्वाध्यायमधीयीतैकामप्यृचं यजुः साम वा तद्ब्रह्मयज्ञः सन्तिष्ठते इति । शौनकः — यश्च श्रुतिजपः प्रोक्तो ब्रह्मयज्ञः स उच्यते इति ।। पैठीनसिः — स्वशाखाध्ययनं यत्तत् ब्रह्मयज्ञं प्रचक्षते । ब्रह्मयज्ञपरो विप्रो ब्रह्मलोके महीयते इति ।।

தன் வேதத்தையோதுவதே ப்ரம்ஹயக்ஞம். அவ்விதமே வேதம் சொல்லுகிறது. 'யத்ஸ்வாத்யாய + திஷ்டதே' என்று. ஸ்வ - தன்னுடைய, அத்யாயः- வேதம், என்று பொருள். சௌனகர்:- வேதத்தை ஓதுவதென்பதெதுவோ, அது ப்ரம்ஹயக்ஞம் எனப் படுகிறது. பைடீநஸி:- தனது வேதத்தை ஓதுவதெதுவோ அதை ப்ரம்ஹயக்ஞம் என்கின்றனர். ப்ரம்ஹயக்ஞத்தை நித்யமனுஷ்டிப்பவன் ப்ரம்ஹலோகத்தில் சிறப்பை அடைகிறான்.

आश्वमेधिकेऽपि — वेदमादौ समारभ्य तथोपर्युपरि क्रमात्। यदधीतेऽन्वहं शक्त्या तत्स्वाध्यायं प्रचक्षते ।। ऋचं वाऽथ यजुर्वाऽपि साम गाथामथापि वा। इतिहासपुराणानि यथाशक्ति न हापयेत् इति ।। योगयाज्ञवल्क्यः – प्रदक्षिणं समावृत्य नमस्कृत्योपविश्य च। दर्भेषु दर्भपाणिभ्यां संहताभ्यां कृताञ्जलिः ।। स्वाध्यायं तु यथाशक्ति ब्रह्मयज्ञार्थमाचरेत् इति ।। हारीतः — दर्भासीनो दर्भपाणिर्ब्रह्म-यज्ञविधानतः। ब्राह्मणो ब्रह्मयज्ञं तु कुर्याच्छ्रद्धासमन्वितः इति ।।

ஆச்வமேதிகத்திலும்:- வேதத்தை முதலில் ஆரம்பித்து மேல் மேலும் வரிசையாய் ப்ரதிதினமும் சக்திக்குத் தகுந்தபடி அத்யயனம் செய்வதை ஸ்வாத்யாயம் (ப்ரம்ஹயக்ஞம்) என்கின்றனர். ருக்கு, அல்லது யஜுஸ், ஸாமம், காதா, இதிஹாஸம், புராணம் இவைகளிலொன்றை யதாசக்தி அத்யயனம் செய்ய வேண்டும் விடக்கூடாது. **யோகயாக்ஞவல்க்யர்:-** ப்ரதக்ஷிணமாய்த் திரும்பி, நமஸ்கரித்து, தர்ப்பங்களில் உட்கார்ந்து, தர்ப்பங்களுடன் கூடிய கைகளைச் சேர்த்து அஞ்சலி செய்பவனுய் ப்ரம்ஹயக்ஞத்திற்காக யதாசக்தி வேதாத்யயனம் செய்ய வேண்டும். **ஹாரீதர்:-** ப்ராம்ஹணன் தர்ப்பங்களில் அமர்ந்து, தர்ப்பங்களைக் கையில் தரித்து, ப்ரம்ஹயக்ஞ விதிப்படி, ச்ரத்தை உடையவனுய் ப்ரம்ஹயக்ஞம் செய்ய வேண்டும்.

शौनकः — प्राणायामैर्दग्धदोषः शुक्लाम्बरधरः शुचिः। यथाविध्यप आचम्य आहरेद्दर्भसंस्तरम्।। पवित्रपाणिः कृत्वा तु उपस्थं दक्षिणोत्तरम् इति ।। स एव — प्राग्वोदग्वा ग्रामान्निष्क्रम्याप आप्लुत्य शुचौ देशे यज्ञोपवीत्याचम्याक्लिन्नवासा दर्भाणां महदुपस्तीर्य प्राक्कूलानां तेषु प्राङ्मुख उपविश्योपस्थं कृत्वा दक्षिणोत्तरौ पाणी सन्धाय पवित्रवन्तौ द्यावापृथिव्योः सन्धिमीक्षमाणस्संमील्य वा यत्र वा युक्तमात्मानं मन्यते तथा युक्तोऽधीयीत स्वाध्यायं ओंपूर्वा व्याहृतीस्सावित्रीमन्वाह पच्छोऽर्धर्चशः सर्वाम् इति ।।

சௌனகர்:- வெளுத்த வஸ்த்ரம் தரித்தவனுய், சுத்தனுய், ப்ராஹ்ம யாமங்களால் பாபங்களற்றவனுய், விதிப்படி ஆசமனம் செய்து, தர்ப்பாஸனத்தில் உட்கார்ந்து, வலதுகால் இடதுகாலின் மேலுள்ள ஆஸனத்தைச் செய்து கொண்டு, ப்ரம்ஹயக்ஞம் செய்ய வேண்டும். சௌனகரே:- க்ராமத்தினின்றும் கிழக்கு அல்லது வடக்குத்திக்கிற் சென்று, ஸ்நானம் செய்து, சுத்தமான ஸ்தலத்தில் யக்ஞோபவீதியாய் ஆசமனம் செய்து, உலர்ந்த வஸ்த்ரமுடையவனுய், கிழக்கு நுனியாயுள்ள தர்ப்பங்களைக் கவனமாய்ப் பரத்தி அவைகளின் மேல் கிழக்கு முகனுய் உட்கார்ந்து, வலதுகாலை இடது காலின் மேல் தரித்து, இடதுகையின் மேல் வலதுகையை வைத்து, இருகைகளிலும் பவித்ரம் தரித்து, ஆகாசம் பூமி இவைகளின் நடுவைப் பார்ப்பவனுய், அல்லது கண்களை மூடிக்கொண்டு, எவ்விதம் இருந்தால் விக்ஷேபம் இல்லாமல் இருக்குமோ அவ்விதமிருந்து வேதத்தைப் படிக்க வேண்டும். ஓங்காரத்தையும் வ்யாஹ்ருதிகளையுமம் படித்துப் பிறகு காயத்ரியை பாதம் பாதமாகவும், பாதி பாதி ருக்காகவும், பிரிக்காமல் சேர்ந்ததாகவும் சொல்ல வேண்டும்.

स्मृतिरत्नावल्याम्—स्नात्वा यज्ञोपवीती च भूत्वाऽऽचम्योदकं तथा। पवित्रे लक्षणैर्युक्ते कृत्वाऽच्छिन्नाग्रतादिकैः ॥ तयोरेकैकमेकैक-पाणिना धारयेत् पृथक्। सव्यस्य पाणे रङ्गुष्ठप्रदेशिन्योस्तु मध्यतः ॥ दक्षिणस्याङ्गुलीर्न्यस्य चतस्रोऽङ्गुष्ठवर्जिताः । तथा सव्यकराङ्गुष्ठं दक्षिणाङ्गुष्ठवेष्टितम् ॥ निधाय चैवं सम्बद्धौ पाणी दक्षिणसक्थनि। प्रणवं व्याहृतीश्चैव गायत्रीं च जपेत् क्रमात्। पच्छोऽर्धर्चश उच्छ्वासाद्वेदा-दींश्चतुरो जपेत्। नित्यं प्रश्नमधीयीत यथाशक्त्यथवा पठेत्। तन्त्रत्रयं काठकं च वैश्वदेवमनून् पठेत्। मन्त्र प्रश्नौ पुनश्चैवं ब्रह्मयज्ञे क्रमं विदुः ॥ यावन्तं मन्त्रमध्येतुं शक्यं स्वाध्यायमात्मनः। तावन्तमनुवाकं वा सूक्तं प्रश्नमथापि वा। तथा यावत् प्रतिज्ञात मध्यायं सूक्तमेव वा। ऋचं

वाऽप्यन्ततोऽवश्य मधीयीत स्वशक्तितः । ओं नमो ब्रह्मण इति जपित्वा प्रणवं जपेत् । यद्द्यादतिथिभ्यस्तु ब्रह्मयज्ञस्य दक्षिणा ।। न कुर्यादासनस्थस्तु ब्रह्मयज्ञं कदाचन इति ।। आसनस्थः - कम्बलाद्यासनस्थः ।।

ஸ்ம்ருதிரத்னவளியில்:- ஸ்நானம் செய்து, யக்ஞோபவீதியாய் இருந்து, ஆசமனம் செய்து, லக்ஷணங்களுடன் கூடிய இரண்டு பவித்ரங்களைச் செய்து அவைகளுள் ஒவ்வொன்றை ஒவ்வொரு கையில் தனியாய், தரிக்க வேண்டும். இடது கையின் பெருவிரல் தர்ஜனீ விரலிவைகளின் நடுவில், வலது கையின் பெருவிரலல்லாத நான்கு விரல்களையும் வைத்து, இடது கையின் பெருவிரலை வலது கையின் பெருவிரலால் சுற்றி, இவ்விதம் சேர்க்கப்பட்டவைகளை வலது துடையில் வைத்து, ப்ரணவம், வ்யாஹ்ருதிகள், காயத்ரீ இவைகளை க்ரமமாய் ஜபிக்க வேண்டும். காயத்ரியை பாதம் பாதமாகவும், பாதி ருக்காகவும், முழுவதுமாகவும் ஜபிக்க வேண்டும். வேதாதிகள் நான்கையும் ஜபிக்க வேண்டும். ஒவ்வொரு நாளும் ஒவ்வொரு ப்ரச்னத்தைப் படிக்க வேண்டும். அல்லது யதாசக்தி படிக்கலாம். (க்ரமமாய்) மூன்று தந்த்ரங்களையும். (ஸம்ஹிதா, ப்ராம்ஹணம் ஆரண்யகம் இவை மூன்று தந்த்ரங்களாம்) காடகத்தையும், வைச்வதேவ மந்த்ரங்களையும், மந்த்ர ப்ரச்னங்களிரண்டையும் படிக்க வேண்டும். மறுபடியும் இவ்விதமே. ப்ரஹ்மயக்ஞத்தில் இவ்விதம் க்ரமத்தைக் சொல்லுகின்றனர். எவ்வளவு மந்த்ரத்தைப் படிக்க முடியுமோ அவ்வளவு அனுவாகமாவது, ஸூக்தமாவது, ப்ரச்னமாவது படிக்கலாம். அப்படியே எவ்வளவு ப்ரதிக்ஞை செய்து கொள்ளப்பட்டதோ அவ்வளவு அத்யாயம், அல்லது ஸூக்தம், ருக்கு இவைகளை யதாசக்தி படிக்கலாம். ஓம் நமோ ப்ரம்ஹணே என்று ஜபித்து ப்ரணவத்தையும் ஜபிக்க வேண்டும். அதிதிகளுக்கு எதைக் கொடுக்கின்றனரே அது தக்ஷிணை. ஒருகாலும் கம்பளம்

முதலிய ஆஸனத்தில் இருப்பவனுய் ப்ரம்ஹ யக்ஞும் செய்யக்கூடாது.

स्मृत्यन्तरे – नमो ब्रह्मण इत्येतां त्रिरुक्त्वा प्रणवं वदेत्। ग्रामाद्बहिरधीयीत मध्यमेन स्वरेण तु॥ अधीते मनसा ग्रामे ब्रह्मयज्ञं करोति चेत्। अयं तु ब्रह्मयज्ञोऽस्य भिक्षादानादि दक्षिणा इति। आपस्तम्बः – शुचौ देशेऽधीयीत यथाध्यायमुत्सृजन् वाचा मनसा चानध्याये इति। यथाध्यायं - यथापाठम्। अनेन पदक्रमाद्यनुषङ्गो निषिध्यते। वाचेति मानसस्य व्युदासः। उत्सृजन् - आदित आरभ्य प्रथमादिष्वहस्सु अधीतं द्वितीयादिष्वहस्सु उत्सृज्य ततः परमधीयीतेत्यर्थः॥

மற்ருெரு ஸ்ம்ருதியில்:- 'நமோப்ரம்ஹணே' என்ற ருக்கை மூன்று தடவை படித்து ப்ரணவத்தையும் சொல்ல வேண்டும். க்ராமத்திற்கு வெளியில் மத்யமஸ்வரத்துடன் படிக்க வேண்டும். க்ராமத்திற்குள் ப்ரம்ஹயக்ஞும் செய்தால் மனதால் படிக்க வேண்டும். இதுவே ப்ரம்ஹயக்ஞமாம். பிக்ஷைகொடுப்பது முதலியது இதற்குத் தக்ஷிணையாம். ஆபஸ்தம்பர்:- சுத்தமான ஸ்தலத்தில், உயர்ந்த குரலினுல், அத்யயனம் செய்த பாடப்ரகாரமாய், முந்திய தினத்தில் படித்ததை விட்டு அடுத்தது முதல் படிக்க வேண்டும். அனத்யயன தினத்தில் மனதால் படிக்க வேண்டும். பாடப்ரகாரமாய் என்றதால் பதம் க்ரமம் முதலியவை நிஷேதிக்கப்படுகின்றன. வாசா என்பதால் மானஸிகம் கூடாதென்பதாம்.

मध्यन्दिने विशेषमाह श्रुतिः – मध्यन्दिने प्रबलमधीयीतासौ खलु वावैष आदित्यो यद्ब्राह्मणस्तस्मात्तर्हि तेक्ष्णिष्ठं तपति इति॥ प्रबलं - प्रभूतम्। योऽयं ब्राह्मणो नाम एषः असावादित्यः - स्वयमादित्य एवायम्। तयोरेकत्वात्। स यश्चायं पुरुषे। यश्चासावादित्ये। स एकः इति श्रुतेः। यस्मात् ब्राह्मणाख्य आदित्यो

मध्यन्दिने अध्ययनं तपस्स्थनीयं करोति, तर्हि - तस्मिन् काले मध्यन्दिने मुख्यादित्यः, तेक्ष्णिष्ठं - तीक्ष्णतरं तपतीत्यर्थः ॥

மத்யாஹ்ன காலத்திலுள்ள விசேஷத்தைச் சொல்லுகின்றது. ச்ருதி:- 'மத்யந்தினே + தபதி' என்று. மத்யாஹ்னத்தில் உரக்க அத்யயனம் செய்ய வேண்டும். ப்ராம்ஹணன் என்பவன் இந்த ஸூர்யனேயாம். அவ்விருவரும் ஒன்றுனவரே. 'புருஷனிடத்தில் இருப்பவனும், ஸூர்யனிடத்தில் இருப்பவனும் ஒருவன்' என்று ச்ருதி இருப்பதால். எதனால் ப்ராம்ஹண ஸூர்யன் மத்யாஹ்னத்தில் தபஸ்ஸின் ஸ்தானத்திலுள்ள அத்யயனத்தை ப்ரபலமாய்ச் செய்கின்றானே, ஆகையால் அக்காலத்தில் வான ஸூர்யனும் மிகத் தீக்ஷ்ணமாய்த் தபிக்கின்றான்.

तत्रैव – नमो ब्रह्मण इति परिधानीयां त्रिरन्वाहाप उपस्पृश्य गृहानेति ततो यत् किञ्च ददाति सा दक्षिणा इति ॥ परिधानीयां - परिसमापनीमृचं त्रिरन्वाह । अप उपस्पृश्य । आदावन्ते चेति वेदितव्यम्। तत्रादौ विद्युदसीति। अन्ते वृष्टिरसीति। ततो गृहं गत्वा यत् किञ्चिदपि गृहस्थो दद्यात्। सा दक्षिणा अस्य यज्ञस्याङ्गम्। तस्माद्यत् किञ्चिद्दद्यादिति विधिः।

ச்ருதியிலேயே:- 'நமோ + தக்ஷிணை' என்று. 'நமோப்ரஹ்மணே' என்று ஸமாப்தியில் சொல்லும் ருக்கை மூன்று தடவை சொல்ல வேண்டும். பிறகு ஜலத்தைத் தொடவேண்டும். இது ஆதியிலும் அந்தத்திலும். ஆதியில் 'வித்யுதஸி' என்பதால். அந்தத்தில் 'வ்ருஷ்டிரஸி' என்பதால். பிறகு வீட்டிற்குச் செல்ல வேண்டும். பிறகு எந்த ஏதாவதொரு வஸ்துவை க்ருஹஸ்தன் கொடுக்கின்றானே அந்தத் தக்ஷிணை இந்த யாகத்திற்கு அங்கமாம். ஆகையால் ஏதாவதொன்றைக் கொடுக்க வேண்டும் என்று விதிக்கப்படுகிறது.

एवं मुख्यविधिमुक्त्वा आपत्कल्पमाह श्रुतिः – ग्रामे मनसा स्वाध्यायमधीयीत दिवानक्तं वेति हस्माह शौच आह्वेय उतारण्येऽबल उत वाचोत तिष्ठन्नुत व्रजन्नुतासीन उत शयानोऽधीयीतैव स्वाध्यायं तपस्वी पुण्यो भवति य एवं विद्वान् स्वाध्यायमधीते इति । यदुक्त मछदिर्दर्श इति, तत्रोच्यते ग्रामे मनसेति। यदुक्तमुदित आदित्य इति, तत्रोच्यते, दिवानक्तं वेति । मनसेत्येव । शौचः - शुचः पुत्रः । आह्वेयः - एवंनामक ऋषिः इत्याह। उतारण्ये - अरण्येऽपि, अबलः - अशक्तश्चेन्मनसाऽधीयीत । उत वाचा । आसनाशक्तौ स्थानाद्यनुज्ञायते उत तिष्ठन्नित्यादिना। अधीयीतैव - अशक्तश्चेत् यथाकथञ्चिदध्ययनमेव कुर्यात् । न त्वङ्गाशक्त्या प्रधानं परित्याज्यमित्यर्थः। य एवं स्वाध्याय माहात्म्यं विद्वान् - विजानन् स्वाध्यायमधीते, स एव तपस्वी भवति - अध्ययनफलं प्राप्नोति। पुण्यः - पङ्क्तिपावनश्च भवतीत्यर्थः।

இவ்விதம் முக்யகல்பத்தைச் சொல்லி ஆபத்கல்பத்தைச் சொல்லுகின்றது:- ச்ருதி:- 'க்ராமே மனஸா + மதீதே' என்று. க்ராமத்திலாஞல் மனதிஞலேயே அத்யயனம் செய்ய வேண்டும். பகலிலோ ராத்ரியிலோ செய்ய வேண்டும் என்றூர் சுசி என்பவரின் புத்ரர் ஆஹ்னேயர் என்பவர். அரண்யத்திலும் அசக்தன் மனதிஞல் செய்யலாம், அல்லது வாக்கிஞல் செய்யலாம். விதிப்படி உட்காருவதற்குச் சக்தியில்லாவிடில் நின்றுகொண்டோ, சென்று கொண்டோ, உட்கார்ந்து கொண்டோ, படுத்துக் கொண்டோ எவ்விதமாயாவது ப்ரம்ஹயக்ஞம் செய்ய வேண்டும். அங்கத்தை அனுஷ்டிக்க முடியாததால் ப்ரதானத்தை விடக்கூடா தென்பது பொருள். எவன் இவ்விதம் ப்ரம்ஹயக்ஞத்தின் மஹிமையை அறிந்தவனுய் அத்யயனம் செய்கின்றூனே அவன் தபஸ்வியாய் ஆகிறூன் - அத்யயன பலத்தை

அடைகிறான். புண்யன் - பங்க்திபாவனனுமாகிறான் என்பது பொருள்.

नक्तं वेत्येतत् ब्रह्मयज्ञस्यावश्यकत्वप्रतिपादनपरम् । न तु रात्रावनुष्ठानपरम्। तथा च श्रूयते - स वा एष यज्ञः सद्यः प्रतायते सद्यः सन्तिष्ठते तस्य प्राक् सायमवभृथ इति। स एष ब्रह्मयज्ञः सद्यः अहन्येव प्रतायते - आरभ्यते । अहन्येव सन्तिष्ठते - समाप्यते । तस्य सायङ्कालात् पूर्वमेव अवभृथः - समाप्तिरित्यर्थः। स्मर्यते च – रात्रौ प्रहरपर्यन्तं दिवाकृत्यानि कारयेत्। ब्रह्मयज्ञं च सौरं च वर्जयित्वा विशेषतः इति । अतः दिवा ब्रह्मयज्ञकरणे स्नातकव्रतलोपे च प्रायश्चित्तमभोजनम् इति मनूक्तं द्रष्टव्यम्।

'ராத்ரியிலாவது' என்றது ப்ரம்ஹயக்ஞம் அவச்யம் செய்யப்பட வேண்டும் என்பதைச் சொல்வதற்காகவாம். ராத்ரியில் செய்யலாம் என்பதைச் சொல்வதற்கல்ல. அவ்விதமே ச்ருதியுள்ளது - 'ஸவாஏஷ+மவப்ருதः' என்று இந்த ப்ரம்ஹயக்ஞம் பகலிலேயே ஆரம்பிக்கப் படுகிறது, பகலிலேயே முடிக்கப்படுகிறது. அதற்கு ஸாயங்காலத்திற்கு முன்பே அவப்ருதம் = ஸமாப்தி என்று பொருள். ஸ்ம்ருதியுமுள்ளது: 'பகலில் செய்ய வேண்டிய கார்யங்களை ராத்ரியில் ஒரு யாமத்திற்குள் செய்யலாம். ப்ரம்ஹயக்ஞம், ஸௌரம் - ஸூர்யனைக் குறித்துச் செய்யும் நமஸ்காரம், பூஜை முதலியதைத் தவிர்த்து' என்று. ஆகையால் பகலில் ப்ரம்ஹயக்ஞம் செய்யாவிடில், 'க்ருஹஸ்தனின் வ்ரதம் லோபித்தால் அதற்கு ப்ராயச்சித்தம் உபவாஸம்' என்று மனு சொல்லியதை அறியவும்.

आपस्तम्बः –तपस्स्वाध्याय इति ब्राह्मणं तत्र श्रूयते स यदि तिष्ठन्नासीनः शयानो वा स्वाध्यायमधीते तप एव तत्तप्यते तपो हि स्वाध्यायः इति। अनधीतवेदस्य ब्रह्मयज्ञे गायत्री जपमाह मनुः – अपां समीपे नियतो नैत्यकं विधिमास्थितः । गायत्रीमप्यधीयीत

गत्वाऽरण्यं समाहितः इति। सङ्ग्रहः – ब्रह्मयज्ञे जपेत् सूक्तं पौरुषं चिन्तयन् हरिम्। स सर्वान् जपते वेदान् साङ्गोपाङ्गान् विधानतः इति॥ याज्ञवल्क्यः – वेदवाक्यपुराणानि सेतिहासानि शक्तितः। ब्रह्मयज्ञप्रसिध्यर्थं विद्यां चाध्यात्मिकीं जपेत् इति॥

ஆபஸ்தம்பர்:- நியமத்துடன் செய்யுமிந்த அத்யயனம் தபஸ் என்கிறது வேதம். வேதத்தில் இவ்விதம் கேட்கப்படுகிறது. ப்ரம்ஹயக்ஞாத்யயனம் செய்பவன், நின்றவனுகவோ, உட்கார்ந்தவனுகவோ, படுத்தவனுகவோ, அத்யயனம் செய்தாலும் அது தபஸ் செய்ததாகவே யாகின்றது. அத்யயனமே தபஸ்தான். வேதாத்யயனம் செய்யாதவனுக்கு ப்ரமம்ஹயக்ஞத்தில் காயத்ரீ ஜபத்தை விதிக்கின்றார்:- மனு:- ப்ரம்ஹயக்ஞம் செய்பவன் அரண்யத்திற்குச் சென்று ஜலத்தின் ஸமீபத்தில் காயத்ரியையாவது கவனமுள்ளவனுய் அத்யயனம் செய்ய வேண்டும். ஸங்க்ரஹத்தில்:- ப்ரம்ஹயக்ஞத்தில் வேதஜபத்தில், விஷ்ணுவை த்யானிப்பவனுய், புருஷ ஸூக்தத்தை ஜபிக்க வேண்டும். ஜபித்தவன் அங்கங்களுடனும், உபாங்கங்களுடனும் கூடிய வேதங்களை விதிப்படி ஜபித்தவனுவான். யாக்ஞவல்க்யர்:- ப்ரம்ஹயக்ஞம் ஸித்திப்பதற்காக வேதவாக்யங்கள், புராணங்கள், இதிஹாஸங்கள், ப்ரம்ஹவித்யை இவைகளையும் ஜபிக்க வேண்டும்.

स्मृत्यर्थसारे – प्रणवव्याहृतीरुक्त्वा सावित्रीं पच्छोऽर्द्धर्चशोऽनवान मुक्त्वाऽध्यायं सूक्तं मृचं वा प्रश्नमनुवाकं वा यजुर्वा साम वा सावित्रीं वेतिहासं पुराणं वा मन्द्रेण मध्यमेन वा स्वरेणाधीत्य नमो ब्रह्मण इति त्रिरुक्त्वा ओं तत्सदिति समापयेत् इति। ग्रहणाध्ययनवत् ब्रह्मयज्ञाध्ययनस्य अनध्यायदिवसेषु परित्यागप्राप्तौ मनुराह – वेदोपाकरणे चैव स्वाध्याये चैव नैत्यके। न निरोधोऽस्त्यनध्याये होममन्त्रेषु चैव हि। नैत्यके नास्त्यनध्यायो

ब्रह्मसत्रं हि तत् स्मृतम् । ब्रह्माहुतिहुतं पुण्यं यद (अन) ध्यायवषट्कृतम् इति । ब्रह्मैव आहुतिद्रव्यम् । तेन हुतम् । अधीयत इत्यध्यायः याज्यादिमन्त्रसमूहः । तेन वषट्कारेणापि हुतमित्यर्थः ।

ஸ்ம்ருத்யர்த்த ஸாரத்தில்:- ப்ரணவத்தையும், வ்யாஹ்ருதிகளையும் சொல்லி, காயத்ரியைப் பாதம்பாதமாகவும், பாதி ருக்காகவும், முழுவதுமாகவும் சொல்லி, ஒரு அத்யாயத்தையாவது, ஒரு ஸூக்தம், ருக், ப்ரச்னம், அனுவாகம், யஜுஸ், ஸாமத்தையாவது, காயத்ரியையாவது, இதிஹாஸத்தையாவது, புராணத்தை யாவது, தணிந்த ஸ்வரத்திலாவது, மத்யமஸ்வரத்திலாவது ஜபித்து, நமோப்ரம்ஹணே என்ற ருக்கை மூன்று தடவை ஜபித்து 'ஓம் தத்ஸத்' என்று முடிக்க வேண்டும். கற்றுக் கொள்வதற்கான அத்யயனத்திற்குப் போல் ப்ரம்ஹயக்ஞாத்யயனத்திற்கும் அத்யயன நிஷித்த தினங்களில் பரித்யாகம் ப்ராப்தமாக இருக்கும் போது, சொல்லுகிறார்:- மனு:- உபாகர்மத்திலும், ப்ரம்ஹ யக்ஞத்திலும், ஹோமமந்த்ரங்களிலும், அனத்யயன தினத்தில் நிஷேதமில்லை. ப்ரம்ஹ யக்ஞத்தில் அனத்யயனதின நிஷேதமில்லை. அது ப்ரம்ஹஸத்ரம் என்றதல்லவோ சொல்லப்பட்டுள்ளது. யாஜ்யா முதலிய மந்த்ரங்களாலும், வஷட்காரத்தாலும் ஹோமம் செய்யப்படும் வேதமே ஆஹுதித்ரவ்யம் இந்த யாகத்தில். அது புண்யப்ரதமாகவே ஆகின்றது. 'அனத்யாய வஷட்க்ருதம்' என்றும் பாடபேதமுண்டு.

यतो नास्त्यनध्यायः, अत एव अनध्ययनविशेषाननूद्य तेषु जपं प्रशंसति श्रुतिः– तस्य वा एतस्य यज्ञस्य मेघो हविर्द्धानं विद्युदग्निर्वर्षं हविस्स्तनयित्नुर्वषट्कारो यदवस्फूर्जति सोऽनुवषट्कारो वायुरात्माऽमावास्या स्विष्टकृद्य एवं विद्वान् मेघे वर्षति विद्योतमाने स्तनयत्यवस्फूर्जति पवमाने वायावमावास्यायां स्वाध्यायमधीते तप एव तत्तप्यते इति । अस्य यज्ञरूपत्वात् कर्मणि चानध्यायनाभावात् ।

तदेव च कर्मत्वं स्पष्टयितुं मेघादयो हविर्द्धानादिरूपेण रूप्यन्ते। तस्यैतस्य ब्रह्मयज्ञस्य अध्ययनात्मनः मेघादयः हविर्धानादिस्थानीयाः। उदकाधारत्वेन मेघो हविर्धानस्थानीयः। उदकस्य च हविष्ट्वमाह वर्षꣳ हविरिति। हविर्धाने हि सोमादीनि हवींषि निधीयन्ते। विद्युत् अग्निस्थानीया। प्रकाशवत्त्वात्। वृष्टिहेतुत्वाच्च। वर्षं हविस्स्थानीयम्। सस्याद्युत्पत्तिहेतुत्वात्। स्तनयित्नुः - स्तनितं कुर्वन् मेघः वषट्कारस्थानीयः। तदनन्तरं वर्षलक्षणस्य हविषः प्रपतनात्। अवस्फूर्जः - अशनिशब्दः। सः अनुवषट्कारस्थानीयः। पश्चाद्भावसाम्यात्। वायुरात्मस्थानीयः प्राणत्वात्। अमावस्या स्विष्टकृत्स्थानीया। यजनसम्पत्तिहेतुत्वात्। य एवं मेघादीनामध्ययनाङ्गत्वं विद्वान् मेघादिसद्भावेऽपि वायौ च पवमाने अमावास्यायां च अधीते, तत्तप एव तप्यते। नित्यस्वाध्याया ध्ययनलक्षणं तपः अविगुणमेव चरति। तदेवाह तपो हि स्वाध्यायः इति।

இவ்விதம் அனத்யாயம் இல்லாததாலேயே அனத்யயன ஹேதுக்களைச் சொல்லி அவைகளை ப்ரசம்ஸிக்கின்றது ச்ருதி- 'தஸ்ய வா + தத்தப்யதே' என்று. இந்த ப்ரம்ஹயக்ஞம் யக்ஞரூபமானதால் கர்மங்களில் அனத்யயநமில்லாததினால், அந்தக் கர்மத் தன்மையை வெளிப்படுத்துவதற்கு, மேகம் முதலியவை ஹவிர்த்தானம் முதலியதாக ரூபிக்கப்படுகின்றன. அத்யயன ரூபமான இந்த ப்ரம்ஹயக்ஞத்திற்கு மேகம் ஹவிஸ்ஸு வைக்குமிடம். ஜலத்திற்கு ஆதாரமா யிருப்பதால் மேகம் ஹவிர்த்தானமாம். ஜலத்தை ஹவிஸ்ஸென்கிறது 'வர்ஷம்ஹவிः' என்று. ஹவிர்த் தானத்திலல்லவா ஸோமம் முதலிய ஹவிஸ்ஸுகள் வைக்கப்படுகின்றன. மின்னல் அக்னியாம். ப்ரகாச முள்ளதாலும் மழைக்குக் காரணமாய் இருப்பதாலும்.

மழை ஹவிஸ்ஸாம். பயிர் முதலியதின் உற்பத்திக்குக் காரணமாகுதலால். சப்திக்கும் மேகம் வஷட்காரமாம். அதற்குப் பிறகு மழைரூபமான ஹவிஸ் விழுவதால். இடியின் சப்தம் அனுவஷட்காரமாம். பின்பு இருக்கும் ஸாம்யத்தால். வாயு ஆத்மாவாம். ப்ராணனுனதால். அமாவாஸ்யை ஸ்விஷ்டக்ருத்தாம். யாகம் பூர்த்தியாவதற்கு ஹேதுவானதால். எவன் இவ்விதம் மேகம் முதலியவைக்கு யக்ஞாங்கத் தன்மையை அறிந்து, மேகம் முதலியவை இருக்கும் போதும், காற்று, வீசும் போதும் அமாவாஸ்யையிலும் அத்யயனம் செய்கின்றானே, அவன் தபஸ்ஸையே செய்கின்றான், நித்யமும் அத்யயனம் செய்வதென்ற தபஸ்ஸைக் குறை வில்லாதாகவே செய்கின்றான். அதையே சொல்லுகிறது. 'தபோஹிஸ்வாத்யாயः' என்று. ப்ரம்ஹயக்ஞம் என்பது தவமல்லவா என்பது அதன் பொருள்.

आपस्तम्बः – वाजसनेयिब्राह्मणं - ब्रह्मयज्ञो हवा एष यत् स्वाध्यायस्तस्यैते वषट्कारा यत् स्तनयति यद्विद्योतते यदवस्फूर्जति यद्वातो वायति तस्मात् स्तनयति विद्योतमानेऽवस्फूर्जति वाते वा वायत्यधीयीतैव वषट्काणामछम्बट्काराय इति । तस्य शाखान्तरे वाक्यसमाप्तिः । अथ यदि वातो वा वायात् स्तनयेद्वा विद्योतेत वाऽवस्फूर्जे द्वैकां वर्च मेकं वा यजु रेकं वा सामाभि व्याहरेत् भूर्भुवस्सुवस्सत्यं तपः श्रद्धायां जुहोमीति वैतत्तेनोहैवास्यैतदहः स्वाध्याय उपात्तो भवत्येव२ सत्यार्यसमयेनाविप्रतिषिद्ध मध्यायानध्यायं ह्युपदिशन्ति तदनर्थकं स्याद्वाजसनेयिब्राह्मणं चेदवेक्षेत इति ।। अस्यार्थः – स्वाध्यायो नाम य एष ब्रह्मयज्ञः, ब्रह्म - वेदः, तत्साधनो यागः - तस्य यज्ञस्य एते स्तनयित्नादयः वषट्काराः । बहुवचननिर्देशात् वषट्कारानुवषट्कारस्वाहाकाराः प्रदानार्था गृह्यन्ते । यस्मादेते वषट्काराः, तस्मात्

स्तननादिष्वनध्यायनिमित्तेषु सत्स्वपि अधीयीतैव न पुनरनध्याय इति नाधीयीत । किमर्थम्? वषट्काराणामेतेषां अछम्बट्काराय - अन्यर्थत्वाय ।। तस्य वाजसनेयिब्राह्मणस्य शाखान्तरे पर्यवसानम्। तदेव शाखान्तरं पठति अथ यदीति । वातादिषु सत्सु एकामृचमधीयीत प्राप्ते प्रदेशे । यजुर्वेदाध्ययने एकं यजुः, सामवेदाध्ययने एकं साम, सर्वेषु वा वेदेषु भूर्भुवस्सुवः सत्यन्तप इति यजुरभिव्याहरेत्। न पुनर्यथापूर्वं प्रश्नमात्रम्। तेनैव - तावतैव अस्य अध्येतुः तस्मिन्नहनि स्वाध्यायः उपात्तो भवति। अधीतो भवतीति यावत् । एवं सति - वासजनेयिब्राह्मणस्य शाखान्तरे वाक्यसमाप्तावाश्रयमाणायां आर्यसमयेन आर्याः - विशिष्टा मन्वादयः, तेषां समयः - व्यवस्था, तेन अविप्रतिषिद्धं भवति । इतरथा विप्रतिषिद्धं स्यात् । कथम्? आर्या ह्यध्यायमनध्यायं चोपदिशन्ति । तदुपदेशनमनर्थकं स्यात् यदि वाजसनेयिब्राह्मणं यथाश्रुतमवेक्षेताध्येता । अतो वाक्यपरिसमाप्तिरेव युक्ता । एवं हि वाजसनेयिब्राह्मणस्यापि नात्यन्तबाधः । अनध्यायोपदेशस्यापि प्रभूताध्ययनविषयतयाऽर्थवत्त्वमिति।

ஆபஸ்தம்பர்:- வாஜஸநேயி ப்ராம்ஹணம் பின் வருமாறுள்ளது. 'ஸ்வாத்யாயம் என்கிற இது வேதத்தை ஸாதனமாயுடைய யக்ஞமாகும். அந்த யக்ஞத்திற்கு, மேகசப்தம், மின்னல், இடி, காற்று வீசுதல் இவைகளெல்லாம் வஷட்காரம், அனுவஷட்காரம், ஸ்வாஹாகாரம் இவைகளாம். ஆகையால் மேகம் சப்திக்கும் போதும், மின்னல் மின்னும் போதும், இடி இடிக்கும் போதும், காற்று வீசும் போதும் ப்ரம்ஹயக்ஞாத்யயனம் செய்ய வேண்டும். வஷட்காரங்கள் வீணாகாமல் இருப்பதற்காக' என்று. அந்த வாஜஸநேயி ப்ராம்ஹணத்திற்கு வேறு சாகையில் வாக்யத்தின் முடிவு இருக்கிறது. அதாவது - 'காற்று

வீசினாலும், மேகம் சப்தித்தாலும், மின்னல் மின்னினாலும், இடிசப்தமுண்டானாலும், க்ரமமாய் வந்த இடத்தில் ருக்வேதி ஒரு ருக்கை அத்யயனம் செய்ய வேண்டும். யஜுர் வேதாத்யயனத்தில் ஒரு யஜுஸ்ஸை, ஸாமவேதாத்யயனத்தில் ஒரு ஸாமத்தை அத்யயனம் செய்ய வேண்டும். அல்லது எல்லா வேதங்களின் ஸ்தானத்திலும், 'பூர்ப்புவஸ்ஸுவ: ஸத்யம் தப: ச்ரத்தாயாம் ஜுஹோமி' என்ற யஜுஸ்ஸை அத்யயனம் செய்யலாம். அதனாலேயே, ப்ரம்ஹயக்ஞம் செய்பவனுக்கு இந்தத் தினத்தில் வேதம் ஓதியதாகிறது. இவ்விதம் இருந்தால் - வாஜஸநேயி ப்ரம்ஹணத்திற்கு வேறு சாகையில் ஸமாப்தியை ஆச்ரயித்தால் மன்வாதிகளான பெரியோர் களின் வ்யவஸ்தையோடு விரோதமில்லாமலாகிறது. இல்லாவிடில் விருத்தமாகும். எப்படியெனில், மன்வாதிகள் அத்யயனகாலம், அனத்யயன கால மிரண்டையும் சொல்லுகின்றனர். அத்யயனம் செய்பவன் வாஜஸநேயி ப்ராம்ஹணத்தை உள்ளபடி அபேக்ஷித்தால் மன்வாதிகளின் வசனம் ப்ரயோஜனமற்றதாகும். ஆகையால் சாகாந்தரத்திலுள்ள வாக்யஸமாப்தியே யுக்தமானது. இவ்விதமானதா வாஜஸநேயி ப்ராம்ஹணத்திற்கும் அதிகபாதமில்லை. மன்வாதிகள் சொல்லிய அனத்யாய வசனங்களுக்கும் அதிகாத்யயன நிஷேதத்தில் தாத்பர்யம் என்பதால் ப்ரயோஜனம் இருக்கிறது என்று.

केचित्तु – नित्यप्रश्नाध्यायिनोऽनध्यायो नास्ति। अमावास्यायां स्वाध्यायमधीते इति नित्यानध्यायेऽप्यध्ययनविधानात्। एकां वर्चमेकं वा यजुः, कल्पं जपेदनध्याये पर्वण्यल्पतरं जपेत् इत्यादिकं तु अनियतप्रश्नाध्यायिविषयम्। अत एवोज्ज्वलायाम् – का पुनरसौ स्मृतिः? या ब्रह्मयज्ञेऽपि अनध्यायमुपदिशति, मानवे तावद्विपर्ययः श्रूयते नैत्यके नास्त्यनध्यायः इति। सामान्येनानध्यायोपदेशस्तु ब्रह्मयज्ञादन्यत्र चरितार्थः। तस्मात्तादृशी स्मृतिर्मृग्या इति। तथा

स्मृतिरत्नावल्यां - देवतार्चनमन्त्राणां नानध्यायः सदा स्मृतः । संकल्पितानां मन्त्राणां वैदिकानां तथैव च । नानध्यायनिरोधोऽस्ति जपकर्मणि सर्वदा । नित्ये जपे च काम्ये च क्रतौ पारायणे तथा । नानध्यायोऽस्ति वेदानां अङ्गाभ्यासे तथैव च इति । संकल्पितानां - रुद्रैकादशिनीं पुरुषसूक्तं नित्यमहं जपिष्यामिति संकल्पित वैदिकमन्त्राणां जपे ब्रह्मयज्ञादौ च नास्त्यनध्याय इत्यर्थः ।

சிலரோவெனில்- ''ப்ரதிதினமும் ஒரு ப்ரச்னம் அத்யயனம் செய்கிறதென்ற நியமமுடையவனுக்கு அனத்யாயம் இல்லை. நித்யானத்யாயமான அமாவாஸ்யையிலும் அத்யயனம் விதிக்கப்பட்டிருப்பதால். 'ஒரு ருக்கை, ஒரு யஜுஸ்ஸை, அனத்யாயத்தில் அல்பமாய் ஜபிக்க வேண்டும், பர்வத்தில் அல்பதரமாய் ஜபிக்க வேண்டும்' என்பது முதலியதெல்லாம் நியதமாய் ப்ரச்னத்யயனம் செய்யாதவன் விஷயம். ஆகையாலேயே உஜ்வலையில் 'இந்த ஸ்ம்ருதி எங்குள்ளது? எது ப்ரம்ஹயக்ஞ விஷயத்திலும் அனத்யாயத்தைச் சொல்லுகின்றது? மனு தர்மசாஸ்த்திரத்தில் மாறுதல் கேட்கப்படுகிறதே, நித்ய கர்மவிஷயத்தில் அனத்யாயமில்லை என்று. ஸாதாரணமாய் அனத்யாயம் சொல்லியிருப்பது ப்ரம்ஹயக்ஞத்தைத் தவிர மற்றவிடத்தில் ப்ரயோஜனமுள்ளது. ஆகையால் அவ்விதமான ஸ்ம்ருதியைத் தேடவேண்டும். என்றுள்ளது. அவ்விதமே, ஸ்ம்ருதி ரத்னவளியில்:- தேவபூஜையில் உபயோகிக்கும் மந்த்ரங்களுக்கு அனத்யாய மெப்பொழுதுமில்லை. ஸங்கல்பம் செய்து கொள்ளப்பட்ட வைதிக மந்த்ரங்களுக்கும் அனத்யாயமில்லை. ஜபத்திலும் எப்பொழுது மனத்யாயமில்லை. நித்ய ஜபம், காம்யஜபம், யாகம், பாராயணம் இவைகளிலும் அநத்யாயமில்லை. வேதாங்கங்களை அப்யஸிப்பதிலும் அனத்யாயமில்லை. ருத்ரைகா தசினியை, புருஸூக்தத்தை நித்யமும் நான் ஜபிக்கப் போகிறேன் என்று ஸங்கல்பிக்கப்பட்ட வைதிக

மந்த்ரங்களின் ஜபத்திலும், ப்ரம்ஹயக்ஞும் முதலியதிலும் அனத்யாயமில்லை என்பது பொருள்.

आपस्तम्बोऽपि – विद्यां प्रत्यनध्यायः श्रूयते न कर्मयोगे मन्त्राणाम्।। विद्यां प्रत्येव - ग्रहणधारणाध्ययनं प्रत्येव अनध्यायः। न पुनर्ब्रह्मयज्ञाग्निहोत्रादिकर्मयोगे मन्त्राणामित्यर्थः। नच कर्मयोगेऽनध्यायनिषेधः एकदेशविषयतया चरितार्थ इति वाच्यम् । अग्निहोत्रमन्त्राणामप्येकदेशाध्ययनप्रसक्तेः । अतो नित्यप्रश्नाध्यायिनो नानध्याये निवृत्तिः। अनियताध्यायिनस्तु एकदेशाध्ययनमित्याहुः।।

ஆபஸ்தம்பரும்:- *க்ரஹணதாரணூர்த்தமான அத்யயனத்தைப் பற்றியே அனத்யாயம் சொல்லப் படுகிறது. மந்த்ரங்களுக்கு ப்ரம்ஹயக்ஞும், அக்னி ஹோத்ரம் முதலிய கர்மஸம்பந்த விஷயத்தில் அநத்யயனம் விதிக்கப்படுவதில்லை. கர்மஸம்பந்தத்தில் அனத்யாயத்தை நிஷேதித்ததும் சில பாகத்தை அத்யயனம் செய்யலாமென்று சொல்வதால் ப்ரயோஜன முள்ளதாகின்றது என்றும் சொல்லக் கூடாது. அக்னிஹோத்ர மந்த்ரங்களிலும் ஏகதேசாத்யயனம் ப்ரஸக்தமாகுமாதலால். ஆகையால் நித்யமும் ஒரு ப்ரச்னம் அத்யயனம் செய்யும் நியமம் உடையவனுக்கு அனத்யாயத்தில் ப்ரச்னாத்யயனத்திற்கு நிவ்ருத்தியில்லை. மற்றவனுக்கு ஸ்வல்பபாகாத்யயனம்'' என்கின்றனர்.*

आत्मदेशयोरशुचित्वे ब्रह्मयज्ञो वर्जनीयः। तथा च श्रुतिः – तस्य वा एतस्य यज्ञस्य द्वावनध्यायौ यदात्माऽशुचिर्यद्देशः इति। ब्रह्मयज्ञोऽयं नित्यः । अग्निकार्यपरिभ्रष्टः पतितः परिकीर्तितः । ब्रह्मयज्ञविहीनश्च ब्रह्महा कीर्तितो बुधैः इति प्रत्यवायस्मृतेः। एतत्तं योऽनूत्सृजत्यभागो वाचि भवत्यभागो नाके इति श्रुतेश्च । तमेतं स्वाध्यायमारभ्य यः अनूत्सृजति - पश्चात् त्यजति तस्य वाचि

अभागो भवति - फलं न भवति । अत एव नाकेऽपि अभागो भवतीत्यर्थः ॥

தேஹமும், தேசமும் அசுத்தமாயிருந்தால் ப்ரம்ஹ யக்ஞத்தை வர்ஜிக்க வேண்டும் என்கிறது, ச்ருதி:- 'தஸ்யவா + யத்தேச:' என்று. இந்த யக்ஞத்திற்கு இரண்டு அனத்யாயங்கள், தேஹம் அசுத்தமாயிருப்பதும், தேசம் அசுத்தமாயிருப்பதும். இந்த ப்ரம்ஹயக்ஞம் நித்யமாகும். 'அக்னி கார்யத்தை விட்டவன் பதிதனெனப்படுகிறான். ப்ரம்ஹயக்ஞத்தை விட்டவனேயும் ப்ரம்ஹஹத்யை செய்தவனென அறிந்தவர் சொல்லுகின்றனர்' என்று தோஷம் சொல்லப்படுவதால், 'தம்யோநூத்ஸ்ருஜ+ நாகே' என்று ச்ருதியிருப்பதாலும். 'இந்த ப்ரம்ஹயக்ஞத்தை எவன் ஆரம்பித்துப் பிறகு விட்டுவிடுகின்றானோ அவனுக்கு வாக்கில் பலனுண்டாவதில்லை. ஆகையாலேயே ஸ்வர்க்கத்திலும் பலனுண்டாவதில்லை' என்பது பொருள்.

ब्रह्मयज्ञं प्रशंसति श्रुतिः – उत्तमन्नाकꣳरोहत्युत्तमस्समानानां भवति यावन्तं हवा इमं वित्तस्य पूर्णन्ददत् स्वर्गं लोकं जयति तावन्तं लोकं जयति भूयाꣳसं चाक्षय्यंचा पपुनर्मृत्युं जयति ब्रह्मणस्सायुज्यं गच्छति इति' अरण्ये ग्रामे वा यावत्तरसꣳस्वाध्यायमधीते सर्वान् लोकान् जयति सर्वान् लोकाननृणोऽनुसञ्चरति इति च, यं यं क्रतुमधीते तेन तेनास्येष्टं भवत्यग्नेर्वायोरादित्यस्य सायुज्यं गच्छति इति च ॥

ப்ரம்ஹயக்ஞத்தைப் புகழ்கிறது - ச்ருதி:- 'உத்தமம் + கச்சதி' என்று. சிறந்த ஸ்வர்க்கத்தை அடைகிறான். ஸமானர்களுள் சிறந்தவனாகிறான். பணத்தால் நிறைந்த இந்தப் பூமியைத் தானம் செய்பவன் எவ்விதமான ஸ்வர்க்க லோகத்தை அடைகின்றானோ, அவ்விதமான லோகத்தை அடைகிறான், அதைவிட அதிகமாயும், குறைவில்லாதது மாகிய லோகத்தையும் ஜயிக்கின்றான். மறுபடி மரணத்தையும் வெல்லுகிறான். ப்ரம்ஹத்தின்

ஸாயுஜ்யத்தை அடைகிறான். என்பது ச்ருதியின் பொருள். 'அரண்யே + ஸஞ்சரதி' என்று ச்ருதி. அரண்யத்திலோ க்ராமத்திலோ பலமுள்ளவரையில் (உரக்க) ப்ரம்ஹயக்ஞாத்யயனம் செய்பவன் எல்லா உலகங்களையும் ஜயிக்கின்றான், கடனற்றவனாய் எல்லா உலகங்களிலும் ஸஞ்சரிக்கின்றான், என்பது ச்ருதியின் பொருள். 'யம்யம் + கச்சதி' என்று ச்ருதி. எந்தெந்த யாகத்தைச் சொல்லும் வேதபாகத்தை ப்ரம்ஹயக்ஞத்தில் அத்யயனம் செய்கின்றானோ அந்தந்த யாகத்தைச் செய்தவனாகிறான். அக்னி, வாயு, ஆதித்யன் இவர்களின் ஸாயுஜ்யத்தை அடைகிறான், என்பது ச்ருதியின் பொருள்.

काम्यब्रह्मयज्ञाध्ययनफलमाह याज्ञवल्क्यः – मधुना पयसा चैव स देवांस्तर्पयेद्द्विजः। पितॄन् मधुघृताभ्यां च ऋचोऽधीते हि योऽन्वहम्। यजूंषि शक्तितोऽधीते योऽन्वहं स घृतामृतैः। प्रीणाति देवानाज्येन मधुना च पितॄंस्तथा ॥ स तु सोमघृतैर्देवान् तर्पयेद्योऽन्वहं पठेत्। सामानि तृप्तिं कुर्याच्च पितॄणां मधुसर्पिषा ॥ मेदसा तर्पयेद्देवानथर्वाङ्गिरसः पठन्। पितॄंश्च मधुसर्पिर्भ्यामन्वहं शक्तितो द्विजः ॥ वाकोवाक्यं पुराणं च नाराशंसीश्च गाथिकाः। इतिहासांस्तथा विद्याः शक्त्याऽधीते हि योऽन्वहम् ॥ मांसक्षीरौदनमधुतर्पणं स दिवौकसाम्। करोति तृप्तिं कुर्याच्च पितॄणां मधुसर्पिषा। ते तृप्तास्तर्पयन्त्येनं सर्वकामफलैः शुभैः। यं यं क्रतुमधीतेऽसौ तस्य तस्याप्नुयात् फलम्॥ त्रिर्वित्तपूर्णपृथिवीदानस्य फलमश्नुते। तपसो यत् परस्येह नित्यं स्वाध्यायवान् द्विजः इति। वाकोवाक्यं- प्रश्नोत्तररूपं वेदवाक्यम्। पुराणं - ब्राह्मादि। चकारात् मानवादि धर्मशास्त्रम्। नाराशंसीः - रुद्रदेवत्यान् मन्त्रान्। गाथाः - यज्ञगाथेन्द्रगाथाद्याः। इतिहासान् - भारतरामायणादीन्। विद्याः - वारुण्याद्याः॥

காம்ய ப்ரம்ஹயக்ஞத்தின் பலனைச் சொல்லுகிறார்:- யாக்ஞவல்க்யர்:- எவன் ப்ரதிதினமும் ருக்வேதத்தை அத்யயனம் செய்கின்றானோ அவன் தேன், பால் இவைகளால் தேவர்களுக்குத் திருப்தியைச் செய்கிறான். தேன் நெய் இவைகளால் பித்ருக்களுக்கும் த்ருப்தியைச் செய்கிறான். எவன் நித்யமும் யதாசக்தி யஜுர்வேதத்தை அத்யயனம் செய்கின்றானோ அவன், நெய், அம்ருதம் இவைகளால் தேவர்களுக்கும், நெய், தேன் இவைகளால் பித்ருக்களுக்கும் த்ருப்தியைச்செய்கிறான். எவன் நித்யமும் ஸாமவேதத்தைப் படிக்கின்றானோ அவன் ஸோமம், நெய் இவைகளால் தேவர்களுக்கும், தேன், நெய் இவைகளால் பித்ருக்களுக்கும் த்ருப்தியைச் செய்கிறான். அதர்வாங்கிரஸ்ஸுகளைப் படிப்பவன் மேதஸ்ஸினால் தேவர்களுக்கும் தேன் நெய் இவற்றால் பித்ருக்கக்களுக்கும் த்ருப்தியைச் செய்கிறான். வாகோவாக்யம், புராணம், நாராசம்ஸிகள், காதைகள், இதிஹாஸங்கள், வித்யைகள் இவைகளை நித்யமும் யதாசக்தி படிப்பவன், மாம்ஸம், பால், அன்னம், தேன் இவைகளால் தேவர்களுக்கும், தேன், நெய் இவைகளால் பித்ருக்களுக்கும் த்ருப்தியைச் செய்கிறான். த்ருப்தியடைந்த அவர்கள் சுபமான ஸகல காமபலங்களாலும் இவனை த்ருப்தனாய்ச் செய்கின்றனர். எந்தெந்த யாகத்தைப் படிக்கின்றானோ அததன் பலத்தை அடைகிறான். பணத்தால் நிறைந்த பூமியை மூன்று தடவை தானம் செய்த பலத்தை அடைகிறான். நித்யமும் அத்யயனம் செய்யும் ப்ராம்ஹணன் சிறந்த தபஸ்ஸின் பலனையுமடைகிறான். வாகோவாக்யம் - கேள்வியும் விடையுமாயுள்ள வேதவாக்யம், புராணம் - ப்ராம்ஹம் முதலியது. சகாரத்தால் மானவம் முதலிய தர்மசாஸ்த்ரமும் சொல்லப்படுகிறது. நாராசம்ஸிகள் - ருத்ரனைத் தேவதையாயுடைய மந்த்ரங்கள். காதைகள் - யக்ஞகாதா, இந்த்ரகாதா முதலியவைகள். இதிஹாஸங்கள் - பாரதம் ராமாயணம் முதலியவை. வித்யைகள் - வாருணீ முதலியவைகள்.

श्रुतिरपि – यद्दचोऽधीते पयसः कूल्या अस्य पितॄन् स्वधा अभिवहन्ति यद्यजूꣳषि घृतस्य कूल्या यत् सामानि सोम एभ्यः पवते यदथर्वाङ्गिरसो मधोः कूल्या यद्ब्राह्मणानीतिहासान् पुराणानि कल्पान् गाथा नाराशꣳसीर्मेदसः कूल्या अस्य पितॄन् स्वधा अभिवहन्ति यद्दचोऽधीते पय आहुतिभिरेव तद्देवाꣳस्तर्पयति यद्यजूꣳषि घृताहुतिभिर्यत्सामानि सोमाहुतिभिर्यदथर्वाङ्गिरसो मध्वाहुतिभिर्यद् ब्राह्मणानीतिहासान् पुराणानि कल्पान् गाथा नाराशꣳसी र्मेदाहुतिभिरेव तद्देवाꣳस्तर्पयति त एनं तृप्ता आयुषा तेजसा वर्चसा श्रिया यशसा ब्रह्मवर्चसेनान्नाद्येन च तर्पयन्ति इति। पयसः कूल्याः - पयःपरिपूर्णाः कूल्याः । अस्य अध्येतुः पितॄन् स्वधारूपाः आभिमुख्येन वहन्ति - प्रवहन्ति। सुगममन्यत्।।

ச்ருதியும்:- 'யத்ருசோதீதே + தர்ப்பயந்தி' என்று. ருக்குகளை அத்யயனம் செய்தால், பால் நிறைந்த ஆறுகள் ஸ்வதாகாரத்தால் கொடுக்கப்பட்ட ஹவிஸ்ஸாக ஆகி இவனின் பித்ருக்களை நோக்கி ப்ரவஹிக்கின்றன. யஜுஸ்ஸுகளைப் படித்தால் நெய்யின் ஆறுகள் ப்ரவஹிக்கின்றன. ஸாமங்களைப் படித்தால் ஸோமரஸம் ஆறுகப் பெருகுகிறது. அதர்வாங்கிரஸ்ஸுகளைப் படித்தால் தேனின் ஆறுகள் ப்ரவஹிக்கின்றன. ப்ராம்ஹணங்கள், இதிஹாஸங்கள், புராணங்கள், கல்பங்கள், காதைகள், நாராசம்ஸிகள் இவைகளைப் படித்தால் மேதஸ்ஸின் ஆறுகள் இவனின் பித்ருக்களை நோக்கி ப்ரவஹிக்கின்றன. முன் சொல்லியபடி ருக்கு முதலியதைப் படித்தால் பால் முதலியவையின் ஆஹுதிகளால் தேவர்களை த்ருப்தி செய்விக்கின்றன். த்ருப்தியுற்ற தேவர்கள், இவனை ஆயுஸ், தேஹகாந்தி, பலம், ஸம்பத்து, கீர்த்தி, ப்ரம்ஹவர்ச்சஸம், அன்னம் இவைகளால் த்ருப்தனைகச் செய்கின்றனர்.

अत्र केचित् ब्रह्मयज्ञे नित्ये काम्ये चाथर्वाङ्गिरसादिमन्त्रजपं कुर्वन्ति। तत्र ये यज्ञेन दक्षिणया समत्ता इति वर्गद्वयमथर्वाङ्गिरस-

मन्त्रः । चित्तिः पृथिवी होताऽग्निर्होतेत्यनुवाका ब्राह्मणमन्त्रः । घृतं पिबन्ति मधु ते पिबन्ति सोमं पिबन्त्यमृतेन सार्धम् । मृत्योः परस्तादमृता भवन्ति ये ब्राह्मणा ब्रह्मचर्यं चरन्ति इति इतिहासमन्त्रः । परित्राणाय साधूनां विनाशाय च दुष्कृताम् । धर्मसंस्थापनार्थाय संभवामि युगे युगे इति श्लोकः पुराणम् । अथातो दर्शपूर्णमासौ व्याख्यास्यामः इत्यादिः कल्पः । तदेषा च यज्ञगाथा गीयते वैश्वानरीं व्रातपतीं पवित्रेष्टिं तथेव । ऋतावृतौ प्रयुञ्जानः पुनाति दशपूरुष इति गाथामन्त्रः । इदं जना उपश्रुत नराशंसश्रवस्यते । षष्टिं सहस्रा नवतिं च गौरव आदशमेषु दद्महोम् इति नाराशंसमन्त्रः ॥ ततः तच्छंयोरावृणीमहे इति शान्तिं पठन्ति ॥

இங்கு சிலர் நித்ய ப்ரம்ஹயக்ஞத்திலும், காம்ய ப்ரம்ஹயக்ஞத்திலும் அதர்வாங்கிரஸ் முதலிய மந்த்ரங்களைப் படிக்கின்றனர் அதில், 'யேயக்ஞேந' என்ற இரண்டு வர்க்கம் அதர்வாங்கிரஸ் மந்த்ரம், 'சித்திः ப்ருத்வீ, அக்னிர்ஹோதா' என்ற அனுவாகங்கள் ப்ராம்ஹண மந்த்ரங்கள். க்ருதம் பிபந்தி + பவந்தி என்றது இதிஹாஸ மந்த்ரம். பரித்ராணாய ஸாதூநாம் + யுகே யுகே என்ற ச்லோகம் புராணம். அதாதோ + ஸ்யாமः என்பது முதலியது கல்பம். ததேஷாஹியக்ஞகாதா என்பது காதையாம். இதம் ஜனஉபச்ருத என்பது நாராசம்ஸ மந்த்ரம். இவைகளைப் படித்துப் பிறகு தச்சம்யோः என்ற சாந்தியைப் படிக்கின்றனர்.

अयज्ञो वा एषः योऽपत्नीकः । पञ्च क्लृप्ता महायज्ञाः प्रत्यहं गृहमेधिनाम् । पञ्च सूना गृहस्थस्य वर्तन्तेऽहरहस्सदा । एतासां पावनार्थाय पञ्च यज्ञाः प्रकल्पिताः इत्यादिभिः पञ्चमहायज्ञान्तः पातिनो ब्रह्मयज्ञस्य गृहस्थाधिकारित्वावगमेऽपि ब्रह्मचारिभिरपि कर्तव्यः । सायं प्रातश्चाग्निकार्यं यथाशक्ति जितेन्द्रियः । कुर्यात् प्रतिदिनं वर्णी ब्रह्मयज्ञं च तर्पणम् इति विशेषस्मरणात् ॥

'பத்னியில்லாதவன் யக்ஞத்திற்கர்ஹனல்லாதவன்' 'க்ருஹஸ்தர்களுக்கு ப்ரதிதினமும் ஐந்து மஹாயக்ஞங்கள் விதிக்கப்பட்டுள்ளன' 'க்ருஹஸ்தனுக்கு ஒவ்வொரு நாளும் ஐந்து ஹிம்ஸைகள் ஏற்படுகின்றன, அவைகளைப் போக்குவதற்காக ஐந்து யக்ஞங்கள் விதிக்கப்பட்டுள்ளன' என்பது முதலிய வசனங்களால், ஐந்து மஹாயக்ஞங்களுக்குள்ளான ப்ரம்ஹயக்ஞத்திற்கு க்ருஹஸ்தனே அதிகாரி என்று தெரிந்தாலும் ப்ரம்ஹசாரிகளும் ப்ரம்ஹயக்ஞத்தை அனுஷ்டிக்க வேண்டும். 'ப்ரம்ஹசாரியாகியவன் ஜிதேந்த்ரியனாய் யதாசக்தி மாலை காலைகளில் அக்னிகார்யம், ப்ரம்ஹயக்ஞம், தர்ப்பணம் இவைகளை ப்ரதிதினம் செய்ய வேண்டும்' என்று ஸ்ம்ருதி இருப்பதால்.

वसिष्ठः – ऋक्सामाथर्ववेदाक्तान् जपेन्मन्त्रान् यजूंषि च । जपित्वैवं ततः कुर्यात् देवर्षिपितृतर्पणम् इति ।। तर्पणं तु यथास्वशाखं द्रष्टव्यम् । तच्चाग्रे वक्ष्यते ।।

வஸிஷ்டர்:- ருக்வேதம், ஸாமவேதம், அதர்வவேதம் இவைகளில் சொல்லப்பட்ட மந்த்ரங்களையும், யஜுர்வேதத்திலுள்ள யஜுஸ்ஸுகளையும் ஜபிக்க வேண்டும். இவ்விதம் ஜபித்த பிறகு தேவர்ஷி பித்ரு தர்ப்பணத்தைச் செய்ய வேண்டும். தர்ப்பணத்தை மேலே சொல்லப் போகிறோம்.

अह्नो द्वितीयभागकृत्यम् – अथ अष्टधा विभक्तस्य दिवसस्य प्रथमभागकृत्यमुक्त्वा द्वितीयभागकृत्यमाह, दक्षः – द्वितीये तु तथा भागे वेदाभ्यासो विधीयते इति । कूर्मपुराणेऽपि – वेदाभ्यासं ततः कुर्यात् प्रयत्नाच्छक्तितो द्विजः । जपेदध्यापयेच्छिष्यान् धारयेद्वै विचारयेत् ।। अवेक्षेत च शास्त्राणि मन्वादीनि द्विजोत्तमः । वैदिकांश्चापि निगमान् वेदाङ्गानि च सर्वशः इति ।।

பகலில் இரண்டாவது பாகத்தில் செய்ய வேண்டியவை

இனி, எட்டுப் பாகமாய் பிரிக்கப்பட்ட பகலின் முதல் பாகத்தில் அனுஷ்டிக்க வேண்டிய கார்யத்தைச் சொல்லி இரண்டாவது பாகத்தில் அனுஷ்டிக்க வேண்டிய கார்யத்தைச் சொல்லுகிறார் தக்ஷர்:- பகலில் இரண்டாவது பாகத்தில் வேதாப்யாஸம் விதிக்கப்படுகிறது. கூர்ம புராணத்திலும்:- பிறகு ப்ராம்ஹணன் யதாசக்தி ப்ரயத்னத்துடன் வேதாப்யாஸம் செய்ய வேண்டும். வேதத்தை ஜபிக்க வேண்டும், சிஷ்யர்களை அத்யயனம் செய்விக்க வேண்டும். மறக்காமல் தரிக்க வேண்டும், அர்த்தத்தையும் விசாரிக்க வேண்டும். மனுதர்மசாஸ்த்ரம் முதலிய சாஸ்த்ரங்களையும் பார்க்க வேண்டும். எல்லா வைதிகாகமங்களையும், வேதாங்கங்களையும் பார்க்க வேண்டும்.

व्यासः – नान्यतो ज्ञायते धर्मो वेदादेवैष निर्बभौ । तस्मात्सर्वप्रयत्नेन धर्मार्थं वेदमाश्रयेत् इति ।। याज्ञवल्क्यः – हुत्वाऽग्नीन् सूर्यदैवत्यान् जपेन्मन्त्रान् समाहितः । वेदार्थानधिगच्छेच्च शास्त्राणि विविधानि च इति ।। तस्मिन्नेव भागे कृत्यान्तरमाह दक्षः – समित्पुष्पकुशादीनां स कालस्समुदाहृतः इति ।। चन्द्रिकायाम् – सन्ध्यासावित्रीहोमाश्च पूर्वस्मिन् भाग एव तु । वेदाभ्यासो द्वितीयेऽशे समित्पुष्पकुशाहृतिः इति ।। स्मृत्यन्तरे – तथाऽऽयुष्यहितार्थाय स्वाध्यायं किञ्चदाचरेत् । कुशपुष्पेन्धनादीनि गत्वा दूरं समाहरेत् इति ।

வ்யாஸர்:- தர்மம் வேதத்தினின்றுமே வெளியாயிற்று, மற்றதிலிருந்து அறியப்படுகிறதில்லை. ஆகையால் தர்மத்தை அறிவதற்கு எவ்விதத்தாலும் வேதத்தை ஆச்ரயிக்க வேண்டும் யாக்ஞவல்க்யர்:- அக்னியில் ஹோமம் செய்து, ஸூர்ய தேவதாகமான மந்த்ரங்களை ஜபிக்க வேண்டும். வேதங்களினர்த்

தங்களையும் பலவிதமான சாஸ்த்ரங்களையும் அறியவேண்டும். அதே பாகத்தில் மற்றொரு கார்யத்தைச் சொல்லுகிறார் - தக்ஷர்:- ஸமித், புஷ்பம், குசம் முதலியதைச் சம்பாதிப்பதற்கு அதுவே காலமாய்ச் சொல்லப்பட்டுள்ளது. சந்த்ரிகையில்:- ஸந்த்யாவந்தனம், காயத்ரீ ஜபம், ஹோமம் இவை முதல் பாகத்தில், இரண்டாவது பாகத்தில் வேதாப்யாஸமும், ஸமித், புஷ்பம், குசம் இவைகளைச் சம்பாதிப்பதுமாம். மற்றொரு ஸ்ம்ருதியில்:- ஆயுளின் நன்மைக்காகச் சிறிது வேதாப்யாஸம் செய்ய வேண்டும். குசம், புஷ்பம், ஸமித் இவை முதலியதைத் தூரத்திற் சென்று கொண்டு வரவேண்டும்.

संवर्तः — समित्पुष्पकुशादीनि श्रोत्रियः स्वयमाहरेत् इति ।। सङ्ग्रहः — शूद्राहृतानि पुष्पाणि क्रयक्रीतानि यानि च । पारक्याणि च पुष्पाणि लब्धान्यर्हाणि नार्चने ।। उत्तमं स्वार्जितं पुष्पं मध्यमं वन्यमुच्यते । अधमं तु क्रयक्रीतं पारक्यं त्वधमाधमम् ।। त्याज्यं पर्युषितं जन्तुदूषितं पादलङ्घितम् । म्लानं स्पृष्टं तथाऽस्पृश्यैर्नीतं च प्रतिलोमजैः ।। हस्तानीतं पटानीतं स्वयंपतितमेव वा । देवारामोद्भवं पुष्पं गृहदेवाय नार्चयेत् इति ।। आश्वमेधिके — अर्कपुष्पाणि चान्यानि अर्कपत्रस्थितानि च । निर्गन्धानि च पुष्पाणि सर्वाण्येतानि वर्जयेत् ।। केशकीटापविद्धानि शीर्णपर्युषितानि च । स्वयंपतितपुष्पाणि त्यजेदुपहतानि च इति ।।

ஸம்வர்த்தர்:- ஸமித், புஷ்பம், குசம் முதலியதை ச்ரோத்ரியன் தானுகவே கொண்டு வரவேண்டும். ஸங்க்ரஹத்தில்:- சூத்ரர்களால் கொண்டு வரப்பட்டதும், விலைக்கு வாங்கியதும், பிறருடையதுமான புஷ்பங்கள் தேவ பூஜைக்கு யோக்யங்களல்ல. தன்னுல் ஸம்பாதிக்கப் பட்ட புஷ்பம் உத்தமம், காட்டிலுண்டாகியது மத்யமம். விலைக்கு வாங்கியது அதமம். பிறருடையது அதமாதமம்.

பழைய புஷ்பம் வர்ஜிக்கத் தகுந்தது. ஜந்துக்களால் கெடுக்கப்பட்டதும், கால்களால் தாண்டப்பட்டதுள், வாடியதும், தொடக்கூடாதவர்களால் தொடப்பட்டதும், ப்ரதிலோம ஜாதீயர்களால் கொண்டு வரப்பட்டதும், கையால் கொண்டு வரப்பட்டதும், துணியால் கொண்டு வரப்பட்டதும், தாழுக உதிர்ந்ததுமான புஷ்பம் வர்ஜிக்கத் தகுந்ததாகும். தேவதையின் பூந்தோட்டத்தில் உண்டாகிய புஷ்பத்தை வீட்டிலுள்ள தேவதையின் பூஜையில் உபயோகிக்கக் கூடாது. ஆச்வமேதிகத்தில்:- எருக்கின் புஷ்பங்கள், எருக்கின் இலையில் வைக்கப்பட்டவை, வாஸனையில்லாதவை, இந்தப் புஷ்பங்களை வர்ஜிக்க வேண்டும். மயிர், புழு இவைகளால் தூஷிக்கப்பட்டதும், சிதறியதும், பழையதும், தாழுக உதிர்ந்ததும், அசுத்தமுமான புஷ்பங்களை வர்ஜிக்க வேண்டும்.

स्मृतिरत्ने — जलजानां च सर्वेषां पत्राणामहतस्य च । कुशपुष्पस्य रजतसुवर्णकृतयोरपि ।। न पर्युषितदोषोऽस्ति तीर्थतोयस्य चैव हि इति ।। मौद्गल्यः - अवालुकायुतं तोयमस्नेहाक्तं तथौदनम् । असूत्रग्रथितं पुष्पं सर्वं पर्युषितं भवेत् ।। वर्ज्यं पर्युषितं चान्नं वर्ज्यं पर्युषितं जलम् । न वर्ज्यं जाह्नवीतोयं न वर्ज्यं तुलसीदलम् ।। आरवारे च शौक्रे च मन्वादिषु युगादिषु । नाहरेत्तुलसीपत्रं मध्याह्नात् परतोऽहनि ।। सङ्क्रान्त्यां पक्षयोरन्ते द्वादश्यां निशि सन्ध्ययोः । तुलसीं ये विचन्वन्ति ते कृन्तन्ति हरेः शिरः इति ।।

ஸ்ம்ருதிரத்னத்தில்:- ஜலத்தில் உண்டாகும் எல்லாப் புஷ்பங்களுக்கும், பில்வம் முதலிய இலைகளுக்கும், அஹதமான வஸ்த்ரத்திற்கும், குச புஷ்பத்திற்கும், வெள்ளி தங்கமிவைகளால் செய்யப்பட்ட புஷ்பத்திற்கும், புண்யதீர்த்த ஜலத்திற்கும் பழைமையால் தோஷமில்லை. **மௌத்கல்யர்:-** மணலுடன் கூடாத ஜலம், எண்ணெய்யுடன் கூடாத அன்னம், தொடுக்கப்படாத புஷ்பம் இவையெல்லாம் பழைமையுடையதாகும்.

பழைமையுள்ள அன்னம் வர்ஜிக்கத் தகுந்தது. பழைமையுள்ள ஜலம் வர்ஜிக்கத் தகுந்தது. ஆஞல், கங்கா ஜலம் வர்ஜிக்கத் தகுந்ததல்ல. துளஸியின் இலையும் வர்ஜிக்கத் தகுந்தல்ல. பௌமவாரம், சுக்ரவாரம், மன்வாதிகள், யுகாதிகள், மத்யாஹ்னத்திற்குப் பிறகான பகல் இக்காலங்களில் துளஸீ பத்ரத்தை க்ரஹிக்கக் கூடாது. ஸங்க்ரமணம், அமா, பூர்ணிமா, த்வாதசீ, ராத்ரி, ஸந்த்யை இக்காலங்களில் துளஸீ பத்ரத்தை க்ரஹிப்பவர் எவரோ அவர் விஷ்ணுவின் சிரஸ்ஸைச் சேதிக்கின்றனர்.

भारते — तुलसीपत्रमादाय मद्भक्तो गतवान् यतः । तमेवानुगमिष्यामि यथा गौर्वत्सला तथा ।। तुलस्याहरणमन्त्रः - तुलस्यमृतसंभूते सदा त्वं केशवप्रिया । केशवार्थं लुनामि त्वां वरदा भव शोभने ।। मोक्षैक हेतो धरणिप्रसूते विष्णोस्समस्तस्य गुरोः प्रिये ते । आराधनार्थं पुरुषोत्तमस्य लुनामि पत्रं तुलसि क्षमस्व ।। प्रसीद मम देवेशि प्रसीद हरिवल्लभे । क्षीरोदमथनोद्भूते तुलसि त्वं प्रसीद मे इति ।। कुशोत्पाटनविधिः प्रसङ्गात् पूर्वमेवोक्तः ।।

பாரதத்தில்:- துளஸீபத்ரத்தை எடுத்துக் கொண்டு என் பக்தன் எங்கு செல்கின்றனோ அங்கு, அவனை நான், அன்புள்ள பசு தன் கன்றை எவ்விதம் பின் தொடருகிறதோ அவ்விதம் பின் தொடருகிறேன். **துளஸியை க்ரஹிக்கும் மந்த்ரம்:-** அம்ருதத்தினின்றும் உண்டாகிய துளஸியே! நீ எப்பொழுதும் கேசவனுக்குப் பிரியமானவள். உன்னைக் கேசவனுக்காகச் கிள்ளுகிறேன். ஓ சுபமாகியவளே! நீ வரனை அளிப்பவளாயாக வேண்டும். மோக்ஷத்திற்கு முக்ய காரணமாகியவளே! பூமியில் உண்டாகியவளே! புருஷோத்தமனின் பூஜைக்காக உனது இலையைச் சேதிக்கின்றேன். பொறுக்க வேண்டும். தேவர்களுக்கும் ஈச்வரியே! அனுக்ரஹிக்க வேண்டும். ஹரியின் வல்லபே! அனுக்ரஹிக்க வேண்டும். பாற்கடலைக் கடைந்ததால் உண்டாகியவளே! ஓ துளசி! எனக்கு நீ அனுக்ரஹம் செய்ய

வேண்டும். ''குசத்தை க்ரஹிக்கும் விதி ப்ரஸங்கத்தால் முன்பே சொல்லப்பட்டுள்ளது.

तृतीयभागकृत्यम् — अथ तृतीयभागकृत्यमाह दक्षः — तृतीये च तथा भागे पोष्यवर्गार्थसाधनम् इति ।। व्यासोऽपि — उपेयादीश्वरं चाथ योगक्षेमार्थसिद्धये । साधयेद्धिततानर्थान् कुटुम्बार्थं द्विजोत्तमः इति ।। ईश्वरं - राजानम् । अलब्धलाभो योगः । लब्धपरिपालनं क्षेमः ।। हारीतः – सञ्चिन्त्य पोष्यवर्गस्य भरणार्थं विचक्षणः । ईश्वरं चैव कार्यार्थमभिगच्छेद्द्विजोत्तमः इति ।। गौतमोऽपि – योगक्षेमार्थमीश्वरमधिगच्छेन्नान्यमन्यत्र देवगुरुधार्मिकेभ्यः इति ।। मनुः - यात्रामात्रप्रसिद्ध्यर्थं स्वैः कर्मभिरगर्हितैः । अक्लेशेन शरीरस्य कुर्वीत धनसञ्चयम् इति ।।

மூன்றுவது பாகத்தின் கார்யம் :- மூன்றுவது பாகத்தின் கார்யத்தைச் சொல்லுகிறார் தக்ஷர்:- மூன்றுவது பாகத்தில், தன்னால் போஷிக்கத் தகுந்தவர்களைப் போஷிப்பதற்காகப் பணத்தை ஸம்பாதிக்க வேண்டும். வ்யாஸரும்:- பிறகு யோகக்ஷேமங்கள் ஸித்திப்பதற்காக ஈச்வரனை அடையவேண்டும். ஈச்வரன் - அரசன். இல்லாத பொருளை அடைவது யோகம். கிடைத்த பொருளைப் பரிபாலிப்பது க்ஷேமம். ஹாரீதர்:- அறிவுள்ள ப்ராம்ஹணன் போஷிக்கத் தகுந்தவர்களைப் போஷிப்பதற்காக ஆலோசித்து, கார்ய நிமித்தமாய் அரசனை அடைய வேண்டும். கௌதமரும்:- யோகக்ஷேமத்திற்காக ராஜாவை அடைய வேண்டும். தேவதைகள், குருக்கள், தார்மிகர்கள் இவர்களைத் தவிர்த்து மற்றவனை அடையக் கூடாது. மனு:- குடும்பரக்ஷணம், நித்ய கர்மானுஷ்டான மிவையுடன் தன் ப்ராணனை ரக்ஷிப்பதற்காக மட்டும், சாஸ்த்ர விஹிதமானதும், இழிவில்லாததுமான தனது கர்மங்களால் சரீரத்திற்கு க்லேசமில்லாமல் பணத்தைச் சேர்க்க வேண்டும்.

स्मृतिरत्ने — अह्नोऽष्टधा विभक्तस्य भागे चैव तृतीयके । पोष्यवर्गार्थसिद्ध्यर्थं धनमिच्छेत्तु बुद्धिमान् इति ।। पोष्यवर्गो दक्षेण दर्शितः — माता पिता गुरुर्भार्या प्रजा दासः समाश्रितः । अभ्यागतोऽतिथिश्चाग्निः पोष्यवर्ग उदाहृतः ।। ज्ञातिर्बन्धुजनः क्षीणस्तथाऽनाथः समाश्रितः । अन्योऽपि धनहीनस्तु पोष्यवर्ग उदाहृतः ।। भरणं पोष्यवर्गस्य प्रशस्तं स्वर्गसाधनम् । नारकं पीडनं तस्य तस्माद्यत्नेन तान् भरेत् ।। स जीवति य एवैको बन्धुभिश्चोपभुज्यते । जीवन्तोऽपि मृतास्त्वन्ये पुरुषाः स्वोदरम्भराः इति ।।

ஸ்ம்ருதிரத்னத்தில்:- எட்டுப் பாகமாய் பிரிக்கப்பட்ட பகலின் மூன்றுவது பாகத்தில் போஷ்யர்களின் போஷணத்திற்காக, புத்தியுள்ளவன் பணத்தை ஸம்பாதிக்க வேண்டும். போஷ்ய வர்க்கமென்பது தக்ஷரால் தெரிவிக்கப்பட்டுள்ளது. தாய், தந்தை, குரு, பார்யை, குழந்தை, தாஸன், ஆச்ரிதன், அப்யாகதன், அதிதி, அக்னி இவர்கள் போஷ்யர்கள். ஜ்ஞாதி, பந்து, தரித்ரன், அநாதன், அண்டியவன், பணமில்லாத மற்றவன் இவர்களும் போஷ்யர்களாம். போஷ்யர்களோத்தாங்குவது சிறந்த ஸ்வர்க்கஸாதனமாம். அவர்களைப் பீடிப்பது நரகப்ரதமாம். ஆகையால் ப்ரயத்னத்துடன் அவர்களைப் போஷிக்க வேண்டும். எவனைப் பந்துக்கள் அண்டிப் பிழைக்கின்றனரோ, அவனொருவனே பிழைத்திருக்கிறன். தன் வயிற்றை மட்டும் வளர்க்கும் மற்ற மனிதர்கள் பிழைத்திருந்தாலும் இறந்தவர்களேயாம்.

चतुर्थभागकृत्यम् — अथ चतुर्थभागकृत्यमाह दक्षः - चतुर्थे तु तथा भागे स्नानार्थं मृदमाहरेत् । तिलपुष्पकुशादीनि स्नानं चाकृत्रिमे जले इति ।। मध्याह्नस्नानविधिस्तु प्रसङ्गात् पूर्वमेव निरूपितः ।। मध्याह्नसन्ध्याविधिमाह शङ्खः - प्रातः सन्ध्यां सनक्षत्रां मध्यमां स्नानकर्मणि । सादित्यां पश्चिमां सन्ध्यामुपासीत यथाविधि ।।

आपोहिष्ठेति सम्प्रोक्ष्य ऋचेनाब्दैवतेन तु । आपः पुनन्तुमन्त्रेण पीत्वाऽपो मार्जयेत् पुनः ॥ दधिक्रावण्ण इति च आपोहिष्ठादिभिस्तथा। प्रदक्षिणं परिषिच्य त्वारभेच्छ्रुतिचोदितम्॥ अर्घ्यमेकं प्रदातव्यं मध्याह्ने भास्करं प्रति। पाणिना जलमादाय सकृत् कुर्यात् प्रदक्षिणम् ॥ दर्भान् धारयमाणः सन्नात्मनो ध्यानमाचरेत्। आदित्यादीन् ग्रहांस्तत्र तर्पयेत् सुसमाहितः ॥ अथ मध्यमसन्ध्याया मासीनः प्राङ्मुखो जपेत्। स्थितो जपेत् सदाकालमादित्याभिमुखो द्विजः ॥ यदि स्यात् क्लिन्नवासा वै वारिमध्यस्थितो जपेत्। सहस्रपरमां देवीं शतमध्यां दशावराम्॥ गायत्रीं तु यथाशक्ति जपेदव्यग्रमानसः। स्वशाखाविहितैर्मन्त्रैरादित्यमुपतिष्ठति ॥ प्रदर्शयन् व्योममुद्रा मासत्येनेति मन्त्रकम्। स्थितो जपेदूर्ध्वबाहुः सूर्यं पश्यन् समाहितः इति॥

நான்காவது பாக க்ருத்யம் :- நான்காவது பாகத்தின் கார்யத்தைச் சொல்லுகிறார்- தக்ஷர்:- பகலில் நான்காவது பாகத்தில் ஸ்நானத்திற்காக மண்ணைக் கொண்டு வரவேண்டும். எள், புஷ்பம், குசம் முதலியதையும் கொண்டு வரவேண்டும். மனிதர்களால் செய்யப்பட்ட தடாகம் முதலியதல்லாத தீர்த்தத்தில் ஸ்நானம் செய்ய வேண்டும். மத்யாஹ்ன ஸ்நாநவிதியை ப்ரஸக்தியால் முன்பே சொல்லி விட்டோம். மாத்யாஹ்னிக ஸந்த்யாவிதியைச் சொல்லுகிறார். சங்கர்:- நக்ஷத்ரங்களுடன் கூடிய காலத்தில் ப்ராதஸ் ஸந்த்யையையும், மத்யாஹ்ன ஸ்நானகாலத்தில் மத்யாஹ்ன ஸந்த்யையையும், ஸூர்யனுடன் கூடிய காலத்தில் ஸாயம் ஸந்த்யையையும் விதிப்படி உபாஸிக்க வேண்டும். ஜலதேவதாகமான ஆபோஹிஷ்டா முதலிய மூன்று ருக்குகளால் ப்ரோக்ஷித்து, 'ஆப:புநந்து' என்ற மந்த்ரத்தால் ஜலத்தைப் பருகி, மறுபடி 'ததிக்ராவ்ண்ண:,' 'ஆபோஹிஷ்டா' முதலிய மந்த்ரங்களால் ப்ரோக்ஷித்து,

ப்ரதக்ஷிணமாய் ஜலத்தால் தன்னைச் சுற்றி, வேதம் சொல்லியதை ஆரம்பிக்க வேண்டும். மத்யாஹ்னத்தில் ஸூர்யனைக் குறித்து ஒரு அர்க்யம் கொடுக்க வேண்டும். கையிலுல் ஜலத்தை எடுத்துக் கொண்டு ஒரு முறை ப்ரதக்ஷிணம் செய்ய வேண்டும். தர்ப்பங்களைத் தரித்தவனுய்ப் பிரம்மாத்மாவை த்யானிக்க வேண்டும். கவன முடையவனுய் ஸூர்யன் முதலிய க்ரஹங்களைத் தர்ப்பிக்க வேண்டும். பிறகு கிழக்கு முகமாய் உட்கார்ந்தவனுய், காயத்ரியை ஜபிக்க வேண்டும். ஈரவஸ்த்ரத்துடனிருந்தால் ஜலத்தின் நடுவிலிருந்து ஜபிக்க வேண்டும். யதாசக்தி காயத்ரியை ஜபிக்க வேண்டும். ஆயிரமுறை ஜபிப்பது உத்தமம்; நூறு மத்யமம்; பத்து அதமம். ஏகாக்ரனுய் ஜபிக்க வேண்டும். தன் சாகையில் விதிக்கப்பட்டுள்ள மந்த்ரங்களால் ஸூர்யோப ஸ்தானம் செய்ய வேண்டும். ஆகாச முத்ரையைக் காண்பிவிப்பவனுய், 'ஆஸத்யேந' என்ற மந்த்ரத்தை, நின்று கொண்டு, ஸூர்யனைப் பார்த்துக் கொண்டு, கவனமுடையவனுய் ஜபிக்க வேண்டும்.

योगयाज्ञवल्क्यः - आसत्यर्क्षु च पूर्वे द्वे त्रिष्टुभौ कवयोविदुः। गायत्री तु तृतीया स्याच्चतुर्थी जगती मता॥ उष्णिक् तच्चक्षुराद्यस्य छन्द इत्युच्यते बुधैः। हिरण्यस्तूप इत्येष ऋषिर्देवोऽत्र भास्करः इति॥ भरद्वाजः – उपस्थाय नमस्कुर्याच्चतुः सन्ध्यादिदेवताः। दिशश्च साधिपा नत्वा गुरूनप्यभिवादयेत् इति॥ प्रातर्होमानन्तरं ब्रह्मयज्ञाकरणे माध्याह्निकजपानन्तरं तर्पणात् प्राक् ब्रह्मयज्ञः कार्यः। स चार्वक् तर्पणात् कार्यः इति स्मृतेः॥

யோகயாக்ஞவல்க்யர்:- 'ஆஸத்யேந' முதலிய ருக்குகளுள் முந்திய இரண்டு ருக்குகளுக்கு த்ரிஷ்டுப் சந்தஸ். மூன்றுவது ருக்குக்கு காயத்ரீ சந்தஸ். நான்காவதற்கு ஜகதீசந்தஸ், 'தச்சக்ஷு:' முதலியதற்கு உஷ்ணிக்சந்தஸ். ஹிரண்யஸ்தூபர் ருஷி, பாஸ்கரன்

தேவதையாம். பரத்வாஜர்:- ஸூர்யோப ஸ்தானம் செய்த பிறகு, ஸந்த்யை முதலிய நான்கு தேவதைகளையும் நமஸ்கரிக்க வேண்டும். பாலகர்களுடன் கூடிய திக்குகளையும் நமஸ்கரித்து, குருக்களையும் நமஸ்கரிக்க வேண்டும். ப்ராதர் ஹோமத்திற்குப் பிறகு ப்ரம்ஹயக்ஞம் செய்யா விடில் மாத்யாஹ்னிக ஜபத்திற்குப் பிறகு, தர்ப்பணத்திற்குமுன் ப்ரம்ஹயக்ஞம் செய்யப்பட வேண்டும். 'அந்த ப்ரம்ஹயக்ஞத்தைத் தர்ப்பணத்திற்கு முன் செய்ய வேண்டும்' என்று ஸ்ம்ருதி உள்ளது. மத்யாஹ்னத்தில் ப்ரம்ஹயக்ஞத்திற்குப் பிறகு தர்ப்பணம் செய்யப்பட வேண்டும்.

मध्याह्ने ब्रह्मयज्ञानन्तरं तर्पणं कार्यम् ।। तथा च व्यासः - आचम्य च यथाशास्त्रं शक्त्या स्वाध्यायमाचरेत्। ततः सन्तर्पयेद्देवान् पितॄनृषिगणांस्तथा ।। आदावोङ्कारमुच्चार्य नामान्ते तर्पयामि च। देवान् ब्रह्मऋषींश्चैव तर्पये दक्षतोदकैः ।। तिलोदकैः पितॄन् भक्त्या स्वसूत्रोक्तविधानतः । यज्ञोपवीती देवानां निवीती ऋषितर्पणे । प्राचीनावीती पित्र्ये तु स्वेन तीर्थेन भावितः इति ।। चन्द्रिकायाम् – सार्धयामादूर्ध्वं मध्याह्नः । तत्र माध्याह्निकानन्तरं नित्यतर्पणं कुर्यात्। तच्च देवर्षिपितृतर्पणम् इति ।। माधवीये - प्रागग्रेषु सुरांस्तर्पयेत् मनुष्यांश्चैव मध्यतः । पितॄंस्तु दक्षिणाग्रेषु चैकद्वित्रिजलाञ्जलीन् इति ।। व्यासः – एकैकमञ्जलिं देवा द्वौ द्वौ तु सनकादयः । अश्नन्ति पितरस्त्रींस्त्रीन् स्त्रियश्चैकैकमञ्जलिम् इति ।। विष्णुपुराणे – त्रिरपः प्रीणनार्थाय देवानामपवर्जयेत् । तथार्षीणां यथान्यायं सकृच्चापि प्रजापतेः ।। पितॄणां प्रीणनार्थाय त्रिरपः पृथिवीपते इति ।।

அவ்விதமே, வ்யாஸர்:- ஆசமனம் செய்து, யதாசக்தி, சாஸ்த்ரப்படி ப்ரம்ஹயக்ஞாத்யயனம் செய்ய வேண்டும். பிறகு தேவர்களுக்கும் பித்ருக்களுக்கும் ருஷிகணங்களுக்கும் தர்ப்பணம் செய்ய வேண்டும்.

முதலில் 'ஓம்' என்று சொல்லி நாமத்தைச் சொல்லிப் பிறகு தர்ப்பயாமி என்று சொல்லி, தேவர்களையும் ப்ரம்ஹர்ஷிகளையும், அக்ஷதையுடன் கூடிய ஜலங்களால் தர்ப்பிக்க வேண்டும். திலத்துடன் கூடிய ஜலங்களால் பித்ருக்களையும், தன் ஸூத்ரத்திலுள்ள விதிப்படி பக்தியுடன் தர்ப்பிக்க வேண்டும். உபவீதியாய், தேவர்களையும், நிவீதியாய் ருஷிகளையும், ப்ராசீனவீதியாய் பித்ருக்களையும் அவரவர் தீர்த்தத்தால் கவனமாய், தர்ப்பிக்க வேண்டும். சந்த்ரிகையில்:- உதயாதி ஒன்றரை யாமத்திற்கு மேல் மத்யாஹ்னம். அக்காலத்தில் மாத்யாஹ்னிகத்திற்குப் பிறகு நித்ய தர்ப்பணத்தைச் செய்ய வேண்டும். அது தேவர்ஷி தர்ப்பணம் எனப்படுகிறது. மாதவீயத்தில்:- கிழக்கு நுனியான தர்ப்பங்களில் தேவர்களையும், நடுவில் மனுஷ்யர்களையும், தெற்கு நுனியாயுள்ள தர்ப்பங்களில் பித்ருக்களையும் முறையே ஒன்று, இரண்டு, மூன்று அஞ்ஜலிகளால் தர்ப்பிக்க வேண்டும். வ்யாஸர்:- தேவர்கள் ஒவ்வொரு அஞ்ஜலியையும், ருஷிகள் இரண்டு இரண்டு அஞ்ஜலிகளையும், பித்ருக்கள் மூன்று மூன்றஞ்ஜலிகளையும், ஸ்த்ரீகள் ஒவ்வொரு அஞ்ஜலியையும் ஸ்வீகரிக்கின்றனர். விஷ்ணு புராணத்தில்:- ஓ அரசனே! தேவர்களுக்கு மூன்று தடவையும், ருஷிகளுக்கும் மூன்று தடவையும், ப்ரஜாபதிக்கு ஒரு தடவையும், பித்ருக்களுக்கு மூன்று தடவையும் ஜலாஞ்ஜலிகளைக் கொடுக்க வேண்டும்.

अत्र अञ्जलिसङ्ख्या यथाशाखं व्यवतिष्ठते । यत्र शाखायां न सङ्ख्यानियमः श्रुतः, तत्र विकल्पः इति माधवीये ।। शङ्खलिखितौ - उभाभ्यामपि हस्ताभ्यां प्राङ्मुखो यज्ञोपवीती प्रागग्रैः कुशैर्देवतातर्पणं देवतीर्थेन कुर्यात् इति ।। विष्णुरपि — ततः कृत्वा निवीतं तु यज्ञसूत्रमतन्द्रितः । प्राजापत्येन तीर्थेन मनुष्यांस्तर्पयेद्व्रती ।। प्राचीनावीती पित्र्येण पितॄंस्तीर्थेन तर्पयेत् इति ।। पैठीनसिः -

अपसव्यं ततः कृत्वा स्थित्वा च पितृदिङ्मुखः। पितॄन् दिव्यानदिव्यांश्च पितृतीर्थेन तर्पयेत् इति॥

இங்கு அஞ்ஜலி ஸங்க்யை அவரவர் சாகைப்படி வ்யவஸ்தையையடைகின்றது. எந்தச் சாகையில் வ்யவஸ்தை சொல்லப்பட்ட வில்லையோ அங்கு விகல்பம் என்று மாதவீயத்தில் சொல்லப்பட்டுள்ளது. **சங்கலிகிதர்கள்:-** கிழக்கு நோக்கியவனுய் உபவீதியாய், கிழக்கு நுனியாயுள்ள தர்ப்பங்களால் இருகைகளாலும் தேவதீர்த்தத்தால் தேவதர்ப்பணம் செய்ய வேண்டும். **விஷ்ணுவும்:-** பிறகு உபவீதத்தை நிவீதமாய்ச் செய்து கொண்டு, ப்ராஜாபத்ய தீர்த்தத்தால் மனுஷ்ய தர்ப்பணம் செய்ய வேண்டும். ப்ராசீனுவீதியாய், பித்ருதீர்த்தத்தால் பித்ருக்களைத் தர்ப்பிக்க வேண்டும். **பைடீநஸி:-** பிறகு ப்ராசீனுவீதம் செய்து கொண்டு, தெற்கு முகமாயிருந்து, திவ்யபித்ருக்களையும், அதிவ்யபித்ருக்களையும், பித்ருதீர்த்தத்தால் தர்ப்பிக்க வேண்டும். திவ்ய பித்ருக்கள் - வஸுருத்ர ஆதித்யர்கள். அதிவ்யபித்ருக்கள் = பித்ருபிதாமஹ ப்ரபிதாமஹாதிகள்.

हारीतः —वसित्वा वसनं शुक्लं (ष्कं) स्थले विस्तीर्णबर्हिषि। विधिज्ञस्तर्पणं कुर्यान्न पात्रेषु कदाचन॥ पात्राद्वा जलमादाय शुभे पात्रान्तरे क्षिपेत्। जलपूर्णेऽथवा गर्ते न स्थले हीनबर्हिषि॥ केशभस्मतुषाङ्गारकीटकास्थिसमाकुलम्। भवेन्महीतलं यस्मात् बर्हिषास्तरणं ततः इति॥ स्थलस्थो नोदके कुर्यात्॥ तदाह गोभिलः - नोदकेषु न पात्रेषु न क्रुद्धो नैकपाणिना। नोपतिष्ठति तत्तोयं यन्न भूमौ प्रदीयते इति॥ विष्णुः - स्थले स्थित्वा जले यस्तु प्रयच्छेदुदकं नरः। नोपतिष्ठति तत्तोयं यन्न भूमौ प्रदीयते इति॥

ஹாரீதர்:- விதியை அறிந்தவன் உலர்ந்த வஸ்த்ரத்தைத் தரித்து, தர்ப்பங்கள் பரப்பியுள்ள ஸ்தலத்தில் தர்ப்பணம் செய்ய வேண்டும். பாத்ரங்களில்

செய்யக் கூடாது. அல்லது, ஒரு பாத்ரத்தினின்றும், ஜலத்தை எடுத்து சுத்தமான மற்றொரு பாத்ரத்தில் விடவேண்டும். அல்லது ஜலம் நிறைந்துள்ள பள்ளத்திலாவது விடலாம். தர்ப்பையில்லாத ஸ்தலத்தில் விடக்கூடாது. மயிர், சாம்பல், கரி, புழு, எலும்பு இவைகளால் பூமி வ்யாபிக்கப்பட்டு இருக்கக் கூடுமாகையால் தர்ப்பைகளால் தர்ப்பண ஸ்தலத்தைப் பரப்ப வேண்டும். ஸ்தலத்திலிருந்து கொண்டு ஜலத்தில் தர்ப்பணம் செய்யக் கூடாது. அதைச் சொல்லுகிறார். கோபிலர்:- ஜலத்தில் செய்யக் கூடாது. பாத்ரங்களில் செய்யக் கூடாது. கோபமுடையவனுய்ச் செய்யக் கூடாது. ஒரு கையினுல் செய்யக் கூடாது. பூமியில் கொடுக்கப்படாத ஜலம் பித்ருக்களைச் சேருவதில்லை. விஷ்ணு:- ஸ்தலத்திலிருந்து ஜலத்தில் தர்ப்பணம் செய்பவனின் ஜலம் பித்ருக்களை அடைவதில்லை. பூமியில் கொடுக்கப்படாததால்.

यत्तु काष्णाजिनिनोक्तम् — देवतानां पितॄणां च जले दद्याज्जलाञ्जलिम् इति तदशुद्धस्थलविषयं स्नानाङ्गतर्पणविषयं च ।। तदाह विष्णुः - यत्राशुचि स्थलं वा स्यादुदके देवताः पितॄन्। तर्पयेत्तु यथाकाममप्सु सर्वं प्रतिष्ठितम् इति ।। स एव — स्नातश्चार्द्रवासा देवर्षिपितृतर्पणमम्भस्थ एव कुर्वीत इति ।। पितामहः - पात्राद्वा जलमादाय शुभे पात्रान्तरे क्षिपेत् । हेमरूप्यमयं पात्रं ताम्रकांस्यसमुद्भवम्।। पितॄणां तर्पणे पात्रं मृन्मयं तु परित्यजेत् इति।

ஆனுல், கார்ஷ்ணஜினியால்:- 'தேவதைகளுக்கும், பித்ருக்களுக்கும், தர்ப்பண ஜலாஞ்ஜலியை ஜலத்தில் கொடுக்க வேண்டும்' என்று சொல்லப்பட்டுள்ளதே எனில், அது அசுத்த ஸ்தலவிஷயமும், ஸ்நானுங்க தர்ப்பண விஷயமுமாம். அதைச் சொல்லுகிறார், விஷ்ணு:- எங்கு ஸ்தலம் அசுத்தமாயுள்ளதோ அங்கு தேவபித்ரு தர்ப்பணத்தை இஷ்டப்படி ஜலத்தில் செய்யலாம்.

உலகமெலாம் ஜலத்தில் தான் வைக்கப்பட்டுள்ளது. விஷ்ணுவேः- ஸ்நானம் செய்தவன் ஈரவஸ்த்ரத்துடன் தேவர்ஷி பித்ருதர்ப்பணத்தை ஜலத்திலிருந்தே செய்ய வேண்டும். பிதாமஹர்ः- ஒரு பாத்ரத்திலிருந்து ஜலத்தை எடுத்து, சுத்தமான மற்றொரு பாத்ரத்தில் விடவேண்டும். தங்கம், வெள்ளி, தாம்ரம், வெண்கலம் இவைகளில் ஒன்றிஞலாகிய பாத்ரம் பித்ரு தர்ப்பண விஷயத்தில் ச்லாக்யம். மண்பாத்ரத்தை வர்ஜிக்க வேண்டும்.

मरीचिः — सौवर्णेन च पात्रेण ताम्ररूप्यमयेन वा। औदुम्बरेण खड्गेन पितॄणां दत्तमक्षयम् इति ॥ माधवीये — खड्गमौक्तिकहस्तेन कर्तव्यं पितृतर्पणम्। मणिकाञ्चनदर्भैर्वा नाशुद्धेन कदाचन इति ॥ मरीचिः - विना रूप्यसुवर्णेन विना ताम्रतिलैस्तथा। विना मन्त्रैश्च दर्भैश्च पितॄणां नोपतिष्ठते ॥ तिलानामप्यभावे तु सुवर्णरजतान्वितम्। तदभावे निषिञ्चेत्तु दर्भैर्मन्त्रेण वा पुनः इति ॥ तिलग्रहणे विशेषमाह योगयाज्ञवल्क्यः - यद्युद्धृतान्निषिञ्चेत्तु तिलान् संमिश्रयेज्जले। अतोऽन्यथा तु सव्येन तिला ग्राह्या विचक्षणैः इति ॥ एतदलोमकप्रदेशाभिप्रायम्॥

மரீசிः- தங்கம், தாம்ரம், வெள்ளி, அத்தி, கட்க (காண்டா) ம்ருகத்தின் கொம்பு இவைகளில் ஒன்றிஞல் உண்டாகிய பாத்ரத்தால் பித்ருக்களுக்குக் கொடுக்கப் படும் ஜலம் குறைவற்றதாகும். மாதவீயத்தில்:- கட்கம், முத்து, ரத்னம், தங்கம், தர்ப்பை இவைகளில் ஒன்றைக் கையில் தரித்துக் தர்ப்பணம் செய்ய வேண்டும். அவ்விதம் இல்லாமல் அசுத்தஞய்ச் செய்யக் கூடாது. மரீசி:- தங்கம், வெள்ளி இல்லாமலும், தாம்ரம், திலமில்லாமலும், மந்த்ரங்கள், தர்ப்பங்களில்லாமலும் தர்ப்பிக்கப்பட்டது பித்ருக்களை அடைவதில்லை. திலங்கள் கிடைக்காவிடில் பொன், வெள்ளி இவைகளுடன் தர்ப்பிக்க வேண்டும். அவைகளும் கிடைக்காவிடில் தர்ப்பங்களுடன், அவையில்லா விடில் மந்த்ரங்களுடன் ஜலத்தைக்

கொடுக்க வேண்டும். எள்ளை க்ரஹிப்பதில் விசேஷத்தைச் சொல்லுகிறார். யோகயாக்ஞவல்க்யர்:- எடுத்த ஜலத்தால் தர்ப்பணம் செய்தால் பாத்ரத்திலுள்ள ஜலத்தில் எள்ளைக் கலக்க வேண்டும். இதைவிட வேறு ப்ரகாரத்தால் செய்வதாஞல் அறிந்தவர்கள் இடது கையிஞல் திலத்தை க்ரஹிக்க வேண்டும். இது ரோமமில்லாத ப்ரதேசத்தைச் சொல்லுவதில் அபிப்பிராய முள்ளதாம்.

तथा च देवलः - अङ्गुष्ठमूलदेशे तु वामहस्तस्य निक्षिपेत् । तत्तिलं पूतपुण्यं स्यात् तत्तोयममृतं भवेत् ।। शिलातले पटे पात्रे रोमस्थानेषु कुत्रचित् ।। तत्तिलं कृमितुल्यं स्यात्तत्तोयं रुधिरं भवेत् ।। रोमसंस्थांस्तिलान् कृत्वा यस्तु तर्पयते पितॄन् । पितरस्तर्पितास्तेन रुधिरेण मलेन च इति ।। तिलग्रहणे तर्जन्यङ्गुष्ठयोगं वर्जयेत् । दक्षिणाङ्गुष्ठेनैव अञ्जलौ तिलान् प्रक्षिपेत् ।। तथा स एव — तर्जन्यङ्गुष्ठसंयोगे राक्षसी मुद्रिका स्मृता । तया तिलान्न गृह्णीयात् दक्षाङ्गुष्ठेन निक्षिपेत् इति ।। शुक्लैस्तु तर्पयेद्देवान् मनुष्यान् शबलैस्तिलैः । पितॄन्सन्तर्पयेत्कृष्णैः देवर्षीनपि वाऽक्षतैरिति ।

தேவலர்:- இடதுகையின் பெருவிரலின் அடியில் திலத்தை வைத்துக் கொள்ள வேண்டும். அந்தத் திலம் பரிசுத்தமும் புண்யமுமாகும். அந்த ஜலம் அம்ருதமயமாகும். பாராங்கல், வஸ்த்ரம், இலை, ரோமமுள்ள ஸ்தானம் இவைகளில் திலத்தை வைத்துக் கொண்டால், அத்திலம் புழுவுக்குச் சமமாயாகின்றது. அந்த ஜலம் ரக்தமாயாகின்றது. எவன் எள்ளை ரோமஸ்தானத்தில் வைத்துக் கொண்டு பித்ரு தர்ப்பணம் செய்கின்றானே அவன் ரக்தத்தாலும், மலத்தாலும் பித்ருக்களைத் தர்ப்பித்தவனாகிறான். திலத்தை எடுக்கும் பொழுது தர்ஜனீ விரல், பெருவிரல் இவைகளைச் சேர்க்கக் கூடாது. வலது கையின் பெருவிரலாலேயே அஞ்சலியில் திலங்களைப் போடவேண்டும். தர்ஜினீ விரலும், பெருவிரலும் சேர்ந்தால் ராக்ஷஸ முத்ரை எனப்படும்.

அதனால் எள்ளை க்ரஹிக்கக் கூடாது. வலதுகையின் பெருவிரலால் எள்ளைப் போடவேண்டும். தேவலரே ! "வெண்ணிறமான எள்ளால் தேவர்களையும், பல வர்ணங்களுள்ள திலங்களால் மனுஷ்யர்களையும், கறுப்பு எள்ளால் பித்ருக்களையும் தர்ப்பணம் செய்ய வேண்டும்.

तिथ्यादिविशेषे तिलतर्पणं निषेधति स एव। सप्तम्यां रविवारे च गृहे जन्मदिने तथा। भृत्यपुत्रकलत्रार्थी न कुर्यात्तिलतर्पणम् इति। सङ्ग्रहे - अर्कशुक्लत्रयोदश्यां अष्टम्यां च त्रिजन्मसु। तर्पयेद्यस्तिलैर्मिश्रं तत्तोयं रुधिरं भवेत् । पक्षयोरुभयोश्चैव सप्तम्यां निशि सन्ध्ययोः । विद्यापुत्रकलत्रार्थी तिलान् पञ्चसु वर्जयेदिति। बोधायनः - सप्तम्यां रविवारे च जन्मर्क्षदिवसेषु च। गृहे निषिद्धं सतिलं तर्पणं तद्बहिर्भवेत्। यद्यशक्तो गृहे कुर्यात् तर्पणं सतिलं तदा। तिलान् प्रक्षिप्य पात्रस्थे जले व्यामिश्रितैस्तिलैः ।। पात्रान्तरे क्षिपेदन्न मृन्मयं तु विवर्जयेत्।। विवाहे चोपनयने चौले सति यथाक्रमम्। वर्षमर्धं तदर्धं च नैत्यके तिलतर्पणम्। तिथितीर्थविशेषेषु कार्यं प्रेतेषु सर्वथा ।। तीर्थे तिथिविशेषे च प्रेतस्नाने तथैव च। निषिद्धेऽपि तथा कुर्यात्तण्डुलैः सहतर्पणम्।। न जीवपितृकः कृष्णैस्तिलैस्तर्पणमाचरेत् इति ।।

சில திதி வாராதிகளில் தில தர்பணத்தை நிஷேதிக்கிறார். தேவலர் - ஸப்தமியிலும் பானுவாரத்திலும் வீட்டிலும் பிறந்த நாளிலும் வேலைக்காரர் புத்ரன், பெண்சாதி, இவர்களை விரும்பியவன் திலதர்பணத்தைச் செய்யக் கூடாது. ஸங்க்ரஹத்தில் பானுவாரம், சுக்ரவாரம், த்ரயோதசீ, அஷ்டமீ, த்ரிஜன்மங்கள், இவைகளில் திலத்துடன் தர்ப்பணம் செய்தால் அந்த ஜலம் ரத்தமாகும். இரண்டு பக்ஷங்களின் ஸப்தமிகளிலும் ராத்ரியிலும், ஸந்த்யைகளிலும் இந்த ஐந்து காலங்களிலும் வித்யை, புத்ரன், பார்யை, இவர்களை விரும்பியவன் திலங்களை வர்ஜிக்க வேண்டும். போதாயனர் - ஸப்தமீ, பானுவாரம்,

ஜந்ம நக்ஷத்ர தினங்கள் இவற்றில் வீட்டில் தில தர்ப்பணம் கூடாது. அதை வீட்டிற்கு வெளியிற் செய்ய வேண்டும். சக்தியற்றவன் வீட்டில் செய்துவதாஞல், பாத்ரத்திலுள்ள ஜலத்தில் திலத்தைப் போட்டு, திலத்துடன் சேர்ந்த ஜலத்தை மற்றொரு பாத்ரத்தில் விடவேண்டும். இதில் மண்பாத்ரம் கூடாது. விவாஹம், உபநயனம், சௌளம் இவைகள் செய்த பிறகு, முறையே ஒரு வருஷம், ஆறுமாதம், மூன்று மாதம் வயில் நித்ய தர்ப்பணத்தில் திலதர்ப்பணம் கூடாது. (திலமில்லாமல் செய்ய வேண்டும்.) திதி விசேஷங்கள், தீர்த்த விசேஷங்கள், ப்ரேதகார்யங்கள் இவைகளில் அவச்யம் செய்ய வேண்டும். முன்சொல்லிய தீர்த்த திதி விசேஷங்களிலும், ப்ரேத கார்யங்களிலும், நிஷித்த தினத்திலும் அரிசியுடன் கூடிய திலங்களால் தர்ப்பணம் செய்ய வேணடும். பிதா ஜீவித்திருக்கும் பொழுது கறுப்பு எள்ளால் தர்ப்பணம் செய்யக் கூடாது.

सत्यव्रतः - कृतोपवीती देवेभ्यो निवीती च भवेत्ततः । मनुष्यांस्तर्पयेद्भक्त्या ब्रह्मपुत्रानृषींस्तथा ।। अपसव्यं ततः कृत्वा सव्यं जान्वाच्य भूतले । दर्भपाणिस्तु विधिना पितॄन् सन्तर्पयेत्ततः इति ।। योगयाज्ञवल्क्योऽपि — ब्रह्माणं तर्पयेत् पूर्वं विष्णु रुद्रं प्रजापतिम् । वेदांश्छन्दांसि देवांश्च ऋषींश्चैव तपोधनान् । आचार्यांश्चैव गन्धर्वानाचार्यतनयांस्तथा । संवत्सरं सावयवं देवीरप्सरसस्तथा ।। देवानुगानपि तथा सनागान् पर्वतानपि । सरितोऽथ मनुष्यांश्च यक्षान् रक्षांसि चैव हि ।। पिशाचांश्च सुपर्णांश्च भूतान्यथ पशूंस्तथा । वनस्पतीनोषधीश्च भूतग्रामांश्चतुर्विधान् ।। सव्यं जानु ततोऽन्वाच्य पाणिभ्यां दक्षिणामुखः । तिलैस्तर्पयेन्मन्त्रैः सर्वान् पितृगणांस्तथा ।। मातामहांश्च सततं श्रद्धया तर्पयेद्द्विजः इति ।।

ஸத்யவ்ரதர்:- உபவீதியாய் தேவர்களுக்கும், நிவீதியாய் மனுஷ்யர்களுக்கும், ப்ரம்ஹபுத்ரர்களான

ருஷிகளுக்கும், ப்ராசீனுவீதியாய் இடது முழங்காலைப் பூமியில் வைத்து, தர்ப்பபாணியாய் விதியுடன் பித்ருக்களுக்கும் தர்ப்பணம் செய்ய வேண்டும். யோகயாக்ஞவல்க்யரும்:- ஆதியில் ப்ரம்ஹாவையும், பிறகு விஷ்ணு, ருத்ரன், ப்ரஜாபதி, வேதங்கள், சந்தஸ்ஸுகள், தேவர்கள், ருஷிகள், தபோதனர்கள், ஆசார்யர்கள், கந்தர்வர்கள், ஆசார்யபுத்ரர்கள், அவயவங்களுடன் கூடிய ஸம்வத்ஸரம், தேவிகளான அப்ஸரஸ்ஸுகள், தேவானுகர்கள், நாகங்கள், பர்வதங்கள், நதிகள், மனுஷ்யர்கள், யக்ஷர்கள், ரக்ஷஸ்ஸுகள், பிசாசர்கள், ஸுபர்ணர்கள், பூதங்கள், பசுக்கள், வனஸ்பதிகள், ஓஷதிகள், நான்கு விதமான பூதக்ராமங்கள் இவர்களையும் தர்ப்பித்து, பிறகு இடது முழங்காலைக் கீழேவைத்து, தெற்கு முகமாய் அவர்களைச் சொல்லும் மந்த்ரங்களால் எல்லாப் பித்ருகணங்களையும், கைகளால் தர்ப்பிக்க வேண்டும். மாதாமஹர்களையும் ச்ரத்தையுடன் நித்யமும் தர்ப்பிக்க வேண்டும்.

यजुश्शाखिनां तु काण्डर्षितर्पणमुक्तं माधवीये - अथ काण्डऋषीनेतानुदकाञ्जलिभिः शुचिः। अव्यग्रस्तर्पयेन्नित्यं मन्त्रैरेव स्वनामभिः इति ॥ गृह्यवृत्तौ - पवित्रपाणिः नवऋर्षीस्तर्पयति। प्रजापतिं काण्डऋषिं तर्पयामि। सोमं काण्डऋषिं तर्पयामि। अग्निं काण्डऋषिं तर्पयामि । विश्वान्देवान् काण्डऋर्षीस्तर्पयामि । सांहितीर्देवता उपनिषदस्तर्पयामि । याज्ञिकीर्देवता उपनिषद-स्तर्पयामि। वारुणीर्देवता उपनिषदस्तर्पयामि। ब्रह्माणं स्वयंभुवं तर्पयामि। सदसस्पतिं तर्पयामि इति॥

யஜுச்சாகிகளுக்கோவெனில் காண்டருஷி தர்ப்பணம் சொல்லப்பட்டுள்ளது. மாதவீயத்தில்:- பிறகு இந்தக் காண்ட ருஷிகளை, கவனமுள்ளவனாய், சுத்தனாய், அவரவர் நாம மந்த்ரங்களால் ஜலாஞ்ஜலிகளால் தர்ப்பிக்க வேண்டும். க்ருஹ்யவ்ருத்தியில்:- பவித்ரம் தரித்தவனாய்

ஒன்பது ருஷிகளைத் தர்ப்பிக்க வேண்டும். ப்ரஜாபதிம் காண்டருஷிம் தர்ப்பயாமி என்பது முதலான ஒன்பது மந்த்ரங்களால். (மந்த்ரங்கள் மூலத்தில்)

शौनकोऽपि — अग्निर्विष्णुः प्रजापतिः इत्यादि ॥ योगयाज्ञवल्क्यः – वसून् रुद्रांस्तथाऽऽदित्यान् नमस्कारसमन्वितम् इति ॥ तर्पयेदिति शेषः ॥ वस्वादीनां नामानि पैठीनसिना दर्शितानि — ध्रुवो धर्मश्च सोमश्च आपश्चैवानिलोऽनलः । प्रत्यूषश्च प्रभासश्च वसवोऽष्टौ प्रकीर्तिताः ॥ अजैकपादहिर्बुध्न्यो विरूपाक्षोऽथ भैरवः । हरश्च बहुरूपश्च त्र्यम्बकश्च सुरेश्वरः ॥ सावित्रश्च जयन्तश्च पिनाकी चापराजितः । एते रुद्राः समाख्याता एकादश सुरोत्तमाः ॥ इन्द्रो धाता भगः पूषा मित्रोऽथ वरुणोऽर्यमा । अर्चिर्विवस्वांस्त्वष्टा च सविता विष्णुरेव च ॥ एते वै द्वादशादित्या देवानां प्रवरास्तथा । एते च दिव्याः पितरः पूज्यास्सर्वे प्रयत्नतः इति ॥

சௌனகரும்:- அக்னி, விஷ்ணு, ப்ரஜாபதி என்பது முதலாக. யோகயாக்ஞவல்க்யர்:- வஸுக்கள், ருத்ரர்கள், ஆதித்யர்கள் இவர்களை நமச்சப்தத்துடன் தர்ப்பிக்க வேண்டும். வஸு முதலியவர்களின் பெயர்கள் பைடீநஸியினால் காண்பிக்கப்பட்டிருக்கின்றன - த்ருவன், தர்மன், ஸோமன், ஆபன், அனிலன், அனலன், ப்ரத்யூஷன், ப்ரபாஸன் என்ற இவர்கள் எட்டு வஸுக்களெனப்படுவர். அஜைகபாத், அஹிர்புத்ன்யன், விரூபாக்ஷன், பைரவன், ஹரன், பஹுரூபன், த்ரயம்பகன், ஸுரேச்வரன், ஸாவித்ரன், ஜயந்தன், பிநாகி அபராஜிதன் என்ற இவர் பதினொரு ருத்ரர்களெனப்படுவர். இந்த்ரன், தாதா, பகன், பூஷா, மித்ரன், வருணன், அர்யமா, அர்ச்சிஸ், விவஸ்வான், த்வஷ்டா, ஸவிதா, விஷ்ணு என்ற இவர் பன்னிரண்டு ஆதித்யர் எனப்படுவர். இவர்கள் திவ்யபித்ருக்கள், இவர்களெல்லோரையும் யத்னத்துடன் பூஜிக்க வேண்டும்.

योगयाज्ञवल्क्यः — सवर्णेभ्यो जलं देयं असवर्णेभ्य एव च। गोत्रनामस्वधाकारैस्तर्पयेदनुपूर्वशः इति ।। नामग्रहणे विशेषमाह बोधायनः – शर्मान्तं ब्राह्मणस्योक्तं वर्मान्तं क्षत्रियस्य तु। गुप्तान्तं चैव वैश्यस्य दासान्तं शूद्रजन्मनः इति ।। सत्यव्रतः – पितृभ्यः प्रत्यहं दद्यात्ततो मातृभ्य एव च। ततो मातामहानां च पितृव्यस्यासुतस्य च इति ।। हारीतोऽपि – पित्रादीन् मात्रादीन् मातामहादीन् पितृव्यांस्तत्पत्नीर्ज्येष्ठभ्रातॄंस्तत्पत्नीर्मातुलं तत्पत्नीं गुर्वाचार्योपाध्यायान् सुहृत्सम्बन्धि बान्धव द्रव्यान्नदातृपोषकरिक्थिनस्तत्पत्नीश्च तर्पयेत् इति।।

யோகயாக்ஞவல்க்யர்:- ஸவர்ணர்களுக்கு ஜலத்தைக் கொடுக்க வேண்டும். அஸவர்ணர்களுக்கும் கொடுக்க வேண்டும். அவரவர் கோத்ரம், பெயர் இவைகளைச் சொல்லி ஸ்வதா சப்தத்துடன் க்ரமமாய்த் தர்ப்பிக்க வேண்டும். பெயர் சொல்லுவதில் விசேஷத்தைச் சொல்லுகிறார், **போதாயனர்:-** ப்ராம்ஹணனின் பெயர் 'சர்ம' என்பதை முடிவிலுடையதாயும், க்ஷத்ரியனின் பெயர் 'வர்ம' என்பதை முடிவிலுடையதாயும், வைச்யனின் பெயர் 'குப்த' என்பதை முடிவிலுடையதாயும், சூத்ரனின் பெயர் 'தாஸ' என்பதை முடிவிலுடையதாயும் இருக்க வேண்டும். **ஸத்யவ்ரதர்:-** ப்ரதிதினமும், பித்ருக்கள், மாதாக்கள், மாதாமஹர்கள், பிள்ளையில்லாத பித்ருவ்யன் இவர்களுக்கு ஜலத்தைக் கொடுக்க வேண்டும். **ஹாரீதரும்:-** பிதா, முதலியவர், மாதா முதலியவர், மாதாமஹன் முதலியவர், பித்ருவ்யர்கள், அவர் பத்னிகள், ஜ்யேஷ்ட ப்ராதாக்கள், அவர் பத்னிகள், அம்மான், அவன் பத்னீ, குரு, ஆசார்யன், உபாத்யாயன், ஸுஹ்ருத், ஸம்பந்தீ, பாந்தவன், த்ரவ்ய 'தாதா' அன்ன 'தாதா' போஷகன், பணமுடையவன், அவர் பத்னீகள் என்ற இவர்களுக்கும் தர்ப்பணம் செய்ய வேண்டும்.

बोधायनः — अग्निः प्रजापतिस्सोमो रुद्रोऽदिति र्बृहस्पतिस्सर्पा इत्येतानि प्राग्द्वाराणि दैवतानि सनक्षत्राणि सग्रहाणि साहोरात्राणि समुहूर्तानि तर्पयामि । वसूंस्तर्पयामि । पितरोऽर्यमा भगस्सविता त्वष्टा वायुरिन्द्राग्नी इत्येतानि दक्षिणद्वाराणि दैवतानि सनक्षत्राणि सग्रहाणि साहोरात्राणि समुहूर्तानि तर्पयामि । रुद्रांश्च तर्पयामि। मित्र इन्द्रो महापितर आपो विश्वेदेवा ब्रह्मा विष्णुरित्येतानि प्रत्यग्द्वाराणि दैवतानि सनक्षत्राणि सग्रहाणि साहोरात्राणि समुहूर्तानि तर्पयामि। आदित्यांश्च तर्पयामि। वसवो वरुणोऽज एकपादहिर्बुध्यः पूषाऽश्विनौ यम इत्येतानि उदग्द्वाराणि दैवतानि स नक्षत्राणि सग्रहाणि साहोरात्राणि समुहूर्तानि तर्पयामि । साध्यांश्च तर्पयामि । ब्रह्माणं तर्पयामि । प्रजापतिम् । परमेष्ठिनम् । हिरण्यगर्भम् । चतुर्मुखम् । स्वयंभुवम् । ब्रह्मपारिषदान् । ब्रह्मपारिषदीः । अग्निम् । वायुम् । वरुणम् । सोमम् । सूर्यम् । चन्द्रमसम् । नक्षत्राणि । सद्योजातम् । ओं भूः पुरुषम् । ओं भुवः पुरुषम् । ओं सुवः पुरुषम् । ओं भूर्भुवः सुवः पुरुषम् । ओं भूः । ओं भुवः । ओं सुवः । ओं महः । ओं जनः । ओं तपः । ओं सत्यम् । भवं देवम् । शर्वं देवम् । ईशानन्देवम् । पशुपतिं देवम् । रुद्रं देवम् । उग्रं देवम् । भीमं देवम् । महान्तं देवम् । भवस्य देवस्य पत्नीम् । शर्वस्य देवस्य पत्नीम् । ईशानस्य देवस्य पत्नीम् । पशुपतेर्देवस्य पत्नीम् । रुद्रस्य देवस्य पत्नीम् । उग्रस्य देवस्य पत्नीम् । भीमस्य देवस्य पत्नीम् । महतो देवस्य पत्नीम् । भवस्य देवस्य सुतम् । शर्वस्य देवस्य सुतम् । ईशानस्य देवस्य सुतम् । पशुपतेर्देवस्य सुतम् । रुद्रस्य देवस्य सुतम् । उग्रस्य देवस्य सुतम् । भीमस्य देवस्य सुतम् । महतो देवस्य सुतम् । रुद्रान् । रुद्रपारिषदान् । रुद्रपारिषदीः । सनत्कुमारम् । स्कन्दम् । इन्द्रम् । जयन्तम् । षण्मुखम् । विशाखम् । महासेनम् । स्कन्दपारिषदान् । स्कन्दपारिषदीः । विघ्नम् ।

विनायकम्। वीरम्। शूरम्। वरदम्। हस्तिमुखम्। वक्रतुण्डम्। लम्बोदरम्। एकदन्तम्। विघ्नपारिषदान्। विघ्नपारिषदीः। केशवम्। नारायणम्। माधवम्। गोविन्दम्। विष्णुम्। मधुसूदनम्। त्रिविक्रमम्। वामनम्। श्रीधरम्। हृषीकेशम्। पद्मनाभम्। दामोदरम्। श्रियं देवीम्। पुष्टिं देवीम्। तुष्टिं देवीम्। सरस्वतीं देवीम्। विष्णुपारिषदान्। विष्णुपारिषदीः। वैनतेयम्। कालम्। नीलम्। मृत्युम्। अन्तकम्। यमम्। यमराजम्। धर्मम्। धर्मराजम्। चित्रम्। चित्रगुप्तम्। वैवस्वतम्। वैवस्वतपारिषदान्। वैवस्वतपारिषदीः। भरद्वाजम्। गौतमम्। अत्रिम्। आङ्गिरसम्। विद्याम्। दुर्गाम्। ज्येष्ठाम्। धन्वन्तरिम्। धन्वन्तरिपारिषदान्। धन्वन्तरिपारिषदीस्तर्पयामि॥ अथ निवीती भूत्वा, ऋषीन्। महर्षीन्। परमऋषीन्। ब्रह्मर्षीन्। देवर्षीन्। राजर्षीन्। वैश्यर्षीन्। सुतर्षीन्। श्रुतर्षीन्। जनर्षीन्। तपऋषीन्। सत्यर्षीन्। सप्तर्षीन्। काण्डर्षीन्। ऋषीन्। ऋषिपत्नीः। ऋषिपुत्रान्। ऋषिपौत्रान्। कण्वं। बोधायनं। आपस्तम्बं, सूत्रकारं। सत्याषाढम्। हिरण्यकेशिनम्। वाजसनेयिनम्। याज्ञवल्क्यम्। आश्वलायनम्। शौनकम्। व्यासम्। वसिष्ठम्। प्रणवम्। व्याहृतीः। सावित्रीम्। गायत्रीम्। छन्दांसि। ऋग्वेदम्। यजुर्वेदम्। सामवेदम्। अथर्वणवेदम्। अथर्वाङ्गिरसः। इतिहासपुराणानि। सर्वदेवजनान्। सर्वभूतानि। अथ प्राचीनावीती, पितॄन् स्वधा नमस्तर्पयामि। पितामहान्। प्रपितामहान्। मातॄः। पितामहीः। प्रपितामहीः। मातामहान्। मातुः पितामहान्। मातुः प्रपितामहान्। मातामहीः। मातुः पितामहीः। मातुः प्रपितामहीः। आचार्यान्। आचार्यपत्नीः। गुरून्। गुरुपत्नीः। सखीन्। सखिपत्नीः। ज्ञातीन्। ज्ञातिपत्नीः। अमात्यान्। अमात्यपत्नीः। सर्वान्। सर्वाः। इति पितृतर्पणम्। अनुतीर्थमप उत्सिञ्चत्यूर्जं वहन्तीरमृतं घृतं पयः कीलालं परिस्रुतं

स्वधास्थ तर्पयत मे पितॄंस्तृप्यत तृप्यत तृप्यतेति। नार्द्रवासा नैकवस्त्रो दैवानि कर्माण्यनुसञ्चरेत् पितृसंयुक्तानि चेत्यकेषाम् इति॥

போதாயனர்:- அக்னி, ப்ரஜாபதி என்று தொடங்கி, தன்வந்தரி பாரிஷதீகள், வரையில் தேவதர்ப்பணமும், பிறகு நிவீதியாய் ருஷி, மஹர்ஷிகளைத் தொடங்கி, ஸர்வபூதங்கள் வரையில் ருஷி தர்ப்பணமும், பிறகு ப்ராசீனாவீதியாய், பித்ருக்கள் முதல் தொடங்கி ஸர்வா: என்ற வரையில் பித்ருதர்ப்பணமும் செய்து ஊர்ஜம்: என்ற மந்த்ரத்தால் ஜலக்கரையில் ஜலாஞ்ஜலியை விடவேண்டும். ஈரவஸ்த்ரத்துடனும் ஒரு வஸ்த்ரத் துடனும் தேவகர்மங்களைச் செய்யக் கூடாது. பித்ரு கர்மங்களையுமென்று சிலரின் மதம் என்றார்.

जीवपितृतर्पणे विशेषमाह योगयाज्ञवल्क्यः – कव्यवाहोऽनलः सोमो यमश्चैवार्यमा तथा। अग्निष्वात्ताः सोमपाश्च तथा बर्हिषदोऽपि च॥ यदि स्याज्जीवपितृकस्तान् विद्याच्च तथा पितॄन्। एतांश्चैव प्रमीतांश्च प्रमीतपितृको द्विजः इति॥

ஜீவபித்ருகன் செய்யும் தர்ப்பணத்தில் விசேஷத்தைச் சொல்லுகிறார். யோகயாக்ஞவல்க்யர்:- ஜீவபித்ருகன் பித்ரு தர்ப்பணத்தில், கவ்யவாஹன், அனலன், ஸோமன், யமன், அர்யமா, அக்னிஷ்வாத்தர்கள், ஸோமபர்கள், பர்ஹிஷத்துகள் என்ற இந்தப் பித்ருக்களுக்குத் தர்ப்பணம் செய்ய வேண்டும். ஜீவபித்ருகனல்லாதவன் இவர்களுக்கும் தனது பிதா முதலியவர்க்கும் தர்ப்பணம் செய்ய வேண்டும்.

विष्णुपुराणे — दद्यात् पित्र्येण तीर्थेन काम्यं चान्यच्छृणुष्व मे। मात्रे प्रमात्रे तन्मात्रे गुरुपत्न्यै तथा नृप॥ गुरूणां मातुलादीनां स्निग्धमित्राय भूभुजे। इदं चापि जपन्नम्बु दद्यादात्मेच्छया नृप॥ उपकाराय भूतानां कृतं देवादितर्पणम्। देवासुरास्तथा यक्षाः

नागगन्धर्वराक्षसाः ।। पिशाचा गुह्यकाः सिद्धाः कूश्माण्डाः पशवः खगाः । जलेचरा भूनिलया वाय्वाहाराश्च जन्तवः ।। तृप्तिमेतेन यान्त्वाशु मद्दत्तेनाम्बुनाऽखिलाः । नरकेषु समस्तेषु यातनासु च संस्थिताः । तेषामाप्यायनायैतदीयते सलिलं मया । ये बान्धवाबान्धवा ये येऽन्यजन्मनि बान्धवाः । ते तृप्तिमखिला यान्तु यश्चास्मत्तोऽभिवाञ्छति । दत्वा काम्योदकं सम्यगेतेभ्यः श्रद्धयाऽन्वितः ।। जगदाप्यायनोद्भूतं पुण्यमाप्नोति मानवः इति ।।

விஷ்ணு புராணத்தில்:- பித்ரு தீர்த்தத்தால் மற்றொரு காம்யோதகதானமும் செய்ய வேண்டும். நான் சொல்வதைக் கேள். மாதா, அவளின் மாதா, அவளின் மாதா, குருபத்னீ, குருக்கள், மாதுலன் முதலியவர், ஸ்னிக்தன், மித்ரன், அரசன் இவர்களுக்கும் ஜலதானம் செய்ய வேண்டும். சொல்லப் போகும் மந்த்ரத்தை ஜபிப்பவனுய் இச்சையிருந்தால் செய்யலாம். 'உபகாராய பூதாநாம்' என்பது முதல் 'அபிவாஞ்சதி' என்பது வரையில் மந்த்ரம். அதன் பொருள்- 'பூதங்களின் உபகாரத்திற்காகத் தேவர் முதலியவர்க்குத் தர்ப்பணம் செய்யப்பட்டது. தேவர், அஸுரர், யக்ஷர், நாகர், கந்தவர், ராக்ஷஸர், பிசாசர், குஹ்யகர், ஸித்தர், கூச்மாண்டர், பசுக்கள், பக்ஷிகள், ஜலசரங்கள், பூமியில் இருப்பவை, வாயுவை ஆஹாரமாய்க் கொள்ளும் ஜந்துக்கள் இவர்களெல்லோரும் நான் கொடுத்த இந்த ஜலத்தால் த்ருப்தியை அடையக் கடவர். ஸகல நரகங்களிலும், யாதனைகளிலுமெவரிருக்கின்றரோ, அவரின் த்ருப்திக்காக என்னுல் இந்த ஜலம் கொடுக்கப்படுகிறது. எவர் எனது பந்துக்களோ, எவர் பந்துக்களல்லாதவரோ, எவர் முன் ஜன்மத்தில் பந்துக்களோ, எவர் என்னிடமிருந்து விரும்புகின்றரோ, அவரெல்லோரும் த்ருப்தியை அடையக்கடவர்' என்பது. இவ்விதம் இவர்களுக்குக் காம்யோதகத்தை ச்ரத்தையுடன் கொடுத்தால் மனிதன் உலகத்தை த்ருப்தி செய்வித்த புண்யத்தை அடைகிறன்.

माधवीये — यत्र क्वचन संस्थानां क्षुत्तृष्णोपहतात्मनाम्। तेषां तु दत्तमक्षय्यमिदमस्तु तिलोदकम् ।। ये मे कुले लुप्तपिण्डाः पुत्रदारविवर्जिताः । तेषां तु दत्तमक्षय्यमिदमस्तु तिलोदकम् इति ।। अवसानाञ्जलिमाह कात्यायनः – पितृवंश्या मातृवंश्या ये चान्ये मत्त उदकमर्हन्ति तांस्तर्पयामि इति ।। विस्तरेण कर्तुमसमर्थस्य संक्षेपेण तर्पण मुक्तं माधवीये— आब्रह्मस्तम्बपर्यन्तं जगत्तृप्यत्विति ब्रुवन्। क्षिपेत्पयोऽञ्जलींस्त्रींस्तु कुर्यात्संक्षेपतर्पणम् इति ।।

மாதவீயத்தில்:- *எந்த இடத்தில் இருப்பவராயினும் பசி தாகங்களால் பீடிக்கப்படுமவருக்கு என்னுல் கொடுக்கப்பட்ட திலோதகம் அக்ஷயமாய் இருக்க வேண்டும். என் குலத்திலெவர் பிள்ளை பெண்டிரில்லாமல் பிண்டதானம் இல்லாதவராய் உள்ளனரோ. அவர்களுக்குக் கொடுக்கப்பட்ட இந்தத் திலோதகம் அக்ஷயமாய் இருக்க வேண்டும். கடைசியில் செய்யும் ஜலாஞ்ஜலியைச் சொல்லுகிறார் காத்யாயனர்:- பித்ரு வம்சத்தில் பிறந்தவரோ, மாத்ருவம்சத்தில் பிறந்தவரோ, மற்றவரோ, எவர் என்னிடமிருந்து உதகத்தை க்ரஹிக்க அர்ஹரோ அவர்களைத் தர்ப்பிக்கின்றேன். விரிவாய்ச் செய்யச் சக்தியற்றவனுக்குச் சுருக்கமாய்த் தர்ப்பணம் சொல்லப்பட்டுள்ளது மாதவீயத்தில்:- 'ப்ரம்ஹாமுதல் ஸ்தம்பம் (புல்-பூண்டு) வரையுள்ள உலகம் த்ருப்தியை அடைய வேண்டும்' என்று சொல்பவனுய் மூன்று ஜலாஞ்ஜலிகளை விடவேண்டும். இவ்விதம் ஸம்க்ஷேப தர்ப்பணத்தைச் செய்ய வேண்டும்.*

तर्पणप्रशंसा

दर्शिता तत्रैव– एवं यस्सर्वभूतानि तर्पयेदन्वहं द्विजः । स गच्छेत् परमं स्थानं तेजोमूर्तिरनामयम् इति ।। अकरणे प्रत्यवायोऽपि तत्रैव दर्शितः – देवांश्चैव पितॄंश्चैव मुनीन् यो वै न तर्पयेत्। देवादीना मृणी भूत्वा नरकं स व्रजत्यधः इति ।। कात्यायनोऽपि – छायां

यथेच्छेच्छरदातपार्तः पयः पिपासुः क्षुधितोऽलमन्नम्। बालो जनित्रीं जननी च बालां योषित् पुमांसं पुरुषश्च योषाम्। तथा सर्वाणि भूतानि चराणि स्थावराणि च। विप्रादुदकमिच्छन्ति सर्वे ह्युदककांक्षिणः। तस्मात्सदैव कर्तव्यं अकुर्वन्महतैनसा । युज्यते ब्राह्मणः कुर्वन् विश्वमेतद्बिभर्ति हि । हारीतोऽपि – देवताः पितरश्चैव कांक्षन्ति सलिलाञ्जलिम्। अदत्ते तु निराशास्ते प्रतियान्ति यथागतम् इति।

தர்ப்பண ப்ரசம்ஸை :- சொல்லப்பட்டுள்ளது மாதவீயத்திலேயே:- எந்த ப்ராம்ஹணன் ப்ரதி தினமும் இவ்விதமாய் ஸகல ப்ராணிகளையும் தர்ப்பிக்கின்றானோ அவன், தேஜ: சரீரமுடையவனாய் அழிவற்ற பரமபதத்தை அடைவான். தர்ப்பணம் செய்யாவிடில் தோஷமும் மாதவீயத்திலேயே சொல்லப்பட்டுள்ளது. தேவர்களையும், பித்ருக்களையும், ருஷிகளையும் எவன் தர்ப்பிக்கவில்லையோ அவன் தேவருஷி பித்ருக்களுக்குக் கடன்காரனாகி நரகத்தை அடைவான். காத்யாயனரும்:- சரத்கால வெயிலினால் வருந்தியவன் நிழலையும், தாகமுற்றவன் ஜலத்தையும், மிகப் பசியுள்ளவன் அன்னத்தையும், குழந்தை தாயையும், தாய் குழந்தையையும், பார்யை கண்வனையும், கணவன் பார்யையையும் விரும்புவது போல், ஸ்தாவரமாயும், ஜங்கமமாயுள்ள ஸகல ப்ராணிகளும் ஜலத்தை விரும்பியவைகளாய் ப்ராம்ஹணனிடமிருந்து ஜலத்தை விரும்புகின்றன. ஆகையால் ப்ரதிதினமும் தர்ப்பணம் செய்ய வேண்டும். செய்யாதவன் மஹாபாபத்துடன் சேருகிறான், செய்யும் ப்ராம்ஹணன் இவ்வுலகத்தையே போஷிக்கின்றான். ஹாரீதரும்:- தேவர்களும், பித்ருக்களும் ஜலாஞ்ஜலியை விரும்புகின்றனர், அது கொடுக்கப்படாவிடில் அவர்கள் ஆசையற்று வந்தது போல் திரும்பிச் செல்லுகின்றனர்.

अत्र पितृगाथा – अपि नः स कुले भूयाद्यो नो दद्याज्जलाञ्जलिम्। नदीषु बहुतोयासु शीतलासु विशेषतः इति।। योगयाज्ञवल्क्योऽपि –

नास्तिक्यभावाद्यस्तांस्तु न तर्पयति वै पितॄन्। पिबन्ति देहनिस्रावं पितरोऽस्य जलार्थिनः इति ।। तर्पणातिक्रमे प्रायश्चित्तमुक्तं स्मृतिरत्ने – अकृत्वा तर्पणं विप्रो यो भुङ्क्ते निरपत्रपः। स्नात्वा सन्तर्पयेद्विप्रानिति शातातपोऽब्रवीत् इति।

இவ்விஷயத்தில் பித்ருக்களின் காதை. (உரையாடல், இவ்விதமிருக்கிறது.) இவன் நம்குலத்தில் பிறப்பானே? இவன் அதிக ஜலமுள்ளதும், மிகச்சீதளமுமான நதிகளில் ஜலாஞ்ஜலியை நமக்குக் கொடுப்பானே. என்று. யோகயாக்ஞவல்க்யர்:- எவன் நாஸ்திகத் தன்மையால் அந்தப் பித்ருக்களைத் தர்ப்பிக்கவில்லையோ அவனது பித்ருக்கள் ஜலத்தை விரும்பியவராய், அவன் தேஹத்தின் வியர்வை ஜலத்தைப் பருகுகின்றனர். தர்ப்பணம் செய்யாவிடில் ப்ராயச்சித்தம் சொல்லப் பட்டுள்ளது ஸ்ம்ருதிரத்னத்தில்:- எந்த ப்ராம்ஹணன் தர்ப்பணம் செய்யாமல் லஜ்ஜையற்றுப் போஜனம் செய்கின்றானே. அவன் ஸ்நானம் செய்து ப்ராம்ஹணர்களைத் திருப்தி செய்விக்க வேண்டும், என்று சாதாதபர் சொன்னார்.

यमतर्पणं वृद्धमनुनोक्तम् – दीपोत्सवचतुर्दश्यां कार्यं तु यमतर्पणम्। कृष्णाङ्गारचतुर्दश्यामपि कार्यं सदैव वा। यमाय धर्मराजाय मृत्यवे चान्तकाय च। वैवस्वताय कालाय सर्वभूतक्षयाय च। औदुम्बराय दध्नाय नीलाय परमेष्ठिने। वृकोदराय चित्राय चित्रगुप्ताय वै नमः इति। मनुः – चतुर्दशैते मन्त्राः स्युः प्रत्येकं तु नमोऽन्विताः। एकैकस्य तिलैर्मिश्रांस्त्रींस्त्रीन् कृत्वा जलाञ्जलीन्। यावज्जीवकृतं पापं तत्क्षणादेव नाशयेत् इति ।। चन्द्रिकायाम् – कृष्णपक्षे चतुर्दश्यामङ्गारकदिनं यदा। तदा स्नात्वा शुभे तोये कुर्वीत यमतर्पणम् इति। दक्षः - कृष्णपक्षे चतुर्दश्यां यां काञ्चित्सरितं प्रति। यमुनायां विशेषेण नियतस्तर्पयेद्यमम् इति ।।

यमतर्प्पणम் சொல்லப்பட்டுள்ளது, வ்ருத்தமனுவினுல் :- நரகசதுர்தசியில் யமதர்ப்பணம் செய்ய வேண்டும். க்ருஷ்ணங்காரக சதுர்தசியிலும் செய்ய வேண்டும். அல்லது எப்பொழுதுமே செய்யலாம். யமாயதர்ம ராஜாய என்பது முதல் 14- மந்த்ரங்கள். மனு:- இவை பதினுன்கும் மந்த்ரங்களாகும். ஒவ்வொன்றிற்கும், நமச்சப்தத்தைச் சேர்க்க வேண்டும். ஒவ்வொன்றிற்கும். எள்ளுடன் கூடிய ஜலா ஞ்ஜலிகளை மும்மூன்று தடவை கொடுக்க வேண்டும். இவ்விதம் செய்யப்பட்ட தர்ப்பணம், பிறந்தது முதல் செய்யப்பட்டுள்ள பாபத்தை அந்த க்ஷணத்திலேயே போக்கும். சந்த்ரிகையில்:- எப்பொழுது க்ருஷ்ணபஷத்தில் சதுர்தசியில் செவ்வாய் கிழமை சேருகின்றதோ அப்பொழுது சுத்தமான ஜலத்தில் ஸ்நானம் செய்து யமதர்ப்பணத்தைச் செய்ய வேண்டும். தக்ஷர்:- க்ருஷ்ணபக்ஷ சதுர்தசியில் ஏதாவது ஒரு நதியில் ஸ்நானம் செய்து நியமத்துடன் யமதர்ப்பணம் செய்ய வேண்டும். யமுனையில் செய்வது விசேஷமாம்.

नियमस्तु स्कन्दपुराणे निरूपितः – दक्षिणाभिमुखो भूत्वा तिलैस्सव्यं समाहितः। देवतीर्थेन देवत्वात्तिलैः प्रेताधिपो यतः इति। स्मृतिसारे – यज्ञोपवीतिना कार्यं प्राचीनावीतिनाऽथवा। देवत्वं च पितृत्वं च यमस्यास्ति द्विरूपता इति ॥ तर्पणानन्तरं जप्यमन्त्रोऽप्युक्तः – यमो निहन्तो पितृधर्मराजो वैवस्वतो दण्डधरश्च कालः। प्रेताधिपो दत्तकृतानुसारी कृतान्त एतद्दशकृज्जपन्ति ॥ नीलपर्वतसङ्काशो रुद्रकोपसमुद्भवः। कालो दण्डधरो देवो वैवस्वत नमोऽस्तु ते इति। एवं कुर्वतः फलमाह यमः – यत्र क्वचन नद्यां हि स्नात्वा कृष्णचतुर्दशीम्। सन्तर्प्य धर्मराजं तु मुच्यते सर्वकिल्बिषैः इति।

நியமம் சொல்லப்பட்டுள்ளது ஸ்கந்த புராணத்தில் :- தெற்கு நோக்கியவனுய், கவனமுடன், திலங்களால்,

உபவீதியாய், தேவஞனதால் தேவதீர்த்தத்தாலும், ப்ரேதாதிபஞனதால் திலங்களாலும் தர்ப்பணம் செய்ய வேண்டும். ஸ்ம்ருதிஸாரத்தில்:- உபவீதியாகவாவது, ப்ராசீஞவீதியாகவாவது செய்யலாம். யமனுக்குத் தேவத்தன்மை, பித்ருத்தன்மை என்ற இரண்டும் இருக்கின்றது. தர்ப்பணத்திற்குப் பிறகு ஜபிக்க வேண்டிய மந்த்ரமும் சொல்லப்பட்டுள்ளது. 'யமோநிஹந்தா + ஜபந்தி' என்பது. இந்த நாமங்களைப் பத்து முறை ஜபித்துப் பிறகு, 'நீலபர்வத + நமோஸ்துதே' என்பதால் நமஸ்கரிக்க வேண்டும். இவ்விதம் செய்பவனுக்குப் பலனைச் சொல்லுகிறார் யமன்:- ஏதாவதொரு நதியில் க்ருஷ்ணபக்ஷ சதுர்தசியில் ஸ்நானம் செய்து தர்மராஜனுக்குத் தர்ப்பணம் செய்தால் ஸகல பாபங்களாலும் விடப்படுகிறான்.

माघशुक्लाष्टम्यां भीष्मतर्पणमाह व्यासः – शुक्लाष्टम्यां तु माघस्य दद्याद्भीष्माय योऽञ्जलिम् । संवत्सरकृतं पापं तत्क्षणादेव नश्यति ।। वैयाघ्रपादगोत्राय साङ्कृतिप्रवराय च । गङ्गापुत्राय भीष्माय प्रदास्येऽहं तिलोदकम् ।। अपुत्राय दद्याम्येतत् सलिलं भीष्मवर्मणे इति ।

மாகசுக்லாஷ்டமியில் பீஷ்ம தர்ப்பணத்தைச் சொல்லுகிறார், வ்யாஸர்:- மாகசுக்லாஷ்டமியில் எவன் பீஷ்மரின் பொருட்டு ஜலாஞ்ஜலியைக் கொடுக்கின்றானோ, அவனது ஒரு வருஷத்திய பாபம் அப்பொழுதே நசிக்கின்றது. அதற்கு மந்த்ரம் 'வையாக்ர பாத+ பீஷ்மவர்மணே' என்பதாம்.

मन्वादौ तर्पणमुक्तं कालादर्शे – मन्वाद्यासु युगाद्यासु प्रदत्तः सलिलाञ्जलिः । सहस्रवार्षिकीं तृप्तिं पितॄणामावहेत् पराम् इति ।। मत्स्यपुराणे– पानीयमप्यत्र तिलैर्विमिश्रं दद्यात् पितॄणां प्रयतो मनुष्यः । श्राद्धं कृतं तेन समाः सहस्रं रहस्यमेतत् पितरो वदन्ति इति ।।

மன்வாதிகளில் தர்ப்பணம் சொல்லப்பட்டுள்ளது காலாதர்சத்தில்:- மன்வாதிகளிலும், யுகாதிகளிலும் கொடுக்கப்பட்ட ஜலாஞ்ஜலி, பித்ருக்களுக்கு ஆயிரம் வருஷத்திலுண்டாகும் சிறந்த த்ருப்தியை செய்யும். மத்ஸ்ய புராணத்தில்:- இந்த மன்வாதிகளிலும், யுகாதிகளிலும், மனிதன் சுத்தனாய், பித்ருக்களின் பொருட்டுத் திலங்களுடன் கூடிய ஜலத்தையாவது கொடுக்க வேண்டும். கொடுத்தவன் ஆயிரம் வருஷம் ச்ராத்தம் செய்தவனாகிறான். இந்த ரஹஸ்யத்தைப் பித்ருக்கள் சொல்லுகின்றனர்.

बृहन्मनुः – आषाढीमवधिं कृत्वा पञ्चमं पक्षमाश्रिताः । काङ्क्षन्ति पितरः क्लिष्टा अन्नमप्यन्वहं जलम् ।। तस्मात्तत्रैव दातव्यं दत्तमन्यत्र निष्फलम् ।। अमाष्टकासु सङ्क्रान्तौ पातादिग्रहणेषु च । स्नात्वोदकाञ्जलीन् दत्वा ततः श्राद्धं समाचरेत् ।। यस्तर्पयेत् पितॄन् प्रातः श्राद्धं कृत्वा परेऽहनि । पितरस्तस्य तृप्यन्ति न चेत् कुप्यन्ति वै भृशम् ।। एको वा बहवो वाऽपि पुत्राः पित्रोर्यथाविधि । कृत्वाऽऽब्दिकं तु तैः कार्यं परेऽहनि तिलोदकम् ।। आब्दिकं - प्रत्याब्दिकम् ।। ब्राह्मे परेद्युरुत्थाय स्नात्वा दत्वोदकाञ्जलीन् । पुनः स्नात्वा ह्याब्दिककृत् कर्माणि कुरुते द्विजः ।। वृद्धिश्राद्धे तु सापिण्ड्ये प्रेतश्राद्धेऽनुमासिके । संवत्सरविमोके च न कुर्यात् तिलतर्पणम् इति ।। अनुमासिकम् - सापिण्ड्यात् परं स्वस्वकाले कर्तव्यमासिकम् । संवत्सरविमोकश्राद्धं - प्रथमाब्दिकम् । तत्र तिलतर्पणं नेत्यर्थः ।।

ப்ருஹன்மனு:- ஆஷாட சுக்லபூர்ணிமையில் இருந்து ஐந்தாவது பக்ஷத்தை அடைந்து பித்ருக்கள் வருந்தியவராய், ப்ரதிதினம் அன்னத்தையும் ஜலத்தையும் விரும்புகின்றனர். ஆகையால் அந்தப் பக்ஷத்திலேயே கொடுக்க வேண்டும். மற்றக் காலத்தில் கொடுத்தது நிஷ்பலமாகும். அமா, அஷ்டகைகள், ஸங்க்ராந்தி வ்யதீபாதம் முதலியவை, க்ரஹணம் இவைகளில்

ஸ்நானம் செய்து ஜலாஞ்ஜலியைக் கொடுத்துப் பிறகு ச்ராத்தம் செய்ய வேண்டும். எவன் ச்ராத்தம் செய்து மறுநாள் காலையில் பித்ருக்களைத் தர்ப்பிக்கின்றானோ அவனது பித்ருக்கள் த்ருப்தர்களாகின்றனர். இல்லாவிடில் மிகவும் கோபிக்கின்றனர். ஒரு புத்ரனாயினும், பல புத்ரர்களாயினும், மாதா பிதாக்களுக்கு ஆப்திகம் செய்து மறுநாளில் அவர்கள் தர்ப்பணம் செய்ய வேண்டும். இங்கு ஆப்திகம் என்பதற்கு ப்ரத்யாப்திகமென்று பொருள். ப்ரத்யாப்திகம் செய்த ப்ராம்ஹணன் மறுநாளில் ப்ராம்ஹ முஹூர்த்தத்தில் எழுந்து ஸ்நானம் செய்து, தர்ப்பணம் செய்து மறுபடி ஸ்நானம் செய்து நித்யகர்மங்களைச் செய்ய வேண்டும். நாந்தீ ச்ராத்தம், ஸாபிண்ட்ய ச்ராத்தம், ப்ரேத ச்ராத்தம், அனுமாஸிகம், ஸம்வத்ஸரவிமோக ச்ராத்தம் இவைகளில் திலதர்ப்பணம் செய்யக் கூடாது. அனுமாஸிகம் - ஸபிண்டீகரணத்திற்குப் பிறகு அந்தந்தக் காலத்தில் செய்ய வேண்டிய மாஸிகம். ஸம்வத்ஸரவிமோக ச்ராத்தம் - முதலாப்திகம் அவைகளில் திலதர்ப்பணமில்லை என்பது பொருள்.

स्मृत्यन्तरे — एकोद्दिष्टेषु सर्वेषु सपिण्डीकरणे तथा । मासिकेष्वाब्दिके चैव न कुर्यात् तिलतर्पणम् ।। दर्शे तिलोदकं पूर्वं पश्चात् कुर्यान्महालये। प्रत्यब्दे तु कृते श्राद्धे परेऽहनि तिलोदकम् इति।। सङ्ग्रहे — प्रत्यब्दं प्रतिमासं च परेऽहनि तिलोदकम्। पक्षे महालये श्राद्धे तर्पणं तु दिने दिने ।। सकृन्महालयश्राद्धे परेऽहनि तिलोदकम्।। पूर्वेद्युः श्राद्धकृद्विप्रः प्रातः स्नात्वा परेऽहनि । सन्तर्पये दार्द्रवासास्तिलैरात्मपितॄंस्तथा इति।।

மற்றொரு ஸ்ம்ருதியில்:- ஏகோத்திஷ்டம் எல்லாவற்றிலும், ஸபிண்டீகரணத்திலும், மாஸிகங்களிலும், ஆப்திகத்திலும் திலதர்ப்பணம் செய்யக் கூடாது. தர்ச ச்ராத்தத்தில் தர்ப்பணத்தை முந்தியும், மஹாளய ச்ராத்தத்தில் தர்ப்பணத்தைப் பிந்தியும் செய்ய வேண்டும்.

ப்ரத்யாப்திக ச்ராத்தம் செய்த பிறகு மறுநாளில் தர்ப்பணம் செய்ய வேண்டும். ஸங்க்ரஹத்தில்:- ப்ரதிவர்ஷம் செய்யும் ச்ராத்தத்திலும், ப்ரதிமாஸம் செய்யும் ச்ராத்தத்திலும், மறுநாளில் தர்ப்பணம் செய்ய வேண்டும். மஹாளயபக்ஷத்தில் ப்ரதிதினமும் ச்ராத்தம் செய்தால் அன்றன்றைக்கே தர்ப்பணம் செய்ய வேண்டும். ஒரு நாள் மட்டில் மஹாளய ச்ராத்தம் செய்தால் மறுநாளில் தர்ப்பணம் செய்ய வேண்டும். முதல் நாளில் ச்ராத்தம் செய்த ப்ராம்ஹணன் மறுநாளில் காலையில் ஸ்நானம் செய்து, ஈரவஸ்த்ரத்துடன் திலங்களுடன் தனது பித்ருக்களைத் தர்ப்பிக்க வேண்டும்.

स्मृत्यन्तरे — महालयं चाब्दिकं च यद्दिने तु समापयेत्। तद्दिने तिलतोयं तु कुर्यात् चेत् पितृघातकः ।। तस्मात् परेद्युः कर्तव्यं तिलदानं तथोदकैः ।। स्नात्वा तीरं समागम्य उपविश्य कुशासने। श्राद्धाङ्गतर्पणं कृत्वा पश्चात्सन्ध्यामुपाचरेत् ।। परेद्युः श्राद्धकृन्मर्त्यो यो न तर्पयते पितॄन्। पितृहन्ता स विज्ञेयः कल्पान्तं नरकं व्रजेत्।। क्षेत्रेष्वपि तथा दत्वा हिरण्येन तिलैश्च वा । श्राद्धान्ते पिण्डदानं च कृत्वा दद्यात्तिलाञ्जलीन् इति ।। स्मृत्यन्तरे — हिरण्ये तूदकं पश्चान्मृतेऽहनि परेऽहनि इति ।।

மற்றொரு ஸ்ம்ருதியில்:- மஹாளயத்தையும், ப்ரத்யாப்திகத்தையும் என்று செய்தாலே அன்றையே தர்ப்பணம் செய்தால் அவன் பித்ருக்களைக் கொன்றவனாவான். ஆகையால் மறுநாளில் திலோதகதானம் செய்ய வேண்டும். ஸ்நானம் செய்து கரையில் வந்து குசாஸனத்தில் உட்கார்ந்து ச்ராத்தாங்கமான தர்ப்பணத்தைச் செய்து பிறகு ஸந்த்யா வந்தனம் செய்ய வேண்டும். எந்த மனிதன் ச்ராத்தம் செய்து மறுநாளில் பித்ருக்களைத் தர்ப்பிக்கவில்லையோ அவனைப் பித்ருக்களைக் கொன்றவன் என்றறியவும். அவன் கல்பம் முடியும் வரை நரகத்தையடைவான். க்ஷேத்ரங்களிலும்

அவ்விதமே. ஹிரண்யத்துடனும், திலங்களுடனும் கொடுத்து, ச்ராத்தாந்தத்தில் பிண்டதானம் செய்து திலாஞ்ஜலிகளைக் கொடுக்க வேண்டும். மற்றொரு ஸ்ம்ருதியில்:- ஹிரண்ய ச்ராத்தத்தில் தர்ப்பணத்தைப் பிந்திச் செய்ய வேண்டும். ப்ரத்யாப்திக ச்ராத்தத்தில் மறுநாளில் திலோதகதானம் செய்ய வேண்டும்.

अन्यत्रापि — सपिण्डीकरणादूर्ध्वममासङ्क्रमणादिषु । पुत्रस्तिलोदकं दद्यात् क्षेत्रपिण्डांस्तथाऽऽचरेत् इति ॥ सपिण्डीकरणादूर्ध्वं वर्षं वर्षार्धमेव वा । दर्शादिकं न कुर्वीत ह्यष्टका न विहन्यते इति दर्शादिश्राद्धनिषेधस्मरणं भोजनपर्यन्तश्राद्धविषयम् ॥ द्वादशाहादौ सपिण्डीकरणे कृते तत आरभ्य दर्शादौ तिलोदकमात्रं कर्तव्यम् । पुत्रस्तिलोदकं दद्यात् इति विशिष्य विधानात्, सपिण्डीकरणादर्वागमश्राद्धं न कारयेत् । तिलोदकं च नो दद्यात्परतश्चेद्यथाविधि इति स्मृतेश्च ॥

மற்றொரு இடத்தில்:- ஸபிண்டீகரணத்திற்குப் பிறகு அமா, ஸங்க்ரமணம் முதலியவைகளில் புத்ரன் திலோதகத்தைக் கொடுக்க வேண்டும். க்ஷேத்ர பிண்ட தானமும் செய்ய வேண்டும். 'ஸபிண்டீகரணத்திற்குப் பிறகு ஒரு வருஷம், அல்லது ஆறு மாதம் வரையில் தர்சம் முதலியதைச் செய்யக் கூடாது. அஷ்டகை நிஷேதிக்கப்படுவதில்லை. என்று தர்சாதி ச்ராத்தங்களை நிஷேதித்திருப்பது போஜனம் வரையிலுள்ள ச்ராத்தத்தைப் பற்றியதாகும், பன்னிரண்டாவது நாள் முதலிய காலத்தில் ஸபிண்டீகரணம் செய்யப்பட்டால் அது முதற்கொண்டு தர்சம் முதலியதில் திலோதகதானம் மட்டில் செய்ய வேண்டும். 'புத்ரன் திலோதகத்தைக் கொடுக்க வேண்டும்' என்று விசேஷித்து விதித்திருக்கிறது, 'ஸபிண்டீகரணத்திற்கு முன் ஆம ச்ராத்தத்தைச் செய்யக் கூடாது, திலோதகதானமும் செய்யக் கூடாது. ஸபிண்டீகரணத்திற்குப் பிறகாலில் விதிப்படி செய்யலாம், என்று ஸ்ம்ருதி உள்ளது.

स्मृतिसारे — आब्दिके समनुप्राप्ते दर्शश्चेत् तर्पणं न हि । ब्राह्मणान् भोजयेत् पूर्वं पिण्डात् पूर्वं तु तर्पणम्। अमा पातश्च सङ्क्रान्तिः तथा वैधृतिरेव च । अष्टका चैव मन्वादिर्युगादिश्च महालयः ॥ एषूदकाञ्जलीन्दद्यादन्नं च पितृतृप्तये । श्राद्धं त्वहरहः कुर्यादन्नाद्येनोदकेन वा ॥ भृग्वादित्यारवारेषु पितृतृप्त्यै ति(ज)लाञ्जलीन्। साक्षतान् सन्दिशेद्धीमान्तत्तद्दर्शादिके दिने इति॥ कवषः — पित्रोः प्रत्याब्दिकश्राद्धं कृत्वा चैव परेऽहनि। निषिद्धेऽपि तिलैः कृष्णैर्विधिना तर्पयेद्द्विजः इति । वसिष्ठः — सन्तर्पयेन्निषिद्धेऽपि श्राद्धं कृत्वा परेऽहनि। सतिलाञ्जलिभिः शीतैः पितॄणामनृणो भवेत् इति॥

सङ्ग्रहे – गृहीत्वाऽऽपोशनं हस्ते पात्रे चैव तिलोदकम्। पूरणं चेत् पुनः कुर्यात् सुरापानसमं भवेत्॥ आपोशनं करे कृत्वा पात्रस्थान्नं न लङ्घयेत् ॥ हस्तेन लङ्घितं चान्नं भुक्त्वा चान्द्रायणं चरेत् ॥ आपोशनकरो विप्रः य आशीर्वचनं वदेत्। अभोज्यं तद्भवेदन्नं दाता भवति निष्फलः ॥ आपोशनं गृहीत्वा तु स्वस्ति कुर्वन्ति ये द्विजाः। न देवास्तृप्तिमायान्ति निराशाः पितरो गताः ॥ भुञ्जानोऽभिवदेद्यस्तु तदन्नं परिवर्जयेत् ॥ आपोशनं चासनं च तैलाभ्यङ्गं तथैव च । स्वयंकरकृतं प्रोक्तमायुः श्रीपुत्रहानिदम् इति।

ஸங்க்ரஹத்தில்:- ஆபோசனத்தைக் கையில் க்ரஹித்து, அர்க்ய பாத்ரத்தில் திலோதகத்தை க்ரஹித்து, மறபடி பூரணம் செய்தால் ஸுராபானத்திற்குச் சமமாகும். ஆபோசன ஜலத்தைக் கையில் வைத்துக் கொண்டு போஜன பாத்ரத்திலுள்ள அன்னத்தைத் தாண்டக்கூடாது. கையினால் தாண்டிய அன்னத்தைப் புஜித்தால் சாந்த்ராயணத்தை அனுஷ்டிக்க வேண்டும். ஆபோசனத்தைக் கையிலுள்ளவனாய் எந்த ப்ராம்ஹணன் ஆசீர்வாதம் சொல்லுகிறானோ அந்த அன்னம் புஜிக்கத்தகாததாகும்.

அன்னத்தைக் கொடுத்தவன் பலனற்றவனுகிறன். ஆபோசனத்தை வைத்துக் கொண்டு எந்த ப்ராம்ஹணர்கள் ஆசீர்வாதம் செய்கின்றனரோ (அவர்களால்) தேவர்கள் த்ருப்தியை அடைவதில்லை. பித்ருக்கள் ஆசையற்றவர்களாய்ச் செல்லுகின்றனர். புஜித்துக் கொண்டு எவன் அபிவாதநம் செய்கின்றுனே அந்த அன்னத்தை வர்ஜிக்க வேண்டும். ஆபோசனம், ஆஸனம், எண்ணெய் தேய்த்துக் கொள்ளுதல் இவைகள் தன் கையினுல் செய்யப்பட்டால் ஆயுள், லக்ஷ்மி, புத்ரன் இவர்களுக்கு ஹானியைக் கொடுக்குமென்று சொல்லப்பட்டுள்ளது.

वसिष्ठः – आपोशनं सर्वतीर्थं तेनान्नं तु लङ्घयेत्। बाहुना लङ्घितं चान्न मभोज्यं मनुरब्रवीत् इति ॥ अत्रिः – शब्देनापः पयः पीत्वा शब्देन घृतपायसम् । शब्देनापोशनं कृत्वा सुरापानसमं भवेत् । आपोशनमकृत्वा तु यस्तु भुञ्जीत मूढधीः । श्वसूकरसमो भुक्त्वा नरकं प्रतिपद्यते इति ॥ स्मृतिरत्ने – आपोशनमकृत्वा तु यो भुङ्क्तेऽनापदि द्विजः । भुञ्जानो वा यदि ब्रूयाद्वायत्र्यष्टशतं जपेत् इति ॥ हारीतः – पञ्च प्राणाहुतीः कुर्याच्छुद्धाचैरभिधारितैः । उच्छिष्टे न घृतं दद्यात् प्राघुतेर्लवणान्वितम् इति ॥

வஸிஷ்டர்:- ஆபோசனஜலம் ஸகல தீர்த்த ஜல ஸமமாம். அதனுல் அன்னத்தைத் தாண்டக்கூடாது. கையினுல் தாண்டப்பட்ட அன்னம் புஜிக்கத்தகாததென்று மனு சொன்னுர். அத்ரி:- சப்தத்துடன் ஜலத்தையோ பாலையோ பருகினுலும், சப்தத்துடன் நெய், பாயஸம் இவைகளைப் பருகினுலும் சப்தத்துடன் ஆபோசனத்தைப் பருகினுலும் ஸுராபானத்திற்குச் சமமாகும். ஆபோசனம் செய்யாமல் எந்த மூடன் புஜிக்கின்றுனே, நாய் பன்றி இவற்றிற்குச் சமனுய் புஜித்த அவன் நரகத்தை அடைகிறுன். ஸ்ம்ருதிரத்னத்தில்:- எந்த ப்ராம்ஹணன் ஆபத்தில்லாத ஸமயத்தில் ஆபோசனத்தை செய்யாமல்

புஜிக்கின்றபோது, புஜிக்கும் போது பேசுகின்றபோது, அவன் 108-முறை காயத்ரியை ஜபிக்க வேண்டும். ஹாரீதர்:- அபிகாரம் செய்யப்பட்ட சுத்தமான அன்னங்களால் ஐந்து ப்ராணஹுதிகளைச் செய்ய வேண்டும். உச்சிஷ்டத்தில் நெய்யைக் கொடுக்கக் கூடாது. ப்ராணஹுதிக்கு முன் உப்புள்ள வஸ்துவைக் கொடுக்கக் கூடாது.

व्यासः – स्नास्यतो वरुणः जुह्वतोऽग्निः श्रियं हरेत्। भुञ्जतो मृत्युरायुष्यं तस्मान्मौनं त्रिषु स्मृतं इति । प्राणाग्निहोत्रं शुद्धान्नैर्लवणव्यञ्जनान्वितैः। कुर्यात् प्राणाहुतीरन्तर्निगिरेन्न तु चर्वयेत् इति ॥ स्मृतिसारे – मध्यमानामिकाङ्गुष्टैः गृहीत्वाऽन्नं मितं पुनः। प्राणाय चेत्यपानाय व्यानाय च यथाक्रमम् ॥ उदानाय समानाय स्वाहेति जुहुयात् क्रमात् इति ॥ स्मृत्यर्थसारे – आप्रोशनं गृहीत्वा सर्वाङ्गुलीभिर्ग्रसन् प्राणायापानाय व्यानायोदानाय समानाय स्वाहेति पञ्चाहुतीः सघृताः सक्षीरा वा हुत्वा कृत्स्नमन्नं साङ्गुष्ठं ग्रसेत् इति ॥ शौनकः – तर्जनीमध्यमाङ्गुष्टैः लग्ना प्राणाहुतिर्भवेत् । मध्यमानामिकाङ्गुष्टै रपाने जुहुयात्ततः ॥ कनिष्ठानामिकाङ्गुष्टैर्व्याने च जुहुयाद्धविः । तर्जनीं तु बहिः कृत्वा उदाने जुहुयात्ततः ॥ समाने सर्वहस्तेन समादायाहुतिर्भवेत् इति ॥ उदाने स्मृत्यन्तरे विशेषो दृश्यते –कनिष्ठातर्जन्यङ्गुष्ठै रुदाने जुहुयाद्बुधः इति ॥

வ்யாஸர்:- லவணத்துடனும் வ்யஞ்ஜனத்துடனும் கூடிய அன்னங்களால் ப்ராணாக்னி ஹோத்ரத்தைச் செய்ய வேண்டும். ப்ராணஹுதிகளை வாயினுள் விழுங்க வேண்டும். கடிக்கக் கூடாது. ஸ்ம்ருதிஸாரத்தில்:- நடுவில், பவித்ரவிரல், பெருவிரல் இவைகளால் ஸ்வல்பமான அன்னத்தை எடுத்து, ப்ராணாய, அபானாய, வ்யானாய, உதானாய, ஸமானாய, ஸ்வாஹா என்பதுடன் முறையே ஹோமம் செய்ய வேண்டும். ஸ்ம்ருத்யர்த்தஸாரத்தில்:- ஆபோசனத்தை க்ரஹித்து எல்லா விரல்களுடனும் விழுங்குகிறவனுக்கு ப்ராணாய, அபாநாய, வ்யானாய,

உதாநாய, ஸமாநாய ஸ்வாஹா என்று ஐந்து ஆஹுதிகளை நெய்யுடனுவது, பாலுடனுவது கூடியதாய் ஹோமம் செய்து மீதியுள்ள அன்னம் முழுவதையும் பெருவிரலுடன் புஜிக்க வேண்டும். சௌனகர்:- தர்ஜநீ, நடுவிரல், பெருவிரல் இவைகளுடன் கூடியதாய் ப்ராணாஹுதி இருக்க வேண்டும். நடுவிரல், பவித்ர விரல், பெருவிரல் இவைகளுடன் அபாணாஹுதியைச் செய்ய வேண்டும். சிறுவிரல், பவித்ரவிரல், பெருவிரல் இவைகளுடன் வ்யாணாஹுதியைச் செய்ய வேண்டும். தர்ஜனீ விரலைத் தள்ளிவிட்டு உதாணாஹுதியைச்செய்ய வேண்டும். எல்லா விரல்களுடன் சேர்த்து ஸமாணாஹுதியைச் செய்ய வேண்டும். இங்கு உதாணாஹுதியில் விசேஷம் மற்றொரு ஸ்ம்ருதியில் காணப்படுகிறது:- 'சிறுவிரல், தர்ஜநீவிரல், பெருவிரல் இவைகளோடு உதாணாஹுதியைச் செய்ய வேண்டும்' என்று.

वाग्यमनमाह मनुः — स्नास्यतो वरुणः शक्तिं जुह्वतोऽग्निः श्रियं हरेत्। भुञ्जतो मृत्युरायुष्यं तस्मान्मौनं त्रिषु स्मृतमिति। मौनं वाचो निवृत्तिः स्यात् नात्र भाषा न संस्कृतम्। नान्यदेवेरणं विष्णुं सदा ध्यायेच्च कीर्तयेत्।। कबले कबले चैव कुर्याद्गोविन्दकीर्तनम्। नाशौचं कीर्तने तस्य पवित्रं भगवान् हरिः इति। देवताभिधानं चाप्रयतः इत्यापस्तम्बवचनं देवतान्तरविषयम्।

மௌனத்தைச் சொல்லுகிறார் மனு:- ஸ்நானம் செய்பவனின் சக்தியை வருணனும், ஹோமம் செய்பவனின் லக்ஷ்மியை அக்னியும், போஜனம் செய்பவனின் ஆயுளை ம்ருத்யுவும் (மௌனமில்லாவிடில்) அபஹரிக்கின்றனர். ஆகையால் இம்மூன்றிலும் மௌனம் விதிக்கப்பட்டுள்ளது. வ்யாஸர்:- மௌனம் என்பது வார்த்தையை நிவர்த்திப்பது என்பதாம். இங்கு பாஷையும் கூடாது. ஸம்ஸ்க்ருதமும் கூடாது. இதர தேவர்களைச் சொல்லக்கூடாது. விஷ்ணுவை எப்பொழுதும் த்யானிக்க வேண்டும். கீர்த்தனமும் செய்ய

வேண்டும். ஒவ்வொரு கபளத்திலும் கோவிந்தநாமத்தை உச்சரிக்க வேண்டும். அந்த நாமத்தைச் சொல்லுவதில் அசுத்தி இல்லை. பகவானுகிய ஹரி சுத்தனும். ஆபஸ்தம்பர்:- ''அசுத்தனுய்த் தேவதாநாமத்தை உச்சரிக்கக் கூடாது'' என்றார். இவ்விதம் சொல்லியிருப்பது மற்றத் தேவதைகளின் நாம விஷயமாம்.

मौनव्रतं महाकष्टं हुङ्कारेणापि नश्यति । तथा सति महान् दोषस्तस्मात्तन्नियतश्चरेत् इति ।। एतच्च काष्ठमौनं पञ्चग्रासविषयम् । तथा च मनुः – अनिन्दन् भक्षयेन्नित्यं वाग्यतोऽन्नमकुत्सयन् । पञ्चग्रासान् महामौनं प्राणाद्याप्यायनं महत् इति ।। स्मृत्यर्थसारेऽपि— आस्ये चान्नस्य निक्षेपो मन्त्रैः प्राणादिपञ्चकैः । तदेव भोजनं ज्ञेयं तत्रैव नियमःस्मृतः ।। प्राणाहुतिषु सर्वासु हुतास्वेव त्यजेद्धही । पात्रस्य धारणं मौनं तावत्सिद्धिर्भवेद्गुजेः ।। अन्नस्य वा निषेधार्थं मुपदंशस्य वा पुनः । धर्मार्थं विसृजेद्वाचं नासद्वाचं कदाचन इति ।

அத்ரி:- மௌன வ்ரதம் என்பது மிகக் கஷ்டமானதாம். ஹுங்காரம் செய்தாலும் அது கெட்டுவிடும். அப்படியிருப்பதால் பெரிய தோஷமுண்டு. ஆகையால் மௌனத்தை நியமமுடையவனுய் அனுஷ்டிக்க வேண்டும். இந்தக் காஷ்ட மௌனம் ஐந்து ஆஹுதிகளின் விஷயம். அவ்விதமே மனு:- எப்பொழுதும் அன்னத்தை நிந்திக்காமலும், வெறுக்காமலும் மௌனியாய்ப் புஜிக்க வேண்டும். ஐந்து க்ராஸங்களைப் புஜிக்கும் பொழுது அதிக மௌனமானது ப்ராணன் முதலியவைகளுக்குப் பெரிதான வ்ருத்திகரமாம். ஸ்ம்ருத்யர்த்தஸாரத்திலும்:- ப்ராணுய முதலிய ஐந்து மந்த்ரங்களால் வாயில் அன்னத்தை வைப்பது போஜனமென்று அறியத்தக்கது. அதிலேதான் நியமம் சொல்லப்பட்டள்ளது. க்ருஹஸ்தன் எல்லா ப்ராணுஹுதிகளும் செய்யப்பட்ட பிறகே போஜன பாத்ரத்தைப் பிடிப்பதையும் மௌனத்தையும்

விடவேண்டும். அப்பொழுதுதான் போஜனத்தின் பலஸித்தி உண்டாகிறது. அன்னத்தை நிஷேதிப்பதற் காகவாவது, வ்யஞ்ஜனத்தை நிஷேதிப்பதற்காகவாவது, தர்மத்திற்காகவாவது வார்த்தை பேசலாம். கெட்டவார்த்தையை ஒருகாலும் பேசக்கூடாது.

शाण्डिल्यः — नावश्यं भोजने मौनं कुटुम्बाश्रमवासिनाम्। वाचोपचारः कर्तव्यो भुञ्जतां सहभोजने इति ॥ स्मृतिरत्ने – प्राणाग्निहोत्रादन्यत्र नासौ मौनं समाचरेत्॥ यदि भुञ्जीत तूष्णीं तु सर्वत्रैव तु भोजने। स पापो भ्रातरं हन्ति सन्ततिं चाचिराच्छ्रियम् इति॥ एतदेवाभिप्रेत्य व्यासः - मौनी वाऽप्यथवाऽमौनी प्रहृष्टः संयतेन्द्रियः। भुञ्जीत विधिवद्विप्रो नचोच्छिष्टानि चाहरेत्॥

சாண்டில்யர் :- க்ருஹஸ்தாச்ரமத்தில் வஸிப்ப வருக்குப் போஜனத்தில் மௌனம் ஆவச்யகமில்லை. (ஏனெனில்) சேர்ந்து புஜிப்பவர்களுக்குப் போஜனத்தில் வார்த்தையினால் உபசாரம் செய்ய வேண்டும். ஸ்ம்ருதிரத்னத்தில்:- ப்ராணாக்னிஹோத்ரம் தவிர மற்ற ஸமயத்தில் க்ருஹஸ்தன் மௌனத்தை அனுஷ்டிக்கக் கூடாது. போஜனம் முழுவதிலும் மௌனமாயிருப்பா னாகில் அந்தப் பாபிஸஹோதரனையும், ஸந்ததியையும், செல்வத்தையும் சீக்கிரமாய்க் கொல்லுகிறான். இவ்விதமே அபிப்ராயப்பட்டுச் சொல்லுகிறார் வ்யாஸர்:- மௌனியாகவோ, மௌனமில்லாதவனாகவோ ஸந்தோஷமுடையவனாய், புலன்களை அடக்கியவனாய், விதிப்படி ப்ராம்ஹணன் புஜிக்க வேண்டும். உச்சிஷ்டங்களை எடுத்துக் கொள்ளக் கூடாது.

वामेन पात्रस्पर्शोऽपि कर्तव्यः ॥ तत्र यमः - समुत्थितस्तु यो भुङ्क्ते यो भुङ्क्ते मुक्तभाजने। एवं वैवस्वतः प्राह भुक्त्वा सान्तपनं चरेत् इति॥ मुक्तभाजनं - वामहस्तेनास्पृष्टभाजने इत्यर्थः॥ बोधायनोऽपि — सव्येन पाणिनाऽविमुञ्चन्नमृतोपस्तरणमसीत्यपः पीत्वा

प्राणाहुतीर्जुहोति इति ।। एतच्च प्राणाहुत्यनन्तरं वैकल्पिकम् । प्राणाहुतौ हुतायां वा त्यजेत् पात्रस्य धारणम् इति गोभिलस्मरणात् ।। आपस्तम्बोऽपि — नापजहीतापजहीत वा इति ।। भोजनपात्रं सव्येन पाणिना न विमुञ्चेत् । प्राणाहुत्यूर्ध्वं मुञ्चेद्वा इत्यर्थः ।।

இடது கையினுல் போஜன பாத்ரத்தையும் தொட்டுக் கொள்ள வேண்டும். அதில், யமன்:- எவன் நின்றுகொண்டு புஜிக்கின்றானே, எவன் இடது கையினுல் தொடப்படாத பாத்ரத்தில் புஜிக்கின்றானே அவன் ஸாந்தபன க்ருச்ரத்தை அனுஷ்டிக்க வேண்டும். போதாயனரும்:- இடது கையினுல் போஜன பாத்ரத்தை விடாமல், அம்ருதோபஸ்தரணமஸி என்று ஜலத்தைப் பருகி ப்ராணாஹுதிகளை ஹோமம் செய்ய வேண்டும். இதில், ப்ராணாஹுதிக்குப் பிறகு விகல்பம். 'ப்ராணாஹுதி செய்த பிறகு பாத்ரத்தைப் பிடிப்பதை விட்டாலும் விடலாம்' என்று கோபிலர் சொல்லியுள்ளார். ஆபஸ்தம்பரும்:- போஜன பாத்ரத்தை இடது கையினுல் விடக்கூடாது. ப்ராணாஹுதிக்குப் பிறகு விட்டாலும் விடலாம்.

बोधायनः — ब्रह्मणि म आत्माऽमृतत्वायेत्यक्षरेणात्मानं योजयेत् सर्वक्रतुयाजिनामात्मयाजी विशिष्यते इति ।। चन्द्रिकायाम् — यथा हि तूलमैषीकमग्नौ प्रोतं प्रदीप्यते । तद्वत् सर्वाणि पापानि दह्यन्ते ह्यात्मयाजिनः इति ।। मार्कण्डेयः – अश्नीयात् तन्मना भूत्वा पूर्वं तु मधुरं रसम् । लवणाम्लौ तथा मध्ये कटुतिक्तादिकं ततः ।। प्राक् द्रवं पुरुषोऽश्नीयान्मध्ये तु कठिनाशनम् । अन्ते पुनर्द्रवाशी तु बलारोग्ये न मुञ्चति इति ।। मनुः — न सीदेत् स्नातको विप्रः क्षुधा शक्तः कथञ्चन । न जातु मलवद्वासा भवेच्च विभवे सति इति ।।

போதாயனர்:- 'ப்ரம்ஹணிம ஆத்மாம்ருதத்வாய' என்று பரமாத்மாவுடன் ஜீவாத்மாவைச் சேர்க்க

வேண்டும். ஸகல யாகங்கள் செய்தவரினும் ஆத்மயாகம் செய்தவன் சிறந்தவனுகிறான். சந்த்ரிகையில்:- ரீவின் பஞ்சு அக்னியில் வைக்கப்பட்டால் எப்படி பொசுக்கப்படுகிறதோ அப்படி ஆத்மயாஜியின் ஸகல பாபங்களும் பொசுக்கப்படுகின்றன. மார்க்கண்டேயர்:- ஏகாக்ரமான மனதுடையவனுயிருந்து, முதலில் மதுரரஸத்தைப் புஜிக்க வேண்டும். உப்பு, புளி இவைகளை நடுவிலும், கசப்பு, துவர்ப்பு முதலியதைப் பிறகும் புஜிக்க வேண்டும். மனிதன் முதலில் த்ரவ்பதார்த்தத்தைப் புஜிக்க வேண்டும். நடுவில் கடினமான வஸ்துவைப் புஜிக்க வேண்டும். முடிவில் த்ரவமான வஸ்துவைப் புஜிக்க வேண்டும். இவ்விதம் புஜிப்பவன் பலம், ஆரோக்யம் இவைகளை விடமாட்டான். மனு:- க்ருஹஸ்தன் ப்ராம்ஹணன் சக்தியுள்ளவனுகில் எவ்விதத்தாலும் பசியால் வருந்தக் கூடாது. ஒருபொழுதும் அழுக்குள்ள வஸ்த்ரமுடையவனுய் இருக்கக் கூடாது, விபவமிருந்தால்.

धर्मोद्योते - काले साम्यं लघुस्निग्ध मुष्णं क्षिप्रं द्रवोत्तरम्। बुभुक्षुरन्नमश्नीयान्मात्रा तावद्धितागमः ॥ काले प्राणायते भुक्तं साम्यमन्नं न बाधते। लघु प्रजीर्यते क्षिप्रं स्निग्धोष्णं बलवर्धनम्। क्षिप्रभुक्तं तथा चान्नं धातुसाम्यं करोति हि। मात्राशी सर्वकालं स्यान्मात्रा ह्यग्नेः प्रवर्तिका इति ॥ भारते — गुणास्तु षण्मितभुक्तं भजन्ते आरोग्यमायुः प्रतिभा बलं च। अनाविलं चास्य भवेदपत्यं नचैनमत्याश इति क्षिपन्ति इति।

தர்மோத்யோதத்தில்:- பசியுள்ள காலத்தில், ஸமமாயும் இலேசாயும், நெய் முதலியதுடன் கூடியதும், உஷ்ணமாயும், திரவவஸ்து அதிகமுள்ளதாயும் உள்ள அன்னத்தைச் சீக்கிரமாய்ப் புஜிக்க வேண்டும். பசியுள்ளவனுய்ப் புஜிக்க வேண்டும். (அளவுடன் புஜிக்க வேண்டும்.) அளவுதான் ஹிதத்திற்கு ஹேதுவாகிறது.

காலத்தில் புஜித்த அன்னம் ப்ராணஞயாகிறது. ஸமமான அன்னம் தொந்தரவு செய்வதில்லை. இலகுவான அன்னம் சீக்கிரமாய் ஜீர்ணமாகிறது. நெய்யுடன் கூடியதும், உஷ்ணமுமான அன்னம் பலத்தை வ்ருத்தி செய்கிறது. சீக்கிரம் புஜிக்கப்பட்ட அன்னம் தாதுக்களுக்கு ஸமத்தன்மையைச் செய்கிறது. எக்காலத்திலும் அளவின்படி புஜிக்க வேண்டும். அளவு என்பதுதான் அக்னியை ப்ரவ்ருத்தி செய்வதாயாகிறது. பாரதத்தில்:- அளவுப்படி புஜிப்பவனை ஆறு குணங்கள் அடைகின்றன. அவை:- ஆரோக்யம், ஆயுள், நல்லபுத்தி, பலம், தோஷமற்ற ஸந்ததி இவைகளும், இவனை அதிகமாய்ப் புஜிப்பவன் என்று நிந்திக்க மாட்டார்கள் என்பதுமாக ஆறு குணங்களாம்.

व्यासः - नाजीर्णे भोजनं कुर्यात् कुर्यान्नातिबुभुक्षितः ॥ आहारकाले सम्प्राप्ते यो न भुङ्क्ते बुभुक्षितः । तस्य सीदति कायाग्निः निरिन्धन इवानलः ॥ पात्रेष्वर्थानुरूपेषु पुत्रभृत्यादिभिर्वृतः । सुसंस्कृतं हितमिदं भुञ्जीतान्नमकुत्सयन् ॥ यवगोधूमशाल्याढ्यं मांसशाकादिसंयुतम्। तिक्ताम्ललवणोपेतं व्यञ्जनैश्च सुगन्धिभिः ॥ भक्ष्यप्रकारान् विविधान् कन्दमूलफलानि च ॥ अनारोग्यमनायुष्य-मस्वर्ग्यं चातिभोजनम्। अपुण्यं लोकविद्विष्टं तस्मात्परिवर्जयेत् ॥ न निन्देदन्नभक्ष्यांस्तु स्वाद्वस्वादूनकुत्सयन् । आर्द्रपाणिपदास्यस्तु प्राङ्मुखो ब्रह्मसूत्रधृक् ॥ द्वात्रिंशद्ग्रासमश्नीयात् दीर्घमायुर्जिजीविषुः इति । आपस्तम्बः–अष्टौ ग्रासा मुनेर्भक्ष्याः षोडशारण्यवासिनः । द्वात्रिंशतं गृहस्थस्यापरिमितं ब्रह्मचारिणः इति ॥ द्वात्रिंशतं प्रथमार्थे द्वितीया ॥

வ்யாஸர்:- ஜீர்ணமாகாமலிருக்கும் பொழுது போஜனம் செய்யக் கூடாது. அதிகப் பசியுள்ளவனும் புஜிக்கக் கூடாது. பசியுள்ள எவன், ஆஹாரகாலம் வந்தபிறகும் புஜிப்பதில்லையோ, அவன் தேஹத்திலுள்ள

அக்னி, விறகில்லாத நெருப்புப்போல் அணைகின்றது. தன் விபவத்திற்குத் தகுந்ததான போஜன பாத்ரத்தில், புத்ரர், ப்ருத்யர் இவர்களுடன் கூடியவனாய், நன்றாய்ச் சமைக்கப்பட்டதும், ஹிதமாயும், அளவுள்ளதாயும், உள்ள அன்னத்தை நிந்திக்காமல் புஜிக்க வேண்டும். யவை, கோதுமை, நெல், அரிசி இவைகளால் நிறைந்ததும், மாம்ஸம், சாகம் முதலியதுடன் கூடியதும், துவர்ப்பு, புளிப்பு, உப்பு இவைகளுடன் கூடியதும். வாஸனைகளுள்ள வ்யஞ்ஜனங்களுடன் கூடியதுமான ஆஹாரத்தையும், பலவிதமான பக்ஷ்யங்களையும், கிழங்கு, வேர், பழம் இவைகளையும் புஜிக்க வேண்டும். அதிகமாய்ப் புஜித்தல், ரோகத்தைக் கொடுப்பதும், ஆயுளைக் குறைப்பதும், ஸ்வர்க்கத்தைத் தடுப்பதும் புண்யமல்லாததும், உலகத்தினால் வெறுக்கப்பட்டதுமாம். ஆகையால் அளவுக்கு மீறிய போஜனத்தை வர்ஜிக்க வேண்டும். அன்னம், பக்ஷ்யம் இவை, மதுரமாயினும், இல்லாவிடினும் வெறுக்கவும், நிந்திக்கவும் கூடாது. வெகுநாள் ஜீவித்திருக்க விரும்பியவன் ஈரமுள்ள கை கால் முகம் இவைகளை உடையவனாய், கிழக்கு நோக்கியவனாய், யக்ஞோபவீதியாய் முப்பத்திரண்டு கபளங்களைப் புஜிக்க வேண்டும். ஆபஸ்தம்பர்:- ஸன்யாஸிக்கு எட்டுக் கபளங்கள் புஜிக்கத் தகுந்தவை. வானப்ரஸ்தனுக்குப் பதினாறு கபளங்கள், க்ருஹஸ்தனுக்கு முப்பத்திரண்டு கபளங்கள் புஜிக்கத் தகுந்தவை. ப்ரம்ஹசாரிக்குக் கணக்கில்லாமல் அன்னம் புஜிக்கத் தகுந்தது.

आहिताग्निविषये कालयोर्भोजनम् इत्ययमपि नियमो नास्तीत्याह स एव — आहिताग्निरनड्वांश्च ब्रह्मचारी च ते त्रयः। अश्नन्त एव सिध्यन्ति नैषां सिद्धिरनश्नताम् इति ॥ अनड्वद् ग्रहणं दृष्टान्तार्थम्। सिध्यन्ति - स्वकार्यक्षमा भवन्तीत्यर्थः ॥ स एव – यावद्ग्रासं सन्नयन्नस्कन्दयन् कृत्स्नं ग्रसीत सहाङ्गुष्ठं न च मुखशब्दं कुर्यात्

पाणिं च नावधूनुयात् इति ।। यावदेव ग्रसितुं शक्यम्, तावदेव सन्नयन् - पिण्डीकुर्वन्। अस्कन्दन् - भूमावन्नलेपानपातयन्। सहाङ्गुष्ठं - आस्ये ग्रासप्रवेशे यथाऽङ्गुष्ठोऽप्यनुप्रविशति, तथा सर्वानेव ग्रासान् ग्रसीतेत्यर्थः ।। स एव – सोत्तराच्छादनश्चैव यज्ञोपवीती भुञ्जीत इति। उत्तराच्छादनं - उपरिवासः।

ஆஹிதாக்னி விஷயத்தில் ''இரு காலங்களில் மட்டும் போஜனம்'' என்கிற இந்த நியமமும் இல்லை என்கிறார் ஆபஸ்தம்பரே - ஆஹிதாக்னி, எருது, ப்ரம்ஹசாரீ என்ற மூவர்களும் புஜிப்பவர்களாயிருந்தாலேயே தம் கார்யத்தில் ஸமர்த்தராகின்றனர். இஷ்டப்படி புஜிக்காத இவர்களுக்குக் கார்யஸித்தி உண்டாவதில்லை. ஆபஸ்தம்பரேः - எவ்வளவு விழுங்க முடியுமோ அவ்வளவு அன்னத்தைச் சேர்த்தெடுத்துப் பூமியில் இறைக்காமல் முழுவதையும் கட்டைவிரல் உள் செல்லும்படி விழுங்க வேண்டும். வாயினுல் சப்தம் செய்யக் கூடாது. கையை உதறவுங்கூடாது. ஆபஸ்தம்பரேः- உத்தரீயத்துடன் கூடியவனுய், யக்ஞோப வீதியாய்ப் புஜிக்க வேண்டும்.

व्यासः – वक्त्रप्रमाणं पिण्डांश्च न्यसेदेकैकशः पुनः । वक्त्राधिकस्तु यः पिण्डः स आत्मोच्छिष्ट उच्यते। पिण्डावशिष्टमन्यच्च वक्त्रान्निसृतमेव च। अभोज्यं तद्विजानीयात् भुक्त्वा चान्द्रायणं चरेत्। सदा चात्यशनं नाद्यान्नाति हीनं च कर्हिचित्। यथाऽन्नेन व्यथा न स्यात् तथा भुञ्जीत नित्यशः इति।

வ்யாஸர்:- வாயளவுள்ளதாய்க் கபளங்களை ஒவ்வொன்றுய் வாயில் சேர்க்க வேண்டும். வாய்க்கு அதிகமாகிய எந்தப் பிண்டமோ அது தனது உச்சிஷ்டம் என்று சொல்லப்படுகிறது. பிண்டத்தில் மீதியானதும், வாயினின்றும் வெளிவந்ததும் புஜிக்கத்தகாததென அறியவும். புஜித்தால் சாந்த்ராயணம் அனுஷ்டிக்க வேண்டும். எப்பொழுதுமே அதிக ஆஹாரத்தை

உட்கொள்ளக் கூடாது. அதிகக் குறைவாகவும் புஜிக்கக் கூடாது. அன்னத்தால் தொந்தரை எவ்விதம் உண்டாகாமலிருக்குமோ அவ்விதம் புஜிக்க வேண்டும்.

भोजननियमाः

अथ भोजननियमाः । तत्र पराशरः– यो वेष्टितशिरा भुङ्क्ते यो भुङ्क्ते दक्षिणामुखः । वामपादकरः स्थित्वा तद्वै रक्षांसि भुञ्जते ॥ भुञ्जानश्चैव यो विप्रः पादं हस्तेन संस्पृशेत् । स्वमुच्छिष्टमसौ भुङ्क्ते यो भुङ्क्ते मुक्तभाजने ॥ पादुकास्थो न भुञ्जीत न पर्यङ्कस्थितोऽपि वा । श्वान चण्डालदृक्चैव भोजनं परिवर्जयेत् इति ॥ वसिष्ठः – न मुखशब्दं कुर्यात् सर्वाभिरङ्गुलीभिरश्नीयात् पाणिं च नावधूनुयात् इति ।

போஜன நியமங்கள்

இனி போஜன நியமங்கள் சொல்லப்படுகின்றன. அதில், பராசரர்:- எவன் வஸ்த்ரத்தால் சுற்றப்பட்ட தலையையுடையவனுய்ப் புஜிக்கின்றானே, எவன் தெற்கு முகமாய்ப் புஜிக்கின்றானே, எவன் இடதுகாலில் கையை உடையவனுய்ப் புஜிக்கின்றானே, எவன் நின்றுகொண்டு புஜிக்கின்றானே அவனுடைய அன்னத்தை ராக்ஷஸர்கள் புஜிக்கின்றனர். எந்த ப்ராம்ஹணன் புஜிக்கும் பொழுது காலைக் கையினுல் தொடுகிறானே அவனும், எவன் உபயோகித்து விடப்பட்ட பாத்ரத்தில் புஜிக்கிறானே அவனும் தனது உச்சிஷ்டத்தைப் புஜிக்கிறான். பாதுகைகளிலிருந்து கொண்டு, கட்டிலிலிருந்து கொண்டு, நாய், சண்டாளன் இவர்களைப் பார்த்துக் கொண்டும். புஜிக்கக் கூடாது. வஸிஷ்டர்:- வாயினுல் சப்தம் செய்யக் கூடாது. எல்லா விரல்களோடும் சேர்த்துப் புஜிக்க வேண்டும். கையையும் உதறக்கூடாது.

व्यासः—यस्तु पाणितले भुङ्क्ते यस्तु फूत्कारसंयुतम् । प्रसृताङ्गुलिभिर्यश्च तस्य गोमांसवच्च तत् ॥ हस्त्यश्वरथयानोष्ट्रमास्थितो नैव भक्षयेत् ॥ श्मशानाभ्यन्तरस्थो वा देवालयगतोऽपि वा । शयनस्थो

न भुञ्जीत न पाणिस्थं न चासने । नार्द्रवासा नार्द्रशिरा न चायज्ञोपवीतवान् । न प्रसारितपादस्तु पादारोपितपाणिमान् । न बाहुसक्थिसंस्थश्च न च पर्यङ्कमास्थितः ।। न वेष्टितशिराश्चापि नोत्सङ्गकृतभाजनः । नैकवस्त्रो दुष्टमध्ये सोपानत्कः सपादुकः । न चर्मोपरिसंस्थश्च चर्मवेष्टितपार्श्ववान् । ग्रासशेषं च नाश्नीयात् पीतशेषं पिबेन्न च ।। शाकमूलफलेक्षूणां दन्तच्छेदैर्न भक्षयेत् । बहूनां भुञ्जतां मध्ये न चाश्नीयात्स्वरान्वितः ।। वृथा न विकिरेदन्नं नोच्छिष्टः कुत्रचिद्व्रजेत् । यस्त्यक्त्वा भुवि तच्चान्नं भुक्त्वा चान्द्रायणं चरेत् इति ।

வ்யாஸர்:- எவன் கையில் வைத்துக் கொண்டு புஜிக்கின்றானே, எவன் பூத்காரத்துடன் புஜிக்கின்றானே, விரிந்த விரல்களுடன் எவன் புஜிக்கின்றானே அவனுக்கு அந்த அன்னம் கோமாம்ஸம் போலாகும். யானை, குதிரை, தேர், வாஹனம், ஒட்டகை இவைகளில் இருந்து புஜிக்கலாகாது. சம்மசானத்தின் நடுவிலிருந்தும் தேவாலயத்திலிருந்தும், படுக்கையிலிருந்தும் புஜிக்க லாகாது. கையில் வைத்திருப்பதையும் ஆஸனத்தில் வைத்திருப்பதையும் புஜிக்கலாகாது. ஈர வஸ்த்ர முடையவனுகவும், ஈரமான சிரஸ்ஸுடையவனுகவும், யக்ஞோபவீதம் இல்லாதவனுகவும், நீட்டப்பட்ட காலுடையவனுகவும், காலின் மேல் கையை வைத்துக் கொண்டவனுகவும், துடையின்மேல் கையை வைத்துக் கொண்டவனுகவும், கட்டிலின் மேல் இருப்பவனுகவும், தலையை வஸ்த்ரத்தால் சுற்றிக் கொண்டவனுகவும், மடியில் பாத்ரத்தை வைத்துக் கொண்டவனுகவும், ஒரு வஸ்த்ரமுடையவனுகவும், துஷ்டரின் நடுவிலும், பாதுகை, பாதரக்ஷை தரித்தவனுகவும், தோலின்மேல் உட்கார்ந்தவனுகவும், தோலால் சுற்றப்பட்ட பக்கமுடையவனுகவும், கபளத்தின் மீதியையும் புஜிக்கக் கூடாது. குடித்து மீந்த ஜலத்தையும் குடிக்கக் கூடாது. காய்கள், வேர்கள், பழங்கள், கரும்புகள் இவைகளைப் பற்களால் துண்டித்துப் பக்ஷிக்கக் கூடாது. அன்னத்தை

வீணுய் இறைக்கக் கூடாது. எச்சிலுடையவனுய் எங்கும் செல்லக் கூடாது. பூமியில் தள்ளப்பட்ட அன்னத்தைப் புஜித்தால் சாந்த்ராயணத்தை அனுஷ்டிக்க வேண்டும்.

कूर्मपुराणे — यो भुङ्क्ते वेष्टितशिरा यश्च भुङ्क्ते उदङ्मुखः । सोपानत्कश्च यो भुङ्क्ते सर्वं विद्यात्तदासुरम् इति ।। मनुः – न कुर्वीत वृथा चेष्टां न वार्यञ्जलिना पिबेत् । नोत्सङ्गे भक्षयेद्भक्ष्यान् न जातु स्यात् कुतूहल इति ।। चन्द्रिकायाम् – नोच्छिष्टो भक्षयेत् किञ्चिन्न गच्छन्वा कदाचन । खट्वारूढो न भुञ्जीत न पाणिस्थं कदाचन ।। नास्नातो न च संविष्टो नचैवान्यमना नरः । न चैव शयने नोर्व्यामुपविष्टो न शब्दवत् ।। न चैकवस्त्रो न वदन् प्रेक्षतामप्रदाय च । पादप्रसारणं कृत्वा न च वेष्टितमस्तकः इति ।।

கூர்ம புராணத்தில்:- துணி சுற்றப்பட்ட தலையுடனும், வடக்கு நோக்கியவனுகவும், பாதுகையுடனும் எவன் புஜிக்கின்றுனே அது முழுவதும் ஆஸுரம் என்று அறியவும். மனு:- வீணுகிய சேஷ்டையைச் செய்யக் கூடாது. அஞ்ஜலியால் ஜலத்தைக் குடிக்கக் கூடாது. மடியில் பக்ஷ்யங்களை வைத்துக் கொண்டு பக்ஷிக்கக் கூடாது. ஒன்றிலும் ஆவலுடையவனுய் இருக்கக் கூடாது. சந்த்ரிகையில்:- அசுத்தனுய் ஒன்றையும் பக்ஷிக்கக் கூடாது. நடந்து கொண்டும் பக்ஷிக்கக் கூடாது. கட்டிலில் இருப்பவனுயும், கையிலிருப்பதையும் புஜிக்கக் கூடாது. ஸ்நானம் செய்யாதவனுயும், படுத்தவனுயும், வேறிடத்தில் மனமுடையவனுயும், படுக்கையிலோ, பூமியிலோ உட்கார்ந்தவனுயும், சப்தத்துடனும், ஒரு வஸ்த்ரமுடையவனுயும், பேசிக் கொண்டும், பார்ப்பவருக்குக் கொடாமலும், கால்களை நீட்டியும், சுற்றப்பட்ட தலையுடையவனுகவும் புஜிக்கக் கூடாது.

बोधायनः – सर्वभक्षापूपकन्दमूलमांसानि दन्तैर्नाविद्येन्नाति-सुहितः स्यात् इति ।। बृहस्पतिः – खादितार्धं पुनः खात्वा मोदकादि

फलानि च । दम्पत्योर्भुक्तशिष्टं च भुक्त्वा चान्द्रायणं चरेत् ।। न स्पृशेद्वामहस्तेन भुञ्जानोऽन्नं कदाचन । न पादौ न शिरो वस्तिं न पदा भोजनं स्पृशेत् इति ।। याज्ञवल्क्यः – गोब्राह्मणानलान्नानि नोच्छिष्टो न पदा स्पृशेत् इति ।। एतान्यशुचिः न स्पृशेत् । पादेन त्वनुच्छिष्टोऽपि न स्पृशेदित्यर्थः ।

போதாயனர்:- பக்ஷ்யங்களெல்லாவற்றையும், அப்பம், கிழங்கு, வேர், மாம்ஸம் இவைகளையும் பற்களால் துண்டிக்கக் கூடாது. அதிக த்ருப்தியுள்ளவனுய் இருக்கக் கூடாது. ப்ருஹஸ்பதி:- மோதகம், பழம் முதலியதைக் கடித்துப்பாதி புஜித்துப் பாதி மீதிவைத்து அதைப் பிறகு புஜித்தாலும், தம்பதிகள் புஜித்த மீதியைப் புஜித்தாலும், சாந்த்ராயணத்தை அனுஷ்டிக்க வேண்டும். புஜிப்பவன் இடது கையால் அன்னத்தையும் கால்களையும், தலையையும், நாபியின் கீழ்ப்பாகத்தையும் தொடக்கூடாது. காலினுல் போஜன பாத்ரத்தைத் தொடக் கூடாது. யாக்ஞவல்க்யர்:- பசு, ப்ராம்ஹணன், அக்னி, அன்னம் இவர்களை அசுத்தனுயிருப்பவன் தொடக்கூடாது. சுத்தனுயிருந்தாலும் இவர்களைக் காலால் தொடக்கூடாது.

यमः – अङ्के नारोपयेत् पादं पाणिना नाक्रमेद्ध्रुवम् । अङ्गं वा न स्पृशेत् पद्भ्यां पादं पादान्तरेण च ।। न भिन्नभाजनेऽश्नीयान्न भूम्यां न च पाणिषु । नान्धकारे न चाकाशे न च देवालयादिषु इति ।। आश्वमेधिके – उत्थाय च पुनः स्पृष्टं पादस्पृष्टं च लङ्घितम् । केशकीटातिपन्नं च मुख्यमाज्यविवर्जितम् ।। अन्नं तद्राक्षसं ज्ञेयं तस्माद्यत्नेन वर्जयेत् ।। राक्षसोच्छिष्टभुग्विप्रः सप्त पूर्वान् परानपि । रौरव नरके घोरे स्वपितॄन् पातयिष्यति इति ।। हारीतः – एकवस्त्रो न भुञ्जीत कवाटमपिधाय च। यानस्थः शयनस्थो वा पादुकास्थोऽपि वा पुनः । ज्योत्स्नोल्कालोकमार्गेषु प्रदोषे च महानिशि । कोणे चामार्जिते नाद्यात् सङ्के शय्यासु हर्म्यके इति ।

யமன்:- மடியின்மேல் பாதத்தை ஏற்றக்கூடாது. கையைப் பூமியில் வைத்துக் கொள்ளக் கூடாது. கால்களால் வேறு அங்கத்தைத் தொடக் கூடாது. ஒரு காலால் மற்றொரு காலைத் தொடக் கூடாது. உடைந்த பாத்ரத்திலும், பூமியிலும், கையிலும் வைத்துக் கொண்டு புஜிக்கக் கூடாது. இருளிலும், ஆவரணமில்லாத இடத்திலும், தேவாலயம் முதலியவைகளிலும் இருந்து புஜிக்கக் கூடாது. ஆச்வமேதிகத்தில்:- எழுந்து மறுபடி தொடப்பட்டதும், காலால் தொடப்பட்டதும், காலால் தாண்டப்பட்டதும், மயிர், புழு ஸம்பந்தமுள்ளதும், வாயினின்று விழுந்ததும், ஆஜ்யமில்லாததுமாகிய அன்னம் ராக்ஷஸமாம். ஆகையால் அதை அவச்யம் வர்ஜிக்க வேண்டும். ராக்ஷஸரின் உச்சிஷ்டத்தைப் புஜித்த ப்ராம்ஹணன், தனக்கு முன் ஏழு, பின் ஏழு உள்ள பித்ருக்களை நரகத்தில் தள்ளுவான். ஹாரீதர்:- ஒரு வஸ்த்ரமுடையவனுகவும், கதவை மூடாமலும், வாஹனத்திலிருந்தும், படுக்கையிலிருந்தும், பாதுகையிலிருந்தும், நிலவு, கொள்ளியின் வெளிச்சம், வழி இவைகளிலிருந்தும், ப்ரதோஷ காலத்திலும், மஹாராத்ரியிலும், மூலையிலும், சுத்தி செய்யாத இடத்திலும், கூட்டத்திலும், படுக்கையிலும், மாடியிலும், புஜிக்கக் கூடாது.

सङ्गहे — शय्यायां वेत्रासने चन्द्रिकायामुल्कालोके द्वारि मार्गप्रदेशे। गेहे धूलीधूसरे भित्तिसन्धौ लक्ष्मीकामो वर्जयेदन्नभुक्तिम् इति ।। बृहस्पतिः – अग्न्यगारे गवां भोष्टे देवब्राह्मणसन्निधौ। जप्ये भोजनकाले च पादुके परिवर्जयेत् ।। उत्सङ्गे च न भुञ्जीत न च पाणितलेऽजिने। शून्यागारे च नाश्नीयान्न च पाण्यासनस्थितम् इति। कूर्मपुराणे – नार्धरात्रे न मध्याह्ने नाजीर्णे नार्द्रवस्त्रधृक्। न भिन्नभाजने चैव न भूम्यां न च पाणिषु।। नोच्छिष्टो घृतमादद्यान्न मूर्धानं स्पृशन्नपि। न ब्रह्म कीर्तयन् वाऽपि न निश्शेषं न भार्यया इति।

ஸங்க்ரஹத்தில்:- படுக்கையிலும், பிரம்புப்பாயிலும், நிலவிலும், கொள்ளியின் வெளிச்சத்திலும், வாயிற்படியிலும், வழியிலும், புழுதி படிந்த வீட்டிலும், சுவர்களின் ஸந்தியிலும், ஸம்பத்தை விரும்புகிறவன் போஜனத்தை வர்ஜிக்க வேண்டும். ப்ருஹஸ்பதி:- அக்னிசாலையிலும், பசுக்கொட்டிலிலும், தேவர் ப்ராம்ஹணர் ஸன்னிதியிலும், ஜப காலத்திலும், போஜன காலத்திலும் பாதுகைகளைத் தரிக்கக் கூடாது. மடியிலும், உள்ளங்கையிலும், தோலிலும் வைத்துக் கொண்டும், பாழான வீட்டிலும் புஜிக்கக் கூடாது. கையை ஆஸனமாய்ச் செய்து கொண்டு புஜிக்கக் கூடாது. கூர்ம புராணத்தில்:- பாதிராத்ரியிலும், நடுப்பகலிலும், அஜீர்ணத்திலும், ஈரமான வஸ்த்ரம் தரித்தவனும், உடைந்த பாத்ரத்திலும், பூமியிலும், கையிலும் புஜிக்கக் கூடாது. உச்சிஷ்டனுயிருந்து நெய்யை க்ரஹிக்கக் கூடாது. தலையைத் தொட்டுக் கொண்டும், வேதம் சொல்லிக் கொண்டும், மீதிவைக்காமலும், பார்யையுடனும் புஜிக்கக் கூடாது.

याज्ञवल्क्यः – न भार्यादर्शनेऽश्नीयान्नैकवासा न संस्थितः इति। भार्यायामात्मपुरतः स्थितायां नाश्नीयात् । अवीर्यवदपत्योत्पत्तिभयात् । तथा च श्रुतिः – जायाया अन्ते नाश्नीयादवीर्यवदपत्यं भवति इति ।। अतस्तया सह भोजनं दूरादेव निरस्तम् इति विज्ञानेश्वरः ।। तथा च बृहद्यमः – माता वा भगिनी वापि भार्या वाऽन्याश्च योषितः । न ताभिः सह भोक्तव्यं भुक्त्वा चान्द्रायणं चरेत् इति । तथा च चन्द्रिकायाम् – नासनारूढपादस्तु न च सार्धं तु भार्यया । शून्यालये तु नाश्नीयान्न च देवाग्निवेश्मनि इति ।

யாக்ஞவல்க்யர்:- பார்யையின் எதிரில் புஜிக்கக் கூடாது. ஒரு வஸ்த்ரமுடையவனுகவும், நின்று கொண்டும் புஜிக்கக் கூடாது. "பார்யை தனது எதிரிலிருக்கும் போது புஜிக்கலாகாது. வீர்யமில்லாத

குழந்தை பிறக்குமென்ற பயத்தால். அவ்விதமே ச்ருதி சொல்லுகிறது- 'பார்யையின் எதிரில் புஜிக்கக் கூடாது. வீர்யமில்லாத குழந்தை உண்டாகு மென்பதால்' என்று. இதனல் அவளுடன்கூட புஜிப்பதென்பது தூரத்தில் தள்ளப்பட்டது'' என்றூர் விக்ஞானேச்வரர். அவ்விதமே, ப்ருஹத்யமர்:- தாய், ஸஹோதரீ, பார்யை, மற்ற ஸ்த்ரீகள் யாராயினும் அவருடன் புஜிக்கலாகாது. புஜித்தால் சாந்த்ராயணம் அனுஷ்டிக்க வேண்டும். அவ்விதமே, சந்த்ரிகையில்:- ஆஸனத்தில் காலை வைத்தவனுகவும், பார்யையுடனும், பாழான ஆலயத்திலும், தேவாலயத்திலும், அக்னிசாலையிலும் புஜிக்கக் கூடாது.

विष्णुः— नाश्नीयाद्भार्यया सार्धं नाकाशे न तटे स्थितः । शयानः प्रौढपादश्च कृत्वा नैवावसक्थिकम् इति ॥ मनुः – नाश्नीयाद्भार्यया सार्धं नैनामीक्षेत चाश्नतीम्। क्षुवतीं जृम्भमाणां वा न चासीनां यथासुखम् इति ॥ यत्तु– ब्राह्मण्या सह योऽश्नीयादुच्छिष्टं वा कदाचन । न तस्य दोषमिच्छन्ति नित्यमेव मनीषिणः ॥ उच्छिष्टमितरस्त्रीणां योऽश्नीयाद् ब्राह्मणः क्वचित् । प्रायश्चित्ती स विज्ञेयः सङ्कीर्णो मूढचेतनः इति, न तत् सर्वदा दोषाभावप्रतिपादनपरम्, कदाचनेति वचनात्।

விஷ்ணு:- பார்யையுடனும், கூரையில்லாத இடத்திலும், கரையிலும், நின்றுகொண்டும், படுத்துக் கொண்டும், ப்ரௌடபாதனையும், (ஆஸனத்தில் காலைவைத்துக் கொண்டும்) முழங்கால்களைக் கட்டிக் கொண்டும் புஜிக்கக் கூடாது. மனு:- பார்யையுடன் புஜிக்கக் கூடாது. அவள் புஜிக்கும் போதும், தும்மும் போதும், கொட்டாவி விடும்போதும், சோம்பல் முறிக்கும் போதும், இஷ்டப்படி உட்கார்ந்திருக்கும் போதும் அவளைப் பார்க்கக் கூடாது. ''எவன், ப்ராம்ஹணியான பத்னியுடன் புஜிக்கின்றானே, அவளின் உச்சிஷ்டத்தையாவது ஒருகால் புஜிக்கின்றானே,

அவனுக்கு எப்பொழுதும் தோஷமில்லை என்கின்றனர் அறிந்தவர்கள். மற்ற வர்ண ஸ்த்ரீகளின் உச்சிஷ்டத்தை ப்ராம்ஹணன் எக்காலத்திலாவது புஜித்தால் அந்த மூடன் ஸங்கீர்ணன், ப்ராயச்சித்தார்ஹனுவான்'' என்ற வசனமுள்ளதேயெனில், அது, எப்பொழுதும் தோஷ மில்லை என்பதைச் சொல்வதில் தாத்பர்யமுள்ளதல்ல, 'கதாசந' எப்போதாவது என்றிருப்பதால்.

अत एवादित्यपुराणम् – ब्राह्मण्या भार्यया सार्धं कचिद्भुञ्जीत वाऽध्वनि। अधोवर्णस्त्रिया सार्धं भुक्त्वा पतति तत्क्षणात् इति। यदपि बोधायनेनोक्तम् – यानि दक्षिणतस्तानि व्याख्यास्यामो यथैत दनुपेतेन सह भोजनं स्त्रिया सह भोजनं पर्युषित भोजनम् इति, तदपि तस्य दुराचारत्वप्रतिपादनपरम्॥ तथा च स एव – मिथ्यैतदिति गौतमः उभयं चैव नाद्रियेत शिष्टस्मृतिविरोधदर्शनात् इति। आपस्तम्बः – उपेतः स्त्रीणामनुपेतस्योच्छिष्टं वर्जयेत् इति, धर्मविप्रतिपत्तावभोज्यम् इति।

ஆதித்யபுராணம்:- 'ப்ராம்ஹணியான பார்யையுடன் ஒரு காலத்தில் மார்க்கத்தில் புஜித்தாலும் புஜிக்கலாம். கீழ் வர்ண ஸ்த்ரீயுடன் புஜித்தால் அப்பொழுதே பதிதனுகிறான்' என்கிறது. போதாயனர்:- ''தென்தேசத்தி லுள்ளவை எவையோ அவைகளைச் சொல்லுகிறேன், அனுபநீதனுடன் சேர்ந்து புஜிப்பதும், பார்யையுடன் சேர்ந்து புஜிப்பதும், பழையதான அன்னத்தை புஜிப்பதும்'' என்று சொல்லிய வசனமெதுவோ அதுவும், அதற்கு துராசாரத் தன்மையைச் சொல்வதில் தாத்பர்யமுள்ளதாம். அவ்விதமே, போதாயனரே:- 'இது மித்யை (துராசாரம்) என்றூர் கௌதமர். இரண்டு விதமான ஆசாரத்தையும் ஆதரிக்கக் கூடாது, சிஷ்டர்களின் ஸ்ம்ருதிகளுடன் விரோதம் காணப்படுவதால்' என்றூர். ஆபஸ்தம்பர்:- உபநயனமாகிய ப்ராம்ஹணன், ஸ்த்ரீகளுடையவும், உபநயனமாகாதவனுடையவும்

உச்சிஷ்டத்தைப் புஜிக்கலாகாது. விஹிதமான உச்சிஷ்டமாஞலும், தர்மத்திற்கு லோபம் வருமாகில் அதைப் புஜிக்கக் கூடாது.

बृहस्पतिः – नोच्छिष्टो ग्राहयेदाज्यं जग्धशिष्टं च सन्त्यजेत्। न भिन्नकांस्ये सन्ध्यायां पतितानां च सन्निधौ ॥ शूद्रशेषं न भुञ्जीयात् श्राद्धान्नं शिशुभिः सह। शूद्रभुक्तावशिष्टं तु नाद्याद्भाण्डस्थितं त्वपि ॥ पात्रान्तरे निधायास्माद् दद्यान्निरवशेषतः इति ॥ पाकभाण्डात् पात्रान्तरे निधाय तत आदाय शूद्रादिभ्यो निरवशेषं देयम् एवं सति पाकभाण्डस्थं भोज्यमित्यर्थः ॥

ப்ருஹஸ்பதி:- உச்சிஷ்டஞயிருந்து நெய்யை க்ரஹிக்கக் கூடாது. புஜித்ததின் மீதியைப் புஜிக்கலாகாது. உடைந்த வெண்கலத்தில் புஜிக்கலாகாது. பதிதர்களின் எதிரில் புஜிக்கலாகாது. சூத்ரசேஷத்தைப் புஜிக்கலாகாது ச்ராத்தசேஷான்னத்தைப் புஜிக்கலாகாது. சிசுக்களுடன் சேர்ந்து புஜிக்கலாகாது. சூத்ரசேஷத்தையும் புஜிக்க லாகாது. பாக பாண்டத்திலிருந்தாலும் சூத்ரசேஷத்தைப் புஜிக்கலாகாது. பாக பாண்டத்திலிருந்து வேறு பாத்ரத்திலெடுத்து வைத்துக் கொண்டு அதை முழுவதும் கொடுத்துவிட வேண்டும். அதாவது, பாக பாண்டத்திலிருந்தும் வேறு பாத்ரத்தில் அன்னத்தை எடுத்து வைத்துக் கொண்டு அந்த அன்னத்திலிருந்து எடுத்து சூத்ரர் முதலியவர்க்குக் கொடுக்க வேண்டும். அதை மீதியில்லாமல் கொடுத்துவிட வேண்டும். அப்படியாஞல் பாக பாண்டத்திலுள்ளது சேஷமாகாது. அது புஜிக்கத் தகுந்தது தான் என்பது பொருள்.

अत्रिः — क्षीरं लवणसंयुक्तमुच्छिष्टे घृतसेचनम् । रजस्वलामुखास्वादः सुरापानसमं त्रयम् इति । उच्छिष्टे घृतसेचने विशेषमाह स एव – प्राणाहुतौ घृताभावे पश्चाद्भुञ्जीत नो घृतम्। प्राग्घुते घृतसद्भावे भुक्तिमध्ये न दुष्यति इति ॥ शातातपः —

अग्रासनोपविष्टस्तु यो भुङ्क्ते प्रथमं द्विजः । बहूनां पश्यतां सोऽज्ञः पङ्क्त्या हरति किल्बिषम् इति । उशनाः — नादत्वा मृष्टमश्नीयाद्बहूनां चैव पश्यताम् । नाश्नीयुर्बहवश्चैव तथा चैकस्य पश्यतः ॥ अश्नाति यो भृत्यजनस्य मध्ये मृष्टान्नमेको रसगृध्नुबुद्धिः । दीनैः कटाक्षैरभिवीक्ष्यमाणो व्यक्तं विषं हालहलं स भुङ्क्ते इति ।

அத்ரிः- உப்புடன்கூடிய பால், உச்சிஷ்டத்தில் நெய் சேர்ப்பது, ரஜஸ்வலையின் முகத்தைப் பருகுதல் என்ற இம்மூன்றும் ஸுராபானத்திற்குச் சமமாகும். உச்சிஷ்டத்தில் நெய் சேர்ப்பதில் விசேஷத்தைச் சொல்லுகிறார், அத்ரியேः- ப்ராஜாபத்தியில் நெய் சேர்க்காவிடில், பிறகு நெய்யைப் புஜிக்கக்கூடாது. ப்ராஜாபத்தியில் நெய் சேர்ந்திருந்தால், போஜன மத்யத்தில் நெய் சேர்ப்பது துஷ்டமாகாது. சாதாதபர்ः- பங்க்தியின் முதலில் உட்கார்ந்து கொண்டும், அநேகர் பார்த்துக் கொண்டிருக்கும் பொழுது, எவன் முதலில் புஜிக்கின்றானே, அந்த அக்ஞன், அந்தப் பங்க்தியிலுள்ளவரின் பாபத்தைப் பெறுகிறான். உசநாः- அநேகர் பார்த்துக் கொண்டிருக்கும் பொழுது அவர்களுக்குக் கொடாமல் தான் வயிறு நிரம்ப புஜிக்கக் கூடாது. ஒருவன் பார்த்துக் கொண்டிருக்க அவனுக்குக் கொடாமல் பலரும் புஜிக்கக் கூடாது. எவன் ப்ருத்ய ஜனங்களின் நடுவில், அவர்களின் தீனமான பார்வைகளால் பார்க்கப்பட்டு, அவர்களுக்குக் கொடாமல், ரஸங்களில் ஆசையுள்ளவனாய்த் தான்மட்டில் ம்ருஷ்டான்னத்தைப் வயிறுநிறைய புஜிக்கின்றானே அவன் ஹாலாஹல விஷத்தையே புஜிக்கின்றான். நிச்சயம்.

यमः—यस्त्वेकपङ्क्तौ विषमं ददाति स्नेहाद्भयाद्वा यदि वाऽर्थहेतोः । वेदेषु दृष्टामृषिभिश्च गीतां तां ब्रह्महत्यां मुनयो वदन्ति इति ॥ व्यासः —एकपंक्त्युपविष्टानां विषमं यः प्रयच्छति ।

यश्चैवाश्नाति विषमं स कुर्याद्ब्रह्महणो व्रतम् ।। पङ्क्तिभेदी पृथक्पाकी नित्यं ब्राह्मणनिन्दकः । आदेशी वेदविक्रता पञ्चैते ब्रह्मघातुकाः इति ।। गोभिलः - एकपङ्क्त्युपविष्टानां विप्राणां सहभोजने । यद्येकोऽपि त्यजेत् पात्रं नाश्नीयुरितरेऽप्यनु ।। मोहात्तु भुङ्क्ते यस्तत्र स सान्तपनमाचरेत् ।। भुञ्जानेषु तु विप्रेषु यस्तु पात्रं परित्यजेत् । भोजने विघ्नकर्ताऽसौ ब्रह्महाऽपि तथोच्यते ।। एकपङ्क्त्युपविष्टानां विप्राणां भोक्तुकामिनाम् । यो विघ्नं कुरुते मर्त्यः ततो नान्योऽस्ति पापकृत् इति।

யமன்:- எவன், ஒரு பங்க்தியில், ஸ்நேஹத்தாலோ, பயத்தாலோ, பணத்திற்காகவோ பேதமுள்ளபடி போஜனத்தைக் கொடுக்கின்றானே, அவனுககு வேதங்களில் காணப்பட்டதும், ருஷிகளால் சொல்லப் பட்டதுமான அந்த ப்ரம்ஹத்தியையை முனிவர்கள் சொல்லுகின்றனர். வ்யாஸர்:- ஒரு பங்க்தியில் உட்கார்ந்திருப்பவர்களுக்கு எவன் பேதமுள்ளதாய் கொடுக்கின்றானே, எவன் பேதமுள்ளபடி புஜிக் கின்றானே, அவன் ப்ரம்ஹத்தியை செய்தவனுடைய வ்ரதத்தை அனுஷ்டிக்க வேண்டும். பங்க்தியைப் பேதம் செய்பவனும், தனக்கு மட்டில் தனியாய்ப் பாகம் செய்து கொள்பவனும், எப்பொழுதும் ப்ராம்ஹணர்களை நிந்திப்பவனும், ஆதேசியும், (உத்தரவிடுபவன்) வேதத்தை விற்பவனும் இந்த ஐவரும் ப்ரம்ஹஹத்தி செய்தவர்கள். கோபிலர்:- ஒரு பங்க்தியில் உட்கார்ந்து புஜிக்கும் ப்ராம்ஹணர்களுள் ஒருவன் போஜன பாத்ரத்தை விட்டாலும், பிறகு மற்றவர்களும் புஜிக்கக் கூடாது. எவன் அறியாமையால் அப்பங்க்தியில் புஜிக்கின்றானே அவன் ஸாந்தபனத்தை அனுஷ்டிக்க வேண்டும். ப்ராம்ஹணர்கள் புஜிக்கும் பொழுது எவன் போஜன பாத்ரத்தை விடுகின்றானே அவன் பிறரின் போஜனத்தில் விக்னம் செய்தவனையும், ப்ரம்ஹஹத்தியை செய்தவனையும் சொல்லப்படுகின்றான். ஒரு பங்க்தியில் உட்கார்ந்திருப்பவரும், புஜிக்க விரும்பியவருமான

ப்ராம்ஹணர்களுக்கு எந்த மனிதன் விக்னத்தைச் செய்கின்றானோ அவனைவிடப் பாபம் செய்பவன் ஒருவன் இல்லை.

पराशरः — एकपङ्क्त्युपविष्टानां विप्राणां सहभोजने । यद्येकोऽपि त्यजेत् पात्रं शेषमन्नं न भोजयेत् । मोहाद्भुञ्जीत यस्तत्र पङ्क्त्या उच्छिष्टभाजने । प्रायश्चित्तं चरेद्विप्रः कृच्छ्रं सान्तपनं तथा ।। भुञ्जानेषु तु विप्रेषु योऽग्रे पात्रं परित्यजेत् । स चोरः स च पापिष्ठो ब्रह्मघ्नः स खलूच्यते ।। अप्येकपङ्क्त्यां नाश्नीयाद् ब्राह्मणः स्वजनैरपि । को हि जानाति किं कस्य प्रच्छन्नं पातकं भवेत् ।। एकपङ्क्त्युपविष्टानां दुष्कृतं यद्दुरात्मनाम् । सर्वेषां तत् समं तावद्यावत्पंक्तिः न भिद्यते इति ।

பராசரர்:- ஒரு பங்க்தியில் உட்கார்ந்து சேர்ந்து புஜிக்கின்ற ப்ராம்ஹணர்களுள் ஒருவனுவது பாத்ரத்தை விட்டால் மற்றவரும் மீதியுள்ள அன்னத்தைப் புஜிக்கக் கூடாது. எவன் அறியாமையால் பங்க்தியின் உச்சிஷ்ட பாத்ரத்தில் புஜிப்பானோ அவன் ஸாந்தபன க்ருச்ரத்தை ப்ராயச்சித்தமாய் அனுஷ்டிக்க வேண்டும். ப்ராம்ஹணர்கள் புஜிக்கும் போது எவன் முதலில் பாத்ரத்தை விடுகின்றானோ அவன் திருடன், அவன் மஹாபாபி, அவன் ப்ரம்ஹக்னன் என்று சொல்லப்படுகிறான். ப்ராம்ஹணன் தன் ஜனங்களுடனும் கூட ஒரு பங்க்தியில் புஜிக்கக் கூடாது. எவனுக்கு எந்தப் பாபம் மறைவாய் இருக்கக் கூடும் என்று யார் அறிவார்? ஒரு பங்க்தியில் உட்கார்ந்திருக்கும் துஷ்டர்களுக்கு எந்தப் பாபமோ அது எல்லோருக்கும் ஸமமாகும், பங்க்தியைப் பேதிக்காதவரையில்.

पङ्क्तिभेदप्रकारमाह स एव — अग्निना भस्मना चैव स्तम्भेन सलिलेन च । द्वारेण चैव मार्गेण पङ्क्तिभेदो बुधैः स्मृतः इति ।। यमोऽपि – उदकं च तृणं भस्म द्वारं पन्थास्तथैव च । एभिरन्तरितं कृत्वा

पङ्क्तिदोषो न विद्यते इति। स्मृत्यन्तरे — अग्निना भस्मनाचैव स्तम्भेन सलिलेन वा। द्वारेण निम्नभूम्या वा षड्भिः पङ्क्तिर्विभिद्यते इति ॥ स्मृत्यर्थसारे — न शुष्कपाणिपादो भुञ्जीत न तिष्ठन्नगच्छन्न प्रह्वो न शयानो नार्द्रवस्त्रो न प्रौढपादो नासनारूढपादो न विदिङ्मुखो न शयने न खट्वायां नासन्द्यां न जानुनि नोत्सङ्गे न शिशुभिः सह न पश्यतामप्रदाय न भार्यया सहाश्नीयाद्विवाहवर्जं न दुष्टपङ्क्तौ जलतृणाग्निभस्म-पथिस्तंभादिभिः पङ्क्तिर्भिद्यते इति।

பங்க்தியைப் பேதிக்கும் ப்ரகாரத்தைச் சொல்லுகிறார் :- பராசரரே:- அக்னியினலும், சாம்பலினலும், ஸ்தம்பத்தினலும், ஜலத்தினலும், வாயிலினலும், வழியினலும் பங்க்தியின் பேதம் வித்வான்களால் சொல்லப்பட்டுள்ளது. யமனும்:- ஜலம், புல், சாம்பல், வாயில், வழி இவைகள் நடுவிலிருந்தால் பங்க்தியின் தோஷம் இல்லை. மற்றொருஸ்ம்ருதியில்:- அக்னி, சாம்பல், ஸ்தம்பம், ஜலம், வாயில், தாழ்ந்தபூமி, இவ்வாறுகளில் ஒன்று நடுவிலிருந்தால் பங்க்தி பேதிக்கப்படுகிறது. (வேறுகிறது.) ஸ்ம்ருத்யர்த்தஸாரத்தில்:- உலர்ந்த கை, கால்கள் உள்ளவனுயும், நின்றுகொண்டும், நடந்து கொண்டும், குனிந்து கொண்டும், படுத்துக் கொண்டும், ஈரவஸ்த்ரமுடையவனுகவும், ப்ரௌடபாதனுயும், (ஆஸனத்தில் கால்களை வைத்துக் கொண்டும்) விதிக்குகளை நோக்கினவனுயும் புஜிக்கக் கூடாது. படுக்கையிலும், கட்டிலிலும், நாற்காலியிலும், முழங்காலிலும், மடியிலும், உள்ளங்காலிலும் பாத்ரத்தை வைத்துக் கொண்டு புஜிக்கக் கூடாது. படுக்கை முதலியவைகளி லிருந்தும், குழந்தைகளுடனும், பார்ப்பவர்க்குக் கொடாமலும் புஜிக்கக் கூடாது. விவாஹம் தவிர மற்றக் காலத்தில் பார்யையுடன் புஜிக்கக் கூடாது. துஷ்டர்களின் பங்க்தியில் புஜிக்கக் கூடாது. ஜலம், புல், நெருப்பு, சாம்பல், வழி, ஸ்தம்பம் முதலியவைகளால் குறுக்கிட்டால் பங்க்தி வேறுகும்.

स्मृतिरत्ने — शयनस्थो न भुञ्जीत न पाणिस्थं न चासने। न कुर्यात् स्कन्दनं शब्दं क्रोध मन्यत्र चिन्तनम्।। शिशूनां भर्त्सनं चापि श्वचण्डालादिनिदर्शनम्। अशुचीनां तथा मध्ये प्रेक्षतामप्यनश्नताम्।। नाकाले विषयुक्तं च नाश्नीयादहुतं तथा इति ।। व्यासः — उदक्यामपि चण्डालं श्वानं कुक्कुटमेव च। भुञ्जानो यदि पश्येत्तु तदन्नं तु परित्यजेत्।। रजस्वलादृष्टमन्नं भुक्त्वा वमनमिष्यते। चण्डालदृष्टमन्नं च सूतिकादृष्टमेव च। चण्डालं पतितं प्रेतं श्वशूद्रादीन् रजस्वलाम्। एतान्निरीक्ष्य भुञ्जानो वमित्वोपवसेत्र्यहम् इति।

ஸ்ம்ருதிரத்னத்தில்:- படுக்கையிலிருந்து புஜிக்கக் கூடாது. கையிலுள்ளதையும், ஆஸனத்திலுள்ளதையும் புஜிக்கக் கூடாது. சிந்தக்கூடாது. சப்தம், கோபம், மற்றவிடத்தில் சிந்தை, குழந்தைகளை விரட்டுதல், நாய், சண்டாளன் முதலியவரைப் பார்ப்பது இவை கூடாது. அசுத்தர்களின் நடுவிலும், புஜிக்காதவர்கள் பார்த்துக் கொண்டிருக்கும் பொழுதும், அகாலத்திலும், விஷம் கலந்ததையும், ஹோமம் செய்யாததையும் புஜிக்கக் கூடாது. வ்யாஸர்:- ரஜஸ்வலை, சண்டாளன், நாய், கோழி இவர்களைப் புஜிப்பவன் பார்த்தால் அந்த அன்னத்தை விட்டுவிட வேண்டும். ரஜஸ்வலையால் பார்க்கப்பட்ட அன்னத்தைப் புஜித்தால் வாந்தி செய்ய வேண்டும். சண்டாளனாலும், ஸூதிகையினாலும் பார்க்கப்பட்ட அன்னத்தைப் புஜித்தாலும் வாந்தி செய்ய வேண்டும். சண்டாளன், பதிதன், ப்ரேதன், நாய், சூத்ரன் முதலியவர், ரஜஸ்வலை இவர்களைப் பார்த்து விட்டு புஜித்தால் வாந்தி செய்து, மூன்றுநாள் உபவாஸம் இருக்க வேண்டும்.

संवर्तः — उदक्यामपि चण्डालं ग्रामसूकरकुक्कुटौ। भुक्त्यन्तरे समीक्ष्यैतान् जपेत् पूर्वोदितामृचम् इति । मानस्तोक इत्यृचम् ।। स्मृत्यन्तरे — चण्डालं पतितं श्वानमुदक्यां सूतिकां तथा। दृष्ट्वा भुक्त्यन्तरे स्नात्वा मानस्तोकऋचं जपेत् इति ।। कात्यायनः —

चण्डालपतितोदक्यावाक्यं श्रुत्वा द्विजोत्तमः । भुञ्जीत ग्रासमात्रं तु दिनमेकमभोजनम् इति ।। आश्वमेधिके — उदक्यामपि चण्डालं श्वानं वा काकमेव वा । भुञ्जानो यदि पश्येत्तु तदन्नं तु परित्यजेत् ।। भुञ्जानो यदि तन्मोहात् द्विजश्चान्द्रायणं चरेत् इति ।

ஸம்வர்த்தர்:- ரஜஸ்வலை, சண்டாளன், ஊர்ப்பன்றி, கோழி இவர்களைப் போஜனத்தின் நடுவில் பார்த்தால், முன் சொல்லிய ('மானஸ்தோகே' என்ற) ருக்கை ஜபிக்க வேண்டும். மற்றொருஸ்ம்ருதியில்:- சண்டாளன், பதிதன், நாய், ரஜஸ்வலை, ஸூதிகை இவர்களைப் போஜனத்தின் மத்யத்தில் பார்த்தால் ஸ்நானம் செய்து, 'மானஸ்தோகே' என்ற ருக்கை ஜபிக்க வேண்டும். காத்யாயனர்:- ப்ராம்ஹணன் போஜன மத்யத்தில் சண்டாளன், ஸூதிகை, ரஜஸ்வலை இவர்களின் வார்த்தையைக் கேட்டு விட்டு ஒரு கபளம் புஜித்தாலும், ஒருநாள் முழுவதும் உபவாஸம் இருக்க வேண்டும். ஆச்வமேதிகத்தில்:- ரஜஸ்வலை, சண்டாளன், நாய், காக்கை இவைகளைப் புஜிக்கும் பொழுது பார்த்தால் அந்த அன்னத்தை விட்டுவிட வேண்டும். அறியாமையால் அதைப் புஜித்தால், ப்ராம்ஹணன் சாந்த்ராயணத்தை அனுஷ்டிக்க வேண்டும்.

प्रजापतिः — उदक्यायाः करेणान्नं भुक्त्वा चान्द्रायणं चरेत् । प्राजापत्यमशक्तश्चेत् त्रिरात्रं स्पृष्टभोजने ।। अशक्तौ तु तदर्धं स्यात् त्रिगुणं सहभोजने । चतुर्गुणं तदुच्छिष्टे पानीयेऽर्धार्धमेव च इति ।। भोजनपात्रस्योच्छिष्टस्पर्शे सति कर्तव्यमुक्तं स्मृत्यर्थसारे — उच्छिष्टस्पर्शनं ज्ञात्वा तत् पात्रं परिहृत्य च । ततः पश्चाद्गोमयेन भूमिं समनुलिप्य च ।। अन्यत् पात्रं निधायैव तदन्नं परिवेषयेत् । परिषिच्याथ भुञ्जीत भोजने तु न दोषभाक् इति ।

ப்ரஜாபதி:- ரஜஸ்வலையின் கையினால் கொடுக்கப் பட்ட அன்னத்தைப் புஜித்தால் சாந்த்ராயணத்தை

அனுஷ்டிக்க வேண்டும். அசக்தனுனல் ப்ராஜாபத்யத்தை அனுஷ்டிக்க வேண்டும். அவளால் ஸ்பர்சிக்கப்பட்டதைப் புஜித்தால் மூன்று நாள் வ்ரதத்தை அனுஷ்டிக்க வேண்டும். அசக்தனுனல் அதில் பாதியை அனுஷ்டிக்க வேண்டும். ரஜஸ்வலையுடன் புஜித்தால் மூன்று மடங்கான வ்ரதத்தை அனுஷ்டிக்க வேண்டும். அவளின் உச்சிஷ்டத்தைப் புஜித்தால் நான்கு மடங்கு வ்ரதத்தை அனுஷ்டிக்க வேண்டும். அவளின் ஜலத்தைப் பருகினுல் கால்பாகமான வ்ரதத்தை அனுஷ்டிக்க வேண்டும். போஜன பாத்ரத்திற்கு, உச்சிஷ்டஸ்பர்சம் ஏற்பட்டால் செய்ய வேண்டியது ஸ்ம்ருத்யர்த்தஸாரத்தில்:- போஜன பாத்ரத்திற்கு உச்சிஷ்ட ஸ்பர்சம் ஏற்பட்டதாய்த் தெரிந்தால் அந்தப் பாத்ரத்தை பரிஹரித்து, பிறகு கோமயத்தால் பூமியை மெழுகி, மற்றொரு பாத்ரத்தில் அன்னத்தைப் பரிமாறி, பரிஷேசனம் செய்து பிறகு புஜிக்கலாம். இவ்விதம் புஜித்தால் தோஷத்தை அடையமாட்டான்.

पात्रस्पर्शाभावे अन्योन्यस्पर्शे तत्रैवोक्तम् — एकपङ्क्तिषु भुञ्जानो ब्राह्मणो ब्राह्मणं स्पृशेत्। तदन्नमत्यजन् भुक्त्वा गायत्र्यष्टशतं जपेत् इति ॥ तदन्नं त्यजेत्। अत्यक्त्वा भुञ्जीत चेत् गायत्र्यष्टशतं जपेदित्यर्थः । इदं चापद्विषयम् । अत एवाह पराशरः — उच्छिष्टोच्छिष्टसंस्पृष्टः शुना शूद्रेण वा द्विजः । उपोष्य रजनीमेकां पञ्चगव्येन शुध्यति इति ॥ शूद्रेण - अनुच्छिष्टशूद्रेणेत्यर्थः ॥ स्मृत्यन्तरे — एकपङ्क्तौ तु भुञ्जान उच्छिष्टं संस्पृशेद्यदि । विसृज्यान्नं ततः स्नायात् भुक्त्वा चान्द्रायणं चरेत् इति । उच्छिष्टान्नस्पर्शे अत्रिः – अशुद्धः स्वयमप्यन्नमशुद्धं तु स्पृशेद्यदि । विशुध्यत्युपवासेन भुङ्क्ते कृच्छ्रेण शुध्यति इति।

போஜன பாத்ரத்திற்கு ஸ்பர்சமில்லாமல், புஜிப்பவர் ஒருவரையொருவர் ஸ்பர்சித்தால், செய்ய வேண்டியதும்

அங்கே சொல்லப்பட்டுள்ளது. ஒரே பங்க்தியில் புஜிக்கும் ப்ராம்ஹணன் புஜிக்கும் மற்றொருவனை, ஸ்பர்சித்தால், அந்த அன்னத்தை கைவிட வேண்டும். த்யஜிக்காமல் புஜித்தால் 108- முறை காயத்ரியை ஜபிக்க வேண்டும். இது ஆபத்விஷயமாம். பராசரர்:- 'உச்சிஷ்டஞன ப்ராம்ஹணன், உச்சிஷ்டஞன ப்ராம்ஹணஞலாவது, நாயிஞலர்வது, சூத்ரஞலாவது ஸ்பர்சிக்கப்பட்டால் ஒரு இரவு முழுவதும் உபவாஸமிருந்து, பஞ்சகவ்யத்தால் சுத்தஞகிறன்' என்றார். இங்கு சூத்ரன் என்றதற்கு உச்சிஷ்டனல்லாத சூத்ரன் என்று பொருள். மற்றொருஸ்ம்ருதியில்:- ஒரே பங்க்தியில் புஜிப்பவன் மற்றொரு உச்சிஷ்டனை ஸ்பர்சித்தாஞகில் அந்த அன்னத்தை விட்டுப் பிறகு ஸ்நானம் செய்ய வேண்டும். அந்த அன்னத்தைப் புஜித்தால் சாந்த்ராயணத்தை அனுஷ்டிக்க வேண்டும். உச்சிஷ்டான்னத்தை ஸ்பர்சித்த விஷயத்தில், அத்ரி:- தான் அசுத்தஞயிருந்து அசுத்தமான (பிறனின்) அன்னத்தை ஸ்பர்சித்தால் உபவாஸத்தால் சுத்தஞவான். புஜித்தால் க்ருச்ரத்தால் சுத்தஞவான்.

श्राद्धे अन्योन्यस्पर्शने कर्तव्यमाह शङ्खः — श्राद्धपङ्क्तौ तु भुञ्जानो ब्राह्मणो ब्राह्मणं स्पृशेत्। तदन्नमत्यजन् भुक्त्वा गायत्र्यष्टशतं जपेत् इति। उच्छिष्टस्पर्शेऽप्याह — उच्छिष्टलेपनस्पर्शे प्रक्षाल्यान्येन वारिणा। भोजनान्ते नरः स्नात्वा गायत्रीं त्रिशतं जपेत् इति॥ पात्रयोरन्योन्यस्पर्शेऽप्याह — उच्छिष्टोच्छिष्टसंस्पर्शे स्पृष्टपात्रं विसृज्य च। सर्वान्नं पूर्ववद्दत्वा भोजयेत् तु द्विजोत्तमः इति। संवर्तः— कृते मूत्रे पुरीषे वा भुक्तोच्छिष्टे तथैव च। श्वादिस्पृष्टो जपेद्देव्याः सहस्रं स्नानपूर्वकम्॥ चण्डालाद्यैस्तु संस्पृष्ट उच्छिष्टस्तु द्विजोत्तमः। गोमूत्रयावकाहारः षड्रात्रेण विशुध्यति इति।

ச்ராத்தத்தில் ஒருவர்க்கொருவர் ஸ்பர்சித்தால் செய்ய வேண்டியதைச் சொல்லுகிறார் சங்கர்:- ச்ராத்த பங்க்தியில் புஜிக்கும் ப்ராம்ஹணன், புஜிக்கும் மற்றொருவனை

ஸ்பர்சித்தால், அந்த அன்னத்தை விடவேண்டும். விடாமல் புஜித்தால் 108-முறை காயத்ரியை ஜபிக்க வேண்டும். உச்சிஷ்டத்தைத் தொடும் விஷயத்தில், சங்கரேः- உச்சிஷ்டத்தின் பற்ருல் ஸ்பர்சம் ஏற்பட்டால், வேறு ஜலத்தால் அலம்பி, போஜனத்தின் முடிவில் ஸ்நானம் செய்து, 300- முறை காயத்ரியை ஜபிக்க வேண்டும். போஜன பாத்ரங்களுக்குப் பரஸ்பரம் ஸ்பர்சமேற்பட்டால், சங்கரேः- உச்சிஷ்ட பாத்ரங்களுக்குப் பரஸ்பரம் ஸ்பர்சமேற்பட்டால் பாத்ரத்தைப் பரிஹரித்து, ஸகல அன்னத்தையும் முன்போல் பரிமாறிப் புஜிப்பிக்க வேண்டும். ஸம்வர்த்தர்:- மூத்ர விஸர்ஜனம் செய்து, அல்லது மலவிஸர்ஜனம் செய்து, அல்லது போஜனம் செய்து உச்சிஷ்டஞயிருப்பவன் நாய் முதலியதால் ஸ்பர்சிக்கப்பட்டால் ஸ்நானம் செய்து 1000-முறை காயத்ரியை ஜபிக்க வேண்டும். உச்சிஷ்டஞன ப்ராம்ஹணன், சண்டாளன் முதலியவரால் ஸ்பர்சிக்கப்பட்டால், ஆறுநாள் கோமூத்ர யாவகத்தை ஆஹாரம் செய்தால் சுத்தஞகிருன்.

व्यासोऽपि -उच्छिष्टोऽङ्गिरनाचान्तश्चण्डालादीन् स्पृशेद्द्विजः । प्रमादाद्वै जपेत् स्नात्वा गात्र्यष्टसहस्रकम् ।। चण्डालपतितादींस्तु कामाद्यः संस्पृशेद् द्विजः । उच्छिष्टस्तत्र कुर्वीत प्राजापत्यं विशुद्धये इति, अशुद्धान् स्वयमेवैतानशुद्धस्तु यदि स्पृशेत्। विशुध्यत्युपवासेन तथा कृच्छ्रेण वा पुनः इति च। मनुः – पुच्छे बिडालकं स्पृष्ट्वा स्नात्वा विप्रो विशुध्यति । भोजने कर्मकाले च विधिरेष उदाहृतः इति ।। इतराङ्गस्पर्शे त्वाचमनमेव। मार्जारमूषिकस्पर्शे कर्म कुर्वन्नुपस्पृशेत् इति बृहस्पतिस्मरणात्।

வ்யாஸரும்:- உச்சிஷ்டஞன ப்ராம்ஹணன் ஆசமனம் செய்யாமல் சண்டாளன் முதலியவரை ஸ்பர்சித்தால் கவனமில்லாவிடில், ஸ்நானம் செய்து 1008- முறை

காயத்ரியை ஜபிக்க வேண்டும். க்ஞானபூர்வமாய் ஸ்பர்சித்தவன் சுத்திக்காக ப்ராஜாபத்ய க்ருச்ரத்தை அனுஷ்டிக்க வேண்டும். அசுத்தர்களான அவர்களைத் தானும் அசுத்தனுயிருந்து ஸ்பர்சித்தால், உபவாஸத்தாலாவது, அல்லது க்ருச்ரத்தாலாவது சுத்தனுகிறான். மனு:- பூனையை வாலில் தொட்டால் ஸ்நானம் செய்வதால் ப்ராம்ஹணன் சுத்தனுகிறான். இந்த விதி, போஜன காலத்திலும், கர்மகாலத்திலும் சொல்லப்பட்டுள்ளது. வாலைத் தவிர்த்த மற்ற அங்கத்தில் தொட்டால் ஆசமனம் மட்டில். 'கர்மகாலத்தில் பூனை, எலி இவைகளை ஸ்பர்சித்தால் ஆசமனம் செய்ய வேண்டும்' என்று ப்ருஹஸ்பதி ஸ்ம்ருதி இருப்பதால்.

वृद्धमनुः — न पिबेन्न च भुञ्जीत द्विजः सव्येन पाणिना। नैकहस्तेन च जलं शूद्रेणावर्जितं पिबेत्॥ पिबतो यत्पतेत्तोयं भाजने मुखनिःसृतम्। अभोज्यं तद्भवेदन्नं भोक्ता भुञ्जीत किल्बिषम्॥ पीत्वाऽवशेषितं तोयं ब्राह्मणो न पुनः पिबेत्। पिबेद्यदि हि तन्मोहात् द्विजश्चान्द्रायणं चरेत् इति॥ शातातपः – उद्धृत्य वामहस्तेन यत्तोयं पिबति द्विजः। सुरापानेन तत्तुल्यं मनुराह प्रजापतिः इति॥ पराशरः – अर्धभुक्ते तु यो विप्रस्तस्मिन् पात्रे जलं पिबेत्। हतं दैवं च पित्र्यं च आत्मानं चोपघातयेत्॥ पिबतः पतितं तोयं भाजने मुखनिः सृतम्। अभोज्यं तद्विजानीयात् भुक्त्वा चान्द्रायणं चरेत् इति।

வ்ருத்தமனு:- ப்ராம்ஹணன் இடது கையினுல் குடிக்கக் கூடாது. புஜிக்கவும் கூடாது. ஒரு கையினுல் விடப்பட்ட ஜலத்தையும், சூத்ரனுல் விடப்பட்ட ஜலத்தையும் பருகக் கூடாது. ஜலத்தைப் பருகும் போது வாயினின்றும் ஜலம் போஜன பாத்ரத்தில் விழுந்தால் அந்த அன்னம் அபோஜ்யமாகும். புஜிப்பவன் பாபத்தைப் புஜிப்பவனுவான். ஜலத்தைக் குடித்துப் பாத்ரத்தில் மீந்த ஜலத்தை மறுபடி குடிக்கக் கூடாது. அறியாமல் அதைக் குடித்தால், ப்ராம்ஹணன் சாந்த்ராயணத்தை அனுஷ்டிக்க

வேண்டும். சாதாதபர்:- இடதுகையால் எடுத்து ஜலத்தைக் குடித்தாலுகில் அது ஸுராபானஸமம் என்று. மனுவும், ப்ரஜாபதியும் சொன்னர். பராசரர்:- எந்த ப்ராம்ஹணன் பாதி புஜித்த பிறகு அந்தப் பாத்ரத்தில் ஜலத்தைப் பருகுகின்றுலே, அவனின் தைவகார்யமும், பித்ருகார்யமும் கெடுக்கப்பட்டதாகின்றன. அவன் தன்னையும் கெடுத்துக் கொள்ளுகிறுன். ஜலத்தைப் பருகுகிறவனின் முகத்திலிருந்து ஜலம் போஜன பாத்ரத்தில் விழுந்தால் அந்த அன்னம் புஜிக்கத்தகாததாகும். புஜித்தால் சாந்த்ராயணத்தை அனுஷ்டிக்க வேண்டும்.

शङ्खः—पीतावशेषितं पीत्वा पानीयं ब्राह्मणः क्वचित्। त्रिरात्रं तु व्रतं कुर्याद्वामहस्तेन वा पुनः। व्यासः - हस्ते च विद्यमाने तु ब्राह्मणो ज्ञानदुर्बलः। तोयं पिबति वक्त्रेण श्वानयोनिं व्रजेत्यधः इति॥ अत्रिः – आस्येन न पिबेत्तोयं तिष्ठन्नाञ्जलिना पिबेत्। वामहस्तेन शय्यायां तथैवान्यकरेण वा॥ तोयं पाणिनखस्पृष्टं ब्राह्मणो न पिबेत् क्वचित्। सुरापानेन तत्तुल्यं मनुः स्वायम्भुवोऽब्रवीत्॥ वामहस्तेन यो भुङ्क्ते योऽपः पिबति वा द्विजः। सुरापानेन तुल्यं स्यादित्येवं मनुरब्रवीत्। भुञ्जानो दक्षिणं बाहुं न संयुञ्ज्यात्। कदाचन उद्धृत्य वामहस्तेन तृषार्तः सलिलं पिबेत्। वामेनैव पिबेत्तोयं भोजने पात्रमत्यजन्। त्यजन् पिबेत्तु रुधिरमत्यजन्नमृतं पिबेत् इति।

சங்கர்:- ப்ராம்ஹணன், குடித்து மீந்த ஜலத்தைப் பருகினுலும், இடது கையினுல் பருகினுலும், மூன்றுநாள் வ்ரதத்தை அனுஷ்டிக்க வேண்டும். வ்யாஸர்:- ப்ராம்ஹணன் அறிவில்லாமல், கையிருக்கும் போது வாயினுல் ஜலத்தைப் பருகினுல் நாயின் பிறப்பை அடைவான். அத்ரி:- வாயினுல் ஜலத்தைப் பருகக் கூடாது. நின்று கொண்டும், அஞ்ஜலியினுலும், இடதுகையினுலும், படுக்கையிலும், பிறர் கையினுலும்

பருகக் கூடாது. கையினுலும், நகத்தினுலும் தொடப்பட்ட ஜலத்தை ஒருகாலும் பருகக் கூடாது. அது ஸுராபானத்திற்குச் சமமென்று ஸ்வாயம்புவ மனு சொன்னார். எவன் இடது கையினுல் புஜிக்கின்றானே, அல்லது ஜலத்தைப் பருகுகின்றானே, அது ஸுராபானத்திற்குச் சமமென்று மனு சொன்னார். சாப்பிடுகிறவன் வலது கையைச் சேர்க்கக் கூடாது. தாகமுள்ளவனுனுல் இடது கையால் எடுத்து ஜலத்தைக் குடிக்க வேண்டும். போஜன காலத்தில், வலதுகையினுல் போஜன பாத்ரத்தை விடாமல் பிடித்துக் கொண்டு, இடது கையினுலேயே ஜலத்தைப் பருகவேண்டும். போஜன பாத்ரத்தை விட்டுவிட்டு ஜலத்தைப் பருகுகின்றவன் ரக்தபானம் செய்பவனுவான். விடாமற் பருகுகின்றவன் அம்ருதபானம் செய்பவனுவான்.

यमः— न हस्तेन पिबेत्तोयं भुक्तौ तु द्विजसत्तमः । अन्येन कांस्यपात्रेण पिबेदन्यैश्च साधनैः इति ।। हस्तेन - दक्षिणेन । भुक्तिग्रहणात् अन्यत्र पाणिना पाने न दोषः । अञ्जलिना तन्निषेधात्।। तथा च याज्ञवल्क्यः — जलं पिबेन्नाञ्जलिना शयानं न प्रबोधयेत्। नाक्षैः क्रीडेन्न धर्मघ्नैर्व्याधितैर्वा न संविशेत् इति ।। शाण्डिल्योऽपि – पिबेद्भोजनपात्रेण पाणिना वा न भोजने । प्रभूतं न पिबेत्तोयं नापिबन्नशनं चरेत्।। पीत्वाऽवशिष्टं चषके पुनस्तन्न पिबेत् जलम् इति।

யமன்:- போஜன காலத்தில், ப்ராம்ஹணன் வலதுகையினுல் ஜலத்தைப் பருகக் கூடாது. இடது கையினுல் வெண்கலப்பாத்ரம் அல்லது வேறு ஸாதனங்களால் குடிக்க வேண்டும். இங்கு 'போஜன காலத்தில்' என்றிருப்பதால், மற்றக் காலத்தில் கையினுல் பானம் செய்வதில் தோஷமில்லை. அஞ்ஜலியினுல் குடிப்பதை நிஷேதிப்பதால். அவ்விதமே, யாக்ஞவல்க்யர்:- அஞ்சலியினுல் ஜலத்தைக் குடிக்கக் கூடாது. தூங்குகின்றவனை எழுப்பக் கூடாது. சூதாடக்

கூடாது. தர்மத்தைக் கெடுக்கும் வ்யாபாரங்களால் விளையாடக் கூடாது. வ்யாதியுள்ளவர்களுடன் சேர்ந்து படுக்கக் கூடாது. சாண்டில்யரும்:- போஜனகாலத்தில், போஜன பாத்ரத்தாலாவது, கையினாலாவது பருகக் கூடாது. அதிகமாய் ஜலத்தைப் பருகக் கூடாது. ஜலத்தைப் பருகாமலே புஜிக்கவும் கூடாது. பானபாத்ரத்தில் குடித்து மீந்த ஜலத்தை மறுபடி குடிக்கக் கூடாது.

व्यासः—पानीयानि पिबेद्येन तत्पात्रं द्विजसत्तम। अनुच्छिष्टं भवेत्तावद्यावद्भूमौ न निक्षिपेत्॥ पात्रशिष्टं तु यत्तोयं पाने पादावनेजने। भूमौ तदम्बु निःस्राव्य शिष्टं तत् पानमर्हति इति॥ बृहस्पतिः – पर्णपृष्ठे न भुञ्जीया द्रात्रौ दीपं विना तथा इति॥ कात्यायनः – नृणां भोजनकाले तु यदा दीपो विनश्यति। पाणिभ्यां पात्रमादाय भास्करं मनसा स्मरेत्॥ पुनश्च दीपितं कृत्वा तच्छेषं भोजयेन्नरः। पुनरन्नं न भोक्तव्यं भुक्त्वा पापैर्विलिप्यते इति।

வ்யாஸர்:- ஓ ப்ராம்ஹணோத்தம! எந்தப் பாத்ரத்தால் ஜலத்தைப் பருகுகின்றனை, அந்தப் பாத்ரம், பூமியில் வைக்காத வரையில் உச்சிஷ்டமல்லாததாகும். பூமியில் வைக்கப்பட்டால் அது உச்சிஷ்டமாகும். பானத்திலோ, காலலம்புவதிலோ, பாத்ரத்தில் மீதியுள்ள ஜலத்தைப் (பருகவேண்டுமானால்) பூமியில் கொஞ்சம் விட்டு விட்டால், மீதியுள்ளது பானத்திற்கு அர்ஹமாகும். ப்ருஹஸ்பதி:- இலையின் பின்புறத்திலும், இரவில் தீபமில்லாமலும் புஜிக்கக் கூடாது. காத்யாயனர்:- மனிதர் புஜிக்கும்பொழுது தீபம் அணைந்து விட்டால், புஜிப்பவன் கைகளால் போஜன பாத்ரத்தை எடுத்துக் கொண்டு ஸூர்யனை மனதால் த்யானிக்க வேண்டும். மறுபடி தீபத்தை ப்ரகாசப்படுத்தி, மீதியுள்ளதைப் புஜிக்க வேண்டும். மறுபடி வேறு அன்னத்தை க்ரஹிக்கக் கூடாது. க்ரஹித்துப் புஜித்தால் பாபங்களுடன் சேருவான்.

शातातपः – हस्तदत्तानि चान्नानि प्रत्यक्षलवणं तथा। मृत्तिका भक्षणं चैव गोमांसाभ्यशनं स्मृतम्॥ लवणं व्यञ्जनं चैव घृतं तैलं तथैव च। लेह्यं पेयं च विविधं हस्तदत्तं न भक्षयेत् इति॥ यमः – हस्तदत्ता तु या भिक्षा लवणव्यञ्जनानि च। भोक्ता ह्यशुचितां याति दाता स्वर्गं न गच्छति॥ हस्तदत्तास्तु ये स्नेहा लवणव्यञ्जनानि च। दातारं नोपतिष्ठन्ति भोक्ता भुञ्जीत किल्बिषम् इति॥ अत्रिः – घृतं वा यदि वा तैलं ब्राह्मण्या नखनिःसृतम्। अभोज्यं तद्द्विजातीनां भुक्त्वा चान्द्रायणं चरेत्॥ यत्त्यक्तं भुवि तच्चान्नं भुक्त्वा चान्द्रायणं चरेत् इति।

சாதாதபர்:- கையால் கொடுக்கப்பட்ட அன்னங்களும், நேராய்க் கொடுக்கப்பட்ட உப்பும், மண்ணைப் பக்ஷிப்பதும் கோமாம்ஸ பக்ஷணமெனச் சொல்லப்பட்டுள்ளது. லவணம், வ்யஞ்ஜனம், நெய், எண்ணெய், பலவிதமான லேஹ்யம், பேயம் இவைகள் கையினால் கொடுக்கப்பட்டால் அவைகளைப் பக்ஷிக்கக் கூடாது. யமன்:- கையால் கொடுக்கப்பட்ட பிக்ஷான்னம், லவணம், வ்யஞ்ஜனம் இவைகளைப் புஜிப்பவன் அசுத்தனாகிறான். கொடுத்தவன் ஸ்வர்க்கத்தை அடைவதில்லை. கையால் கொடுக்கப்பட்ட நெய் முதலியவை, உப்பு, வ்யஞ்ஜனங்கள் இவை பரலோகத்தில் கொடுத்தவனை அடைவதில்லை. புஜித்தவனும் பாபத்தைப் புஜிக்கிறான். அத்ரி:- நெய் அல்லது எண்ணெய் இவை ப்ராம்ஹண ஸ்த்ரீயின் கை நகங்களால் தொடப் பட்டிருந்தால் அவை ப்ராம்ஹணருக்குப் புஜிக்கத்தகாதது. புஜித்தால் சாந்த்ராயணத்தை அனுஷ்டிக்க வேண்டும். பூமியில் தள்ளப்பட்ட அன்னத்தைப் புஜித்தாலும் சாந்த்ராயணத்தை அனுஷ்டிக்க வேண்டும்.

मनुः — वीर्यहानिर्यशोहानिः प्रज्ञाहानिस्तथैव च। भवेत्तस्मात्ततो रात्रौ धात्रीं यत्नेन वर्जयेत्॥ धानाः खादेन्न च दिवा दधिसक्तूंस्तथा निशि। सर्वं च तिलसंबन्धं नाद्यादस्तमयं प्रति॥

तिक्तार्द्रकदधिश्राणातिलशाकानि निश्यदन्। त्यज्यते रूपवाक् श्रीभिः पुष्पितस्त्री रताद्यथा इति ।। स्मृत्यन्तरे — आमलक्याः फलं चैव जम्बीरं तिन्त्रिणीफलम्। प्रज्ञाप्रतापलक्ष्मीवान् सदैतद्वर्जयेन्निशि ।। नालिकेरोदकं कांस्ये ताम्रपात्रस्थितं मधु । ताम्रपात्रस्थितं गव्यं मद्यतुल्यं घृतं विना ।। अपि प्रस्थानसमये रात्रौ दधि न भक्षयेत्। मधुपर्कप्रदानं तु वर्जयित्वा विशेषतः इति।

विष्णुपुराणे— भुक्त्वा सम्यग् द्विराचम्य प्राङ्मुखोदङ्मुखोऽपि वा। स्वस्थः प्रशान्तचित्तस्तु कृतासनपरिग्रहः॥ अभीष्टदेवतानां तु कुर्वीत स्मरणं नरः॥ अग्निराप्याययन् धातुं पार्थिवं पवनेरितः। दत्तावकाशो नभसा जरयेदस्तु मे सुखम्॥ अन्नं बलाय मे भूमेरपामग्न्यनिलस्य च। भवत्वेतत् परिणतं ममास्त्वव्याहतं सुखम्॥ प्राणापानसमानानामुदानव्यानयोस्तथा। अन्नं पुष्टिकरं चास्तु ममास्त्वव्याहतं सुखम्॥ आगस्तिरग्निर्बडबानलश्च भुक्तं मयाऽन्नं जरयन्त्वशेषम्। सुखं च मे तत् परिणामसम्भवं यच्छन्त्वरोगं मम चास्तु देहे॥ विष्णुः समस्तेन्द्रियदेहदेही प्रधानभूतो भगवान् यथैकः। सत्येन तेनात्तमशेषमन्नमारोग्यदं मे परिणाममेतु॥ विष्णुरत्ता यथैवान्नं परिणामश्च वै यतः। सत्येन तेन मे भुक्तं जीर्यत्वन्नमिदं तथा। इत्युच्चार्य स्वहस्तेन परिमृज्य तथोदरम्। अनायासप्रदायीनि कुर्यात् कर्माण्यतन्द्रितः॥ सच्छास्त्रादिविनोदेन सन्मार्गादविरोधिना। दिनं नयेत्ततः सन्ध्यामुपतिष्ठेत् समाहितः इति।

விஷ்ணுபுராணத்தில்:- புஜித்து, நன்முய் இருமுறை ஆசமனம் செய்து, கவலையற்ற மனமுடையவனுய் கிழக்கு அல்லது வடக்கு நோக்கியவனுய் ஆஸனத்திலமர்ந்து, இஷ்ட தேவதைகளை ஸ்மரிக்க வேண்டும். அதன் மந்த்ரங்கள் - 'அக்னிராப்யாந்தாதும் + ஜீர்யத்வன்ன-மிதம்ததா' என்பவை. இவைகளின் பொருள் - ''தேஹத்திலுள்ள அக்னி, ப்ருதிவீ ஸம்பந்தமான தாதுவை, வாயுவினல் வ்ருத்தி செய்யப்பட்டு, ஆகாசத்தால் அளிக்கப்பட்ட அவகாசமுடையதாய் புஜிக்கப்பட்ட வஸ்துவை ஜீர்ணமாகச் செய்ய வேண்டும். எனக்கு ஸுகமுண்டாக வேண்டும். நான் புஜித்த இந்த அன்னம் ஜீர்ணமாய், என் தேஹத்திலுள்ள பூமி, ஜலம், அக்னி, காற்று இவைகளுக்குப் பலத்தின் பொருட்டு ஆகவேண்டும். எனக்குத் தடையற்ற ஸுகமுண்டாக வேண்டும். ப்ராணன், அபானன், ஸமானன், உதானன், வ்யானன் என்ற இவர்களுக்கு, அன்னம் புஷ்டியைச் செய்வதாய் ஆகவேண்டும். எனக்குத் தடையற்ற ஸுகமுண்டாக வேண்டும். அகஸ்த்யரின் அக்னியும், படபாக்னியும் நான் புஜித்த அன்னம் முழுவதையும் ஜீர்ணமாக்க வேண்டும். அன்னத்தின் பரிணுமத்தால் உண்டாகும் ஸுகத்தையும் எனக்குக் கொடுக்க வேண்டும். என் தேஹத்தில் ஆரோக்யமுமிருக்க வேண்டும். எல்லா இந்த்ரியங்களுக்கும், தேஹங்களுக்கும் அந்தர்யாமியாயும், ப்ரதானனுயும், பகவானுயும், ஒருவனுயும் உள்ளவன் விஷ்ணு என்பது எப்படி ஸத்யமோ, அந்த ஸத்யத்தால், என்னல் புஜிக்கப்பட்ட அன்னம் முழுவதும் ஆரோக்யத்தைக் கொடுப்பதாய், பரிணுமத்தை அடையவேண்டும். அன்னத்தைப் புஜிப்பவர் விஷ்ணுவே. பரிணுமமும் அவரிடமிருந்தே உண்டாகிறது. இந்த ஸத்யத்தால் என்னல் புஜிக்கப்பட்ட இந்த அன்னம் ஜீர்ணமாக வேண்டும்'' என்பது. இவ்விதம் படித்து, தன் கையினல் வயிற்றைத் தடவி, சோம்பலற்றவனுய், ச்ரமத்தைக்

கொடுக்காத கார்யங்களைச் செய்ய வேண்டும். ஸாது மார்க்கத்திற்கு விரோதமல்லாத நல்ல சாஸ்த்ரம் முதலியதைப் படிக்கும் விநோதத்தால் பகலைப் போக்க வேண்டும். பிறகு கவனமாய் ஸாயம் ஸந்த்யையை உபாஸிக்க வேண்டும்.

बाहटः—भुक्त्वोपविशतस्तुन्दमोजो भवति तिष्ठतः। आयुश्च क्रामतो मृत्युः धावतः स्वपतो वपुः ।। भुक्त्वा राजवदासीत गत्वा शतपदं शनैः इति ।। व्यासः – भुक्त्वा वै सुखमास्थाय तदन्नं परिणामयेत्।। इतिहासपुराणाभ्यां वेदार्थानुपबृंहयेत् इति।। विष्णुः – भुक्त्वोपविष्टो विश्रान्तो ब्रह्म किञ्चिद्विचारयेत् इति ।। दक्षः - इतिहासपुराणाभ्यां षष्ठसप्तमकौ नयेत्।। अष्टमे लोकयात्रा तु बहिः सन्ध्या ततः परम् इति।

பாஹடர்:- புஜித்த பிறகு உட்கார்ந்திருப்பவனுக்கு வயிறு பெரிதாகும். நிற்பவனுக்கு ஓஜஸ் உண்டாகும். நடப்பவனுக்கு ஆயுஸ்வளரும். ஓடுகிறவனுக்கு ம்ருத்யு உண்டாகும். தூங்குகிறவனுக்குச் சரீரம் பருக்கும். புஜித்த பிறகு, மெதுவாய் நூறடி சென்று அரசன் போல் உட்கார்ந்திருக்க வேண்டும். வ்யாஸர்:- புஜித்த பிறகு ஸுகமாய் உட்கார்ந்து கொண்டு, புஜித்த அன்னத்தை ஜரிக்கச் செய்ய வேண்டும். இதிஹாஸம், புராணம் இவைகளுடன் சேர்த்து வேதத்தின் பொருள்களை விசாரிக்க வேண்டும். விஷ்ணு:- புஜித்து உட்கார்ந்தவனுய் ச்ரமத்தைப் பரிஹரித்தவனுய், வேதத்தைக் (அர்த்தத்தை) கொஞ்சம் விசாரிக்க வேண்டும். தக்ஷர்:- பகலின் ஆறுவது, ஏழாவது பாகங்களை இதிஹாஸ புராணங்களால் கடத்த வேண்டும். எட்டாவது பாகத்தில் லோக யாத்ரை (குடும்பத்திற்குரிய கார்யம்) செய்யப்பட வேண்டும். அதன் பிறகு வெளியில் ஸந்த்யோபாஸனம் செய்யப்பட வேண்டும்.

मार्कण्डेयः – भूयोऽप्याचम्य कर्तव्यं ताम्बूलस्य च भक्षणम्। श्रवणं चेतिहासस्य ततः कुर्यात् समाहितः इति ।। याज्ञवल्क्यः- अतिथिं श्रोत्रियं तृप्तमासीमान्तमनुव्रजेत् । अहः शेषं समासीत शिष्टैरिष्टैश्च बन्धुभिः इति ।। शङ्खः – विचार्य च पुराणार्थान् वेदार्थान् भक्तिमास्थितः । विष्णुं सदा हृदि ध्यायेत् सकलं निष्कलं तु वा इति ।। लिखितः – भुक्त्वोपस्थाय मार्तण्डं पुराणानि सदा पठेत्। भावशुद्ध्या हरौ भक्तिः पुराणश्रवणाद्भवेत् इति ।। अत्रिः– दिवा स्वापं न कुर्वीत गच्छेन्नैव दिवा स्त्रियम्। आयुःक्षयकरी निद्रा दिवा स्त्री पुण्यनाशिनी ।। इतिहास पुराणानि धर्मशास्त्राणि चाभ्यसेत्। वृथा विविधवाक्यानि परिवादांश्च वर्जयेत् इति ।

மார்க்கண்டேயர்:- மறுபடி ஆசமனம் செய்து தாம்பூல சர்வணத்தைச் செய்ய வேண்டும். பிறகு, கவன முடையவனுய் இதிஹாஸங்களைக் கேட்க வேண்டும். யாக்ஞவல்க்யர்:- ச்ரோத்ரியனும், போஜனம் முதலியதால் த்ருப்தி அடைந்தவனுமான அதிதியை வீட்டின் எல்லை வரையில் பின் சென்று அனுப்ப வேண்டும். பிறகு மீதியுள்ள பகலில், இதிஹாஸ புராணுதிகளை அறிந்த சிஷ்டர்களுடனும், காவ்யகதைகளை அறிந்த சிஷ்டர்க ளுடனும், அனுகூலமாய்ப் பேசும் பந்துக்களுடனும் சேர்ந்து உட்கார்ந்திருக்க வேண்டும். சங்கர்:- புராணுர்த்தங்களையும், வேதார்த்தங்களையும் விசாரித்து, பக்தியுடையவனுய், ஸகுணனுகவாவது, நிர்குண னுகவாவது விஷ்ணுவை மனதில் நித்யமும் த்யானிக்க வேண்டும். லிகிதர்:- புஜித்து, ஸுர்யோபஸ்தானம் செய்து, புராணங்களை, ப்ரதிதினமும் படிக்க வேண்டும். புராணங்களைக் கேட்பதால், மனச்சுத்தியுடன் விஷ்ணுவினிடம் பக்தி உண்டாகும். அத்ரி:- பகலில் நித்ரையைச் செய்யக் கூடாது. பகலில் ஸ்த்ரீயைச் சேரக்கூடாது. பகலில் செய்யப்படும் நித்ரை ஆயுளைக் குறைக்கும். பகலில் செய்யப்படும் ஸ்த்ரீஸங்கம்

புண்யத்தையகற்றும். இதிஹாஸங்கள், புராணங்கள், தர்மசாஸ்த்ரங்களிவைகளையும் அப்யஸிக்க வேண்டும். வீணாகிய பலவித வார்த்தைகளையும், பிறரின் நிந்தைகளையும் விலக்க வேண்டும்.

अखण्डादर्शे— भुक्त्वा तु सुखमासीनस्ताम्बूलेनास्यशोधनम्। शुण्ठ्यामलकधातूनामेकेनाथ विशोधनम्॥ सुपूगं च सुपत्रं च चूर्णेन च समन्वितम्। प्रदद्याद्विजदेवेभ्यस्ताम्बूलं चर्वयेद्बुधः॥ एकपूगं सुखारोग्यं द्विपूगं निष्फलं भवेत्। अतिश्रेष्ठं त्रिपूगं तु अधिकं नैव दुष्यति। पर्णमूले भवेद्व्याधिः पर्णाग्रे पापसम्भवः। चूर्णपर्णं हरत्यायुः सिरा बुद्धिविनाशिनी॥ तस्मादग्रं च मूलं च सिरां चैव विशेषतः। चूर्णपर्णं वर्जयित्वा ताम्बूलं खादयेन्नरः॥ अखण्डितं च क्रमुकं पर्णमक्षालितं तथा। अशोधितं तथा चूर्णं भक्षयन् सर्वदोषभाक्॥ अनिधाय मुखे पर्णं पूगं खादति यो नरः। सप्तजन्मदरिद्रः स्यान्नरकेषु निमज्जति॥ चूर्णमन्तर्न कुर्वीत न बहिश्चावकुञ्चनम्॥ प्रातः काले फलाधिक्यं चूर्णं मध्यन्दिनेऽधिकम्। सायं पर्णस्य चाधिक्यं त्रिधा ताम्बूलभक्षणम् इति।

அகண்டாதர்சத்தில்:- புஜித்த பிறகு, ஸுகமாய் உட்கார்ந்தவனுய், தாம்பூலத்தினுல் முகத்தைச் சுத்தி செய்து கொள்ள வேண்டும். சுக்கு, நெல்லிக்கனி, தாது (சுண்ணும்பு) இவைகளுள் ஒன்றினுல் வாயைச் சோதிக்க வேண்டும். நல்ல பாக்கு, நல்ல இலை, சுண்ணும்பு இவைகளுடன் கூடிய தாம்பூலத்தை ப்ராம்ஹணர் களுக்குக் கொடுக்க வேண்டும். தானும் பக்ஷிக்க வேண்டும். ஒரு பாக்குடன் கூடிய தாம்பூலம் ஸுகத்தையும், ஆரோக்யத்தையும் செய்வதாகும். இரண்டு பாக்குடையது பலனற்றதாகும். மூன்று பாக்குடையது மிகச்சிறந்ததாகும். மூன்றுக்கு மேல் உள்ளது தோஷமுள்ளதாகாது. வெற்றிலையின் அடியில் (அதைப் பக்ஷித்தால்) வ்யாதி உண்டாகும். இலையின்

நுனியில் பாபமுண்டாகும். சுண்ணும்பு வைத்திருந்த இலை, ஆயுளை அபஹரிக்கும், இலையின் நரம்பு புத்தியை நாசப்படுத்துவதாகும். ஆகையால் அடி, நுனி, நரம்பு, சுண்ணும்பு வைத்திருந்த வெற்றிலை இவைகளைத் தள்ளித் தாம்பூலத்தைப் பக்ஷிக்க வேண்டும். உடைக்காத பாக்கையும், அலம்பாத வெற்றிலையையும், சோதிக்காத சுண்ணும்பையும் பக்ஷிப்பவன் ஸகல தோஷங்களையும் அடைவான். வாயில் இலையைப் போட்டுக் கொள்ளாமல் பாக்கை எந்த மனிதன் பக்ஷிக்கின்றானோ, அவன் ஏழு ஜன்மங்களில் தரித்ரனாவான். நரகங்களிலும் முழுகுவான். சுண்ணும்பை வெற்றிலையின் உட்புறத்தில் தடவக்கூடாது. வெளிப்புறமாய் மடிக்கக் கூடாது. காலையில் பாக்கை அதிகமாகவும், மத்யாஹ்னத்தில் சுண்ணும்பை அதிகமாகவும் மாலையில் வெற்றிலையை அதிகமாகவும் உபயோகித்து, மூன்று விதமாய்த் தாம்பூலத்தைப் பக்ஷிக்க வேண்டும்.

बाहटः— ताम्बूलं कटुतिक्तमुष्णमधुरं क्षारं कषायान्वितं वातघ्नं कृमिनाशनं कफहरं कायाग्निसन्दीपनम् । स्त्रीसंभाषणभूषणं रुचिकरं शोकस्यविच्छेदनं ताम्बूलस्य तु ये त्रयोदश गुणाः स्वर्गेऽपि ते दुर्लभाः ॥ प्रत्युषसि भुक्तसमये वरयुवतीनां च सङ्गमेऽभिमते । राजसु विद्वन्मध्ये ताम्बूलं यो न खादयेत् स पशुः ॥ दन्तावलीदुर्बलताक्षिरोगौ जडत्वमङ्गे नयनादिकेषु । बलक्षयं वक्त्रगतं करोति ताम्बूल-मत्यन्तनिषेवणेन ॥ आयुः प्रज्ञा बलं बुद्धी रेतः शक्तिर्विनश्यति । जिह्वा रसं न गृह्णाति सदा ताम्बूलचर्वणात् इति ।

பாஹடர்:- தாம்பூலமானது, காரமாயும், துவர்ப்பாயும், உஷ்ணமாயும், மதுரமாயும், உறைப்பாயும், கஷாயமாயும், வாதத்தை அகற்றுவதாயும், புழுவைக் கொல்வதாயும், கபத்தை ஹரிப்பதாயும், தேஹத்திலுள்ள அக்னியை ஜ்வலிக்கச் செய்வதாயும், ஸ்த்ரீகளுடன் பேசுவதில் அலங்காரமாயும், ருசியைச் செய்வதாயும்,

சோகத்தைப் போக்குவதாயுமுள்ளது. இவ்விதம் தாம்பூலத்திற்குள் பதின்மூன்று குணங்கள் எவையோ அவை ஸ்வர்க்கத்திலும் துர்லபங்களாம். விடியற் காலத்திலும், போஜனகாலத்திலும், சிறந்த ஸ்த்ரீகளைச் சேருங்காலத்திலும், அரசர்களிடத்திலும், வித்வான்களின் நடுவிலும், எவன் தாம்பூலத்தைப் பக்ஷிப்பதில்லையோ அவன் பசு ஆவான். தாம்பூலம் அதிகமாய் ஸேவிக்கப் பட்டால் பல்வரிசைக்குப் பலமின்மையையும், கண் ரோகத்தையும், தேஹத்திலும், கண் முதலியவைகளிலும், ஜாட்யத்தையும், வாயில் பலக்குறைவையும் செய்கின்றது. எப்பொழுதும் தாம்பூல சர்வணம் செய்வதால், ஆயுஸ், பரக்ஞை, பலம், புத்தி, ரேதஸ்ஸின் சக்தி இவைகள் நசிக்கின்றன. நாக்கு ரஸத்தை அறிவதில்லை

व्यासः—सूर्येऽस्तशिखरं प्राप्ते पादशौचक्रियान्वितः। बहिः सन्ध्यामुपासीत कुशपाणिः समाहितः॥ अनृतं मद्यगन्धं च दिवा मैथुनमेव च। पुनाति वृषलस्यान्नं बहिः सन्ध्या ह्युपासिता॥ आचम्य सन्ध्यां सङ्कल्प्य मार्जयित्वा च पूर्ववत्। अग्निञ्च मेत्यपः पीत्वा गृह्योक्तैश्चैव मार्जयेत्॥ गायत्र्याऽपस्त्रिरुत्क्षिप्य प्रदक्षिणमथाचरेत्। सन्ध्यां ध्यात्वोपविष्टस्तु वाग्यतः सुसमाहितः॥ प्रणवव्याहृतियुतां गायत्रीं पूर्ववज्जपेत्। कृत्वा स्वशाखाविहितमादित्यमुपतिष्ठते॥ वारुणीभिरुपस्थाय दिशश्चैवोप तिष्ठते इति।

வ்யாஸர்:- ஸூர்யன் அஸ்தமலையின் சிகரத்தை அடைந்துள்ளபோது, கால்களைச் சுத்தம் செய்து கொண்டு, குசங்களைக் கையிலுடையவனுய், கவனமுடையவனுய் வெளியில் ஸந்த்யோ பாஸனம் செய்ய வேண்டும். பொய் சொல்லுதல், மத்யத்தின் கந்தத்தை க்ரஹித்தல், பகலில் ஸ்த்ரீஸங்கம் செய்தல், சூத்ரான்னத்தைப் புஜித்தல் இவைகளாலுண்டாகும் பாபத்தை, வெளியில் செய்யப்பட்ட ஸாயங்கால ஸந்த்யாவந்தனம், அகற்றும்.

ஆசமனம் செய்து, ஸந்த்யாவந்தனத்தை ஸங்கல்ப்பித்து, காலையில் போல் மார்ஜனம் செய்து கொண்டு, 'அக்னிச்ச' என்பதால் ஜலத்தைப் பருகி, க்ருஹ்யோக்தமான மந்த்ரங்களால் மார்ஜனம் செய்து, காயத்ரியால் மூன்று முறை அர்க்யம் கொடுத்து, ப்ரதக்ஷிணம் செய்ய வேண்டும். ஸந்த்யையை த்யானம் செய்து உட்கார்ந்து, மௌனியாய், ஏகாக்ரனுய், ப்ரணவத்துடனும், வ்யாஹ்ருதிகளுடனும் கூடிய காயத்ரியை முன்போல் ஜபிக்க வேண்டும். தன் சாகையில் விதிக்கப்பட்டபடி செய்து, ஸூர்யனை உபஸ்தானம் செய்ய வேண்டும். வருணனுடையதான ருக்குகளால் உபஸ்தானம் செய்து, திக்குகளையும் உபஸ்தானம் செய்ய வேண்டும்.

याज्ञवल्क्यः—उपास्य पश्चिमां सन्ध्यां हुत्वाऽग्नीं स्तानुपास्य च। भृत्यैः परिवृतो भुक्त्वा नातितृप्याथ संविशेत् इति ॥ स्मृतिरत्ने – हुताग्निर्वन्दितगुरुः कृतातिथ्यश्च शक्तितः । वैश्वदेवं बलिं चापि कृत्वाऽश्नीयाद्यथा दिवा इति ॥ व्यासः – हुत्वाऽग्निं विधिवन्मन्त्रैर्भुक्त्वा यज्ञावशिष्टकम् । सभृत्यबान्धवजनः स्वपेच्छुष्कपदो निशि इति ॥ बोधायनः – मेरुकाञ्चनदानानि वाजपेयशतानि च। कन्याकोटि प्रदानं च न समं सायमाहुतेः इति।

யாக்ஞவல்க்யர்:- ஸாயம் ஸந்த்யையை உபாஸித்து, அக்னிகளில் ஹோமம் செய்து, அவைகளை உபஸ்தானம் செய்து, ப்ருத்யர்களுடன் சேர்ந்து அதிகமாயில்லாமல் புஜித்து, பிறகு படுக்க வேண்டும். ஸ்ம்ருதிரத்னத்தில்:- ஹோமம் செய்து, குருக்களை நமஸ்கரித்து, யதாசக்தி அதிதி பூஜையைச் செய்து, வைச்வ தேவத்தையும், பலிஹரணத்தையும் செய்து, பகலில் போல் புஜிக்க வேண்டும். வ்யாஸர்:- விதிப்படி மந்த்ரங்களால் அக்னியில் ஹோமம் செய்து, வைச்வதேவ சேஷமான அன்னத்தை, ப்ருத்யருடனும் பந்துக்களுடனும் புஜித்து, உலர்ந்த கால்களுடன் இரவில் தூங்க வேண்டும்.

போதாயனர்:- மேருவைப் போன்ற பொன்னின் தானங்களும். நூறு வாஜபேய யாகங்களும், கோடி கன்யாதானங்களும் ஸாயங்காலத்தில் செய்யும் ஹோமத்திற்குச் சமமாகாது.

शाण्डिल्यः—अन्नैः प्रभूतैर्देवेशं विविधैः पृथगर्चयेत् । सन्ध्ययोरुभयोः कुर्यात् पूजां सर्वोपचारकैः । नक्तं कुटुम्बिकोऽश्नीयात् हितं पथ्यं सुतृप्तिमत् । नोत्तराभिमुखः स्वप्यात् पश्चिमाभिमुखो न च ॥ न चाकाशे न नग्नो वा नाशुचिर्नासने क्वचित् । न जीर्णायां तु खट्वायां शून्यागारे न चैव हि इति ।

சாண்டில்யர்:- பலவிதமாயும், அதிகமாயுள்ள அன்னங்களால் ஈச்வரனைப் பூஜிக்க வேண்டும். இரண்டு காலங்களிலும் எல்லா உபசாரங்களுடனும் பூஜையைச் செய்ய வேண்டும். க்ருஹஸ்தன், ராத்ரியில், ஹிதமாயும், பத்யமாயும், த்ருப்தியளிப்பதுமான அன்னத்தைப் புஜிக்க வேண்டும். வடக்கில் தலைவைத்தும், மேற்கில் தலைவைத்தும் தூங்கக் கூடாது. மேல் ஆவரணமில்லாத இடத்திலும், வஸ்த்ரமில்லாதவனும், அசுத்தனும், உட்காருமாஸனத்திலும், பழுதான கட்டிலிலும், பாழான வீட்டிலும் தூங்கக் கூடாது.

विष्णुपुराणे—पुनः पाकमुपादाय सायमप्यवनीपते । वैश्वदेवनिमित्तं वै पत्न्या सार्धं बलिं हरेत् ॥ तत्रापि श्वपचादिभ्य स्तथैवान्नविसर्जनम् । अतिथिं चागतं तत्र स्वशक्त्या पूजयेद्बुधः ॥ पादशौचासनप्रह्वस्वागतोक्त्या च पूजयेत् । ततश्चान्नप्रदानेन शयनेन च पार्थिव ॥ दिवाऽतिथौ तु विमुखे गते यत्पातकं नृप । तदेवाष्टगुणं पुंसां सूर्योढे विमुखे गते ॥ कृतपादादिशौचश्च भुक्त्वा सायन्तनं गृही । गच्छेच्छय्यामस्फुटितामपि दारुमयीं नृप ॥ नाविशालां न वै भग्नां नासमां मलिनां न च । न च जन्तुमयीं शय्यामधितिष्ठेदनास्तृताम् ॥ प्राच्यां दिशि शिरः शस्तं याम्यायामथवा नृप । सदैव स्वपतः पुंसो विपरीतं तु रोगदम् इति ।

விஷ்ணுபுராணத்தில் :- ஓ அரசனே! ஸாயங்காலத்திலும், வைச்வதேவத்திற்காகப் பாகம் செய்து, பத்னியுடன் வைச்தேவம், பலிஹரணம் இவைகளைச் செய்ய வேண்டும். அப்பொழுதும், ச்வபசன் முதலியவர்க்கு, முன்போலவே அன்னத்தைக் கொடுக்க வேண்டும். அக்காலத்தில் வந்த அதிதியையும் யதாசக்தி பூஜிக்க வேண்டும். கால்களை அலம்புவது, ஆஸனத்தைக் கொடுப்பது, வணங்குதல், நல்வரவு கூறுதல் இவைகளால் பூஜிக்க வேண்டும். பிறகு அன்னத்தைக் கொடுப்பதாலும், படுக்கையைக் கொடுப்பதாலும் பூஜிக்க வேண்டும். பகலில் வந்த அதிதி பூஜிக்கப்படாமல் வருந்தியவனுய்ச் சென்றால் எந்தப் பாபமோ அதுவே எட்டு மடங்கு ராத்ரியில் வந்த அதிதி பூஜிக்கப்படாமல் திரும்பிச் சென்றால், அதிகமாகும், கால் முதலியதைச் சுத்தம் செய்து கொண்டு, ஸாயங்காலத்தில் பூஜித்து, க்ருஹஸ்தன் படுக்கையைச் சேரவேண்டும். கட்டையால் செய்யப்பட்ட கட்டில் முதலியதானுல் அது வெடித்திருக்கக் கூடாது. அகலமில்லாததும், ஒடிந்ததும், சரியில்லாததும், அழுக்குடையதும், ஜந்துக்கள் அடைந்துள்ளதும், விரிப்பு இல்லாததுமான கட்டிலில் படுக்கக் கூடாது. ஓ அரசனே! எப்பொழுதும், தூங்குகின்ற மனிதனுக்குக் கிழக்கு அல்லது தெற்கில் தலையை வைத்துப் படுப்பது சிறந்ததாகும். இதற்கு விபரீதமாய்ப் படுப்பது ரோகத்தைக் கொடுப்பதாகும்.

शौनकः—निशायाः प्रथमे यामे जपयज्ञार्चनादिकम् । स्वाध्यायो भोजनं प्रोक्तं वर्जयित्वा महानिशाम्।। पश्चात्तने तथा यामे जपयज्ञार्चनादिकम्। ब्रह्माभ्यासोऽपि तत्रैव वर्जयित्वा तु भोजनम् इति। अनध्याये प्रदोषेषु च सायं गायत्रीजपे सङ्कोचमाचरन्ति शिष्टाः। आहुश्च— चतुर्थ्यां सप्रदोषायां शतार्धं सचतुष्टयम् । सप्तत्रिंशच्च सप्तम्यामष्टाविंशत्त्रयोदशे ।। अष्टाविंशदनध्याये इतरेषु यथोदितम्। शस्ता प्रदोषे दर्शे च गायत्रीदशसङ्ख्यया । अष्टम्यां च चतुर्दश्यां नित्यादर्धं जपेद्बुधः। प्रतिपत्सु तृतीयांशं पर्वण्यल्पतरं जपेत् इति।

சௌனகர்:- ராத்ரியின் முதல் யாமத்தில், ஜபம், யக்ஞம் பூஜை முதலியது, அத்யயனம், போஜனம் இவைகளைச் செய்யலாம் மஹாநிசையில் கூடாது. அவ்விதமே ராத்ரியின் கடைசி யாமத்தில், ஜபம், யாகம், பூஜை முதலியது, வேதாப்யாஸம் இவைகளைச் செய்யலாம். போஜனம் கூடாது. அனத்யாய தினத்திலும், ப்ரதோஷ காலங்களிலும் ஸாயங்காலத்தில் காயத்ரீ ஜபத்தில் சுருக்கத்தை சிஷ்டர்கள் ஆசரிக்கின்றனர். இவ்விதமும் சொல்லுகின்றனர் - ''ப்ரதோஷத்துடன் கூடிய சதுர்த்தியில் 54- முறை காயத்ரீ ஜபம். ஸப்தமியில் 34-முறை. த்ரயோதசியில் 28-முறை. அனத்யாய தினத்தில் 28-முறை. மற்றகாலங்களில் சொல்லியபடி ஜபம். ப்ரதோஷத்திலும், தர்சத்திலும், 10-முறை காயத்ரீ ஜபம். அஷ்டமியிலும், சதுர்தசியிலும் 54-முறை. ப்ரதமைகளில் நித்ய ஜபத்தின் மூன்றிலொருபாகம், அதாவது 36-முறை. பர்வ தினத்தில் மிகக்குறைவாய் ஜபிக்க வேண்டும் என்று.

सङ्ग्रहान्तरे—नित्यादर्धं चतुर्थीविसुमनुतिथिषु स्याज्जपः सप्तमी या सप्तत्रिंशच्च तस्यां प्रतिपदि च पुनः षड्युता त्रिंशदेव। तद्वत् पर्वद्वयेऽपि त्रियुतदशतिथावष्टभिर्विंशतिः स्यादेवं विष्वादि-कालेष्वखिलमतमिदं सायमेवं न कल्ये इति ।। प्रदोषोऽपि दर्शितः – विघ्नार्ककामरात्र्यादौ द्व्येकार्धघटिकाः क्रमात्। रन्ध्रद्वियामोदयात् प्राक् प्रदोषः स्यात् कलादिभिः इति ।। विघ्नश्चतुर्थी। अर्कः सप्तमी। कामस्त्रयोदशी। रन्ध्रो नव। रात्र्यादौ चतुर्थी सप्तमीत्रयोदश्यः क्रमेण द्व्येकार्ध घटिकाः सन्ति चेत् प्रदोषः । तथा रात्र्यादौ तृतीया नवघटिका चेत् प्रदोषः । अधिका चेन्नास्ति । रात्र्यादौ षष्ठीयामद्वयाधिका चेन्न प्रदोषः । द्वादश्यामुदयात् प्राक् कलामात्र त्रयोदशी सत्त्वे प्रदोष इत्यर्थः।

மற்றொரு ஸங்க்ரஹத்தில்:- சதுர்த்தீ, அஷ்டமீ, சதுர்தசீ இந்தத் திதிகளில் நித்ய ஜபத்தில் பாதி ஜபம். அதாவது

54-முறை ஜபம். ஸப்தமியில் 37-முறை. ப்ரதமையில் 36-முறை. இரண்டு பர்வங்களிலும் அவ்விதமே 36-முறை. த்ரயோதசியில் 28-முறை. விஷு முதலிய காலங்களிலு மிவ்விதமே 28-முறை. இவ்விதமனுஷ்டிப்பது எல்லோருக்கும் ஸம்மதமானது. இது ஸாயங்காலத்தில். காலையில் இல்லை. ப்ரதோஷமும் சொல்லப்பட்டுள்ளது:- ராத்ரியின் ஆதியில் சதுர்தசீ இரண்டு நாழிகையும், ஸப்தமீ ஒரு நாழிகையும், த்ரயோதசீ அரைநாழிகையுமிருந்தால் ப்ரதோஷம். அவ்விதமே ராத்ரியின் ஆதியில் த்ருதீயை 9-நாழிகை இருந்தால் ப்ரதோஷம். அதிமாயிருந்தால் ப்ரதோஷமில்லை. ராத்ரியின் ஆதியில் ஷஷ்டி இரண்டு யாமங்களுக்குமேல் இருந்தால் ப்ரதோஷமில்லை. த்வாதசியில் உதயத்திற்கு முன் ஒரு நாழிகை த்ரயோதசீ இருந்தால் ப்ரதோஷம் என்பது மூலச்லோகத்தின் பொருள்.

स्मृत्यन्तरे — षष्ठी च द्वादशी चैव अर्धरात्रोननाडिका। प्रदोषं तु प्रकुर्वीत तृतीया नवनाडिका इति ॥ गायत्रीजपसङ्कोचे मूलस्मृतिर्गवेषणीया ॥ स्मृतिरत्ने — प्रणवव्याहृतीनां च गायत्र्याः शिरसस्तथा । नित्ये नैमित्तिके काम्ये(र्ये)व्रते यज्ञक्रतौ तथा ॥ देवतार्चनमन्त्राणां नानध्यायः स्मृतः सदा इति ॥ धर्मोद्योतेऽपि– सौराणां रौद्रमन्त्राणां पैतृकाणां च नैत्यके । जपहोमादिकार्येषु नानध्यायो न काम्यके इति।

மற்றெருஸ்ம்ருதியில்:- ஷஷ்டியும், த்வாதசியும், அர்த்தராத்ரத்திற்கு ஒரு நாழிகை குறைந்திருந்தால் ப்ரதோஷம். த்ருதீயை ஒன்பது நாழிகை இருந்தால் ப்ரதோஷம் அனுஷ்டிக்க வேண்டும். காயத்ரீ ஜபத்தைச் சுருக்குவதில் ப்ரமாணமான மூலஸ்ம்ருதி தேடக்கூடியதாயுள்ளது. ஸ்ம்ருதிரத்னத்தில்:- ப்ரணவம், வ்யாஹ்ருதிகள், காயத்ரீ, அதன் சிரஸ் இவைகளுக்கும், நித்யம், நைமித்திகம், காம்ய வ்ரதங்கள், யாகங்கள்

இவைகளிலும், தேவதார்ச்சன மந்த்ரங்களுக்கும் எப்பொழுதும் அனத்யாயமில்லை. தர்மோத்யோதத்திலும்:- ஸௌர மந்த்ரங்களுக்கும், ரௌத்ர மநத்ரங்களுக்கும், பைத்ருக மந்த்ரங்களுக்கும், நித்ய கர்மங்களிலும், ஜபஹோமாதி கார்யங்களிலும், காம்ய கார்யங்களிலும் அனத்யாயமில்லை.

स्मृत्यर्थसारे—सायं सन्ध्यामुपास्य होमं वैश्वदेवमातिथ्यं च कृत्वा भृत्यैः परिवृतो लघु भुक्त्वा स्त्रिया सह सुगन्धानुलेपन-माल्यताम्बूलादि सेवमानः स्वपेत्। न सन्ध्यायां शून्यालये श्मशाने एकवृक्षे चतुष्पथे शिवमातृकायक्षयमस्कन्दभैरवाद्युपेतदेवगृहेषु देवकुले च न स्वपेत्। न धान्ये न योगिदेवविप्राग्रे गुरूणां चोपजीविनां नाशुचिरार्द्रवस्त्रपादो न नग्नः स्वपेत्। प्राक्छिरा वा दक्षिणाशिरा वा इष्टदेवतां नत्वा स्वपेत्। वैणवं दण्डं शयनीयसमीपे निधाय प्रक्षालितपादः कृतरक्षः स्वपेत् प्रदोषापरयामौ विद्यया नयेत् इति।

ஸ்ம்ருத்யர்த்தஸாரத்தில்:- ஸாயங்கால ஸந்த்யோபாஸனம் செய்து, ஹோமம், வைச்வதேவம், அதிதிபூஜை இவைகளைச் செய்து, ப்ருத்யர்களுடன் சேர்ந்து லகுவாய் புஜித்து, ஸ்த்ரீயுடன் நல்ல சந்தனம், புஷ்பம், தாம்பூலம் இவைகளைச் சேவித்துத் தூங்க வேண்டும். ஸந்த்யா காலத்திலும், பாழான வீட்டிலும், ச்மசானத்திலும், ஒரு மரத்திலும், நாற்சந்தியிலும், சிவன், மாதாக்கள், யக்ஷன், யமன், ஸ்கந்தன், பைரவன் முதலியவருடன் கூடிய கோவில்களிலும், தேவ க்ருஹத்திலும் தூங்கக் கூடாது. தான்யத்தின் மேலும், யோகி, தேவதை, ப்ராம்ஹணன் இவரின் முன்னிலும், குருக்கள், உபஜீவிகள் முன்னிலும், அசுத்தனுயும், ஈரமுள்ள வஸ்த்ரம், கால் இவைகளுள்ளவனுயும், வஸ்த்ரமில்லாதவனுயும் தூங்கக் கூடாது. கிழக்கிலாவது, தெற்கிலாவது சிரஸ்ஸை வைத்தவனுய், இஷ்ட தேவதையை நமஸ்கரித்துத் தூங்க வேண்டும். மூங்கில் கழியைப் படுக்கையின் ஸமீபத்தில் வைத்துக்

கொண்டு, கால்களை அலம்பியவனுய், ரக்ஷை செய்து கொண்டு தூங்க வேண்டும். ப்ரதோஷ காலத்தையும், ராத்ரியின் கடைசி யாமத்தையும் வித்யையால் போக்க வேண்டும்.

आचारसारे—शुचिं देशं विविक्तं तु गोमयेनोपलेपयेत् । प्रागुदक्प्रवणे चैव संविशेत्तु सदा बुधः ।। प्राक्छिरास्तु स्वपेन्नित्यं तथा वै दक्षिणाशिराः । उदक्छिरा न स्वपेत्तु तथा प्रत्यक्छिरा न च ।। महादेवगृहे वाऽपि मातृवेश्मनि न स्वपेत् । न यक्षनागायतने स्कन्दस्यायतने तथा ।। कूलच्छायासु च तथा शर्करास्थिषु पांसुषु । न स्वपेच्च तथा दर्भे विना दीक्षां कथञ्चन ।। धान्यगोदेवविप्राणां गुरूणां च तथोपरि । न चापि भिन्नशयने नाशुचौ नाशुचिस्तथा ।। नार्द्रवासा न नग्नश्च नोत्तराधरमस्तकः । नाकाशे पर्वते शून्ये न च चैत्यद्रुमे तथा इति । आकाशे - निरावरणप्रदेशे ।

ஆசாரஸாரத்தில்:- சுத்தமாயும், ஏகாந்தமாயுமுள்ள ப்ரதேசத்தைக் கோமயத்தால் மெழுக வேண்டும். எப்பொழுதும், வடகிழக்கில் சாய்வான ப்ரதேசத்தில் படுக்க வேண்டும். நித்யமும், கிழக்கில், அல்லது தெற்கில் தலையை வைத்துத் தூங்க வேண்டும். வடக்கிலும், மேற்கிலும் தலையை வைத்துத் தூங்கக் கூடாது. சிவாலயத்திலும், மாதாக்களின் ஆலயத்திலும் தூங்கக் கூடாது. யக்ஷன். நாகன் இவர்களின் ஆலயம், ஸ்கந்தனின் ஆலயம் இவைகளிலும், கரையிலும், நிழலிலும், சுக்கான், எலும்பு, புழுதி இவைகளிலும் தூங்கக் கூடாது. தீக்ஷையில்லாமல் தர்ப்பத்தின் மேல் எவ்விதத்தாலும் தூங்கக் கூடாது. தான்யம், பசு, தேவதை, ப்ராம்ஹணன் இவர்களின் மேல் ப்ரதேசத்திலும், ஒடிந்த படுக்கையிலும், அசுத்தமான படுக்கையிலும், அசுத்தனுயும், ஈரவஸ்த்ரமுடையவனுயும், வஸ்த்ரமில்லாதவனுயும், வடக்கிலாவது, தாழ்ந்த இடத்திலாவது தலையை

வைத்தவனும், ஆவரணமில்லாத இடத்திலும், மலையிலும், மனிதரில்லாத இடத்திலும், சைத்ய வ்ருக்ஷத்திலும் தூங்கக் கூடாது.

स्मृतिरत्ने – अक्षिरोगी ह्यपस्मारी ज्वरी कुष्ठी क्षयी तथा । श्वासकासीति तैर्युक्तामेकशय्यां तु वर्जयेत् ।। दन्तिदन्तमये विद्युद्दग्धे दग्धे पलाशजे । न शयीत नरो धान्ये शयने पञ्चदारुजे ।। अश्मपीठस्थिते चैव करिभग्नकृते तथा इति ।। पञ्च दारूणि - उदुम्बर वटाश्वत्थ प्लक्ष जम्बूद्रुमाः ।। गार्ग्यः – सुखानुकूले शयने वामपार्श्वे न संविशेत् । आयुर्वामकरे प्रोक्तमुत्तानं बलवर्धनम् । स्वगृहे प्राक्छिराः शेते श्वाशुरे दक्षिणाशिराः । प्रत्यक्छिराः प्रवासे तु न कदाचिदुदक्छिराः इति ।

ஸ்ம்ருதிரத்னத்தில்:- கண்ரோகம், அபஸ்மாரம், ஜ்வரம். குஷ்டம், க்ஷயரோகம். ச்வாஸரோகம், காசரோகம் இவையுள்ளவர்களுடன் சேர்ந்து ஒரு படுக்கையில் படுக்கக் கூடாது. யானையின் தந்தத்தால் செய்யப்பட்டதும், மின்னலால் பொசுங்கியதும், நெருப்பால் பொசுங்கியதும், புரசு மரத்தால் செய்யப்பட்டதுமான கட்டிலில் படுக்கக் கூடாது. தான்யத்தின் மேல் படுக்கக் கூடாது. அத்தி, ஆல், அரசு, இச்சி, நாவல் என்ற ஐந்து வ்ருக்ஷங்களுள் ஒன்றினால் செய்யப்பட்டதும், கருங்கல்லிலமைக்கப்பட்டதும், யானையால் முறிக்கப்பட்ட மரத்தினால் செய்யப் பட்டதுமான கட்டிலில் படுக்கக் கூடாது. கார்க்யர்:- ஸுகமாயும், அனுகூலமாயுமுள்ள படுக்கையில் இடது புறத்தைக் கீழேவைத்துப் படுக்க வேண்டும். இடது கையைக் கீழாகவைத்துப் படுப்பது ஆயுஸ்ஸைக் கொடுக்கும். உயர நோக்கிப் படுப்பது பலத்தை வ்ருத்தி செய்யும். தன் வீட்டில் கிழக்கில் தலையை வைத்துப் படுக்க வேண்டும். மாமனார் வீட்டில் தெற்கில் தலையை வைத்தும், தேசாந்தரத்திலிருக்கும் போது மேற்கில் தலையை வைத்தும் படுக்க வேண்டும். ஒருபொழுதும் வடக்கில் தலையை வைத்துப் படுக்கக் கூடாது.

विष्णुः—सुप्रक्षालितचरणतलो रक्षां कृत्वोदकपूर्णघटादि-मङ्गलोपेतामात्माभिरुचितामनुपहतां सुत्रामाणमिति पठन् शय्यामधिष्ठाय रात्रिसूक्तं जपित्वा विष्णुं नमस्कृत्य अपसर्प सर्प भद्रन्त इति श्लोकं जपित्वा इष्टदेवतां स्मृत्वा समाधिमास्थाय अन्यांश्च दैविकान् मन्त्रान् सावित्रीं जपित्वा मङ्गलश्रुतं शङ्खं च शृण्वन्दक्षिणाशिराः स्वपेत् नार्द्रवासाः स्वपेन्न पलाशशयने न पञ्चदारुकृते न गजभग्नकृते न विद्युद्दग्धे नाग्निसृष्टे न बालमध्ये न नारीमध्ये न धान्ये न गोगुरुहुताशन देवविप्राणामुपरि नोच्छिष्टो न दिवा न तैलाभ्यक्तशिराः स्वपेन्नादीक्षितः कृष्णचर्मणि इति। श्लोकः – अपसर्प सर्प भद्रं ते दूरं गच्छ महायशः । जनमेजयस्य यज्ञान्ते अस्तीकवचनं स्मरन् इति।

விஷ்ணுः- கால்களை நன்றாய் அலம்பியவனாய், ரக்ஷையைச் செய்து கொண்டு, ஜலம் நிரம்பிய குடம் முதலிய மங்கள வஸ்துக்களுடன் கூடியதும், மனதிற்கு ருசித்ததும், பிறருபயோகிக்காததுமான படுக்கையில் 'ஸுத்ராமாணம்' என்ற ருக்கை ஜபிப்பவனாய் உட்கார்ந்து, ராத்ரி ஸூக்தத்தை ஜபித்து, விஷ்ணுவை நமஸ்கரித்து, 'அபஸர்ப்ப ஸர்ப்ப பத்ரம்தே' என்ற ச்லோகத்தை ஜபித்து, இஷ்ட தேவதையை ஸ்மரித்து, த்யானம் செய்து, வேறுன தேவமந்த்ரங்களையும், காயத்ரியையும் ஜபித்து, மங்கள சப்தத்தையும், சங்க சப்தத்தையும் கேட்டு, தெற்கில் சிரஸ்ஸையுடையவனாய்ப் படுக்க வேண்டும். ஈரவஸ்த்ரமுடையவனாய்ப் படுக்கக் கூடாது. புரசு மரத்தால் செய்யப்பட்டதும், ஐந்து மரங்களிலொன்றினால் செய்யப்பட்டதும், யானை முறித்த கட்டையால் செய்யப்பட்டதும், பின்னலால் பொசுக்கப்பட்டதும், அக்னியால் பொசுக்கப்பட்டதுமான சயனத்தில் படுக்கக் கூடாது. சிறுவர்களின் நடுவிலும், ஸ்த்ரீகளின் நடுவிலும், தான்யத்தின் மேலும், பசு, குரு, அக்னி, தேவதை,

வேதியன் இவர்களுக்கு மேல் ப்ரதேசத்திலும், அசுத்தனுயும், பகலிலும், எண்ணெய் தடவியுள்ள தலையுடனும், தூங்கக் கூடாது. தீக்ஷையில்லாதவன் க்ருஷ்ணஜினத்தில் தூங்கக்கூடாது. 'அபஸர்ப்ப' என்ற ச்லோகம் மூலத்திலுள்ளது. அதன் பொருள் - ஓ ஸர்ப்பனே! ஒதுங்கிச் செல். உனக்கு மங்களமுண்டாகும். ஓ மிக்க கீர்த்தியுள்ளவனே! தூரத்தில் செல்வாயாக. ஜனமேஜய மஹாராஜனின் யாகத்தின் முடிவில் அஸ்தீகரின் வார்த்தையை ஸ்மரித்துக் கொண்டு செல் என்பது.

रत्नावल्याम् — मङ्गल्यं पूर्णकुम्भं तु शिरःस्थाने निधाय तु। वैदिकैर्गारुडैर्मन्त्रैः रक्षां कृत्वा स्वपेन्निशि ॥ रात्रिसूक्तं जपेत् स्मृत्वा सर्वांश्च सुखशायिनः। नमस्कृत्याव्ययं विष्णुं समाधिस्थः स्वपेन्निशि इति ॥ सुखशायिनोऽपि गोभिलेन दर्शिता; — अगस्तिर्माधवश्चैव मुचुकुन्दो महाबलः। कपिलो मुनिरस्तीकः पञ्चैते सुखशायिनः ॥ पादौ प्रक्षाल्य संमृज्य द्विराचम्य शुचिस्ततः। शुष्यत्पादास्यपाणिस्तु संविशेन्माधवं स्मरन् इति।

ரத்னவளியில்:- மங்கள்யமான பூர்ண கும்பத்தைத் தலையின் பக்கத்தில் வைத்து, வேதத்திற் சொல்லிய காருட மந்த்ரங்களால் ரக்ஷை செய்து கொண்டு இரவில் தூங்க வேண்டும். ஸுகசாயிகளான எல்லோரையும் ஸ்மரித்து, ராத்ரி ஸூக்தத்தை ஜபிக்க வேண்டும். அழிவற்ற விஷ்ணுவை நமஸ்கரித்து, ஸமாதியிலிருந்து இரவில் தூங்க வேண்டும். ஸுகசாயிகளைச் சொல்லுகிறார். கோபிலர்:- அகஸ்தி, மாதவர், முசுகுந்தர், கபிலர், அஸ்தீகமுனி என்ற இந்த ஐவரும் ஸுகசாயிகளாம். கால்களை அலம்பித் துடைத்து, இருமுறை ஆசமனம் செய்து சுத்தனுய், உலர்ந்த கால்கள், கைகள், முகம் இவைகளையுடையவனுய், மாதவனை ஸ்மரித்தவனுய்த் தூங்க வேண்டும்.

पाठ्यश्लोकौ दर्शितौ चन्द्रिकायाम् – जरत्कारोर्जरत्कार्वां समुत्पन्नो महायशाः। अस्तीकः सत्यसन्धो मां पन्नगेभ्योऽभिरक्षतु॥ नर्मदायै नमः प्रातर्नर्मदायै नमो निशि। नमोऽस्तु नर्मदे तुभ्यं पाहि मां विषसर्पतः इति। दक्षः – प्रदोषपश्चिमौ यामौ वेदाभ्यासेन योजयेत्। यामद्वयं शयानस्तु ब्रह्मभूयाय कल्पते इति।

படிக்கவேண்டிய ச்லோகங்கள் சொல்லப் பட்டுள்ளன, சந்த்ரிகையில்:- ஜரத்காருவென்னும், ருஷிக்கு, ஜரத்காரு என்பவளிடம் உண்டானவரும், மிக்க கீர்த்தியுடையவரும், ஸத்ய ஸந்தருமான அஸ்தீகர், ஸர்ப்பங்களினின்றும் என்னைக் காக்க வேண்டும். நர்மதைக்குக் காலையில் நமஸ்காரம். நர்மதைக்கு இரவில் நமஸ்காரம். ஓ நர்மதே! உனக்கு நமஸ்காரம் ஆகக்கடவது. நீ என்னை விஷமுடைய ஸர்ப்பத்தினின்றும் காப்பாயாக. தக்ஷர்:- ப்ரதோஷ காலத்தையும், இரவின் கடைசி யாமத்தையும் வேதாப்யாஸத்தோடு சேர்க்க வேண்டும். நடுவிலுள்ள இரண்டு யாமங்கள் படுத்திருப்பவன் ப்ரம்ஹஸாயுஜ்யத்திற்கு அர்ஹனாகிறான்.

मनुः—वेदोदितं स्वकं कर्म नित्यं कुर्यादतन्द्रितः। तद्धि कुर्वन् यथाशक्ति प्राप्नोति परमां गतिम्॥ ऋतुकालाभिगामी स्यात् स्वदारनिरतः सदा। पर्ववर्जं व्रजेच्चैनामनृतौ रतिकाम्यया॥ उपवीती स्त्रियं गच्छेदृतुकाले तु वै बुधः। निवीतमनृतौ कुर्याः तद्दोषस्य निवृत्तये। अमुक्तवसना योषि द्विमुक्तवसनः पुमान्। संविशेतामुभौ मुक्तवसनौ कलिराविशेत्॥ दारप्रियैरलङ्कारैरलङ्कृत्य प्रसन्नधीः। प्रियासमीपे शयने संविशेत् प्रहरद्वयम् इति॥ बोधायनः – जघन्ये रात्रिपर्याये सर्वर्तुगमनमुपदिशन्ति इति॥ वृद्धहारीतः – सुपुत्रकामो यः सोऽपररात्रे स्वदारमैथुनं कुर्या दृतुगमने यज्ञोपवीत मनृतौ तु निवीतम् इति॥ व्यासः– इत्येतदखिलेनोक्तमहन्यहनि वै मया। ब्राह्मणानां कृत्यजात मपवर्गफलप्रदम्॥ नास्तिक्यादथवाऽऽलस्यात् ब्राह्मणो न

करोति यः । स याति नरकान् घोरान् काकयोनिषु जायते । नान्यो विमुक्तये पन्थाः मुक्त्वाऽऽश्रमविधिं स्वकम्। तस्मात् कर्माणि कुर्वीत तुष्टये परमेष्ठिनः इति ।।

आह्निककाण्डः समाप्तः

—*—

மனு:- வேதத்தில் சொல்லப்பட்டுள்ள தனது தர்மத்தைச் சோம்பலில்லாதவனுய் நித்யமும் செய்ய வேண்டும். அதைச் சக்திக்கியன்றவரை செய்பவன் சிறந்த கதியை (மோக்ஷத்தை) அடைவான். எப்பொழுதும், ருது காலத்திலேயே ஸ்த்ரீயை அடைபவனுயிருக்க வேண்டும். தன் பத்னியிடத்தில் மட்டில் நோக்கமுள்ளவனுயிருக்க வேண்டும். ருதுகாலம் தவிர்த்த காலத்தில் ரதியில் இச்சையிருந்தால் பர்வகாலத்தைத் தள்ளி மற்றக் காலத்தில் தன் மனைவியைச் சேரவேண்டும். அறிந்தவன், ருதுகாலத்தில் உபவீதியாய் மனைவியைச் சேரவேண்டும். மற்றக் காலத்திலானுல், அந்தத் தோஷத்தின் நிவ்ருத்திக்காக நிவீதம் செய்து கொள்ள வேண்டும். ஸ்த்ரீயானவள் வஸ்த்ரத்தை விடாதவளாயும், புருஷன் வஸ்த்ரத்தை விட்டவனுகவும் சேரவேண்டும். இருவரும் வஸ்த்ரமில்லாதவராயின், பாபம் அவர்களை அடையும். மனைவிக்குப் பிரியமான அலங்காரங்களால் தன்னை அலங்கரித்து, தெளிந்த மனமுடையவனுய், படுக்கையில் மனைவியின் ஸமீபத்தில் இரண்டு யாமங்கள் படுக்க வேண்டும். போதாயனர்:- பிந்தியதான ராத்ரி பாகத்தில், எல்லா ருதுகமனங்களையும் விதிக்கின்றனர். வ்ருத்தஹாரீதர் :- எவன் நல்ல புத்ரனை விரும்பியவனே அவன், பின் ராத்ரி பாகத்தில், தன் மனைவியைச் சேரவேண்டும். ருதுகாலகமனத்தில் உபவீதியாயும், மற்றக் காலத்தில் நிவீதியாயும் சேரவேண்டும். வ்யாஸர்:- இவ்விதமாக, ஒவ்வொரு நாளும் செய்ய வேண்டியதும்,

மோக்ஷத்தை அளிப்பதுமான ப்ராம்ஹணர்களின் நித்ய கர்மங்களை முழுவதும் நான் சொல்லியுளேன். எந்தப் ப்ராம்ஹணன், நாஸ்திக்யத்தாலோ, சோம்பலிஞலோ இவைகளைச் செய்யவில்லையோ அவன் பயங்கரமான-நரகங்களை அடைவான். காக்கைப் பிறவிகளில் பிறப்பான். தனக்குரிய வர்ணுச்ரம விதியைத் தவிர்த்து, முக்திக்கு வேறு வழியில்லை. ஆகையால் பரமேச்வரனின் ப்ரீதிக்காக, அவனவன் கர்மங்களை அனுஷ்டிக்க வேண்டும்.

ஆஹ்னிக தர்ம நிரூபணம் என்னும்

இரண்டாவது பரிச்சேதம் முற்றிற்று.

ஆஹ்னிககாண்டம் முற்றும்.

श्रीगुरुभ्यो नमः

स्मृतिमुक्ताफलम् - आह्निककाण्डः

अनुबन्धः - १. अवशिष्टधर्माः

ஸ்ம்ருதிமுக்தாபலம் - ஆஹ்நிக காண்டம் - அநுபந்தம்-1

பொது நன்னெறி

—*—

तत्र मनुः—कृत्तकेशनखश्मश्रुर्दान्तः शुक्लाम्बरः शुचिः । स्वाध्याये चैव युक्तः स्यान्नित्यमात्महितेषु च ।। वैणवीं धारयेद्यष्टिं सोदकं च कमण्डलुम् । यज्ञोपवीतं वेदं च शुभे रौक्मे च कुण्डले ।। कमण्डलुस्ताम्रादिमयः । 'कलौ पञ्च न कुर्वीत भ्रातृजायां कमण्डलुम् इति मृन्मयनालिकेरकमण्डलुनिषेधात् । वेदः - दर्भपुञ्जः ।। स एव— नेक्षेतोद्यन्तमादित्यं नास्तं यन्तं कदाचन । नोपसृष्टं न वारिस्थं न मध्यं नभसो गतम् ।। उपसृष्टं - राहुग्रस्तम् । इदं चन्द्रस्याप्युपलक्षणमिति वदन्ति । मृदं गां दैवतं विप्रं घृतं मधु चतुष्पथम् । प्रदक्षिणानि कुर्वीत प्रज्ञातं च वनस्पतिम् ।। मृदम् - मृत्कूटम् । प्रज्ञातम् - प्रसिद्धम् ।

மீதியுள்ள ஸகல தர்மங்கள்

இனி மீதியுள்ள ஸகல தர்மங்களும் சொல்லப்படுகின்றன. அதில், மனு:- க்ருஹஸ்தனான ப்ராம்ஹணன் மயிர், நகம், மீசை இவைகளை வபனம் செய்து கொண்டவனும், தபஸ்ஸின் க்லேசத்தை ஸஹிப்பவனும், வெளுத்த வஸ்த்ரமுடையவனும், சுத்தனும், வேதாத்யயனத்திலும், நித்யம் தனக்கு ஹிதமான கார்யங்களிலும் கவனமுடையவனுகவும்

இருக்க வேண்டும். மூங்கிலின் கழியையும், ஜலத்துடன் கூடிய கமண்டலுவையும், பூணூலையும், வேதத்தையும் (தர்ப்பமுஷ்டி), அழகிய ஸ்வர்ண குண்டலங்களையும் தரிக்க வேண்டும். இங்கே கமண்டலு என்பது தாம்ரம் முதலியதால் செய்ததாம். (ஏனெனில்) 'கலௌபஞ்ச+ கமண்டலும்' என்று மண் கமண்டலுவுக்கும், தேங்காய் கமண்டலுவுக்கும் நிஷேதமுள்ளது மனுவேः- ஸூர்யனை உதயத்திலும், அஸ்தமயத்திலும், ராஹுக்ரஹண காலத்திலும், ஜலத்திலும், வானத்தின் நடுவிலும் பார்க்கக் கூடாது. இது சந்த்ரனுக்கும் உபலக்ஷணம் என்கின்றனர். மண் குவியலையும், பசுவையும், தேவபிம்பத்தையும், ப்ராம்ஹணனையும், நெய்யையும், தேனையும், நாற்சந்தியையும், ப்ரஸித்தமான மரத்தையும் வழியிற் செல்லும்போது ப்ரதக்ஷிணமாய்ச் செல்ல வேண்டும்.

नाग्निं मुखेनोपधमेन्नग्नां नेक्षेत च स्त्रियम्। नामेध्यं प्रक्षिपेदग्नौ न च पादौ प्रतापयेत्।। अमेध्यं - अशुद्धं वस्तु।। अधस्तान्नोपदध्याच्च न चैनमतिलङ्घयेत्। न चैनं पादतः कुर्यात् न प्राणाबाधमाचरेत्।। प्राणाबाधं - आत्मनः परस्य वा पीडाम्।। नाश्नीयात् सन्धिवेलायां न गच्छेन्नापि संविशेत्। न चैव विलिखेद्भूमिं नात्मनोऽ(भि)पहरेत् स्रजम्।। आत्मार्थे स्रजं स्वयं न हरेत्।। नाप्सु मूत्रं पुरीषं वा निष्ठीवं वा समुत्सृजेत्। अमेध्यलिप्तमन्यद्वा लोहितं वा विषाणि वा।। नैकः स्वपेच्छून्यगृहे न शयानं प्रबोधयेत्। नोदक्ययाऽभिभाषेत न यज्ञमवृतो व्रजेत्।। न शयानं - श्रेयांसं सुप्तम्। न श्रेयांसं प्रबोधयेदिति विशेषस्मरणात्। न यज्ञमवृतः - आर्त्विज्यं करिष्यन्।

அக்னியை வாயால் ஊதக்கூடாது. வஸ்த்ரமில்லாத ஸ்த்ரீயைப் பார்க்கக் கூடாது. அக்னியில் அசுத்தமான வஸ்துவைப் போடக் கூடாது. அக்னியில் கால்களைக் காய்ச்சக் கூடாது. அக்னியைக் கட்டில் முதலியதின் கீழே வைக்கக் கூடாது. அக்னியைத் தாண்டக்கூடாது.

அக்னியைக் கால்பக்கத்தில் வைக்கக் கூடாது. தனக்காவது பிறனுக்காவது ப்ராணனுக்குத் தொந்தரை செய்யும் கார்யத்தைச் செய்யக் கூடாது. ஸந்த்யாகாலத்தில் புஜிக்கக் கூடாது, வழி நடக்கவும் கூடாது, நித்ரை செய்யவும் கூடாது. பூமியில் கோடு முதலியவை வரையக் கூடாது. தான் தரித்த மாலையைத் தானுகவே அகற்றக் கூடாது. ஜலத்தில், மூத்ரம், மலம், கோழை, அசுத்தத்தால் பற்றப்பட்ட வஸ்து, ரக்தம், விஷங்கள் இவைகளைப் போடக்கூடாது. ஜனங்களில்லாத வீட்டில் ஒருவனுய்த் தூங்கக் கூடாது. தூங்குகின்றவனை எழுப்பக் கூடாது. ரஜஸ்வலையுடன் பேசக் கூடாது. வரிக்கப்படாமல் யாகத்திற்குச் செல்லக்கூடாது. தூங்குகின்றவனை எழுப்பக்கூடாதென்பதில் தன்னைவிட பெரியோரை என்று சேர்க்க வேண்டும். அவ்விதம் விசேஷஸ்ம்ருதி உள்ளது. ஆர்த்விஜ்யம் செய்யப் போகிறவன் வரிக்கப்படாமல் போகக் கூடாது. வரிக்கப்படாவிடினும் தர்சனத்திற்குப் போகலாம்.

न वारयेद्गां धयन्तीं नचाचक्षीत कस्यचित्। न दिवीन्द्रायुधं दृष्ट्वा कस्यचिद्दर्शयेत् बुधः ॥ नैकः प्रपद्येताध्वानं न चिरं पर्वते वसेत्। न कुर्वीत वृथा चेष्टां न वार्यञ्जलिना पिबेत् ॥ न नृत्येदथवा गायेन्न वादित्राणि वादयेत्। नास्फोटयेन्न च क्ष्वेलेत् संरक्तोऽपि न रावयेत्॥ स्फोटः - अङ्गुलिभङ्ग जातः शब्दः। क्ष्वेलः - अङ्गुल्यास्यसंयोगजातः शब्दः। संरक्तोऽपि - कामपरवशोऽपि मैथुनादिषु न रावयेत्- न शब्दं कुर्यात्। नृत्तादिविधायकवचनं प्रतिलोमशूद्रादिविषयमिति स्मृतिरत्ने।

பாலை கன்றுக்கு ஊட்டுகிற பசுவைக் பிறனுக்குக் காட்டக் கூடாது. ஆகாசத்தில் வில்லைக் கண்டால் பிறனுக்குக் காண்பிக்கக் கூடாது. ஒருவனுய் வழியிற் செல்லக் கூடாது. வெகுகாலம் மலையில் வஸிக்கக் கூடாது. வீண் வ்யாபாரத்தைச் செய்யக் கூடாது. அஞ்சலியால் ஜலத்தைப் பருகக் கூடாது. கூத்தாடக் கூடாது,

பாடக்கூடாது. வாத்யங்களை வாசிக்கக் கூடாது. விரல்களை மடித்து, சப்தம் செய்யக் கூடாது. வாயில் விரலைச் சேர்த்துச் சப்தம் செய்யக் கூடாது. காமபரவசனுயினும் ஸ்த்ரீ ஸங்காதிகாலத்தில் சப்திக்கக் கூடாது. கூத்தாடுதல் முதலியதை விதிக்கும் வசனம் ப்ரதிலோம சூத்ராதிவிஷயம் என்று ஸ்ம்ருதிரத்னத்தில் உள்ளது.

न पादौ धावयेत् कांस्ये कदाचिदपि भाजने। उपानहौ च वासश्च धृतमन्यैर्न धारयेत् ॥ उपवीतमलङ्कारं स्रजं करकमेव च ॥ नाविनीतैर्व्रजेद्धुर्यैर्न च क्षुद्व्याधिपीडितैः ॥ न भिन्नशृङ्गाक्षिखुरैर्न वालधिविरूपितैः ॥ धुर्यैः - अश्वादिभिः ॥ विनीतैस्तु व्रजेन्नित्य माशुगैर्लक्षणान्वितैः । वर्णरूपोपसंपन्नैः प्रतोदेनातुदन् भृशम् ॥ बालातपं प्रेतधूमं वर्जयेद्भिन्नमासनम् । न छिन्द्यान्नखरोमाणि दन्तैर्नोत्पाटयेन्नखान्॥ न मृल्लोष्टं च मृद्नीयान्न छिन्द्यात् करजैस्तृणम्। न कर्म निष्फलं कुर्यान्नायत्यामसुखोदयम्॥ आयत्यां - कालान्तरे॥

வெண்கலப் பாத்ரத்தில் ஒருகாலும் கால்களை அலம்பக் கூடாது. பிறர் உபயோகித்த பாதரக்ஷை, வஸ்த்ரம், உபவீதம், அலங்காரம், மாலை, கமண்டலு இவைகளை உபயோகிக்கக் கூடாது. பழக்கப்படாததும், பசி, பிணி இவைகளால் வருந்தியதும், ஒடிந்த கொம்பு, கண், குளம்பு இவைகளையுடையதும், வாலில்லாததுமான குதிரை முதலிய வாஹனங்களால் செல்லக் கூடாது. பழக்கப்பட்டவையும், சீக்ரம் செல்லுகின்றவையும், நல்ல லக்ஷணமுடையவையும், நல்லவர்ணம் ரூபம் இவையுடன் கூடியவையுமான குதிரை முதலியவையால் செல்ல வேண்டும். போகும்போது கொரடா முதலியதால் அதிகமாய்த் தொந்தரை செய்யக் கூடாது. இளம் வெயில், பிணப்புகை, ஒடிந்த ஆஸனம் இவைகளை வர்ஜிக்க வேண்டும். நகங்களையும் ரோமங்களையும் வெட்டக் கூடாது. பற்களால் நகங்களைப் பெயர்க்கக் கூடாது. காரணமில்லாமல் மண்கட்டியை உடைக்கக் கூடாது.

நகங்களால் புல்லைக் கிள்ளக் கூடாது. ப்ரயோஜன மற்ற கார்யத்தைச் செய்யக் கூடாது. வரும் காலத்தில் துக்கத்தைக் கொடுக்கும் கார்யத்தைச் செய்யக் கூடாது.

लोष्टमर्दी तृणच्छेदी नखखादी च यो नरः। स विनाशं व्रजत्याशु सूचकोऽशुचिरेव च॥ न विग्रह कथां कुर्यात् बहिर्माल्यं न धारयेत्। गवां च यानं पृष्ठेन सर्वथैव विगर्हितम्॥ अद्वारेण तु नातीयात् ग्रामं वा वेश्म वाऽऽवृतम्॥ रात्रौ तु वृक्षमूलानि दूरतः परिवर्जयेत्॥ नाक्षैः क्रीडेत् कदाचिच्चस्वयं नोपानहौ हरेत्॥ अचक्षुर्विषयं दुर्गं न प्रपद्येत कर्हिचित्। न विण्मूत्रमुदीक्षेत न बाहुभ्यां नदीं तरेत्। अधितिष्ठेन्न केशांस्तु न भस्मास्थि कपालिकाः॥ न कार्पासं च न तुषान् दीर्घमायुर्जिजीविषुः। अधितिष्ठेत् पदा। कपालिकाः - भिन्नभाण्ड शकलान्॥

மண்கட்டியை உடைப்பவன், புல்லைக்கிள்ளு கின்றவன், நகத்தைக் கடித்துமெல்பவன், கோட் சொல்பவன், உள் வெளி சௌசமில்லாதவன் எவனோ, அவன் விநாசத்தை அடைகிறான். சாஸ்த்ரீய விஷயங்களிலும், லௌகிக விஷயங்களிலும் பிடிவாதத்துடன் பேசக்கூடாது. குடுமியின் வெளியில் புஷ்பத்தைத் தரிக்கக் கூடாது. எருது(பசுக்)களின் முதுகில் ஏறிச்செல்வது எவ்விதத்தாலும் நிந்திக்கப்பட்டுள்ளது. சுவர் முதலியதால் வளைக்கப்பட்ட க்ராமம் அல்லது வீட்டை குறுக்கு வழியில் நுழையக் கூடாது. ராத்ரியில் மரத்தின் அடியை முற்றிலும் பரிஹரிக்க வேண்டும். பாச்சிக் காய்களால் ஒருகாலும் விளையாடக் கூடாது. தன் பாதரக்ஷைகளைத் தானாகவே கைகளால் கொண்டு போகக் கூடாது. கண்ணுக்குப் புலப்படாத (அடர்ந்துள்ள) காடு முதலியதை ஒருகாலும் அடையக் கூடாது. மல மூத்ரங்களைப் பார்க்கக் கூடாது. கைகளால் நதியைத் தாண்டக் கூடாது. மயிர், சாம்பல், எலும்பு, ஓட்டுச் சல்லிகள், பருத்தி, உமி இவைகளின் மேல் காலால் வெகுகாலம் பிழைத்திருக்க விரும்பியவன். நிற்கக் கூடாது.

न संवसेच्च पतितैर्न चण्डालैर्न पुल्कसैः । न मूर्खैर्नावलिप्तैश्च नान्त्यैर्नान्त्यावसायिभिः ॥ अन्त्याः - प्रतिलोमाः । अन्त्यावसायिनः - श्वपाकादयः । न शूद्राय मतिं दद्यान्नोच्छिष्टं न हविष्कृतम् । न चास्योपदिशेद्धर्मं न चास्य व्रतमादिशेत् ॥ यस्तस्य धर्ममाचष्टे यश्चैवादिशति व्रतम् । सोऽसंवृतं नाम तमः सह तेनैव गच्छति ॥ न संहताभ्यां पाणिभ्यां कण्डूयेतात्मनः शिरः । न स्पृशेच्चैतदुच्छिष्टो न च स्नायाद्विना ततः ॥ ततः - शिरसा विना । अदृष्टार्थं स्नानविषयमेतत् ।

பதிதர், சண்டாளர், புல்க்கஸர், மூர்க்கர், பணம் முதலியதால் கர்வமுடையவர், ப்ரதிலோமஜாதீயர்கள், ச்வபாகாதிகள் இவர்களுடன் நெருங்கிப் பழகக் கூடாது. சூத்ரனுக்கு நன்மையை உரைக்கக் கூடாது. உச்சிஷ்டத்தைக் கொடுக்கக் கூடாது. ஹவிஸ்ஸின் மீதியையும் கொடுக்கக் கூடாது. இவனுக்குத் தர்மத்தை உபதேசிக்கக் கூடாது. ப்ராயச் சித்தரூபமான வ்ரதத்தையும் உபதேசிக்கக் கூடாது. எவன் சூத்ரனுக்குத் தர்மத்தைச் சொல்லுகிறானோ, வ்ரதத்தை உபதேசிக்கின்றானோ அவன், சூத்ரனுடன் கூடவே 'அஸம்வ்ருதம்' (மூடாதஅ

) நரகத்தில் முழுகுகிறான். சேர்க்கப்பட்டுள்ள இரண்டு கைகளாலும் தன் தலையைச் சொரியக் கூடாது. அசுத்தனாய்த் தலையைத் தொடக் கூடாது. அழுக்கைப் போக்கும் ஸ்நானத்தைத் தலையை நனைக்காமலும் செய்யலாம்.

केशग्रहप्रहारांश्च शिरस्येतानि वर्जयेत् । शिरःस्नातस्तु तैलेन नाङ्गं किञ्चिदपि स्पृशेत् ॥ देवतानां गुरो राज्ञः स्नातकाचार्ययोस्तथा । नाक्रामेत् कामतश्छायां बभ्रुणो दीक्षितस्य च ॥ बभ्रुः - कपिला गौः । छाग इत्यन्ये ॥ मध्यन्दिने चार्धरात्रे श्राद्धं भुक्त्वा च सामिषम् ।

रक्तमेव च। श्लेष्मनिष्ठूतवान्तानि नाधितिष्ठेच्च कामतः ॥ उद्वर्तनम् - शरीरात् त्यक्तं मलम्। अपस्नानं - मृतस्नानजलम्।

தலையில் மயிரைப் பிடித்தல் அடித்தல் இவைகளை வர்ஜிக்க வேண்டும். தலையில் எண்ணெய் சேர்த்து ஸ்நானம் செய்தால், பிறகு தைலத்தால் மற்ற அங்கங்களை ஸ்பர்சிக்கக் கூடாது. தேவபிம்பங்கள், பிதா முதலிய குருக்கள், அரசன், ஸ்நாதகன், ஆசார்யன், பப்ரு, தீக்ஷிதன் இவர்களின் நிழலை, புத்திபூர்வமாய் மிதிக்கக் கூடாது. பப்ரு - காராம்பசு, ஆடு என்று சிலர். மத்யாஹ்னத்திலும், அர்த்தராத்ரத்திலும், மாம்ஸத்துடன் கூடிய ச்ராத்தம் புஜித்த பிறகும், ஸந்த்யாகாலங்களிலும் நாற்சந்தியில் இருக்கக் கூடாது. உடம்பில் தேய்த்துக் கொண்ட மாவு முதலியது, ம்ருதஸ்தான ஜலம், மலம், மூத்ரம், ரக்தம், கோழை, உமிழ்ந்த தாம்பூலம் முதலியது, வாந்தி செய்யப்பட்ட வஸ்து இவைகளின் மேல் புத்தி பூர்வமாய் நிற்கக் கூடாது.

वैरिणं नोपसेवेत सहायं चैव वैरिणः। अधार्मिकं तस्करं च परस्यैव च योषितम्। क्षत्रियं चैव सर्पं च ब्राह्मणं च बहुश्रुतम्। नावमन्येत वै भूष्णुः कृशानपि कदाचन ॥ एतत्त्रयं हि पुरुषं निर्दहेदवमानितम् ॥ नात्मानमवमन्येत पूर्वाभिरसमृद्धिभिः। आमृत्योः श्रियमाकाङ्क्षेन्नैनां मन्येत दुर्लभाम्॥ सत्यं ब्रूयात् प्रियं ब्रूयात् न ब्रूयात् सत्यमप्रियम्। प्रियं च नानृतं ब्रूयादेष धर्मः सनातनः ॥ भद्रं भद्रमिति ब्रूयात् भद्रमित्येव वा वदेत्। शुष्कवैरं विवादं च न कुर्यात् केनचित्सह।

சத்ருவையும், சத்ருவின் ஸஹாயனையும், பாபசீலனையும், திருடனையும், பிறனின் ஸ்த்ரீயையும் ஸேவிக்கக் கூடாது. வ்ருத்தியை அடையவிரும்பியவன். இளைத்தவராயினும் க்ஷத்ரியன், பாம்பு, சாஸ்த்ரமதிகமாயறிந்த ப்ராம்ஹணன் இவர்களை

ஒருகாலும் அவமதிக்கக் கூடாது. அவமதிக்கப்பட்ட இம்மூன்றும், மனிதனைத் தஹித்துவிடும். முன்செய்த பாபங்களால் தனக்குக் கஷ்டம் நேர்ந்ததென்று தன்னை அவமதித்துக் கொள்ளக் கூடாது. மரணம் வரையில் ஸம்பத்தை எதிர்பார்த்து முயற்சியைச் செய்ய வேண்டும். ஸம்பத்து கிடைக்காதென்று நினைக்க கூடாது. உண்மையானதையே பேசவேண்டும். ப்ரியமாகியதையே பேசவேண்டும். உண்மையானாலும் அப்ரியமாகியதைப் பேசக்கூடாது. ப்ரியமானாலும் பொய்யைப் பேசக் கூடாது. இது நித்யமான தர்மமாம். மங்களமானதையும், மங்களம் மேலானது என்றுவது, மங்களம் என்றுவது சொல்ல வேண்டும். ப்ரயோஜன மற்ற சண்டை வ்யவஹாரம் இவைகளை ஒருவனுடனும் செய்யக் கூடாது.

शुभाशुभेषु सर्वत्र भद्रं भद्रमितीरयेत् ।। नातिकल्यं नातिसायं नैको न वृषलैः सह ।। हीनाङ्गानतिरिक्ताङ्गान् विद्याहीनान् वयोधिकान् । रूपद्रविणहीनांश्च जातिहीनांश्च नाक्षिपेत् ।। न स्पृशेत् पाणिनोच्छिष्टो विप्रो गोब्राह्मणानलान् । न चापि पश्येदशुचिः स्वस्थो ज्योतिर्गणान् दिवि ।। अनातुरः स्वानि खानि न स्पृशेदनिमित्ततः । रोमाणि च रहस्यानि सर्वाण्येतानि वर्जयेत् ।। मैत्रं प्रसाधनं स्नानमञ्जनं दन्तधावनम् । पूर्वाह्ण एव कुर्वीत देवतानां च पूजनम् ।। मैत्रं - उच्चारः ।

சுபாசுபவிஷயங்கள் எல்லாவற்றிலும் மங்களம் மங்களம் என்றே சொல்ல வேண்டும். அதிகாலையிலும், அதிமாலையிலும், நடு மத்யாஹ்னத்திலும், அறியப் படாதவனுடனும், ஒருவனையும், சூத்ரருடனும் செல்லக் கூடாது. அங்கக் குறைவுடையவர், அதிகாங்க முடையவர், வித்யையில்லாதவர், வயததிகமானவர், ரூபம் குறைந்தவர், பணம் குறைந்தவர், ஜாதிகுறைந்தவர் இவர்களை அவமதிக்கக் கூடாது. அசுத்தனையிருக்கும் ப்ராம்ஹணன், பசு, ப்ராம்ஹணன், அக்னி இவர்களைக் கையால் தொடக் கூடாது. அசுத்தனையிருப்பவன்,

ஸ்வஸ்தனுயிருந்தால், ஆகாசத்திலுள்ள ஸூர்யன் முதலிய ஒளிக் கூட்டங்களைப் பார்க்கக் கூடாது. வ்யாதியில்லாதவன், காரணமின்றி, கண், மூக்கு முதலிய இந்த்ரியங்களைத் தொடக் கூடாது. ரஹஸ்ய ஸ்தானங்களிலுள்ள ரோமங்களையும் தொடக் கூடாது. மலவிஸர்ஜனம், அலங்காரம் ஸ்நானம், மைதீட்டல், தந்ததாவனம், தேவபூஜை இவைகளைப் பகலின் முன்பாகத்திலேயே செய்ய வேண்டும்.

दैवतान्यभिगच्छेत्तु धार्मिकांश्च द्विजोत्तमान्। ईश्वरं चैव रक्षार्थं गुरूनेव च पर्वसु। ईश्वरं - राजानम्॥ यद्यत् परवशं कर्म तत्तद्यत्नेन वर्जयेत्। यद्यदात्मवशं तु स्यात्तत् सेवेत प्रयत्नतः॥ सर्वं परवशं दुःखं सर्वमात्मवशं सुखम्। एतद्विद्यात् समासेन लक्षणं सुखदुःखयोः॥ आचार्यं च प्रवक्तारं पितरं मातरं गुरुम्। न हिंस्यात् ब्राह्मणं गां च सर्वांश्चैव तपस्विनः॥ न हिंस्यात् - प्रतिकूलं न कुर्यात्।

தேவதாபிம்பங்களையும், தர்மிஷ்டரான ப்ராம்ஹணர்களையும், காப்பதற்காக அரசனையும், பெரியோரையும் தர்சிக்கப் பர்வகாலங்களில் செல்ல வேண்டும். எதெது பராதீனமான கார்யமோ அததை முயற்சியுடன் தவிர்க்க வேண்டும். எதெது தன் தேஹத்தால் ஸாத்யமோ அததை ப்ரயத்னத்துடன் ஸேவிக்க வேண்டும். பராதீனமாகியது எதுவும் துக்ககாரணம். ஸ்வாதீனமாகியது எதுவும் ஸுககாரணமாம், ஸுகதுக்கங்களின் இந்தக் காரணத்தைச் சுருக்கமாய் அறியவும், உபநயனம் செய்து வேதத்தைக் கற்பித்த ஆசார்யனையும், வேதார்த்தத்தைக் கற்பித்த ப்ரவக்தாவையும், பிதாவையும், மாதாவையும், குருவையும், ப்ராம்ஹணரையும், பசுக்களையும், எல்லாத் தபஸ்விகளையும் ஹிம்ஸிக்கக் கூடாது. (ப்ரதிகூலம் செய்யக் கூடாது).

नास्तिक्यं वेदनिन्दां च देवतानां च कुत्सनम्। द्वेषं दम्भं च मानं च क्रोधं तैक्ष्ण्यं च वर्जयेत्॥ परस्य दण्डं नोद्यच्छेत् क्रुद्धो नैव

निपातयेत्। अन्यत्र पुत्राच्छिष्याद्वा शिष्ट्यर्थं ताडयेत्तु तौ । ब्राह्मणायापगूर्यैव द्विजातिर्वधकाङ्क्षया । शतं वर्षाणि तामिस्रे नरके परिवर्तते ।। अपगूर्य - दण्डमुद्यम्य । ताडयित्वा तृणेनापि संरम्भान्मतिपूर्वकम्। एकविंशतिमा जातीः पापयोनिषु जायते ।। अयुध्यमानस्योत्पाद्य ब्राह्मणस्यासृ-गङ्गतः । दुःखं सुमहदाप्नाति प्रेत्याप्राज्ञतया नरः ।। यावतः शोणितं पांसून् सङ्गृह्णाति द्विजन्मनः। तावतोऽब्दानमुत्रान्यैः शोणितोत्पादकोऽद्यते ।। अन्यैः - इह लोके हिंसितैः ।।

நாஸ்திக்யம், வேதங்களை நிந்தித்தல், தேவதைகளை நிந்தித்தல், மாத்ஸர்யம், தம்பம், கர்வம், கோபம், க்ரௌர்யம் இவைகளை தவிர்க்க வேண்டும். கோப முடையவனுய்ப் பிறனை அடிப்பதற்குக் கழியை ஓங்கக் கூடாது. அடிக்கவும் கூடாது. புத்ரன், சிஷ்யன் இவரைத் தவிர்த்து. குற்றமுடையவராயின், இவ்விருவரை மட்டில் சிக்ஷிப்பதற்காக கயிறு அல்லது மூங்கிலின் சிம்பு இவைகளால் அடிக்கலாம். ப்ராம்ஹணன், ப்ராம்ஹணனை அடிக்க விருப்பத்தால் கழி முதலியதை ஓங்கினுல், தாமிஸ்ரமென்னும் நரகத்தில் நூறு வருஷம் முழுவதும் சுற்றுவான். கோபத்தால், புத்தி பூர்வமாய்ப் புல்லால் அடித்தானுலும், இருபத்தொரு பிறவிகளில் நாய் முதலிய பிறவிகளில் பிறப்பான். மனிதன் அறியாமையால், சண்டை செய்யாத ப்ராம்ஹணனின் அங்கத்திலிருந்து ரக்தத்தை வெளியிடச் செய்தால், பரலோகத்தில் மிகப் பெரியதான துக்கத்தை அடைவான். அடிக்கப்பட்ட ப்ராம்ஹணனின் அங்கத்தினின்று சிந்திய ரக்தம் பூமியில் எவ்வளவு பரமாணுக்களைச் சேருகின்றதோ, அவ்வளவு வருஷங்கள்வரை, பரலோகத்தில், இவ்வுலகில் ஹிம்ஸிக்கப்பட்டவரால், ரக்தத்தை வெளியிட்டவன் புஜிக்கப்படுகிறுன். (நாய் நரி முதலியவையால் என்றும் மற்றொரு வ்யாக்யானம்)

न पाणिपादचपलो न नेत्रचपलोऽनृजुः । न स्याद्वाक्चापलश्चैव न परद्रोहकर्मधीः ।। ऋत्विक् पुरोहिताचार्य मातुलातिथिसंश्रितैः । बालवृद्धातुरैर्वैद्यैर्ज्ञाति सम्बन्धिबान्धवैः । मातापितृभ्यां जामीभिर्भ्रात्रा पुत्रेण भार्यया ।। दुहित्रा दास वर्गेण न विवादं समाचरेत् । एतैर्विवादं सन्त्यज्य सर्वपापैः प्रमुच्यते ।। जामीभिः - भगिनीभिः । 'तस्मादेतैरधिक्षिप्तः सहेतासंज्वरः सदा इति ।

கைகள், கால்கள், கண்கள், வாக்கு இவைகளின் சாபலத்தை விடவேண்டும். உபயோகமில்லாத வஸ்துக்களை எடுப்பது முதலியது கையின் சாபலம், வீணாய்த்திரிவது முதலியது பாத சாபலம். பரஸ்த்ரீகளைப் பார்ப்பது முதலியது நேத்ர சாபலம். கெட்ட வார்த்தையைப் பேசுவது வாயின் சாபலம். குடிலனாய் இருக்கக் கூடாது. பிறரை ஹிம்ஸிப்பதற்கான கார்யத்தையும், எண்ணத்தையும் செய்யக் கூடாது. ருத்விக்கு, புரோஹிதன் (சாந்தி முதலியதைச் செய்விப்பவன்), ஆசார்யன், அம்மான், அதிதி, அண்டியவன், சிறுவன், வ்ருத்தன், ரோகி, வைத்யர், ஜ்ஞாதிகள் (தகப்பனைச் சேர்ந்தவர்), ஸம்பந்திகள் (மாப்பிள்ளை, மைத்துனன் முதலியவர்), பாந்தவர் (தாயைச் சேர்ந்தவர்), மாதா, பிதா, ஜாமிகள் (பகினீ, நாட்டுப் பெண் முதலியவர்), ப்ராதா, புத்ரன், பார்யை, பெண், தாஸர்கள் இவர்களுடன் விவாதம் செய்யக் கூடாது. இவர்களுடன் விவாதம் செய்யாவிடில் ஸகல பாபங்களாலும் விடப்படுவான். ஆகையால் இவர்களால் அதிக்ஷேபமடைந்தவனாயினும் ஸந்தாபமில்லாமல் எப்பொழுதும் பொறுமையுடனிருக்க வேண்டும்.

याज्ञवल्क्यः — देवर्त्विक् स्नातकाचार्यराज्ञां छायां परस्त्रियाः । नाक्रामेद्रक्तविण्मूत्रष्ठीवनोद्वर्तनानि च । विप्राहिक्षत्रियात्मानो नावज्ञेयाः कदाचन । आमृत्योः श्रिमन्विच्छेत् न कञ्चिन्मर्मणि स्पृशेत् । विप्रः बहुश्रुतः । अहिः - सर्पः ।। गोब्राह्मणानलान्नानि

नोच्छिष्टो न पदा स्पृशेत्। न निन्दाताडने कुर्यात् पुत्रं शिष्यं च ताडयेत्। पादेन त्वनुच्छिष्टोऽपि।

யாக்ஞவல்க்யர்:- தேவதாபிம்பங்கள், ருத்விக்கு, ஸ்நாதகன், ஆசார்யன், அரசன், அன்யனுடைய ஸ்த்ரீ இவர்களின் நிழலை மிதிக்கக் கூடாது. ரக்தம், விஷ்டை, மூத்ரம், கோழை, தேஹத்தில் தேய்த்த கல்க்கங்கள், இவை முதலியவைகளையும் மிதிக்கக் கூடாது. ப்ராம்ஹணன் (மிகக்கற்றவன்), ஸர்ப்பம், க்ஷத்ரியன் இவர்களையும், தன்னையும் அவமதிக்கக் கூடாது. மரணம் வரையில் ஸம்பத்தை எதிர்பார்க்க வேண்டும். எவனுடைய தோஷத்தையும் வெளியிடக் கூடாது. பசு, ப்ராம்ஹணன், அக்னி, அன்னம் (சாப்பிடக் கூடிய வஸ்து), இவைகளை அசுத்தனுயிருந்து தொடக் கூடாது. சுத்தனுயிருப்பவனும் காலால் தொடக் கூடாது. ஒருவனையும் நிந்திக்கக் கூடாது, அடிக்கக் கூடாது. புத்ரனையும், சிஷ்யனையும் சிக்ஷைக்காக (வித்யையைக் கற்பிப்பதற்காக) அடிக்கலாம்.

मातापित्रतिथिभ्रातृजामिसम्बन्धिमातुलैः। वृद्धबालातुराचार्य वैद्यसंश्रितबान्धवैः॥ ऋत्विक् पुरोहितापत्य भार्यादाससनाभिभिः। विवादं वर्जयित्वा तु सर्वान् लोकान् जयेद्गृही॥ परशय्यासनोद्यान गृहयानानि वर्जयेत्। अदत्तान्यग्निहीनस्य नान्नमद्यादनापदि इति।

மாதா, பிதா, அதிதி, ப்ராதா, ஜாமிகள், (ஸுமங்கலிகள்), ஸம்பந்திகள், மாதுலன், வ்ருத்தன் (70 - வயதுக்கு மேலானவன்), பாலன் (16 - வயதிற்குட்பட்டவன்), ரோகமுள்ளவன், ஆசார்யன் (உபநயனம் செய்தவன்), வைத்யன் (வித்வான், அல்லது வைத்யன்), தன்னை அண்டிப்பிழைப்பவன், பாந்தவர் (மாதாவையும் பிதாவையும் சேர்ந்த உற்றார்), ருத்விக்கு, புரோஹிதன், பிள்ளை, பெண்கள், பார்யை, வேலைக்காரன், ஸநாபிகள் (ஸஹோதரர்கள்) என்ற இவர்களுடன் வாயால்

கலஹம் செய்யாமலிருந்தால், க்ருஹஸ்தன் புண்ய லோகங்களெல்லாவற்றையும் அடைவான். படுக்கை, ஆஸனம், தோட்டம், வீடு, வாஹனம் இவைகள் பிறருடையதாயின், அவர் அனுமதியின்றி அவைகளை அனுபவிக்கக் கூடாது. அக்னியில்லாதவனின் அன்னத்தை ஆபத்தில்லாத காலத்தில் புஜிக்கக் கூடாது.

शाण्डिल्यः — शुद्धिं कुर्यात्तथा विद्वान्मलानां देहजन्मनाम्। कृत्तकेशनखश्मश्रुस्त्रिपक्षेषु गृही भवेत् ॥ नाप्सु स्वप्रतिबिम्बं तु तेजस्कामो निरीक्षयेत्। निष्फलं वर्जयेत् कर्म प्रेतधूमं नदीतरम् ॥ नान्तरा गमनं कुर्यात् देवताबलिपीठयोः इति।

சாண்டில்யர்:- அறிந்தவன் தேஹத்திலுண்டாகும் அழுக்குகளைச் சுத்தி செய்து கொள்ள வேண்டும். க்ருஹஸ்தன் மூன்று பக்ஷங்களுக்கொருமுறை க்ஷௌரம் செய்து கொள்ள வேண்டும். தேஜஸ்ஸை விரும்புகிறவன், தன் நிழலை ஜலத்தில் பார்க்கக் கூடாது. பயனற்ற கார்யத்தைச் செய்யக் கூடாது. பிணப்புகை நதியைத் தாண்டுதல் இவைகளை வர்ஜிக்க வேண்டும். தேவதா பிம்பம், பலிபீடம் இவைகளுக்கு நடுவில் போகக் கூடாது.

व्यासः— न कुर्यात् बहुभिः सार्धं विरोधं ब्राह्मणैस्तथा। आत्मनः प्रतिकूलानि परेषां न समाचरेत्॥ तिथिपक्षांश्च न ब्रूयात् न नक्षत्राणि निर्दिशेत्। न चात्मानं प्रशंसेत परनिन्दां च वर्जयेत्॥ यस्तु देवानृषीन् विप्रान् देवान् वा निन्दति द्विजः। न तस्य निष्कृतिर्दृष्टा शास्त्रेषु च मुनीश्वरैः ॥ निन्दयेद्यो गुरून् देवान् न वेदांश्चोपबृंहयेत्। कल्पकोटिशतं साग्रं रौरवे पच्यते नरः ॥ तूष्णीमासीत निन्दायां न ब्रूयात् किञ्चिदुत्तरम्। कर्णौ पिधाय वस्तव्यं न चैतानवलोकयेत्॥ वर्जयेद्वा रहस्यानि परेषां ग्राहयेद्द्विजः। विवादं स्वजनैः सार्धं न कुर्याद्वै कदाचन। न पापं पापिनं ब्रूयादपापं वा द्विजोत्तमः। सत्येन तुल्यदोषः स्यान्मिथ्या द्विर्दोषवान् भवेत्।

வ்யாஸர்:- பலருடன் விரோதம் செய்யக் கூடாது. ப்ராம்ஹணர்களுடன் விரோதம் செய்யக் கூடாது. தனக்கு ப்ரதிகூலமாயுள்ளவைகளைப் பிறருக்கும் செய்யக் கூடாது. திதி பக்ஷம் இவைகளைச் சொல்லக் கூடாது. நக்ஷத்ரங்களைக் காட்டக் கூடாது. தன்னைப் புகழக் கூடாது. பிறனை நிந்திக்கக் கூடாது. எவன், தேவர், ருஷிகள், ப்ராம்ஹணர்கள், வேதங்கள் இவர்களுள் எவரையாவது நிந்திக்கின்றானே அவனுக்கு மஹர்ஷிகளாலும் சாஸ்த்ரங்களில் ப்ராயச்சித்தம் சொல்லப்படவில்லை. எவன், குருக்களையும், தேவர்களையும் நிந்திக்கின்றானே, வேதார்த்தங்களையும் விசாரிக்க வில்லையோ அவன் அநேக கோடி கல்பம் முழுவதும், ரௌரவமென்னும் நரகத்தில் வருந்துகிறான். பிறர் நிந்தித்தாலும் மௌனமாய் இருக்க வேண்டும். மறுப்பொன்றும் சொல்லக் கூடாது. காதுகளை மூடிக்கொண்டு இருக்க வேண்டும். இவர்களைப் பார்க்கக் கூடாது. பிறரின் ரஹஸ்யங்களை தவிர்க்க வேண்டும். க்ரஹித்தாலும், ஒருகாலும் தன் ஜனங்களுடன் விவாதம் செய்யக் கூடாது. பாபியைப் பாபியென்று சொல்லக் கூடாது. பாபமில்லாதவனையும் பாபியென்று சொல்லக் கூடாது. பாபம் யதார்த்தமானால், பாபிக்குச் சமமான பாபியாவான். பாபம் பொய்யானால் இரு மடங்கு பாபமுள்ளவனாவான்.

नेक्षेतोद्यन्तमादित्यं शशिनं चानिमित्ततः । नास्तं यन्तं न वारिस्थं नोपसृष्टं न मध्यगम् ॥ तिरोहितं वाससा वा नादश्यांघ्र्यनुगामिनम् । न नग्नां स्त्रियमीक्षेत पुरुषं वा कदाचन ॥ न पश्येत् प्रेतसंस्पर्शं न क्रुद्धस्य गुरोर्मुखम् । न तैलोदकयोश्छायां न पत्नीं भोजने सतीम् ॥ नोदके चात्मनो रूपं न कूपे श्वभ्र एव वा । न लङ्घयीत मतिमान्नाधितिष्ठेत् कथञ्चन । नात्मानं चावमन्येत दैन्यं यत्नेन वर्जयेत् ॥ न सर्पशस्त्रैः क्रीडेत स्वानि खानि न च स्पृशेत् । नाभिहन्यात् जलं पद्भ्यां पाणिना वा कदाचन ॥ न शातयेदिष्टकाभिः फलानि न फलेन च ।

உதய காலத்தில் ஸூர்யனையும், சந்த்ரனையும் காரணமின்றிப் பார்க்கக் கூடாது அஸ்தமயத்திலும், ஜலத்திலும், க்ரஹணகாலத்திலும், ஆகாசத்தின் நடுவிலும், வஸ்த்ரத்தால் மறைத்துக் கொண்டும், கண்ணுடி முதலியதின் வழியாகவும். ஸூர்யனையும், சந்த்ரனையும் பார்க்கக் கூடாது. வஸ்த்ரமில்லாத ஸ்த்ரீயையும், புருஷனையும் பிணத்தைச் சேர்ந்ததையும், கோபத்துடனிருக்கும் குருவின் முகத்தையும், பார்க்கக் கூடாது. எண்ணெயிலும், ஜலத்திலும் நிழலையும், சாப்பிடும் பத்னியையும் பார்க்கக் கூடாது. கிணறு, குழி இவைகளைத் தாண்டக் கூடாது. அவைகளின் மேல் நிற்கக் கூடாது. நீசர்களை ஸேவிக்கக் கூடாது. க்ரூர புத்தியுள்ளவனுகக் கூடாது. தன்னை அவமதிக்கக் கூடாது. ஏழைத் தன்மையை அவச்யம் தள்ள வேண்டும். ஸர்ப்பங்களாலும், ஆயுதங்களாலும் விளையாடக் கூடாது. தனது இந்த்ரியங்களைத் தொடக்கூடாது. கைகளாலாவது, கால்களாலாவது ஜலத்தை அடிக்கக் கூடாது. செங்கற்களால், அல்லது பழங்களால் பழங்களை உதிர்க்கக் கூடாது.

न म्लेच्छभाषां शिक्षेत न कर्षेत् च पदाऽऽसनम् ॥ न दन्तैर्नखरोमाणि छिन्द्यात् सुप्तं न बोधयेत्। न बालातपमासेवेत् प्रेतधूमं विवर्जयेत्। नाकारणाद्वा निष्ठीवेत् स्वयं नोपानहौ हरेत्। न पादक्षालनं कुर्यात् पादेनैव कदाचन ॥ नाग्नौ प्रतापयेत् पादौ न कांस्ये धावयेद्बुधः। नातिप्रसारयेद्देवं ब्राह्मणं गामथापि वा ॥ वार्यग्निगुरुविप्रान् वा सूर्यं वा शशिनं प्रति ॥ नाशुद्धोऽग्निं परिचरेन्न देवप्रतिमां स्पृशेत् ॥ नावगाहेदगाधाम्बु नाप्सु रेतः समुत्सृजेत्। व्यतिक्रामेन्न प्रपन्नान्नाप्सु मैथुनमाचरेत् ॥ चैत्यवृक्षं न वै छिन्द्यान्नाप्सु ष्ठीवनमुत्सृजेत्। न चाग्निं लङ्घयेद्धीमान्नोपदध्यादधः क्वचित्। न कूपमवरोहेत न वीक्षेताशुचिः क्वचित्।

